உவமைக்கவிஞர்

# சுரதா

# உண்மையைச் சொல்லுகிறேன்

மணிவாசகர் பதிப்பகம்

# உண்மையைச் சொல்லுகிறேன்

உவமைக்கவிஞர் சுரதா

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : மார்ச், 2010
திருவள்ளுவர் ஆண்டு : 2041

**விலை : ரூ. 100.00**

மொத்தப் பக்கங்கள் : 192

அளவு (டெம்மி) 1 x 8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1683

முகப்பு அட்டை மற்றும்
பக்க வடிவமைப்பு:
எம்.ஏ. பாலாஜி
அம்மா கணினியகம், சென்னை—17.

நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்

அண்ணாமலைப்
பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில் அறக் கட்டளைகள்
நிறுவியுள்ளார்.
'வள்ளுவம்' இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
'தமிழவேள்' என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
'செந்தமிழ்க் காவலர்' என்றும்
விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.
'பதிப்புச் செம்மல்' என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

நூல்கள் கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12—B, மேலச் சன்னதி,
சிதம்பரம் — 608001.
தொலைபேசி: 230069

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை — 600108.
தொலைபேசி: 25361039

6, சிவஞானம் தெரு,
தி.நகர், சென்னை — 600017.
தொலைபேசி: 24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை — 625001.
தொலைபேசி: 2622853

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் — 641001.
தொலைபேசி: 2397155

78, செரி சாலை,
சேலம் — 636001.
தொலைபேசி: 3207722

28, நந்தி கோயில் தெரு,
திருச்சி — 620002.
தொலைபேசி: 2706450

---

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை—600 021.
தொலைபேசி: 25954528

# நடிகைகளைப் பற்றி பாடக்கூடாதா?

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞர்களில், கவிஞர் சுரதா குறிப்பிடத்தக்கவர். நறுக்குத் தெரிக்கும் வார்த்தைக் கணைகளால், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பறைசாற்றுவதில் வல்லவர்!

இதுவரை மூவாயிரம் கவிதைகள் எழுதியுள்ள அவர், தமிழ் அறிஞர்களை மட்டுமல்ல; தமிழ் நடிகைகளைப்பற்றியும் ஏராளமாகப் பாடியுள்ளார்! துணிச்சல்காரரான சுரதா, 'நாயன்மார்களைப் பற்றிப் பாடினால் தான் கவிதையா?

நடிகைகளைப் பற்றிப் பாடினால் கவிதை இல்லையா?'- என்று கேட்கிறார்-

இந்த பேட்டியில்!

குறைந்த வயதிலே அதிகமாகப் பாடியவர்களில் மகாகவி பாரதியார் குறிப்பிடத்தக்கவர்.

ஆனால் ஒரு கொள்கை வட்டத்துக்குள் நின்று அதிகமாக எழுதிய கவிஞர்களில் பாரதிதாசன் குறிப்பிடத்தக்கவர்.

பாரதியின் பாடல்களில், தேசிய எழுச்சி மேலோங்கி நின்றது! பாரதிதாசன் படைப்புகளில், சமுதாயப் புரட்சியே முதலிடம் வகிக்கிறது!

அந்த இருபெரும் கவிஞர்களின் எழுத்தும்-கருத்தும்தான், பல நூறு கவிஞர்கள் உருவாவதற்குக் காரணமாக அமைந்தன.

பாரதியைப் பின்பற்றி, பல ஆயிரம் கவிஞர்கள் எழுதியிருக் கக்கூடும்! அவருக்கு எத்தனையோ தாசன்கள் உருவானது உண்மை! என்றாலும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனைப்போல்,

பாரதிக்கு ஒரு தாசனும் அமையவில்லை; பாரதியின் இடத்தை நிரப்ப, பாவேந்தர் பெற்ற தகுதியை, வேறு எவரும் பெறவுமில்லை!

அத்தகைய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பின்பற்றியும், ஒரு புலவர் கூட்டம் உருவானது! அந்தக் கூட்டம் தந்தை பெரியாரின் பகுத்தறிவு வேலிக்குள்ளிருந்து, விடுபடாத கூட்டம்! அறிஞர் அண்ணாவின், சமுதாயச் சீர்திருத்த வட்டத்தைவிட்டும் விலகாத கூட்டம்!

இந்தக் கட்டுப்பாடுகளே, அந்தக் கவிஞர்களின் படைப்புகள் பிரபலமாகாமல் போனதற்கு முட்டுக்கட்டைகளாக இருந்தன என்பதும் உண்மை.

அந்த முட்டுக்கட்டைகள், இப்போதும் இருக்கத்தான் செய்கின்றன. ஆயினும் பாரதிதாசன் வழியில், தனக்குச் சரி என்றுபடுகின்ற கருத்தை பட்டவர்த்தனமாகச் சொல்ல அந்தக் கூட்டம் இப்போது தயங்குவதில்லை.

அப்படிப்பட்ட புலவர் கூட்டம், இன்று குறுகிக் கொண்டே வருகிறது, என்றாலும் எஞ்சியவர்களில் எத்தனைபேர் பாரதிதாசன் பெயரை நிலைநாட்ட வல்லவராக உள்ளார்கள் என்று பார்த்தால் கவிஞர் சுரதாவின் பெயரே முதலில் நம் நினைவுக்கு வருகிறது!

சுரதாவின் படைப்புகள், சுயமரியாதைக் கருத்துக்கு உட்பட்ட பாடல்கள் மட்டுமல்ல! 'யாப்பிலக்கணம்'- என்னும், தனித்தமிழ் பாட்டிலக்கணத்துக்கும், அவை உட்பட்டவையாகும்!

இலக்கண வரம்புக்கு உட்பட்டு, இலக்கியம் படைக்கும் அளவுக்குத் தகுதியுள்ள கவிஞர்கள், இன்று தமிழ் நாட்டில் மிகச் சிலரே உள்ளனர்! அந்தக குறைந்த பட்டியலில், அதிகப் படைப்புக்களைப் படைத்தவர்களில் சுரதாவும் ஒருவர்!

இதுவரை மூவாயிரம் கவிதைகளை எழுதியுள்ள சுரதாவின் படைப்புக்களில் பாரதிதாசன் பாடல்களைப் போல வேகமும் இருக்கும்! புகழேந்தியின் பாடல்களில் உள்ளது போல, சொல் அலங்காரமும் இருக்கும். வேறு எவருடைய படைப்பிலும் இல்லாத, ஒரு தனித்தன்மையான குத்தலும் குறும்பும் நிறைந்த வார்த்தைகள், அவர் படைப்புகளில் ஏராளமாக இருக்கும்.

இன்னொரு சிறப்பு! வரிக்குவரிஉவமைகளைக் கொட்டி எழுதக்கூடிய ஒரே கவிஞர் என்ற தனிச்சிறப்பும் சுரதாவுக்கு உண்டு. அந்த உவமைகள், ஒரு வித்தியாசமான அழகையும், கற்பனை நயத்தையும் எடுத்துக்காட்டும். அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

பெண்களின் கொண்டைகளைப்பற்றி எத்தனையோ உவமைகளைக் கேட்டிருப்போம்? இன்றைய பெண்களின் கொண்டையைப் பார்த்தால், குதிரைவால் தான் நினைவுக்கு வரும்! ஆனால் சுரதாவின் கற்பனையில் இப்படி உதித்துள்ளது!

**'விடுபடா அம்பு விழிபெற்ற மாதே!**
**கொடிபடு கிழங்குக் கொண்டை**
**ஏன் அவிழ்ந்தது?...**

ஒரு பெண்ணின் விழியை, விடுவிக்க முடியாத-அதாவது, எய்ய முடியாத அம்பு என்று கூறிவிட்டு, கொண்டையைக் 'கிழங்கு'க்கு ஒப்பிடுகிறார். எனவேதான், அது ஏன் அவிழ்ந்தது என்றும் கேள்விக்குறி எழுப்புகிறார்.

இளவேனில் காலத்தைப் பற்றி இப்படி குறிப்பிடுகிறார்:

**'செந்தீ போன்ற சிறந்த மாந்தளிரை**
**குயிலின் கூட்டம் கோதிக் கோதி,**
**குறடுவாய் திறந்தே கூவிக் கூவி,**
**இசையமு தளிக்கும் இளவேனிற் காலம்' ...**

மாந்தளிரைச் 'செந்தீ'- என்று குறிப்பிட்டிருக்கும் அழகை விட, குயிலின் வாயைக் 'குறடு' என்று குறிப்பிட்டிருக்கும் அழகு, தனித் தன்மையுடையதாகும்.

மூங்கிலிலிருந்து இசை கிளம்புவதற்கும் அவர் ஒரு உவமையைக் கூறுகிறார்.

**குட்டி யானைகள்**
**கொட்டாவி விடுதல்போல்**
**இன்னிசை மூங்கிலில்**
**எழுந்திடும் காலம்...**

ஒரு பெண், நாணித் தலைகுனிவதைப் பற்றிச் சொல்லும்போது:

**'பிழிந்ததொரு புடவையைப் போல்**
**குனிந்து கொண்டாள் '**

என்று குறிப்பிடுவார். அதே பெண்ணைப் பற்றி இப்படியும் குறிப்பிடுகிறார்.

'எடுத்துக் கடிக்கும்
இடமெல்லாம் இனிக்கும்
கரும்பே தேனே
காமத்துப்பாலே!'

கரும்பில், அடிக் கரும்பு இனிக்கும். ஆனால் இவளோ எங்கு கடித்தாலும் இனிக்கும் கரும்பாம்! என்ன கற்பனை! என்ன உவமை!...

"தண்ணீரின் ஏப்பம்தான் அலைகள்"!...
"இலைக் குடையைப் பிடித்தபடி
மரங்கள் நிற்கும்"!...
"மழை வயிறு கிழிக்கும்
மாட மாளிகை"!...

உவமைகளில் இப்படி எத்தனையோ அடுக்கிக் கொண்டே போகலாம். விரசமான விஷயங்களைக்கூட ரசமாகச் சொல்லுவதிலும் சுரதா வல்லவர்.

மச்சசாஸ்திரத்தைப் பற்றி ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அதிலே அவர் தன் பகுத்தறிவு முத்திரைகளை எத்தனை அழுத்தமாக; அதே நேரத்தில் குத்தலாகப் பதித்திருக்கிறார் என்று பார்ப்போம்!

கன்னி ஒருத்தியின் காமப் படத்திலே
மச்ச மிருப்பின் மயக்குவாள் என்றும்,
மார்பில் ஒருத்திக்கு மச்ச மிருப்பின்
அவளொரு பணக்காரி ஆவாள் என்றும்,
சொல்லுவ தெல்லாம் சுத்த மடத்தனம்!
மக்கள் ஒருவனை மந்திரி யாக்கலாம்.
மச்சமா ஒருவனை மந்திரி யாக்கும்?
ஆக்கா தென்பதை அறிக! அசைவிலா
ஊக்கமே ஒருவனை உயர்த்துமென் றறிக!

பகுத்தறிவுக் கருத்துக்களானாலும் சுரதாவின் படைப்புக்களில், நகைச்சுவைக்குப் பஞ்சமிருக்காது. நடிகை வாணிஸ்ரீ நாவல் படிப்பதாக வந்துள்ள ஒரு செய்தியை வைத்து, சுரதா ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அந்தக் கவிதையில் தெளித்துள்ள நகைச்சுவை முத்துக்கள்;

'காமராசர் கவிதை எழுதினால்
பக்தவச்சலம் பதவுரை எழுதினால்
சிலம்புச் செல்வர் சிறுகதை எழுதினால்
எடுபடும் என்றா எண்ணுகிறீர்கள்'
அடிபடும்! அத்துடன் இவர்கள் இதுவரை
பெற்ற செல்வாக்கும் பெருமூச்சு வாங்கும்!
தீக்குச்சி மருந்து போல் தேகம் கறுத்துள
நடிகை வாணிஸ்ரீ நாள்தோறும் வீட்டில்
குடிப்பது பாலாம்! படிப்பது நாவலாம்!
பழைய புராணம் படிப்பதைக் காட்டிலும்
நாவல் படிப்பது நல்லதே எனினும்
திருக்குறள் படித்தால் திருந்தி வாழலாம்!
சாக்கடை நூல்களைச் சரித்திரம் என்போர்,
பூக்கடை நூல்களைப் புரட்டுவதில்லையே!....

இப்படி ஒவ்வொரு நடிகையின் பழக்க வழக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு 'சுவரும் சுண்ணாம்பும்' என்ற தலைப்பில் பல நடிகைகளைப் பற்றி எழுதியுள்ளார் சுரதா.

அவரால் பாடல் பெறாத நட்சத்திர நடிகைகள் மட்டுமல்ல; குட்டி நடிகைகள்கூட இல்லை என்றே சொல்லலாம்.

வரலாற்று நாயகர்களையும், தமிழ் வளர்த்த அறிஞர்களையும் பற்றி ஏராளமாக எழுதியுள்ள சுரதா, நடிகைகளைப் பற்றியும் இவ்வளவு கவிதைகள் எழுதுவானேன்? இதற்கு ஒரு நூலில் அவர் அளித்துள்ள விளக்கம்: நாயன்மார்களைப் பற்றி எழுதுவதுதான் கவிதை என்பதல்ல. நடிகைகளைப் பற்றியும் எழுதுவதுதான் கவிதை தான் என்கிறார்.

நாட்டில் விளம்பரம் பெற்ற நடிகைகளைப்பற்றி நான் எழுதுவதற்கு காரணம், இவர்கள் மூலம் கவிதைகள் விளக்கம் பெற்றுவிடும் என்பதற்காக அல்ல. விளம்பரம் பெற வேண்டும், பெறும் என்பதற்காகத்தான் கவிதை.

'கவிஞர்கள், முத்தமிழில் முதல் தமிழை வளர்ப்பது போல், நடிகைகள் மூன்றாம் தமிழாகிய நாடகத் தமிழை நாள்தோறும் வளர்க்கிறார்கள். அவர்களின் நடிப்பிற்கு பாரும் பாராளுமன்றமும் பல பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பிக்கின்றன. அப்படி இருக்க அவர்களைப்பற்றி நான் ஏன் எழுதக்கூடாது?

சுரதா இப்படிக் கேட்பது ஓர் வகையில் நியாயமாக இருந்தாலும்; அவரை ஓர் உயர்ந்த கவிஞராக ஒத்துக் கொள்ள வைத்தது, அவருடைய கவிதைத் தொகுப்பான, 'தேன் மழை' என்ற நூல்தான்.

அந்த நூல் அறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது 1964-65ஆம் ஆண்டுவெளிவந்த 'சிறந்த இசைப்பாடல்கள் கவிதைகள்' என்ற சிறப்புப் பரிசை பெற்றது.

அதன் பிறகு, கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்தபோது, சிறந்த கவிஞருக்கான 'கலைமாமணி விருதும்' சுரதாவுக்குக் கிடைத்தது.

இப்போது முதல்வர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் சுரதாவுக்கு ரூ.10 ஆயிரம் ரொக்கப் பரிசும் தங்கப்பதக்கமும் 'பாவேந்தர் விருது'ம் வழங்கப்பட்டு, 'சிறந்த கவிஞர்' என்று கவுரவிக்கப்பட்டிருக்கிறார்.

இதையொட்டி மாலை முரசுக்கு, சிறப்புப் பேட்டி அளித்த சுரதாவிடம், நமது நிருபர் கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி : எந்த அடிப்படையில் தாங்கள் 'இந்த ஆண்டின் சிறந்த கவிஞர்' - என்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள்?

பதில்: சிறந்த கவிஞர் என்று தேர்வு பெறவில்லை. அதற்காகவும் பண முடிப்பும், பாராட்டும் வழங்கவில்லை. அப்படிப்பார்த்தால் என்னைவிடச் சிறந்த எத்தனையோ கவிஞர்கள் இன்று உண்டு. இந்த 78-ம் ஆண்டில், சிறுவன்கூட சிறந்த கவிஞனாக வந்துவிடமுடியும்! பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞர்களில் ஒருவன்- என்பதற்காகத்தான் இந்தப் பரிசு கிடைத்திருக்கிறது.

**கேள்வி:** பாரதிதாசன் பரம்பரை என்றால்?...

**பதில்:** அவர் கருத்தை ஏற்றுக்கொண்டு அவர் கொள்கைகளுக்கு உடன்பட்டு; அவர் மரபைப்பின்பற்றி எழுதுகின்ற கவிஞர்கள்- என்பதுதான், பாரதிதாசன் பரம்பரை என்பதாகும்.

**கேள்வி:** இந்தப் பரிசு கிடைத்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இது வரைக்கும் யாருக்கும் கிடைக்காத ஒன்று எனக்குக் கிடைத்திருக்கிறது என்று பெருமைப் படுகிறேன். ஆனால் இது எனக்கு கொடுக்கப்படுவதற்கு, மிகுந்த பெருந்தன்மை தேவைப்பட்டிருக்கிறது என்பதையும் உணர்கிறேன்.

எனக்குஇந்தப் பரிசு கொடுக்க வேண்டும் என்ற ஆசை பலருக்கும் இருந்திருக்கலாம். ஆனால் அதை செயல்படுத்தியது எம்.ஜி.ஆர்.தான்; அந்தப் பெருந்தன்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மூவேந்தர்கள் ஆண்டார்கள். அவர்களுக்கும் வரலாறு இருக்கிறது. பாரி மன்னன், ஓர் சிற்றரசன்தான். அவனுக்கும் ஓர் வரலாறு கொடைத் தன்மையுடன் கூடியதாக இருப்பதால், பலவிதங்களில் மூவேந்தர்களின் சிறப்பைவிட அது உயர்ந்து நிற்பதை, இந்த நேரத்தில் நினைவு படுத்திக் கொள்கிறேன்.

கேள்வி: தாங்கள் ஏன் பாரதிதாசனுக்கு 'தாசன்' ஆனீர்கள்? அவரை எப்போது சந்தித்தீர்கள்.

பதில்: முதல் முதலில் 1941-ஆம் ஆண்டு புதுவையில் பாவேந்தரை (பாரதிதாசனை) சந்தித்தேன். ஆனால் அதற்கு முன்பாக இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, அவர் பாடலுக்கு நான் அடிமையாகி விட்டேன்.

1938-ம் ஆண்டில் பாவேந்தரின் முதல் கவிதை தொகுப்பு வெளிவந்திருந்தது. அதைத் தொகுத்து வெளியிட்டவர் குத்தூசி குருசாமி.

அந்தப்புத்தகத்தில் உள்ள சமுதாயச் சீர்திருத்தப் பாடல் ஒன்று என் மனதை தொட்டது.அன்று முதலே அவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்துவிட்டது.

கேள்வி: அது என்ன பாடல்?

பதில்: 'உலகப்பன்' என்ற தலைப்பில் உள்ள அந்தப் பாடல் இதுதான்.

'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர், உதையப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப் பாரீ!'

கேள்வி: பாரதியாரைவிட பாரதிதாசன் எந்த வகையிலாவது சிறந்தவர் என்று கருத முடியுமா?

பதில்: பல வகைகளில் பாரதியைவிட பாவேந்தர் உயர்ந்து நிற்கிறார் என்பதே என் கருத்து. பாவேந்தரின் பாடல்களைச் சரியான முறையில் மொழி பெயர்த்தால், அவருடைய அறிவை மேல்நாட்டவர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்பது உண்மை.

பாவேந்தரின் கவிதைகளை இப்போது தாகூர் உயிருடன் இருந்து அவரிடம் காட்டினால்கூட, 'என்னைப்போல் ஒருவன்' எழுதியுள்ள கவிதை- என்று தான் தாகூர் குறிப்பிடுவார். இப்போது பாரதியாரே இருந்தால்கூட, தன்னைவிட பாவேந்தர் உயர்ந்த கவிஞர் என்பதை அவர் ஒப்புக்கொள்வார்.

கேள்வி: 'புதுக்கவிதைகள்' என்ற பெயரில் வெளிவரும் வசன நடைக் கவிதைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: வரலாற்றில் வடிவம் இல்லாத எதுவும் மனிதனின் மனதில் நிற்பதில்லை. ஒரு பெண், அழகாயிருந்தால்தான், எவனுடைய மனதிலாவது நிற்பாள்.

அவளிடம் உணர்வுகள் இருந்தால்தான் ஒருவனுடன் வாழப்பொருத்தமானவளாகவும் இருப்பாள்.

எல்லோருக்கும் புருவம் வளைந்துதான் இருக்கிறது. ஆனால் எது அழகாக இருக்கிறது என்பதுதான் தனித்தன்மை பெறுகிறது.

இத்தகைய புதுக்கவிதைகளில் சுவையிருக்கலாம். அந்தச்சுவை கதையிலும் உண்டு. கட்டுரையிலும் இருக்கும். ஆனால் அது கவிதையிலும் இருக்கிறது என்று காட்ட, வரம்பை விட்டு விட்டு; மரபுகளை உதறித் தள்ளிவிட்டு, வசன நடைகளை கவிதை என்று சொல்லி

பேனா, போன வரையில் வரிகளை அளவுகளாக்கி எழுதுவது, பிற்காலத்தில் சிறந்த இடத்ததைப்பெற முடியாது என்பது என் கருத்து.

கேள்வி: தங்களின் படைப்புகளில் இதுவரை எத்தனை நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அடுத்து என்ன வெளிவர இருக்கிறது?

பதில்: இதுவரை 20 நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அடுத்து ஒரு பெரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். சினிமாத் தோன்றிய 1931ம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரை உள்ள சினிமா கவிஞர்களைப் பற்றியும், அவர்களின் வரலாற்றையும், பாடல்களையும் ஆராய்ந்து ஒரு நூல் வெளியிட இருக்கிறேன்.

காரணம், இன்றைய அரசியல்வாதிகள் சொல்லும் புரட்சிக் கருத்துக்களை 50 ஆண்டுகளுக்கு முன்பே சினிமா பாடல்களில் புகுத்திய வரலாறுகள் எனக்கு கிடைத்து உள்ளன.

அடுத்தது, சுந்தரம் பிள்ளைக்குப் பிறகு, கவிதை நாடகம் எதுவும் சரியாக எழுதப்படவில்லை என்று குறையைப் போக்கும் வகையில் 'பாரதிதாசன் கவிதா மண்டலம்' என்ற கவிதை ஏட்டைத் துவக்க இருக்கிறேன்.

இவ்வாறு கவிஞர் சுரதா கூறினார்.

சுரதாவின் சொந்த ஊர் தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையனூர்.பெற்றோர் பெயர் திருவேங்கடம். சணபகம் அம்மையார்.

சுரதாவின் இயற்பெயர் ராஜகோபால். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். எனவே தன் பெயரை. சுப்புரத்தினதாசன் என்று வைத்திருந்தார்.

ஒரு நாள் பாவேந்தருக்கு இவர் கடிதம் எழுதும்போது கடிதத்தின் கடைசியில் சுப்புரத்தினதாசன் என்று எழுத இடமில்லாமல் போன தால் 'சு.ர.தா' என்று எழுதினார். பிறகு அதுவே வழக்கத்திற்கு வந்து சுரதா என்று பெயரை மாற்றிக் கொண்டார்.

சுரதாவின் மனைவி பெயர் சுலோசனா. இத்தம்பதிகளுக்கு ஒரே மகன்தான். அவர் பெயர் 'கல்லாடன்' அவரும் கவிஞர்தான்!

'உதட்டில் உதடு' என்ற நூலை எழுதியதற்காக, நாவலாசிரியர் ஜெகசிற்பியன், 'உவமைக் கவிஞர்' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார். சுரதாவுக்கு வயது 57.

பி.யூ.சின்னப்பா நடித்த மங்கையர்க்கரசி, தியாகராஜபாகவதர் நடித்த அமரகவி, எம்.ஜி.ஆர். நடத்த ஜெனோவா ஆகிய திரைப்படங்களுக்கு கதை, வசனம், பாடல்களை எழுதியுள்ள சுரதா, 100க்கு மேற்பட்ட திரைப்படங்களுக்குப் பாடல்களும் எழுதி இருக்கிறார்.

தைபிறந்தால் வழிறபிக்கும் என்ற படத்தில் வரும் 'அமுதம் தேனும் எதற்கு?' என்ற பாடல் சுரதா எழுதியதுதான், அதை இப்போது நினைத்தாலும் இனிக்கிறது. அவர் கவிதைகளை எத்தனை முறை படித்தாலும் திகட்டாது.

பேட்டி. கட்டுரை

**கருணைதாசன்.**

# எனக்குத் தலைவரும் குருவும் கிடையாது!

கேள்வி: வாழ்க்கைக்கு காதல் தேவைதானா?

பதில்: எதற்கையா கண்ணடிக்கும் காதல்? காதல் இல்லையென்றால் இனிக்காதா முத்தம்? பொழுது போக்குவதற்கு வேண்டுமானால் சல்லாப சந்திப்புக் காதல்தேவை.

கேள்வி: தாங்கள் ஒரு பாட்டை எப்படி எழுதுகிறீர்கள்?

பதில்: புணர்வது எப்படி என்று கேட்டால்-அப்படித்தான்?

கேள்வி: தங்களுடைய 'தனித்தன்மை' என்று தாங்களே உணர்வது எதனை?

பதில்: தனிமை என்பது பிரிவின் சரித்திரம். தாய்மை என்பது கருவின் சரித்திரம்- என்று பாடியுள்ளேன். தனிமை-தாய்மை என்பவைகளைப் பற்றிப் பொன்மொழி போல எத்துணைச் சுருக்கமாகச் சொல்லியுள்ளேன். ஒருத்தியைப் பற்றி 'அகப்பொருள் ஆழமும், புறப்பொருள் மேடும்' என்று பாடினேன். எவன் இப்படிப் பாடினான்? நாம் தரையில்தான் படுக்க வேண்டும்.

கேள்வி: சிலர் தங்கள் பாடல்களை முழுதாக நினைவில் வைத்திருந்து சொல்கிறார்கள்?

பதில்: இது வளர்ச்சியைத் தடுக்கும். பிறருடையதை நினைவில் வைத்திருப்பதும் இப்படித்தான். நான் இப்போதெல்லாம் ஒன்றையும் மனதில் வைத்திருப்பதில்லை.

கேள்வி: நீங்கள் முதன் முதலாக எந்தத் திரைப்படத்துக்கு பாடல் எழுதினீர்கள்?

பதில்: எம்.ஜி.ஆர். நடித்த 'என் தங்கை' திரைப்படத்துக்காக முதன் முதலாக 'ஆடும் ஊஞ்சலைப் போல- அலை ஆடுதே' என்று துவங்கும் பாடலை எழுதினேன்.

கேள்வி: இலக்கியத் துறையில் நீங்கள் இயற்றிய முதல் நூல் எது?

பதில்: "சாவின் முத்தம்" என்கிற நூல்தான்.

கேள்வி: கவிஞன் பிறப்பதாகக் கூறுகிறார்களே?

பதில்: அதெல்லாம் சும்மா, கருவில் திருவென்பதெல்லாம் கிடையாது. அதை நம்புவது மூடத்தனத்தில் ஒன்று.

கேள்வி: உங்களின் 'பொடி' விஷயம் எப்படி வந்தது?

பதில்: இரண்டாவது கம்பன் எனப் போற்றப்பட்ட மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் சமயப் பாடல்களைச் சாராதவன் நான். எதையும், யாரையும் பார்த்துப் பின்பற்றாத நான் அவரை பொடிபோடும் பழக்கத்தில் பின்பற்றியவன்.

கேள்வி: உங்களுக்கு ஞானகுரு ஆசான்... அப்படி என்று யாரையாவது வரித்துக் கொண்டிருக்கிறீர்களா?

பதில்: நிரந்தரமாக யாரையும் குரு தலைவன் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

கேள்வி: கவிதை எப்படி இருக்க வேண்டும்?

பதில்: முத்தத்தைப் போல் சுவையாகவும், சுருக்கமாகவும் இருக்க வேண்டும். சிறிய கவிதைகள் எழுதி வெற்றி பெறப் பெரிய ஆற்றல் வேண்டும். சொற் சுருக்கம் எனக்குப் பிடிக்கும். தாழம் பூவை மடித்துத் தலையில் செருக வேண்டும்; அதுபோல சொற்களை மடித்துக் கவிதையில் செருக வேண்டும். சங்க இலக்கியத்தின் வெற்றியே சொற் சுருக்கத்தில்தான்! நல்ல கவிதைகளை எழுதுவதற்கு மிகவும் கடினமான உழைப்புதேவை.

கவிதை எழுதுவதைவிட ஆறுமாதம் கடுங்காவல் தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன்.

கேள்வி: செக்ஸ் உங்கள் பாட்டில் அதிகம் ஏன்?

பதில்: அது நிலைபேறு பெற்ற சப்ஜெக்ட். சிறந்த உத்தி. மேலும் பாமரன் முதல் படித்தவன் வரை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய பொருள் (Theme). இந்து, புராண இதிகாசங்களை மட்டும் புரிந்து கொள்வான்; கிறித்தவன், பைபிளை மட்டும் புரிந்து கொள்வான்; முகம்மதியன் குரானை மட்டும் புரிந்து கொள்வான். ஆண்டவனைப் புரிந்து கொள்வதிலும் இப்படிப் பாகுபாடு உண்டு. ஆனால் இவர்கள் எல்லாருமே காதலைப் புரிந்து கொள்கிறார்கள் இல்லையா? எனவே காதலுக்கு ஆண்டவனை விட கவர்ச்சி அதிகம். மேலும் நம் நாட்டுப் பக்தர்களுக்கு ஆண்டவனையே படுக்கை அறைக்குள் அனுப்பி வைத்து, நாயக நாயகி பாவத்தில் பாடினால்தான் புரியும். காதல் ஆண்டவனுக்கும் அறிமுகமாக அமைகிறது.

கேள்வி: நீங்கள் ஏன் எழுதுகிறீர்கள்?

பதில்: ஏன் உயிரோடு இருக்கிறீர்கள் என்று கேட்பது போல் இருக்கின்றது. அதாவது, மற்றவர்களிடம் சில விஷயங்களைச் சொல்லலாமென்ற பயிற்சியும் பக்குவமும் இருப்பதாலும், நான் மிக நீண்ட காலத்துக்கு அதைச் சொல்ல முடியும் என்பதாலும் எழுதுகிறேன். இல்லாவிட்டால், நான் புதிதாகவே, மாற்றுதலாகவோ, சொல்ல முடியாது என்று என்றைக்குக் கருதுகிறேனோ, அன்றைக்கு நிறுத்திவிடுவேன்.

இதழ்: மங்களம்
பேட்டி: பித்தன்

## இது தான் சொத்து!

சிலர் சாவிக் கொத்துக்களை சேகரிப்பார்கள். இன்னும் சிலர் வகை வகையான கண்ணாடிகளையும், மணிப்பர்சையும் சேகரிப்பது நமக்குத் தெரியும்.

மறைமலை அடிகள் அதிக நூல்களைப் படித்தவர், பாதுகாத்தவர்.

இப்படி வீட்டிலேயே பெரிய நூலகங்களை வைத்துள்ளவர்களைச் சந்தித்தால் என்ன என்று சிந்தித்தோம்; சந்தித்தோம்.

"என்னிடம் 1830ல் வெளிவந்த நூல் இருக்கிறது. இந்த வரலாற்று நூல் ஒருபக்கம் தமிழிலும், மறுபக்கம் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டது, வரலாற்று நூல்கள் அதிகமாக வைத்திருக்கிறேன்; இவற்றில் விளம்பரம் இல்லாத நூல்கள் அதிகம்.

1923-ல் 'காந்தி சரித்திரக் கும்மி' என்ற பெயரில் எஸ். அரங்கம்மாள் என்பவர் எழுதியிருக்கிறார்.. இது கிடைத்தற்கரிய நூலாகும். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் சிறுவர்களுக்காக நூல் ஒன்று எழுதியிருக்கிறார் என்பது பலருக்குத் தெரியாது. 'சிறுவர் பாடல் திரட்டு' என்ற ஒரு நூலை 1925-ல் வெளியிட்டுள்ளார். என் நூலகத்தில் அந்த நூல் இருக்கிறது.

எதல்பர்ட் கோனார் என்பவர் இந்து தேசிய வரலாற்றை 1910-லேயே கவிதையாக எழுதியிருக்கிறார் என்றால் அதை நம்புவதே சிலருக்குக் கஷ்டமாக இருக்கும்.

ஒரு யாப்பு நூலை ஆங்கிலேயர் வெளியிட்டுள்ள செய்தியைக் கேள்விப்பட்ட கவிஞர் அதை எப்படியும் தனது நூலகத்தில் இணைத்திட வேண்டும் என்ற எண்ணத்தில் பதினைந்து

ஆண்டுகளுக்கு முன் முயன்று எங்கெங்கோ தேடி, பின் ஒரு நாள் அந்நூலை மூர்மார்க்கெட்டில் கண்டு பிடித்து பெற்று இருக்கிறார்.

இவர் பல ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருக்கும் நூல் ஒன்று உண்டு என்றால் அது மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை எழுதிய 'மயூரப்புராணம்' மட்டும்தானாம். இதைப் படிக்கும் நண்பர்கள் யாரிடமாவது இருந்தால், அனுப்பி வைத்தால் இவரின் நூலகம் சிறப்புறும்.

*1894*-ல் 'சைவப்பதார்த்தம் சமைக்கும் முறை' என்ற நூல் செஞ்சி ஏகாம்பர முதலியார் எழுதியிருப்பதும், திருட்டுக் கலையைப் பற்றிய நூல் ஒன்றையும் இங்கே காண முடிகிறது.

*1842* முதல் *1984* வரை தமிழகத்தில் வந்துள்ள, கவிதை நூற் பட்டியலையும், கவிஞர்களின் பட்டியலையும் தொகுத்து வைத்திருப்பவர் இவர் மட்டும்தான்!

உவமைக் கவிஞர் சுரதாதான் இப்படி ஒப்பற்ற நூல்களைச் சேர்த்து வைத்திருக்கிறார், அது அவருடைய வீட்டு நூலகத்திற்குள் வந்தால் தெரியும்.

இதழ்: தாய்[19-2-1985]
பேட்டி: பாபநாசம் குறள்பித்தன்

உ-2

## விஞ்ஞானிக்கு விழா எடுத்த கவிஞன்!

"எவனெல்லாம் இந்த உலகில் குறிப்பிடும்படியான சாதனைகள் செய்கிறானோ, அவனை எல்லாம் இந்த உலகம் உடனுக்குடன் மறந்துவிடுகிறது- என்றவாறே பேட்டியைத் துவங்கினார் உவமைக் கவிஞர் சுரதா."

சமீபத்தில் மதுரை வந்திருந்த கவிஞர் சுரதாவை 'மதுரை மணி' தீபாவளி மலருக்கென பேட்டி காண அணுகினோம். தள்ளாட்டமான வயதிலும் தடுமாற்றமின்றி பேசத்தொடங்கினார் சுரதா. ஆணித்தரமான கருத்துக்களை கூறுவதில் தயக்கம் காட்டாத கவிஞர் சுரதா மூன்று தலைமுறையாய் வாழ்ந்து கொண்டிருக்கும் 73வயது கவிஞர். பாரதிதாசன், பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம், கண்ணதாசன் போன்ற கவிஞர்களுடன் வாழ்ந்த இவர் இன்றைய கவிஞர்களுக்கு விடியலாகத் திகழ்கிறார் என்றால் மிகையல்ல.

உவமைக் கவிஞர் சுரதாவிடம் பேட்டியைத் துவக்கினோம்.

கேள்வி: உண்மைப் பெயரே "சுரதா" தானா?

பதில்: இல்லை தாய் தந்தையர் வைத்த பெயர் ராஜகோபாலன் தந்தை திருவேங்கடம். தாயார் செண்பகம். நெசவாளர் குடும்பம் சொந்த ஊர் நாகப்பட்டினம் அருகே உள்ள பழையனூர்.

ராஜா மடம் விடுதியில்தான் எனது பள்ளி வாழ்க்கைத் துவங்கியது. ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள்தான் ராஜ மடத்தில் படித்தோம். தமிழக வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம், பேராசிரியர் இலக்குவனார், தெள்ளூர் வீராச்சாமி, பட்டுக்கோட்டை குமாரவேல், விபூதி வீரமுத்து, தற்போது

மதிமுக அவைத்தலைவர் எல். கணேசன், ஓவியர் ரசாக் போன்றோரெல்லாம் என் காலத்தில் படித்தவர்கள்.

கேள்வி: இலக்கியத் துறையில் குறிப்பாக கவிதைத் துறையில் நாட்டம் வந்தது எப்படி?

பதில்: சிறுவயதில் ஓட்டப்பந்தயத்தில் எனக்கு ஆர்வமுண்டு. விளையாட்டுத் துறையில் நாட்டமுடையவனாக இருந்தேன். எனது 10-வது வயது என்று நினைக்கிறேன். சங்கரசாஸ்திரி என்ற ஆசிரியர் பள்ளியில் எனக்கு கடவுள் வாழ்த்துப்பாடும் வாய்ப்பை அளித்தார். அன்றிலிருந்தே கவிதை எழுதத் துவங்கிய பணியை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

கேள்வி: "சுரதா" என்ற புனைப்பெயர் வந்தது எப்படி?

பதில்: சிறுவயதிலிருந்தே விடுதலைக் கவி பாரதியார், புரட்சிக்கவி பாரதிதாசன். போன்றோரின் பாடல்களில் நாட்டமுடையவன் நான். எனக்கும் இலக்கிய துறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பாரதியார் இறந்த ஆண்டில் பிறந்தவன். ராமலிங்க அடிகளார் மறைந்த நாளில்தான் புது இல்லம் கட்டி புகு விழா நடத்தினேன். பாரதியார் பிறந்த நாளில் எனக்கு தொலைபேசி வசதி கிடைத்தது. எல்லாவற்றுக்கும் மேலாக என் நெஞ்சம் நிறைந்த கவிஞர் பாரதிதாசன் வாழ்ந்த நாட்களில் அவரை சந்தித்துப் பழகும் பெரும் பேறு பெற்றவன்.

ஏற்கனவே பாரதி மேல் இருந்த பற்றின் காரணமாகத்தான் சுப்புரத்தினம் என்ற பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார் புரட்சிக் கவிஞர் மீது எனக்கு இருந்த காதலை வெளிப்படுத்த சுப்புரத்தினதாசன் என்றும் அதன் சுருக்கமாக "சுரதா" என பெயர் சூடிக் கொண்டேன். அதுவே நிலைத்த பெயராகிவிட்டது.

கேள்வி: உவமைக் கவிஞரான தாங்கள் சினிமாவுக்கும் பாட்டு எழுதி உள்ளீர்கள் அந்த அனுபவங்களைப் பற்றிக் கூற முடியுமா?

பதில்: நடிகர் பி.யூ.சின்னப்பா என் நெருங்கிய நண்பர். அவர் நடிகர் மட்டுமல்ல. சிறந்த கவிஞரும்கூட. அவரும் நானும்

இணைந்து வெண்பாபாடி உள்ளோம். சினிமாவில் என் அனுபவம் பற்றி சொல்ல வேண்டுமென்றால் "என் தங்கை" படத்திற்காக மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்காக "ஆடும் ஊஞ்சலைப் போல அலை ஆடுதே" என்ற பாடலை எழுதினேன். கடற்கரையில் காதலர்கள் பாடுகின்ற டூயட் பாட்டு அது. இன்றும் நிலைத்த புகழ் பெற்றுவிட்டது.

இதே போல் சீர்காழி கோவிந்தராஜனின் கணீர் குரலில் ஒலிக்கின்ற "அமுதும் தேனும் எதற்கு" என்ற பாடலும் நான் எழுதியது தான். சினிமாவுக்காக பல பாடல்கள் எழுதி இருந்தாலும்கூட நீர்க்குமிழி என்ற படத்திற்காக "ஆடி அடங்கும் வாழ்க்கையடா" என்று நான் எழுதிய பாடலை என்னால் மறக்க முடியாது. காரணம், இந்தப் பாடலை பாடிய வரும் சீர்காழி கோவிந்தராஜன். அவர் மறைந்த போது இறுதி ஊர்வலத்திலும் இதே பாடலை ஒலிபரப்பினார்கள். இப்போது நினைத்தாலும் அந்த நினைவுகள் நிழலாடும். குறிப்பாக இந்தப் பாடலை 5000 தடவைக்குமேல் ஒளிபரப்பி இருப்பார்கள் என்றே கருதுகிறேன்.

கேள்வி: உங்களால் மறக்க முடியாத சம்பவமாக எதைச் சொல்கிறீர்கள்?

பதில்: நிச்சயமாக புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடன் இருந்த நாட்கள்தான். புதுவையில் அவரிடம் 3 வருடம் "படி" எடுப்பவனாக (நகல் எடுப்பவர்) இருந்தேன். பாரதிதாசனின் கவிதைகளை "படி" எடுத்ததால் நானும் கவிதைக்கு சொந்தக்காரனாகிவிட்டேன்.

எனக்கு சினிமாவில் நுழையும் ஒரு வாய்ப்பாககூட பாரதிதாசன் இருந்தார் எனலாம். அவர் பாடல் எழுத முடியாமல் வெளியூர் செல்ல நேர்ந்த சமயத்தில் தான் எனக்கு பாட்டெழுதும் வாய்ப்பு கிடைத்தது. "விண்ணுக்கு மேலாடை பருவமழை மேகம்" என்ற பாடலை எழுதினேன்.

நான் வாழும் நாட்களிலேயே இந்தப் பாடல் சிறந்த பாடலாக தேர்ந்தெடுக்கப்பட்டது மகிழ்ச்சியைத் தந்தது.

எல்லா மனிதர்களும் பிறந்த தேதியையும் இறந்த தேதியையும் குறிப்பிட்டு சொல்கின்றனர். ஆனால் ஒருவரும் "சிறந்த நாள்" என்று ஒன்று இருப்பதையே மறந்து விடுகின்றனர். என் வாழ்நாளில் சிறந்த நாள் 41-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ந்தேதிதான். அந்த நாளில்தான் புரட்சிக்கவியை முதன் முதலாக சந்தித்தேன். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்நாளின் சிறந்த நாளைக் குறிப்பிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

கேள்வி: இன்றைய நிலையில் கவிதை என்பது பொழுது போக்காகி வருகிறதே?

பதில்: பொழுது போக்கு என்ற சொல்லையே நான் வன்மையாக எதிர்க்கிறேன். இந்த வார்த்தையை அகராதியில் இருந்து அழிக்க வேண்டும். பொருள் சேர்க்க வேண்டும் என்றுதானே மனிதன் சம்பாதிக்கிறான். அப்போது மட்டும் பொழுதுபோக்கு என்று நினைக்காமல் பொறுப்புடன் நடந்து கொள்ளும் விஷயங்களை பொழுது போக்கு என்று எப்படி சொல்லலாம். ஒவ்வொன்றையும் செய்யும் போது நோக்கம் இருக்க வேண்டும். பொறுப்பு இல்லாமல் "பொழுது போக்கு" என்று சொல்லிக்கொண்டு அலைபவனுக்கு ஓட்டுரிமை தரக்கூடாது.

மேலும் தாய்மொழியில் ஒருவன் கவிதை எழுதுவது புதியதல்ல. இதை ஆச்சரியமாக சொல்லித் திரிவது மடத்தனம்.

கேள்வி: இன்றைய கவிஞர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்?

பதில்: அப்துல் ரகுமான் நுட்பமான அறிவுமிக்க திறமையான கவிஞன். மற்றவர்களை மிஞ்சும் திறமை கொண்டிருந்தாலும் பொறாமை இல்லாதவர்.

இன்றைய கவிஞர்களுக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் திறமைமிக்கவர்களுக்கு வழிவிட வேண்டும்.

கேள்வி: கப்பல், விமானம், படகு போன்றவற்றில் எல்லாம் கவியரங்கங்களும் நடத்தி புதுமை செய்கிறீர்கள். அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?

பதில்: ரயிலில் இங்கிருந்து டெல்லி வரை கவியரங்கமும், பட்டிமன்றமும் நடத்த எண்ணி உள்ளோம்.

ஒவ்வொன்றும் இங்குதான் நடைபெற வேண்டும். என்று நாம் வரையறைப்படுத்திக்கொண்டு உள்ளோம். திருமணம் நடக்க வேண்டுமானால் அதற்கென மண்டபத்தை தேடி அலைகிறோம். அது கூடாது. நான் பிறந்த நாளில் (23-11-1929) விமானத்திலேயே முதல் திருமணம் நடந்தது. இந்த நிகழ்ச்சியின் விளைவாகதான் விமானம், கப்பல், ரயில் போன்றவற்றில் கவியரங்கத்தை நடத்துகிறேன்.

இந்த உலகில் எந்த மனிதன் குறிப்பிடும்படியான சாதனை படைக்கிறானோ அவனையெல்லாம் இந்த உலகம்மறந்து போகிறது. விண்ணில் காலடி பதித்த மனித சமுதாயத்தை தலை நிமிர்த்தியவன் விஞ்ஞானி நீல் ஆம்ஸ்ட்ராங் அவனைக்கூட இன்று மறந்துவிட்டோம். அதனால் தான் கடந்த செப்டம்பர் மாதம் ஒரு விஞ்ஞானிக்கு எனது தலைமையில் விழா எடுக்கப்பட்டது.

இதே போல் நினைவுகூறத்தக்க அனைவருக்கும் விழா எடுக்க வேண்டும். "மிதி வண்டி" என்ற சொல்லைக் கண்டுபிடித்தவன் நம் தமிழ் நாட்டைச் சேர்ந்த தச்சன் அவனை மறந்து விட்டோம். ஈருருளி துவி சக்கர வண்டி என்ற வாயில் நுழையாத பெயர்களை எல்லாம் மாற்றி மிதிவண்டி என்று அழகாக மாற்றியவன் நம்மூர்க்காரன்.

இப்படிப்பட்டவர்களின் சந்ததியினராவது பாராட்டப்பட வேண்டும்.

தற்போது திருமணச் செய்திகள் மற்றும் வாழ்த்துச் செய்திகளை "அஞ்சல்வழி செய்தி அரங்கம்" என்ற பெயரில் தெரிவிக்க ஏற்பாடு செய்துள்ளோம். இதனால் பல புதிய எழுத்தாளர்களின் அறிமுகங்கள் கிடைக்கும். மேலும் "அருந்தமிழ் சொற்களை தொகுத்து புத்தகமாகவும் வெளியிட உள்ளேன்"

**இதழ்: மதுரைமணி [தீபாவளி மலர்]**
**2-11-1994**

# சிலப்பதிகாரம் தினத்தந்திச் செய்தியா?

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

இது குறள் என்பதும், இதற்கு விளக்கம், "தன்னைக் காத்து, தன் கணவனையும் காத்து, தகுதி வாய்ந்த புகழையும் காப்பதோடு எந்தச் சூழ்நிலையிலும் உறுதி தளராதவளே பெண்" என்பதும் நமக்குத் தெரிந்தவையே. ஆனால் இதே குறளுக்கு உவமைக் கவிஞர் சுரதா தரும் விளக்கம் புதுமையானதாகவும், இன்றைய சூழலில் நம்மை அதிகம் சிந்திக்க வைப்பதாகவும் இருக்கிறது.

புதிய சமுதாயம் இதழுக்காகக் கவிஞர் சுரதாவைச் சிறப்புப் பேட்டி கண்டபோது, "படிக்கின்ற பழக்கம் இப்போது நம்மவர்களிடையே வெகுவாகக் குறைந்துவரக் காரணம் என்ன?" என்று கேட்ட கேள்விக்கு அவர் மேற்கண்ட குறளை விடையாகக்கூறி அதற்கு அரியதொரு விளக்கமும் தந்தார்.

"நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்பதன் மூலம் தன்னை- தன் மனத்தை - காத்துக்கொள்ள வேண்டும்; தன் மானத்தைக் காத்துக் கொள்ள உதவும் நூல்களைச் செய்யும் எழுத்தாளர்களை- அவர்களின் நூல்களை ஓசியில் படிக்காமல் காசு கொடுத்து வாங்கிப் படிப்பதன் மூலம்- காக்க வேண்டும். படித்த நூல்களில் உணர்ந்த கருத்துக்களையும் சொற்களையும் மற்றவர்களிடம் -கூறுவதன் வழி -நூலின் கருத்துக்களும், சொற்களும் மறைந்து போகாமல் இருக்க உதவ வேண்டும். இந்த மூன்று செயல்களையும் செய்வதில் எப்போதும் உறுதி தளராமல் இருக்க வேண்டும். குறளில் 'பெண்' என்றிருக்கும் இடத்தில் வாசகன் எனப் போட்டுக்கொண்டு சிந்தித்தால் ஒரு வாசகனின் கடமையை அந்தக் குறள் மிகத் துல்லியமாக விளக்குவதைக் காணலாம்.

அதே இடத்தில் எழுத்தாளன் என்று போட்டுக்கொண்டு சிந்தித்தால், ஒழுக்கமுள்ளவனாக, உயர்ந்த பண்புள்ளவனாக ஓர் எழுத்தாளன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றும், எழுத்தின் தரத்தை உயர்த்துவதன் வழி தன் எழுத்தை நம்பிப் படிக்கும் வாசகர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும், புதிய புதிய சொற்களை உருவாக்குவதன் மூலமும் சொற்களை மறைந்து போகாமல் காக்க வேண்டும் என்றும், இந்த மூன்று பணிகளைச் சோர்வில்லாமல் அவன் செய்ய வேண்டும் என்றும் அந்தக் குறளுக்குப் பொருள் கூறலாம்.

எழுத்தாளனும் வாசகனும் மேற்குறித்த வழிகளிலிருந்து திசை மாறிச் சென்று கொண்டிருப்பதால் தான் படிக்கும் பழக்கமும், எழுத்துலகமும் இன்று நலிந்தும் மெலிந்தும் போய்க்கொண் டிருக்கின்றன."

மேற்கண்டவாறு கவிஞர் சுரதா குறளுக்கு விளக்கம் கூறி இன்றைய சராசரி வாசகனும் எழுத்தாளனும் எப்படி உள்ளனர் என்பதையும் தெளிவுபடுத்தினார். மேலும் சில கேள்விகளுக்கு சுரதா அளித்த பதில்கள்:-

**கேள்வி:** உரைநடைக்கும் கவிதைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

**பதில்:** உரைநடை சுவர்க்கடிகாரம் போன்றது. சுவர்க்கடிகாரம் பெரிதாயிருக்கும். நாம் தான் ஓடிப்போய் அதில் மணிபார்க்க வேண்டுமே தவிர, அது நம்மோடு வந்து மணி காண்பிக்காது. அதைப்போல அளவில் பெரிதாக இருக்கும் உரைநடை வடிவங்களான சிறுகதை-நெடுங்கதை-கட்டுரை முதலானவை படிக்கும்போது இன்பம் தருபவை. மற்ற நேரத்தில் பெரும்பாலும் அவை பயன்படுவதில்லை. ஆனால் கவிதை அவ்வாறல்ல. கைக்கடிகாரம் மாதிரி அளவில் சிறிதாக அமைந்து சுவர்க்கடிகாரம் தரும் அத்தனை பயன்களையும் தரும். அது மட்டுமல்ல! கையில் இருந்து கொண்டு எந்த நேரத்திலும் பயன்படும் கைக்கடிகாரம் போல கவிதை நெஞ்சத்திற்குள் எந்த நேரமும் நின்று நிலைத்து இன்பம் தரும்.

**கேள்வி:** கவிஞன் பிறக்கிறான்; உருவாக்கப்படுவதில்லை என்னும் கருத்தை ஏன் மறுக்கிறீர்கள்?

பதில்: 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்னும் குறள் இதற்குத் தகுந்த சான்று என்று கருதுகிறேன். பிறப்பு எல்லோருக் கும் ஒன்றுதான். செய்கின்ற தொழில்களால்தான் அவரவர் சிறப்புகள் ஒன்றுபடுவதில்லை. கவிதை என்னும் தொழிலைச் செய்வதால் ஒருவன் கவிஞன் எனப்படு கிறான். 'எமக்குத் தொழில் கவிதை' என்ற பாரதியின் கருத்தை உணர வேண்டும் 'கவிஞன் பிறக்கிறான்' என்பது தன்னை உயர்த்துவதற்கு யாரோ ஒரு கவிஞன் விட்ட சரடாக அல்லது ஒரு கவிஞனை உயர்த்த அவனு டைய தீவிர ரசிகன் அள்ளிவிட்ட கதையாக இருக்க வேண்டும்.

கேள்வி: பாரதியார் எளிமையான கவிதைக்கு முன்னோடி என்கிறார்களே?

பதில்: அதை நான் ஏற்கவில்லை. பத்தாவது நூற்றாண்டி லிருந்தே எளிமையான கவிதைகள் வரத் தொடங்கி விட்டன. கவிதையை எளிமைப் படுத்தியதோர் பட்டிய லைக் கூறவேண்டுமானால் பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க அடிகள், குணங்குடி மஸ்தான், வேதநாயகம் சாஸ்திரி, வேதநாயகம் பிள்ளை, சென்னிமலை அண்ணாமலை ரெட்டியார், உடுமலை முத்துசாமிக் கவிராயர், செஞ்சி ஏகாம்பர முதலியார், பாரதியார், பாரதிதாசன் என்றுதான் பட்டியலிட வேண்டும். அது மட்டுமல்ல, சிந்துக்குத் தந்தை பாரதியல்ல. 1861-ஆம் காலத்து அண்ணாமலை ரெட்டியார்தான். அவர்தான் காவடிச் சிந்து என்ற முதல் நூலை எழுதினார்....

கேள்வி: பாரதிதாசன் தானே 'சிந்துக்குத் தந்தை பாரதி' என்று கூறினார். தங்கள் ஆசானின் கூற்று...

பதில்: ஆசானின் கூற்றாயிருந்தாலும் அது ஆண்டவனின் கூற்றாயிருந்தாலும் வரலாற்றை நான் மறைக்க விரும்பவில்லை.

கேள்வி: புதுக்கவிதை பற்றி...

பதில்: தற்போதைக்கு அது ஒரு குடும்பக் கடிதம் மாதிரி இருக்கிறது. குடும்பக் கடிதம் குடும்பத்தாரைத் தவிர மற்றவர்களுக்கும் சுவைக்காது. எதிர்காலத்தில் அது எப்படி ஆகப்போகிறது என்பது தெரியவில்லை. புதுக்கவிதை என்று அதற்குப் பெயர் சூட்டியிருப்பதனால் மரபுக் கவிதையைப் புதுக் கவிதை அவமானப்படுத்துவது போல் தோன்றுகிறது வேறு ஒரு பொருத்தமான பெயரை புதுக்கவிதை எழுதுபவர்களும் படிப்பவர்களும் வைத்துக்கொள்ள வேண்டும். சாலை இளந்திரையன் புதுக்கவிதைக்கு "உரைவீச்சு" என்று பெயரிடப் பட்டிருந்ததை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

கேள்வி: எடுத்தாள்வது, காப்பியடிப்பது இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

பதில்: ஒருவரது கருத்தைக் கூறி அந்தக் கருத்தின்மூலம் தனக்குத் தோன்றிய புதுக் கருத்துக்களை கூறும்போது எழுத்தாளன் எடுத்தாள்கிறான் என்று பொருள். ஒருவரது கருத்தை அப்படியே கூறிவிட்டு அதைப்பற்றி வேறொன்றும் கூறாமல் இருக்கும்போது எழுத்தாளன் காப்பி அடிக்கிறான் என்று பொருள். காப்பி அடிப்பது குறைய வேண்டுமானால் அதிகமாகப் படிப்பதோடு படிப்பதை நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் பெற்ற வாசகர்கள் உருவாக வேண்டும். இப்படிப்பட்ட வாசகர்களால்தான் ஒரு கதையோ கவிதையோ காப்பியடிக்கப்பட்டுள்ளதை உடனடியாகக் கண்டு பிடிக்க முடியும்.

கேள்வி: சிலப்பதிகாரத்தை 'தினத்தந்திக்குரிய ஒரு செய்தி' என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே!

சுரதா: ஆமாம், இன்று அந்தச் செய்தி நடந்தால் தினத்தந்திக்கு முதல் பக்கச் செய்தியாக இருக்கும். அந்தச் செய்தியையே அருமைமிக்க காவியமாக்கியிருக்கும் போதுதான் இளங்கோவின் ஆற்றல் வெளிப்பட்டிருக் கிறது. என்னிடம்கூட சாதாரண செய்திகளைக் கவிதையாக்கும் பழக்கம் உண்டு.

கேள்வி: எங்கள் கவிஞர்களுக்குத் தாங்கள் கூற விரும்புவது?

பதில்: கல்வி செழித்தால் கவிதை வரும். கவிஞர்கள் நூல்களைப் படிக்கக்கூடாது. கற்க வேண்டும். படித்தால் படித்ததை அப்படியே பரீட்சைக்கு எழுதுவது போல் காப்பி அடிக்கத்தான் முடியும். கற்றால்-அதாவது ஆழமாகக் கற்றால் உண்டாகும் புதிய சிந்தனைகளைக் கவிதைகளாக்கலாம். இது அறிவுரையும் அல்ல. ஆலோசனையுமல்ல. எனது அனுபவத்தை உங்கள் கவிஞர்களிடம் பகிர்ந்து கொள்கிறேன் அவ்வளவுதான்.

இதழ்: புதிய சமுதாயம் [மலேசிய இதழ்]

1-8-1979

பேட்டி: பாதாசன்

## நெருப்பும் அழகுதான்!

உவமைக் கவிஞர் சுரதா சிறந்த கவிஞர் மட்டுமல்ல! சிறந்த திரைக்கதை வசன ஆசிரியரும்கூட...

எம்.கே.டி.பாகவதர் நடித்த 'அமரகாவி'க்கும், பி.யு.சின்னப்பா நடித்த 'மங்கையர்க்கரசி'க்கும் திரைக்கதை வசனம் எழுதியவர் இவரே!

1948லேயே அமரகவி படத்தில் நடிக்க பாகவதர் மூன்று லட்ச ரூபாய் வாங்கினாராம். இன்றைய நாணய மதிப்புப்படி அது மூன்று கோடி ரூபாய் என்றார் சுரதா.

நான் மங்கையர்க்கரசி படத்திற்கு வசனம் எழுதிக் கொண்டிருந்தபோது அதில் முக்கிய வேடத்தில் நடத்த நடிகைகளான பி.கண்ணாம்பாவும், அஞ்சலி தேவியும் என் தமிழ் வசனங்களை தெலுங்கில் எழுதி வைத்தே பேசுவார்கள். சின்னப்பாவுக்கு எழுதியிருந்த ஒரு அழகான வசனத்தை பார்த்த கண்ணாம்பா, 'இதை படத்தில் நான் பேசுகிறேன்' என விரும்பிக்கேட்டதால் அவர் பேசுகிற மாதிரி மாற்றித் தந்தேன்.

அஞ்சலிதேவி ஒரு கட்டத்தில் சின்னப்பாவிடம், 'நான் அழகாய் இல்லையா' என்று கேட்க, அதற்கு சின்னப்பா, 'நெருப்பை அழகில்லை என்று யார் செய்வார்கள்?' என்று பதில் சொல்கிற மாதிரி வசனம் அமைத்திருந்தேன்.

இந்த வசனம் பற்றி அஞ்சலிதேவி தன் கணவரிடம் கூறியிருக்கிறார். அவர் மறுநாள் அஞ்சலி தேவியுடன் என்னைப் பார்க்க வந்துவிட்டார்.

"உங்கள் வசனத்தை கேட்டேன். நீங்கள் ஒரு கவிஞரா" என் அஞ்சலி தேவி கணவர் கேட்டார்.

"ஆம் கவிஞன்தான். கவிதை எழுத வாய்ப்பு வராததால் வசனம் எழுதுகிறேன்" என்றேன்!

அஞ்சலி தேவியும் அவர் கணவரும் என்னோடு மிக விரும்பி பேசிக்கொண்டிருந்தார்கள்.

அந்தபடத்தில் ஒரு இடத்தில் கண்ணாம்பாவுக்கு, 'கடவுள் இல்லை' என்று பேசுகிற மாதிரி வசனம் எழுதியிருந்தேன்.

சின்னப்பா என்னை அழைத்தார். 'கடவுள் இல்லை' என்பதை சரியான சூழ்நிலையில் சொல்லி இருக்கிறீர்கள். அதை மக்களில் குறிப்பிட்ட பலர் வெகுவாக ரசிப்பார்கள். ஆனால் கடவுளை நம்புகிறவர்கள் சங்கடப்படுவார்கள். அதனால் இன்னொரு இடத்தில் கடவுள் இருக்கிறார் என்றும் சொல்லி விடுங்கள்' என்றார்.

அதன்படியே வசனம் அமைத்தேன். படம் திரையிட்ட பிறகு இந்த கட்டங்களில் இருசாரரும் திருப்திபட்டு கைதட்டியதை கவனித்தேன். சின்னப்பாவின் அனுபவ அறிவை மெச்சிக்கொண்டேன் என்றார் சுரதா!

வசந்தம் (தினகரன் ஞாயிறு மலர்)

1-10-1993

# எனக்கென்ன, துணிந்து சொல்கிறேன்!

சென்னையில் ஏதாவது இலக்கியக் கூட்டம் முடிந்த பிறகு, நீலச்சால்வை உடலில் தொங்க, வேட்டியும் ஜிப்பாவும் அணிந்த மனிதர் ஒருவர் முன்னால் நடப்பார். அவரைத் தொடரும் ஒரு சிறு கூட்டம்.

கிண்டல், மனோதத்துவம் என்று பலவிதமான கருத்துக்களை அள்ளி வழங்குவார் அந்த மனிதர்.

அவர் உவமைக் கவிஞர் சுரதா, அந்தப் பட்டத்தை இவருக்கு வழங்கியவர் ஜெகசிற்பியன்

பாரதிதாசனின் மாணவர் என்பதால் சுப்புரத்தினதாசன் என்று அவர் வைத்துக் கொண்ட நீளமான பெயரின் சுருக்கம்தான் சுரதா. எழுபத்து மூன்று வயது. ஆனாலும் அபாரமான சுறுசுறுப்பு எதைப்பற்றி கேட்டாலும், ஒளிவு மறைவு இல்லாமல், வெளிப்படையாகப் பேசும் பளிங்கு மனம். அவர் வார்த்தைகளில் நெருப்பு குளிரும். பனிக்கட்டி சுடும். 'வாசுகி'க்காக, அவர் பேசிய கருத்துக்களின் தொகுப்பு இது.

## இலக்கியம்

இலக்கியங்களை ஒட்டு மொத்தமாகக் கொளுத்த வேண்டும். தமிழனின் முன்னேற்றத்தைக் கெடுத்து, கற்பனை உலகில் வாழச் செய்து சீரழிப்பவை இலக்கியங்கள்தான். மேல்நாட்டுக்காரன் கண்டுபிடித்த விமானம். தொலைக்காட்சி போன்ற அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துகிறான். ஆனால், சிந்தனையில் மட்டும் தேங்கிய குட்டையாய், குறுகி நிற்கிறது தமிழ் இனம்.

## பக்தி இலக்கியங்கள்

பக்தியுள்ளவன் சாமி கும்பிடலாம். அது அவன் உரிமை. ஆனால் துறவிகள் என்று சொல்லிக் கொண்டார்களே, அவர்கள் புராண இலக்கியங்கள் பாடியது தவறு. அங்கே துறவி, மதவெறியனாக இலக்கிய வெறியனாக மாறுகிறான். இவனைக்கூடப் பக்குப்படுத்தாத மதம், மற்றவர்களை எப்படி மனமாற்றம் அடையச் செய்யும்? புராணங்கள் பாடினால், எதிர்காலத்தில் தங்கள் பெயர் நிலைக்கும் என்று ஆசையால் பாடிய விளம்பரப் பிரியர்கள் அவர்கள். இப்படிப்பட்ட, இலக்கியச் சாமியார்களைப் பட்டினி போட்டுக் கொல்ல வேண்டும். அதுதான் புண்ணியம்.

## பெண்களின் நாகரீகப் போக்கு

அதில் ஏதும் தவறு இல்லை. பழைய நாட்களில், ஆண் பணி செய்யச் சென்றதால், இல்லக் கடமைகள் பெண்கள் தலையில் விழுந்தது. அவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை என்றாலும், அனுபவம் அவர்களைப் பட்டை தீட்டியது. முன்பு, பிற நாடுகளுடன் அதிகத் தொடர்பு இல்லாததால் வட்டாரக் கலாச்சாரங்கள் வட்டார நாகரீகங்கள் இருந்தன. இப்போது தொலைக்காட்சி வருகை, பயணங்களில் நவீன வசதிகள் காரணமாக உலகம் ஒரே நாடாகச் சுருங்கிவிட்டது. எனவே உடை, உணவு, உணர்வுகள் மாறத்தான் செய்யும். இதில் பயப்பட ஒன்றுமில்லை.

## நடிகர்கள் அரசியல்

வருவதில் என்ன தவறு? ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு உத்தி மக்களிடம் எடுபடுகிறது. காந்தி பெயரைச் செல்லி ஓட்டு வாங்கினார்கள் காங்கிரஸ்காரர்கள். முதலில் அடுக்கு மொழி பேசி, பிறகு நடிகர்களைக் காட்டி ஓட்டு வாங்கினார்கள் திராவிட இயக்கத்தார். இப்போது, நடிகர்களே நேரடியாகக் களத்தில் இறங்கி, தங்களுக்கு ஓட்டுக் கேட்கிறார்கள். இதில் என்ன தவறு. மக்களை மயக்குவதில், அவ்வப்போது ஒரு கவர்ச்சி எடுபடுகிறது. இப்போது சினிமா கவர்ச்சி! இதில் கவலைப்பட நமக்கு என்ன உரிமை?

## சமூகச் சிந்தனையாளர்கள்

பெரியாருக்கு முந்தியும்கூட, சுய சிந்தனையாளர்கள் இருந்திருக்கிறார்கள். 1905ஆம் ஆண்டு சின்னவன் என்பவர்

'மூடமதி கண்டனம்' என்று ஒரு நூல் எழுதி இருக்கிறார். அத்தனையும், மூட நம்பிக்கைக்கு எதிரான சுயசிந்தனைகள். இன்றைய பகுத்தறிவாளர்களுக்கு அதுபற்றித் தெரியாது! அதே போல பாரதிதாசன், திரு.வி.க. போன்றவர்கள் 'முத்தரையர் மாநாடு' என்று ஒரு மாநாடு நடத்தினார்கள்; காரசாரமாகப் பேசினார்கள். ஆனால், பெரம்பூரைச் சேர்ந்த ஒரு அறிஞர் எழுதிய 'முத்தர் கலம்பகம்' என்னும் நூலைப்பற்றி பேசவில்லை காரணம்? அதை எழுதியவர் ஒரு தாழ்த்தப்பட்டவர். அவர் எழுதிய நூல் பற்றிச்சொல்வது தங்களுக்குக் கவுரவக் குறைவு என்று நினைத்தார்கள்.

சாதி ஒழிப்பு பற்றிப்பேசும் எந்த மனிதனுக்கும், தன் சொந்தச் சாதி மீது மட்டும் அபிமானம் இருக்கும். இது கசப்பான உண்மை.

## இன்னொரு சிலம்பு ராமாயணம்...

அன்று புலவர்களுக்கு, ஓய்வு இருந்தது. சோறு போட, சடையப்பவள்ளல் மாதிரி வள்ளல் இருந்தாங்க. இன்றுகூட, முடியரசன் மாதிரி எத்தனையோ நல்ல கவிஞர்கள் இருக்காங்க. ஒரு காவியம் எழுதினா ஒரு வீடு தருவோம். காடு தருவோம்னு அரசாங்கத்தை அறிவிக்கச் சொல்லுங்க. காவியம் வந்து குவியும். அதை விட்டுட்டு, போக்குவரத்துச் செலவு மட்டும் குடுத்தா, புதுக்கவிதைதான் எழுதுவான்!

## விமானக் கவியரங்கம், கப்பல் கவியரங்கம்

ஒரு மாறுதலுக்காகவும் மகிழ்ச்சிக்காகவும்தான். வசதி உள்ளவங்க பணம் குடுக்கிறாங்க.

தரையில் நடக்கிற நம்ம கவிஞர்கள், தண்ணிமேல மிதக்கட்டும், வானத்துல பறக்கட்டுமே! இதுல உனக்கு என்ன வருத்தம்? ஒரு காலத்துல, தெரு முனையில் கவிதை படிச்சான், பிறகு மண்டபத்துல கவிதை படிச்சான். இப்ப காலமாற்றத்துக்கு ஏற்ப, கப்பல்ல கவிதை படிக்கிறான். சந்தோஷமா இருக்கு.

## நடிகைகள் அந்தரங்கம்

ஏன் கூடாது? கடவுள் லீலைகளைப் பற்றி கவிதை எழுதுகிறான். அரசர்களின் அந்தப்புர ராணிகளைப் பற்றி வருணித்தும்

எழுதுகிறான். எதைப்பற்றி எழுதினாலும், சுவையா, சிந்திக்கும்படியா எழுதணும். அதுக்குப் பேர்தான் கவிதை.

## சமூக, அரசியல் தலைவர்கள்

சமூகத்தலைவர்கள்ள பெரியார் ஒருத்தர்தன் உண்மையான தலைவர். பணம், செல்வாக்கு இதையெல்லாம் இளமையிலேயே அனுபவிச்சுட்டு சமூகசேவைக்கு வந்தவரு. அது போல அண்ணா அரசியல்ல துறவிபோல வாழ்ந்த உத்தமர்.

மத்தத்தலைவர்கள் சுயநலவாதிங்க. தன் குடும்பம், தன் மக்கள் என்று சுயநலத்தை நிறைவு செஞ்சுக்கிட்டு, பொது வாழ்க்கை வாழுற பொழுது போக்குத் தலைவர்கள்!

## எளிமைக்குக் காரணம்....

தியாகராச பாகவதர் எனக்கு நண்பர். அவர் தங்கத்தட்டில் சாப்பிடுவார். எனக்கும் தங்கத் தட்டில் உணவு படைக்கச் சொல்வார். அன்றுமுதல், தங்கத்தின்மீது எனக்கு இருந்த பிரமிப்பு நீங்கியது. பி.யூ.சின்னப்பா, விலை உயர்ந்த வைர மோதிரம் வைத்திருப்பார். அதை நாள் முழுக்க நண்பர்கள் கையில் மாட்டி அழகு பார்ப்பார். "பணம் கொடுத்து வாங்கியது நான்தான். ஆனால் அது இப்போது உன் மோதிரம்தானே" என்பார். அந்த ஆழமான வார்த்தைகள், என்னுடைய பொருளாசையை மட்டுப்படுத்தியது.

இவர்கள் எல்லாரும் இந்த உலகத்தில் வாழ்ந்து முடிக்கும்போது என்ன ஆனார்கள்? இதையெல்லாம் நினைத்தால், எளிமை தானாக வரும்...

## மனமாற்றம் ஏற்பட வேண்டிய துறைகள்

போலி ஆடம்பரங்களில் இருந்து மக்கள் விடுபடவேண்டும்.

விபச்சாரத்தை ஒழிக்கும் வேகத்தை விட, தேவையற்ற விருந் தோம்பலை முதலில் ஒழிய வேண்டும். வீட்டுக்கு வரும் தெரிந்த நண்பர்களுக்குக்கூட, ஆடம்பரமான சாப்பாடு, கல்யாணத்தில் தகுதிக்கு மீறி விருந்துச் செலவு செய்யும் டாம்பீகம் மாற வேண்டும். நான் மலேசியாவுக்குச் சென்றபோது, ஒரு நண்பர் வீட்டில், காலை உணவு சாப்பிட்டேன். உப்புமா மிகச்சிறப்பாக இருந்தது.

"அதுல ரெண்டு பொட்டலம் பார்சல் பண்ணுங்க. மத்தியானச் சாப்பாட்டுக்கு இருக்கட்டும்" என்றேன். ஆச்சரியப்பட்டார்கள். இதில் என்ன ஆச்சரியம்? நம் வீட்டில் நாம் பிடித்த பண்டத்தை கேட்பதில்லையா?

## சமூக சீர்திருத்தவாதி?

வ.உ.சிதம்பரனார்! 1928. காரைக்குடி ஒரு செட்டியார் வீட்டில் விருந்து. இவர் சாப்பிட்ட இலையில் சாப்பிட உட்கார்ந்தாராம் மனைவி. உடனே வ.உ.சி.க்கு கோபம் வந்து விட்டதாம்.

"அடுத்தவர் இலையில் சாப்பிடும் அடிமைப் பழக்கத்தை நிறுத்து. இல்லையென்றால், உன் இலையில் நானும் சாப்பிட அனுமதி கொடு" என்று சொன்னாராம். என்ன அருமையான சிந்தனை!

## இளையராஜா இசை சாதனை

இசை ஒரு குறிப்பிட்ட மேல் வர்க்கத்துக்கு மட்டுமே உரியது என்று காலம் காலமாக ஒரு அபிப்பிராயத்தை வளர்த்து வந்தார்கள்.

அதை மீறி எவனாவது பாடி மக்கள் மத்தியில் பெயர் பெற்றால், அவன் ஆழ்வார் என்றும் நாயனார் என்றும் லேபில் ஒட்டி ஏற்றுக்கொண்டார்கள். திருநீலகண்ட நாயனார், திருப்பாணாழ்வார் போன்றவர்கள் அப்படித்தான் வேறுவழியின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள்.

எல்லாரையும்விட, சாமியைப் பார்க்க விரும்பிய நந்தனாரை எரித்துத்தான் ஏற்றுக் கொண்டார்கள்!

இளையராஜாவையும் அப்படி அக்கினியில் போட்டுத்தான் வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டார்கள்.

## அடுத்த புத்தகம்

என்னைப் பற்றிய பல அறிஞர்கள் சொன்ன பாராட்டுரை களையும், என் புத்தகங்கள் பற்றிய மதிப்புரைகளையும் தொகுத்து, நானே வெளியிடப் போகிறேன். மத்தவங்ககிட்டவிட்டாபாதியை எடுத்துடுவான். பொறாமை!

நானே வெளியிட்டா சுயவிளம்பரம் ஆகாதான்னு கேட்கலாம். நான் என்ன பொய்யா சொல்றேன். என் பணத்துல வாங்கின மோதிரம். அதை நான் விரல்ல போட்டுக்கிட்டா, மத்தவன் ஏன் குறை சொல்லணும்? நல்ல காரியங்களுக்குக் குறுக்க வர்ற அபிப்பிராயங்களை பொருட்படுத்தக்கூடாது.

இதழ்: வாசுகி [1-10-1993]
பேட்டி: புரொபசர் இராமு

## தங்கத்தட்டில் சாப்பிட்டேன்

**கேள்வி:** தங்களுடைய திரைப்பட பிரவேசம் பற்றி கூறுங்களேன்?

**பதில்:** திரு.பி.யூ.சின்னப்பா அவர்கள்தான் தனது 'மங்கையர்க்கரசி' திரைப்படத்தில் என்னை அறிமுகம் செய்தார். அதில் பி.யூ. சின்னப்பா மன்னனாகவும், அஞ்சலிதேவியும் நடித்தனர். நான் வசனம் எழுதினேன். அஞ்சலி தேவி கதையின்படி மன்னனை மயக்குவார். மன்னன் மறுப்பு தெரிவிக்க. அவளோ " நான் அழகாக இல்லையா என்பாள்" உடனே மன்னன் 'நெருப்புக்கு அழகில்லை என்று யார் சொன்னது?' என்பார். நான் எழுதிய இந்த வசனம் எனக்கு பாராட்டைத் தேடித் தந்தது.

**கேள்வி:** தங்களின் காலகட்டத்தில் பாடலுக்கு முக்கியத்துவம் எப்படி இருந்தது?

**பதில்:** மிகவும் கௌரவமான சூழ்நிலை நிலவியிருந்தது. இன்றைய பாடலாசிரியர்களை கூலிக்காரர்கள் என்று மற்றவர்கள் நினைத்து நடத்தும் நிலை அன்று இல்லை. பாடல் எழுதித்தந்தால், எழுந்து நின்று கும்பிட்டுப் பெறுவார்கள். ஒரு வேளை பாடல் சரியாக அமையாவிடில், எழுதியவர் மனம் புண்படாமல் பேசி அவருக்கு பேசிய தொகையை இனாமாகவே தந்து அவர் வாட்டத்தை போக்குவார் டி.ஆர். சுந்தரம்.

**கேள்வி:** சினிமா அனுபவத்தில் நீங்கள் கற்றுக் கொண்டது?

**பதில்:** என்னை பாதித்தவர்கள் என் நெஞ்சிலே எளிமையின் வெற்றியை விதைத்தவர்கள். நான் 'புது வாழ்வு' படத்திற்கு கதை வசனம் பாடல்கள் எழுதிய சமயம்.

அதில் பாகவதரும், டி.ஆர். ராஜகுமாரியும் நடித்தனர். பாகவதர், 3லட்ச ரூபாய் சம்பளமும், ராஜகுமாரி ஒரு லட்ச ரூபாய் சம்பளமும் பெற்றனர்.

பாகவதர் வீட்டிற்கு சாப்பிட என்னை அழைத்து சென்றார். வேலையாள் பாகவதருக்கு தங்க தட்டும், எனக்கு வாழை இலையும் பரிமாறினார். அதைக்கண்ட பாகவதர் மறுத்து எனக்கும் தங்க தட்டில் உணவிட உத்தரவிட்டார். அந்த தங்க தட்டு சுமார் 110 பவுன். அந்தப் படம் முடியும்வரை நான் தங்க தட்டிலேயே உண்டேன்.

அன்றைக்கு நான் தங்கத்தட்டில் உண்பதை பெரும் பெருமையாக நினைத்ததால் இன்றும் அதற்காக இன்பம் கொள்கிறேன். பெருமைப்படுகிறேன். ஆனால் அதுவே எனக்கு சொந்தமாகி விடக்கூடாதா என்று நினைத்திருந்தால் என் நிலை?

இதே போல்தான் பி.யூ. சின்னப்பா அவர்கள் தன் விரலில் 42 கேரட் வைர மோதிரம் அணிந்திருப்பார். அதை எல்லோருக்கும் அணிவித்து அழகு பார்த்து அவர்கள் மனம் நெகிழ வைத்தார். இப்படி 'எனக்கு வேண்டும்' என்ற எண்ணம் இல்லாமல் இருக்கின்ற தன்மையில் எளிமை என்னை ஆட்கொண்டது.

கேள்வி: தங்களின் நினைவில் நிற்கும் எழுத்தாள முன்னோடிகள்?

பதில்: முதன் முதலில் வசனகர்த்தாவின் பெயரினை போஸ்டரில் வெளியிட்டு கௌரவப்படுத்தியது வசனகர்த்தா இளங்கோவனைத்தான். தினமணியின் உதவி ஆசிரியராக இருந்தவர். தீபாவளி மலரில் 'சாவே வா' என்ற கட்டுரை எழுதினார். அதற்கு பெரும் பாராட்டினையும் திரைப்படைத்துறையினரின் பார்வையையும் பெற்றார். போஸ்டரில் பெயர் இடம்பெற்ற முதல்வசனகர்த்தா இளங்கோவன்தான். அதே சமயம் புனைபெயரில் எழுதிய முதல் எழுத்தாளரும் இளங்கோவன்தான். தணிகாசலம் என்கிற தன் இயற்பெயரை எழுத்துலகுக்காக இளங்கோவன் என மாற்றிக் கொண்டார். பம்மலிலிருந்து இவரது பெயரிலேயே மாத இதழும் வெளிவந்துள்ளது. நான்கு மொழிகளில் புலமை பெற்றவர். 1946ல்

என்னுடைய நாடகம் திருச்சி வானொலியில் இடம்பெற்றது. அதன் மூலம் என் நண்பராகி நிறைய உதவிகளை எனக்கு செய்துள்ளார்.

அடுத்து பக்தி பாடல்களுக்கென பாபநாசம் சிவன், கருத்தான பாடல்களுக்கு உடுமலை நாராயணகவி என்று பெயர் பெற்றவர்கள். புதுமை எழுத்தாளர், புதிய சொற்களின் வல்லுநர் கம்பதாசன். ஒரு நாள் நான்கு பாடல்களை உடனுக்குடன் எழுதும் ஆற்றல் மிக்கவர். ஒரு பாடலுக்கு ரூ.200 (இருநூறு) சம்பளம் பெற்றவர் அவர்! அந்த காலத்தில் இது அதிகச் சம்பளம்!

இதழ்: சினிமலைட்ஸ்ஆன்
[1-3-1993]
பேட்டி: இராஜப்ரியா

## பாடலாசிரியர்களை தட்டிக் கொடுத்தது அந்தக்காலம்! 'தட்டுவது' இந்தக்காலம்!

'அமுதும் தேனும் எதற்கு' என்ற பாடல் உள்பட மறக்க முடியாத பல திரைப்பட பாடல்களையும் பல ஆயிரம் கவிதைகளையும் படைத்தவரான 'உவமைக் கவிஞர்' சுரதாவுக்கு 76 வயது என்றால் நம்ப முடியவில்லை. அந்த அளவுக்கு சுறுசுறுப்பாக செயல்பட்டு வருகிறார்.

அண்மையில் கவியரசு சுரதாவை சந்தித்த போது சொன்னார்.

"14 வயதில் நான் எழுதிய கவிதை கடவுள் வாழ்த்தாக பாடப்பட்டது. எனது முதல் கவிதை அது தான். 1944-ம் ஆண்டு திருச்சியிலிருந்து வெளியான 'சிவாஜி' என்ற பத்திரிகையில் எனது கவிதை முதலில் பிரசுரமானது.

திரைப்படத்துறையில் நான் முழுநேர கவிஞராக ஈடுபடாவிட்டாலும் நான் எழுதிய சில சினிமா பாடல்களை காலத்தால் அழியாத காவியங்கள் என்று மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். 1958-ம் ஆண்டில் வெளியான 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற திரைப்படத்தில் 'அமுதும் தேனும் எதற்கு' என்ற பாடலையும் 'நீர்க்குமிழி' திரைப்படத்துக்காக 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா' பாடலையும் எழுதினேன். நாடோடி மன்னன் படத்தில் 'கண்ணில் வந்து மின்னல் போல்' பாடலும் அமரகவி படத்தில் 'யானைத் தந்தம் போல' பாடலும் என்னுடையதுதான். இது போல் பல பாடல்களை சொல்லலாம். 'மங்கையர்க்கரசி' திரைப்பட வசனத்தை நூலாக வெளியிட்டேன்.

இன்று சினிமா பொழுதுபோக்காகி விட்டது. சினிமாவை பொழுது போக்காக எடுப்பது தவறு. சினிமா ஒரு பொறுப்பான விஷயம். பாடல்களில் இசை ஆதிக்கம் அதிகம். இன்றைய கவிஞர்களில் வைரமுத்துவின் கவிதை நன்றாக இருக்கிறது.

'கன்னியே மாமரி' என்றொரு பாடலை ஞானசுந்தரி படத்தில் எழுதினேன். இந்த பாடல் மக்களை எளிதில் சென்றடைந்தது. அதற்கு காரணம் அதிலுள்ள கருத்துக்களும், தெளிவும்தான். இசைப்பாடல்கள்தான் மக்களை சீக்கிரம் சென்றடைவதால் கவிஞர்கள் இசைக்கு பாடல் எழுத வேண்டியுள்ளது" என்றார் கவிஞர் சுரதா.

படகு கவியரங்கம், ரெயில் கவியரங்கம் என்றெல்லாம் வித்தியாசமாக கவியரங்கமெல்லாம் சுரதா நடத்தி வருவது பற்றி கேட்டதற்கு.

"மக்கள் இப்போதெல்லாம் டி.வி.சினிமா என்று கட்டுண்டு கிடக்கிறார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் கவிதைகளை கவிதை உலகை மறந்துவிடக்கூடாது என்பதற்காகவும் தான் இப்படி வித்தியாசமாக கவியரங்கமெல்லாம் நடத்தி மக்கள் கவனத்தை ஈர்க்கிறோம்.

1991-ம் ஆண்டு துபாயில் சார்ஜாவில் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவையொட்டி படகு கவியரங்கம் நடத்தினோம். இதுபோல் ஏற்காடு, சேலம் பகுதிகளிலும் 1991-ம் ஆண்டு படகுக் கவியரங்கு நடத்தப்பட்டது. அதே ஆண்டில் தஞ்சை மாயவரத்துக்கிடையில் ஓடும் ரெயிலில் ரெயில் கவியரங்கம் நடத்தினோம். இதுபோல் வேலூரில் பேருந்து கவியரங்கம், திருவாரூர் அருகில் திருக்குவளையில் தெப்பக் கவியரங்கம் என்று கவியரங்கங்களை நடத்தியுள்ளோம்.

சென்னை-மதுரை விமானத்தில் விமானக் கவியரங்கம் நடத்தியுள்ளோம். சென்னை மெரினா கடற்கரையில் குதிரை கவியரங்கம் நடத்தியதில் பலத்த வரவேற்பு கிடைத்தது. யானை கவியரங்கமும் நடத்த திட்டமிட்டுள்ளோம். மேட்டூர் அணைக்கட்டு கவியரங்கம் நடத்தினோம்.

இப்படிப்பட்ட பணிகளுடன் 350 பெரும் புகழ் பெற்ற மாமனிதர்கள் வாழ்ந்த பகுதிகளுக்குச் சென்று அங்கு அவர்கள்

வாழ்ந்த குறிப்பிட்ட இடங்களிலிருந்து அவர்களின் காலடிபட்ட மண்ணை எடுத்து வந்து சேகரித்து வைத்துள்ளேன். சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்பு ராஜேந்திர சோழன் மலேசியாவுக்கு சென்று தங்கியிருந்த இடத்தில் மணல் எடுத்து வந்துள்ளேன். இதுபோல் ஒட்டக்கூத்தர், பெரியார், அண்ணா, கட்டபொம்மன், ஜீவா போன்றவர்கள் வசித்த இடங்களில் அவர்கள் மிதித்த பகுதிகளிலிருந்து மணலை எடுத்துள்ளேன். இவற்றையெல்லாம் காட்சிக்கு வைத்து மக்களிடம் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

இன்றைய கவிதைகளில் கருத்துக்கள் வளர்ந்துள்ளது. உண்மைதான் ஆனால் பலரிடம் ஆங்கிலம் கலந்த கவிதைதான் இருக்கிறது. அக்காலத்து நல்லதங்காள் திரைப்படத்தின் 62 பாடல்கள் இடம் பெற்றன. இவற்றை பரமக்குடி வித்வான் சிவராமலிங்கம் எழுதியிருந்தார். நடிகர்களில் கவிதை எழுதுவதில் வல்லவர் என்.எஸ்.கிருஷ்ணன். நடிகை டி.பி. ராஜலட்சுமி அந்த காலத்திலேயே கதை வசனம் பாடல் இயக்கம் நடிப்பு என்று தனது முத்திரையை பதித்திருக்கிறார்.

கவிதைகள் வழியாக சினிமாத்துறையில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்தவர் கவியரசு கண்ணதாசன்தான். உடுமலை நாராயண கவியின் கவிதை அழுத்தமானது. கம்ப தாசனின் கவிதையில் புதிய சொற்களும், கருத்துக்களும் இருந்தன. பி.யூ.சின்னப்பா பதிவுத் திருமணம் செய்து கொண்டவர். இவர் வெண்பா எழுதுவதில் சிறந்தவர்.

அந்த காலத்தில் பாடல்களில் கருத்துக்களை திணித்தார்கள். இப்போது இசையை திணிக்கிறார்கள். சினிமாவுக்கு புதிதாக பாடல் எழுதியவர்களை அப்போது தட்டிக் கொடுப்பார்கள். ஆனால் இன்று அப்படி இல்லை 'தட்டு'கிறார்கள்.

**இதழ்: 'தேவி'**
[31-12-1997]
**பேட்டி அ. அருள்தாசன்**
**நெல்லை**

## பளீர்! பளீர்!!
## 10 கேள்வி? 10 பதில்!

உவமைக் கவிஞரான சுரதாவிடம் பத்து கேள்விகள் கேட்டதற்கு அவர் அளித்த பதில்கள்.

கேள்வி: சினிமா பாட்டு ஏன் எழுதவில்லை?

பதில்: பரிமாறாமல் சாப்பிடச் சொன்னால் எப்படியோ, அதுபோல புதியவர்களிடமிருந்து வாய்ப்புகள் இதுவரை வரவில்லை!

கேள்வி: பாட்டு எழுத இசை ஞானம் வேண்டுமா?

பதில்: எழுதுகின்ற ஞானம் இருந்தால் போதும்!

கேள்வி: தங்களை கவர்ந்த சினிமா பாடலாசிரியர்கள் யார்?

பதில்: உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

கேள்வி: பாட்டுக்காக படம் எடுத்தால் ஓடுமா?

பதில்: சர்க்கரைப் பொங்கல் தின்பதற்கு பதில் சர்க்கரையை மட்டும் ஏன் தின்ன வேண்டும்!

கேள்வி: கவிதை நடை உரையாடல் எடுபடுமா?

பதில்: இன்றைக்கு எடுபடாது!

கேள்வி சினிமா பாட்டு எழுத 'மூட்' வேண்டுமா?

பதில்: அது எழுதுபவனின் அந்தஸ்த்தைப் பொறுத்தது!

கேள்வி — இன்றைய சினிமா பாடல்கள் பற்றி தங்கள் கருத்து

பதில்: — கனவு போல் கரைந்து விடுகிறது!

கேள்வி — அர்த்தம் புரியாமல் இந்தி பாடல்களை ரசிக்கிறார்களோ?

பதில்: — ரசிக்க ஆரம்பித்தாலே அர்த்தங்கள் புரியாமல் போய்விடும்.

கேள்வி — பாடி நடிக்கும் நடிகர்கள் நடித்தால்...?

பதில்: — பின்னணி நடிகர்களின் கதி என்ன ஆவது?

கேள்வி — பாட்டுக்கு டியூன் போடுவது நல்லதா? டியூனுக்கு பாட்டு எழுதுவது நல்லதா?

பதில்: — பாட்டுக்கு பணம் வரணும், அதுதான் நல்லது!

இதழ்: 'இதயம்' சினிமா வார 16.2.1979
தொகுப்பு அரு.குமார்

# கவிதையைத் தொழிலாகக் கொண்டு பிழைக்க முடியுமா?

கரூரில் நடைபெற்ற இலக்கியக்கூட்டத்துக்கு கவிஞர் சுரதா வந்திருந்தார். அப்போது 'மாலை மலர்' நிருபருக்கு கவிஞர் சுரதா பேட்டி கொடுத்தார் நிருபர் கேட்ட கேள்விகளும் அதற்கு சுரதா சொன்ன பதில்களும் வருமாறு:-

கேள்வி : புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை எப்போது முதன் முதலில் சந்தித்தீர்கள்?

பதில்: 1941-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ந்தேதி புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை நான் சந்தித்தேன். பாரதிதாசன் எழுதிய "ஓடப்பர் எல்லாம் உதையப்பர் ஆகிவிட்டால்" என்ற கவிதை பத்திரிகையில் வந்திருந்தது. அந்தக் கவிதையை என்னுடைய ஊரில் உள்ள டீக்கடைக்காரர் அழகப்பன் எனக்கு படித்துக்காட்டினார். நான் அந்தக்கவிதையை படித்த பின்னர் புரட்சிக்கவிஞரை பார்க்க விரும்பினேன். திருவாரூர் அருகில் உள்ள கிருப்பாளூர் சிவன் கோவிலில் வெள்ளை அடித்த பணத்தைக் கொண்டு நான் பாரதிதாசனை சந்தித்தேன் 50ஆண்டுகளுக்கு முன்பு நான் புரட்சிக்கவிஞரை சந்தித்தது குழந்தைத் திருமணம் போன்றது.

கேள்வி : பாரதிதாசனை சந்திப்பதற்கு முன்பு கவிதை எழுதும் ஆற்றல் உங்களிடம் இருந்ததா?

பதில் : நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே கவிதை எழுதுவேன். ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் ஆகியோர் படித்த பள்ளியில்

நானும் படித்தேன். எங்கள் பள்ளியில் தமிழ் ஆசிரியர் சங்கரசாஸ்திரி என்னை ஊக்குவித்தார். 1936-ம் ஆண்டு நான் முருகக்கடவுள் பற்றி எழுதிய பாடலை திருவாரூரை அடுத்த காட்டூர் சகோதரர்களான ராமன் லட்சுமணன் பாடியுள்ளனர். "அமுதும் தேனும் எதற்கு" என்ற சினிமாப்பாட்டு நான் எழுதியது.

கேள்வி: உங்களுடைய கவிதைகளில் 'செக்ஸ்' உணர்வு அதிகம் இருப்பதாக கூறப்படுகிறதே?

பதில்: அகத்துறை இருக்கும்வரை செக்ஸ் இருக்கும் அதை நான் விரும்புகிறேன். விளம்பரம் வேண்டிய காரணத்துக்காக நான் அதை விரும்புகிறேன்.

கேள்வி: புதுக்கவிதை பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில்: புதுக்கவிதைகள் வளர்ந்துள்ளன. அதை நான் பாராட்டுகிறேன். இன்றைய இளைஞர்கள் காலத்தின் தேவையைப் பற்றி தெரிந்து எழுத வேண்டும். அன்றே நான் திரைப்படத்துக்கு எழுதினேன் கட்டிய மனைவியைப் போன்றது மரபுக்கவிதைகள். மாறிய பெண்ணைப் போன்றது புதுக்கவிதை.

கேள்வி: பாரதிதாசனின் கவிதைகளில் தேடிப்பார்த்தால் 20-வரிகள்கூட தேறாது என்று மலேசியாவில் கவிஞர் வைரமுத்து ஒரு முறை கூறியுள்ளார் அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: பாரதிதாசனை பற்றி அவர் செய்த ஆய்வு அது. உலகக் கவிஞர் ஷேக்ஸ்பியரையே சிலர் குறை கூறினார்கள். அதை போன்றதே இதுவும். அகந்தையாகக்கூட இருக்கலாம் சில நேரங்களில் இதுவும் தேவைதான். தற்போதுள்ள கால நிலையில் மனைவியிடம் கணவன் அடிபடுவதைப் போன்றதாகும்.

கேள்வி: கவிதையை ஒருவன் தொழிலாகக் கொண்டு பிழைக்க முடியுமா?

பதில்: கம்பன் அரண்மனையில் வசதியாக வாழவில்லையா? பாரதிதாசனுக்கு அரசு வசதி செய்து தரவில்லையா?

இன்று வைரமுத்து போன்றவர்களுக்கு 10லட்சம் 20 லட்சம் என்று வருமானம் வரவில்லையா? அவர்கள் கவிதையைத் தொழிலாகக் கொண்டு பிழைக்க வில்லையா?

கேள்வி: தற்காலக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக யார் யாரைக் குறிப்பிடலாம்?

பதில்: என்னை நானே குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. வார ஏடுகள், மாத ஏடுகள் ஆண்டு ஏடுகள் போன்றவை களில் 10 ஆண்டு 100 ஆண்டு என்று யாரும் நிலைத்து நிற்க முடியாது 3 மணி நேரம் ஒரு பெண்ணை முத்தமிட முடியாது புணர்ச்சிக்கும் முத்தத்திற்கும் உள்ள வித்தியாசம் போன்றது.

கேள்வி: உங்களுக்கு எம்.ஜி.ஆரிடம் எப்படி தொடர்பு ஏற்பட்டது.

பதில்: பி.யூ.சின்னப்பாதான் என்னை எம்.ஜி.ஆரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

கேள்வி: உங்களுக்கு உவமைக்கவிஞர் என்றபட்டம் எப்படி ஏற்பட்டது?

பதில்: மாயவரத்தில் ஜெகசிற்பியன் என்பவர் அவரது புத்தகத்தில் 1953-ம் ஆண்டு என்னை உவமைக் கவிஞர் என்று பாராட்டி எழுதினார். பின்னர் அந்தப்பெயரே நிலைத்து விட்டது.

கேள்வி: உங்களுக்கு விருது எப்போது கிடைத்தது?

பதில்: 1978-ஆம் ஆண்டு தமிழக முதல் அமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். எனக்கு 'பாவேந்தர் விருது' கொடுத்தார்.

கேள்வி: நீங்கள் எழுதிய கவிதைகளில் எவையேனும் பாட நூல்களில் இடம் பெற்றுள்ளனவா?

பதில்: நிறைய பாடல்கள் பாட நூல்களில் இடம் பெற்றுள்ளன.

## தலைமாட்டில் நோட்டுபுத்தகம்

நிலாவைப் பார்க்கும் போது நிறைய கவிதைகள் எழுதுவேன். தொட்டி, ஆறு, குளம், கடல் தண்ணீர்னு எந்த நீரலைகளைப் பார்த்தாலும் எனக்கு எழுத வரும். பாரதிதாசனுக்கு ஒரு பழக்கம் இருந்தது. படுக்கும்போது நோட்டுப்புத்தகத்தை தலைமாட்டுல வச்சுப்பார். அதே பழக்கம் எனக்கும் இருக்கு. ராத்திரி மனசுல என்ன தோணுதோ உடனே எழுந்து அதை நோட்டுல எழுதிடுவேன்.

**கவிஞர் சுரதா - கல்கி [4.4.1999]**

## அழகென்று எதைச் சொல்வீர்?

உங்கள் கவிதை பார்வையில் எது அழகு? என்ற கேள்வியை உவமைக்கவிஞரின் முன் வைத்தோம். இதோ

தனித்திருக்கும் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று சேரும்போது தோன்றும் அழகில் உள்ளம் மயங்கும். நெற்றியில் திலகம் சேருகையில் பாழ் நெற்றியும் அழகில் திளைக்கும். தனித்திருக்கும் ஆகாயத்தைவிட விண்மீன் சிரிக்கும் வானம்தானே அழகு. மல்லிகை சரம் சூடும் போதினில் மல்லிகையும் பெண்ணும் சேர்ந்து அழகு பெறுகிறார்கள். ஆணும் பெண்ணும் தனித்திருந்து அழகு பொலிந்தாலும். இணையாக சேர்ந்திசையும் போது- அடடாவோ அழகு. மோனை வார்த்தை உட்காரும்போதுதான் கவிதையே அழகாகிறது. உயிருடன் இருக்கும் உடம்பே அழகு... உண்மையை உணரும் போதினில் உடம்பின் அழகை வெல்லும் மனமே அழகு...ஆம் மனமே அழகு.

தினகரன் [தமிழ்புத்தாண்டு மலர் 2000]

# வேண்டாம் தலைவன் வழிபாடு!

"அதிகமாகச் சிந்திக்க முடியாதவர்கள் வாழும் சமுதாயத்தில், 'தலைவன் வழிபாடு' (Hero Worship) புகுந்துவிடுகிறது. ஒருவனுக்கே எல்லாம் தெரியும் என்ற எண்ணக்கேடுகள், மற்றவர்களின் சிந்தனா சக்தியை வற்றச் செய்துவிடுகின்றன. சுயசிந்தனைச் சக்தியை இழந்தவனுக்கு மன அமைதி இருக்க முடியாது. எதையோ நினைத்துக் கனவு கண்டு கொண்டிருக்கும் மனம் சிறு சிறு ஏமாற்றங்களைக்கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல் போய்விடுவதுதான் இதற்குக் காரணம்.

வாழ்க்கையில் நமக்கு வேண்டிய தேவைகளை முன்கூட்டியே நிர்ணயித்துக் கொண்டுவிட்டால் மன மகிழ்ச்சி கெடாது. மகாத்மா காந்தி தன் உடைகளையும் உணவு வகைகளையும் கூட முன்கூட்டியே நிர்ணயித்துக் கொண்டுவிட்டதால், தெளிவாகச் சிந்தித்துப் பெரும் வெற்றி காண முடிந்தது.

சலன புத்தி மன அமைதியைக் கெடுத்துவிடுகிறது. ஒப்பிட்டுப் பார்க்கும் குணமுள்ளவர்கள் மன அமைதியை இழக்கிறார்கள். நமக்கு கிடைத்ததை வைத்துத் திருப்தியடையாமல், மற்றவனுக்குக் கிடைத்ததை நினைத்து மனப்புழுக்கம் அடைபவன் சந்தோஷத்தை இழக்கிறான்.

நல்ல கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து 'இது வாழ்க்கைக்குப் போதும்', நல்ல பொருட்களைத் தேர்ந்தெடுத்து 'இது வீட்டுக்குப் போதும்...', நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து 'இவர்கள் நம் சிந்தனைக்குப் போதும்...' என்று முன்கூட்டியே தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டால் குழப்பம் நீங்கி மன மகிழ்ச்சி நிச்சயம் கிடைக்கும்."

ஜூனியர் விகடன்
[16-5-90]

# தமிழர்களின் வசந்தம் ஆதித்தனார்!

முதன் முதலில் பாவேந்தர் படத்தை 'தமிழன்' பத்திரிகையில் அட்டைப் படமாக வெளியிட்டு பாவேந்தருக்கு பெருமை சேர்த்தவர், தமிழர் தந்தை ஆதித்தனார் அவர்கள். அது மட்டுமல்லாமல் பாவேந்தர் பற்றி ஆய்வு நூலுக்கு ஆண்டுதோறும் ரூ.1,000 வழங்குவதாக அந்த காலத்திலேயே அறிவித்தவரும் அவர்தான். தமிழ் மீதும் தமிழர்கள் மீதும் நீங்கா பற்று கொண்ட அய்யா ஆதித்தனாரின் பொது நலத்தை நேரில் கண்டு பலமுறை நான் வியந்து போய் இருக்கிறேன். தமிழ்ச் செய்திகளையும் செய்தி தாங்கிய பத்திகளையும் சிறிது சிறிதக நாற்றங்கால்களை போன்று செய்தித்தாளில் புதுமையை கண்டவர் அவரே. சாதாரண கிராமத்து வாசிக்கும் அவர்கள் பேசுகின்ற வழக்குச் சொற்களிலேயே செய்திகளை தருவதில் புதுமை கண்டு வெற்றி கண்டவரும் அய்யா ஆதித்தனார் அவர்கள்தான்.

'நாம் தமிழர்' இயக்கம் தொடங்கிய போது என்னை அடிக்கடி அழைத்து அது தொடர்பான பாடல்களை எழுதச்சொல்லி இன்றும் நான் பசுமையாக நினைக்கின்ற அளவுக்கு உதவிகளை செய்தவரும் அவரே.

அவர் என்றென்றும் தமிழுக்கும் தமிழருக்கும் வசந்தமாகவே திகழ்வார். வாழ்க ஆதித்தனார் புகழ்.

மாலை முரசு. [23.05.2003]

## கவிதைப் பார்வையில் எது அழகு?

கேள்வி: ஐயா, கவிதைப் பார்வையில் எது அழகு? விடை கூறுங்கள்.

பதில்: தனித்திருக்கும் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று சேரும்போது தோன்றும் அழகில் உள்ளம் மயங்கும்.

நெற்றியில் திலகம் சேருகையில் பாழ் நெற்றியும் அழகில் திளைக்கும். தனித்திருக்கும் ஆகாயத்தைவிட விண்மீன் சிரிக்கும் வானம்தானே அழகு.

மல்லிகை சரம் சூடும் போதினில் மல்லிகையும் பெண்ணும் சேர்ந்து அழகு பெறுகிறார்கள்.

ஆணும் பெண்ணும் தனித்திருந்து அழகு பொலிந்தாலும். இணையாக சேர்ந்திசையும் போது- அடடாவோ அழகு. மோனை வார்த்தை உட்காரும்போதுதான் கவிதையே அழகாகிறது.

உயிருடன் இருக்கும் உடம்பே அழகு...

உண்மையை உணரும் போதினில் உடம்பின் அழகை வெல்லும் மனமே அழகு...ஆம் மனமே அழகு.

இதழ்: தமிழ்நேசன் [மலேசியா]
[22-8-2000]

# நான் கண்ட பாவேந்தர்

வளர்ந்து புகழேணியின் உச்சியில் இருக்கும் சிலர். வளரும் நிலையில் இருப்பவரை ஊக்குவிப்பது மிக அருமை. ஆனால் பாவேந்தர் அதற்கு நேர்மாறானவர். நான் எழுதிய கவிதைகள் சிலவற்றை வேறொருவர் பெயர் போட்டு முதலில் அவரிடம் காட்டினேன். அவற்றைப் படித்துவிட்டு 'நல்லாருக்கு... பக்குவப்பட்டவன் எழுதற கவிதை போல இருக்கு' என்று சொன்னார். அப்பாராட்டு எனக்கு ஒரு 'டானிக்' மாதிரி இருந்தது. அப்பாடல்களை எழுதியவன் நான்தான் என்பதை அறிந்த பிறகு, "விடாதே! எழுது! ஆறுமுக நாவலரைவிட உனக்கு ஆற்றல் அதிகம் இருக்கு!" என்று பாராட்டினார். என்னை ஏன் அவ்வாறு அவர் பாராட்டினார் என்று எனக்கு அப்போது விளங்கவில்லை.

## தாசன்

பாரதிதாசன் என்ற பெயர் நாட்டில் விளம்பரமாகத் தொடங்கியதும், அப்பெயரைப் பின்பற்றித் 'தாசன் தாசன்' என்று கவிஞர்கள் புனைபெயர் வைத்துக் கொள்வது வழக்கமாகிவிட்டது. என்னையும் அவ்வாசை பற்றிக் கொண்டது. ஒரு நாள் ஒரு பாடலை எழுதி அதன் கீழே சுப்புரத்தின தாசன் என்று கையெழுத்திட்டிருந்தேன். அதைப்பார்த்ததும் 'ஏம்ப்பா இதெல்லாம்?' என்றார். இவ்வாறு சொன்னாலும் அவருக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். பிறகு நான் அவருக்குக் கடிதம் எழுதும் போதெல்லாம் சுப்புரத்தினதாசன் என்றே கையெழுத்திட்டு எழுதுவது வழக்கம். ஒரு முறை கடிதம் எழுதியபோது, முழுப்பெயரையும் எழுதுவதற்குக் கீழே இடமில்லை. சு.ர.தா. என்று சுருக்கமாக எழுதினேன். பிறகு அந்த ஆணிகளைப் பிடுங்கவிட்டுச் 'சுரதா' என்றே கையெழுத்திட ஆரம்பித்தேன். அப்பெயரே எனக்கு நிலைத்துவிட்டது.

## இன்ப இரவு

1944-ஆம் ஆண்டு பாவேந்தர் 'இன்ப இரவு' என்ற நாடகக் குழுவை நிறுவினார். நாமக்கல் செல்லப்ப ரெட்டியாரும் பொன்னி ஆசிரியர் முருகு சுப்பிரமணியமும், பெரியண்ணனும் பாவேந்தருக்கு உறுதுணையாக இருந்து இன்ப இரவு நாடகக் குழுவைப் பொறுப்பேற்று நடத்தினார். பாவேந்தர் படைப்பில் உள்ள இயல் இசை நாடகப் பகுதிகள் இன்ப இரவில் இடம் பெற்றன. இசையமைப்பாளராகிய ஞானமணியும், திருவள்ளுவர் படத்தை எழுதிப் புகழ்பெற்ற வேணுகோபால சர்மாவும், நானும் அதில் நடிகர்களாக இடம் பெற்றிருந்தோம். இன்ப இரவு நாடகம் சேலம் சென்ட்ரல் திரைப்படக் கொட்டகையில் முதன் முதலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இரண்டாவதாக நாமக்கல்லில் தொடர்ந்து நடைபெற்றது. நான் அந்த நாடகத்தில் அமைச்சனாக நடித்தேன் 'காடைக்காரக் குறவ'னாக வேடமிட்டு நான் ஆடுவதும் உண்டு.

# எது அழகு!

உருண்டைச் சூரியன் உதிக்கும் காலையும்
இருட்டும் வெளிச்சமும் இணைந்த மாலையும்
காசுகேட் காமலே காட்சி தருகின்ற
கடல், மலை வானம்; கவிதையைப் போன்று
செடிகள் வெளியிடும் செவ்வந்திப் பூக்களும்
பூக்களைச் சூடிய பூவையும்; அவர்களின்
நாணம் வெட்கமும், நண்பர்கள் வெளியிடும்
இலவச சிரிப்பும்; ஏங்கும் காதலர்
இணைகின்ற போது ஏற்படும் பேச்சும்,
உண்மையை மட்டுமே உதிர்க்கின்ற பிள்ளைகள்
உணவைப் பிசைந்து உண்கின்ற காட்சியும்,
முதுமையைச் சுமந்த மூத்த மனிதர்கள்
இளமைக்கு அறிவுரை இடுகின்ற காட்சியும்,
தாய்தன் மகனுக்குத் தருகின்ற முத்தமும்
உணர்ச்சியில் ஏற்படும் உதட்டின் சத்தமும்
அனைத்தும் இங்கே அழகில் அடக்கம்!
எதிலில்லை அழகு? எல்லாமே அழகுதான்!
இவ்வழகில் தானே இயங்குதிவ் வுலகு!

– கவிஞர் சுரதா

ஆனந்தவிகடன் [8-7-1990]

## கவிதையை வளர்க்கிற வழி!

'அமுதும் தேனும் எதற்கு?' 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா' போன்ற திரைப்படப் பாடல்களை எழுதியவரும், பாவேந்தர் விருது, இராஜராஜன் விருது, ஆதித்தனார் விருது, கலைஞர் விருது.... போன்ற பல விருதுகளைப் பெற்றவரும், 'உவமைக் கவிஞர்' என்ற பட்டத்தை உடையவருமான சுரதா அவர்கள் தன் எண்பதாவது வயதினை எட்டியுள்ளார். முத்துவிழா கொண்டாடி வரும் அவரைச் சந்தித்தோம்.

**கேள்வி:** நீங்கள் அவன் இவன் என்று ஏக வசனத்தில் பேசுவது ஏன்?

**பதில்:** எல்லாருமே இப்படிப் பேசறவங்கதான். பாரதி வந்தான், வள்ளுவன் போனான் என்று இலக்கியத்திலேயே எழுதுவாங்க. ஆளு எதிர்ல இருக்கறப்ப 'அய்யா... சாரே' என்று பேசிவிட்டு, அவன் அந்தாண்ட போனதும் 'மட்டிப்பய' என்று சொல்லுவானுங்க. நான் மறைஞ்சு நின்னு சொல்லலை. நேராவே சொல்றேன். இதுக்கு என்னோட வயசும் ஒரு காரணம்.

**கேள்வி:** யாரைப்பார்த்தாலும் அவருடைய சாதி என்ன என்று கேட்கிறீர்களாமே?

**பதில்:** சாதி என்பது ஒரு குழு. அந்த ஆளைப்பத்தி தெரியணும்னா அவனோட சாதி பத்தியும் தெரியணும். நான் சாதியை வளர்க்கலை. சாதி ஒழியாது. ஒருத்தன் வழிவழியா ஒரே சாதியில இருக்கறதை என்னால ஏத்துக்கமுடியாது. மிட்டாய் விக்கிறவன் கிட்ட உன் சாதி என்ன என்றால் , நெசவாளர் சாதி என்கிறான். அந்தத்

தொழிலைச் செய்யாட்டி அவன் அந்தச் சாதி இல்லேங்கறேன். அதனாலதான் நான் சாதியையும் கேப்பேன். தொழிலையும் கேப்பேன். இன்னிக்கு முஸ்லீமும் கிறிஸ்துவனும் புனைப்பெயர் வச்சுக்கிட்டுத் தன்னோட சாதியையும் மதத்தையும் மறைக்கப் பார்க்கறான். போலித்தனம் எதற்கு? நிஜத்தைச் சொல்லு.

கேள்வி: சாதிக்கு அடுத்ததா ஊர்ப் பெயர் கேக்கறீங்களே ஏன்?

பதில்: ஒரு ஆளுக்கு எப்படி பேர் வந்தது என்று பார்க்கறதை விட, ஊருக்கு இந்தப் பெயர் எப்படி வந்ததுன்னு தெரிஞ்சுக்கணும். ரா.பி. சேதுப்பிள்ளை 'ஊரும் பேரும்' என்றே புத்தகம் எழுதி இருக்கார்.

கேள்வி: பிரபலமானவங்க பிறந்த இடத்துலேர்ந்து மண் எடுத்துக் சேர்க்கறீங்களே... ஏன்?

பதில்: மலேசியாவுல ஒரு கார்ல போய்க்கிட்டிருந்தப்ப, இங்கதான் ராசேந்திர சோழன் முகாம் போட்டிருந்தான்னு பக்கத்துல உள்ளவர் சொன்னார். உடனே காரை நிறுத்தி அங்கிருந்து கொஞ்சம் மண் எடுத்துக்கிட்டேன். அது அப்படியே தொடர்ந்துச்சு. ஒட்டக்கூத்தர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாரதி, பாரதிதாசன், பரிதிமாற் கலைஞர் என்று இருநூத்துச் சொச்ச் பேரோட பிறந்த ஊர்லேர்ந்து மண் எடுத்தேன். நேதாஜி இங்க தங்கினார், காந்தி இங்கதான் டீ குடிச்சார்னு சொல்றதில்லையா? அது போலத்தான் இது. இந்த வேட்டியை அவர் கட்டினார். இந்தப் பேனாவால எழுதினார் என்று சொல்றாப்லதான்! ஆட்டோகிராப் வாங்குறோம் இல்ல. அது ஏன் வாங்குறோம்? ஒரு ஞாபகத்துக்குதான். இதுவும் அது மாதிரிதான். யார் யார் எங்க எங்க மண் எடுத்தாங்கன்னு ஒரு புத்தகம் வரப்போவுது.

கேள்வி: ஒரு ஊர்ல ஒருத்தர்தான் பிறந்தார்னு இல்லியே. பாரதியைத்தவிர நிறைய பேரு எட்டயபுரத்துல பொறந்திருப்பாங்களே?

பதில்: மத்தவனுக்கெல்லாம் மார்கெட் இல்லை. அவ்வளவுதான்.

கேள்வி: நல்ல தலைப்பு சொன்ன ஒரு ரூபா பரிச கொடுன்னு சொன்னீங்க. கவியரங்கத்துல கவிதை பாடறதுக்கு முன்ன தரையில் ஒரு துணியை விரிச்சுட்டு வந்து பாடுங்கன்னு சொன்னீங்க. கவிதையைக் கேக்கறவங்க அந்தத் துணியில பணம்... காசு போடணும்னு சொன்னீங்க...ஏன்?

பதில்: சும்மா கைதட்டிட்டு நல்லா இருக்கு என்பான். நல்லா இருக்குல்ல. அப்ப காசப் போடுன்னு சொன்னேன். கச்சேரிக்கு, சினிமாவுக்கு போனா டிக்கெட் வாங்குற இல்ல. கவியரங்கம் மட்டும் ஓசியா? துண்டுல விழற காசு பாடுற கவிஞனுக்கும் கிடைக்கும்தானே. அது மாதிரி நல்ல தமிழ்ல பேரு வச்சிருந்தா, நல்ல கருத்து சொன்னா ஒரு ரூபாயாவது கொடுத்துப் பாராட்டுன்னு சொன்னேன்.

கேள்வி: படகுக் கவியரங்கம், விமானக் கவியரங்கம், அஞ்சல் வழிக் கவியரங்கம், வீட்டுக்கு வீடு கவியரங்கம்... என்றெல்லாம் செய்தது ஏன்?

பதில்: சொல்றவன் சொல்லிட்டுத்தான் இருப்பான். இதெல்லாம் கவிதையை வளர்க்கிற வழி. கவிதையை மக்கள் கிட்ட கொண்டு போற வழி. நாலு சுவத்துக்குள்ள, அந்த வாழ்த்து, இந்த வாழ்த்து என்று பாடுவதைவிட இப்படிக் கவியரங்கம் நடத்துவது ரொம்ப சிறப்பானது.

கேள்வி: 'கவிதையை ஒழிக்க வேண்டும். இலக்கியங்களால் ஆபத்துதான் உண்டு' என்று சொன்னீங்களே ஏன்?

பதில்: மிகைப்படுத்திச் சொல்றது கவிதைன்னு ஆயிடுச்சு. மிகைப்படுத்தல் வந்தால் பொய் வந்திடும். உண்மை இருக்க வேண்டிய இடத்துல தந்திரம் இருக்குது. பேச்சு வழக்கிலேயே உலகை ஆண்டு விடலாம். இலக்கிய வழக்கு வந்ததால்தான் ஜாதி மதம் வந்தது. இலக்கியங்களைக் கொளுத்திவிட்டால் நல்லது-

சந்திப்பு: அண்ணா கண்ணன்
சரவணா ஸ்டோர்ஸ்
[11.2.2001]

## தலைமுறை சந்திப்பு!

நிர்மலா :நான் கல்லூரியில் படிக்கும் போதே எனக்கு கவிதைகளில் அதிகமா ஈடுபாடு உண்டு. உங்க'சுரதா' பத்திரிகையை விரும்பிப் படிப்பேன். உங்களை மாதிரி மொழிப்பற்று உள்ளவங்க ரொம்ப குறைஞ்சிட்டாங்க என்பது என் அபிப்பிராயம்.

சுரதா : எனக்கு மொழிப்பற்றுக் கிடையாது. (நிர்மலா சுரேஷ் திகைப்பதைப் பார்த்து விட்டு) ஏன் சொல்றேன்னா பற்று என்றாலே இதைவிட ஒண்ணு உசத்தியா கிடைச்சுடுத்துன்னா அது பேரில தாவிடும். மொழிப் பொறுப்பு, மொழி மூச்சு எனக்கு உண்டுன்னு சொல்ல வர்றேன். (இருவரும் சிரிக்கிறார்கள்)

கேள்வி :சமீபத்தில் ஒருத்தர் சொன்னார்-பெயர் சொல்ல விரும்பல-விரைவில் கவிதை அழிந்துவிடும்; உரை நடை ஆதிக்கம் தான் நிலைக்கும் என்று. உங்க கருத்தும் அதுதானா?

பதில் : நிச்சயமா கிடையாது. சுருக்கமா சொல்றதைத்தான் இப்ப ஜனங்க ரசிக்கிறாங்க. ஓடற ஓட்டத்தில் எதையாவது படிச்சா, எதையாவது கேட்டா போதும்னு நினைக்கிற காலமாயிடுச்சு. சுருக்கமா சொல்லணும்னா கவிதை தான் சரிப்பட்டு வரும். உரை நடை சரிப்படாது இல்லையா? (அப்போது ஆப்பிளை நறுக்கி ஒரு தட்டு முழுவதும் எடுத்து வந்து வைக்கிறார் அவர் மருமகள் இராஜேஸ்வரி அதைப் பார்த்துவிட்டு சுரதா தொடர்கிறார்) இதையே எடுத்துக்குங்க. முன்பெல்லாம் முழுசா ஆப்பிளையோ ஒரு பழத்தையோ தருவாங்க. இப்ப துண்டு துண்டா

நறுக்கி வைக்கிறாங்க; சாப்பிடறத்துக்கும் பங்கு போடறதுக்கும் சுலபமா இருக்கு. முழுப் பழம் உரைநடை. துண்டுகள் கவிதை. இப்ப கவிதை எல்லாருக்கும் சட்டெனப் புரியற மாதிரி வந்துடுச்சே, அப்புறம் அது எப்படி நிலைக்காம போயிடும்?

கேள்வி : சரியா சொன்னீங்க. இப்பதான் எனக்கு நிம்மதி. இப்போது புதுக்கவிதைகள் தரமா இல்லைன்னு சொல்றாங்களே?

பதில் : வீட்டில ஐந்து பேர் இருக்கோம். சிலர் அசடா இருப்பாங்க. சிலருக்கு 'தான் புத்திசாலி' என்ற நினைப்பு இருக்கும், புத்தி இருக்காது. அப்படித் தான் சிலருடைய கவிதைகளும். ஒருத்தர் சமையலிலே எல்லா அயிட்டமும் நல்லா அமைஞ்சிடறதில்ல. அப்படித்தான் ஒருத்தர் எழுதுகிற கவிதைகள் எல்லாமே பிரமாதம்னும் சொல்ல முடியாது.

கேள்வி : சிலபேர் என்னிடம், கவிதையெல்லாம் எழுதுறத விட்டுட்டுக் கதை எழுதுங்கன்னு சொல்றாங்க. நாவலாசிரியரால் வால்யூம் வால்யூமா எழுத முடியுது. கவிதை எழுதறவங்களால எத்தனை புத்தகம் போட்டீங்கன்னு சொல்ல முடியறதில்ல. ஒண்ணு எழுதினாலும் உருப்படியா இருக்கணும்னு நினைக்கிறேன். பலருக்கு இது திருப்தி தர்றதில்ல.

பதில் : தமிழருக்கு எல்லாமே விபரமாகச் சொன்னாதான் புரியும்னு ஆயிடுச்சு. எதைச் சொன்னாலும் கதைபோல சொல்ல நினைக்கிறாங்க. இப்ப காலம் மாறிடுச்சு. வளவளன்னு சொன்னா,"ஏன்ய்யா அறுக்கிற. நீ சொல்ல வர்றதைச் சுருக்கமா சொல்லு" என்று கேட்க ஆரம்பிச்சுட்டாங்களே! திருக்குறள் போன்றவற்றை மொத்தமா தந்தா, "இதை வச்சுக்கிட்டு நான் என்ன செய்யப்போறேன்" என்கிறார்கள். அவர் அவருக்குத் தகுந்த மாதிரி பிரிச்சுக் கொடுத்தா மலைப்பா இல்லாம சுலபமா படிச்சுடுவாங்க.

கேள்வி : இப்ப எம்.ஏ., எம்.பில்., படிச்சிட்டு பி.எச்.டிக்காக 'ஹைக்கூ' கவிதைகளை ஆராய்ச்சி செய்யறேன்.

பதில் : வெரி குட். 'ஹைக்கூ' கவிதை புதுக்கவிதை போலத்தான். ஆனா சொல்ல வந்ததை மூணே வரியில சொல்லிடணும். அதுக்கு ரொம்ப சாமர்த்தியம் வேணும். அமுதோன் எழுதிய 'புள்ளிக்கோலங்கள்' ஹைக்கூ கவிதைத் தொகுப்பைப் படிச்சிருக்கேன். நல்லா இருந்தது.

கேள்வி : சமீபத்தில் உங்களைக் கவர்ந்த புதுக்கவிதை ஒண்ணு சொல்லுங்களேன்.

பதில் : தாராபாரதின்னு ஒருத்தர் எழுதியிருந்தார்: "வெறுங்கை என்பது மூடத்தனம். உன் விரல்கள் பத்தும் மூலதனம்."ன்னு பிரமாதமா, எவ்வளவோ விஷயங்களை இந்த இரண்டு வரியிலே சொல்லிட்டார். விரல் இல்லேன்னா பிரயோஜனமே இல்ல. அதனாலதான் எல்லாத்தையும் சாதிக்க முடியும் இல்லையா?

கேள்வி : எனக்குக் கூட மீனாட்சி கல்லூரியிலே ஒரு தலைப்புத் தந்தாங்க. 'காலம் நமது கைக்குள்ளே அந்தக் கைகள் இரண்டும் நமக்குள்ளே' ன்னு சொன்னேன்.

பதில் : ஆஹா; என்னமா பளிச்சுன்னு இருக்கிறது இப்படிப்பட்ட கவிதைகளைக் கேட்டாலே தன்னம்பிக்கை தானே வந்துவிடும். ஒவ்வொருத்தரும் விசிட்டிங் கார்டில தன் போட்டோவையும் பிறந்த தேதியையும் போட்டுக் கொள்வது நல்லதுன்னு சொல்லி, முன்னோடியா நானும் என்னைச் சேர்ந்தவங்களும் போட ஆரம்பிச்சுட்டோம். விசிட்டிங் கார்டில் இருக்கும் முகத்தைப் பார்த்து யார் தேடிக்கிட்டு வந்தாங்கன்னு குழப்பமில்லாம தெரிஞ்சுக் கலாம். இப்படி ஒவ்வொருவரும் ஒரு கவிதையைத் தங்கள் கார்டில் பிரிண்ட் செய்தால் நல்லா இருக்கும்.

கேள்வி : நல்ல ஐடியா. தங்கள் கருத்துக்களை கவிதையா மத்தவங்களுக்கு விசிட்டிங் கார்டு மூலமா சொல்லிடலாம். இன்னொரு சந்தேகம், ஒருத்தர் மேடையில சொன்னார்: 'தமிழ்க் கவிஞர்கள் என்ன சாதித்துக் கிழிச்சீங்க' ஆங்கிலத்தில் உங்க கவிதைகள் மொழி பெயர்க்கப் பட்டிருக்கா?'ன்னு. இதிலென்ன நியாயம்?நம்ம மக்களுக்குச் சேருதான்னு கேட்பதைவிட்டு விட்டு இப்படிப் பேசலாமா?

பதில் : இதைத்தான் மோகம் என்பது. ஒரு விஷயம் நினைவுக்கு வருது. ஒருசமயம் மறைமலை அடிகள்(அவரது ஆரம்பகாலம்) பேச்சைக் கேட்கப் பெரியார் சென்றிருந்தாராம். கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் பல அயல்நாட்டு அறிஞர்களின் பொன் மொழிகளை மேற்கோள் காட்டிக்காட்டி சரளமா பேசினாராம் மறைமலை அடிகள். பெரியார் பேச எழுந்தவர், "நாங்க உங்க பேச்சைத்தான் கேட்க வந்தோமே தவிர, அயல் நாட்டான் என்ன சொன்னான், சொல்கிறான் என்பதை அல்ல. நீ என்ன சொல்ல வர்ற அதைச் சொல்லு"ன்னு பளிச்சின்னு கேட்டுட்டாராம். அதிலிருந்து மறைமலை அடிகள், "நான் என்ன சொல்றேன்னா" என்று தன் கருத்தைச் சொல்ல ஆரம்பிச்சாராம். நமக்குள்ளே விஷயம் இருக்கும்போது, சிந்தனை செய்ய சக்தி இருக்கும் போது, ஏன் கடன் வாங்கணும்? சொத்து இருக்குன்னு நினைச்சா உழைக்கத் தோணாது. மத்தவன்தான் சொல்லிட்டானேன்னு அதையே சொன்னால் நாம் எப்படி யோசிக்க முடியும்? நாம் நம்ம மொழியிலே நம்ம கருத்தைச் சொல்லிடணும். மத்தவங்க வேணும்னா கடன் வாங்கிக் கொள்ளட்டும்.

கேள்வி : வீட்டுக்கு வீடு திருக்குறள்னு ஆரம்பிச்சீங்க போலிருக்கே?

பதில் : ஆமாம், மலேசியாவில், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு திருக்குறளை எழுதி வைக்கணும்னு சொன்னேன். இப்ப இங்கே ஒவ்வொரு வீட்டிலும் தன் கருத்தை தன் மனைவி கருத்தை, குழந்தைகள் கருத்தை கல்வெட்டில் பதிக்கணும்னு சொல்றேன். நம்மால் பொன்மொழிகளைச் சொல்ல முடியாதா என்ன? சேலத்தில் தமிழ் அமுதன், கடலூரில் கதர் குப்புசாமி, சேலத்தில் எழுஞாயிறு. இப்படி பலபேர் கல்வெட்டில் தம் கருத்துக்களை வீடுகளில் பதித்து வைச்சிருக்காங்க.

(நிர்மலா சுரேஷ் விடைபெறத் தயாராக, மஞ்சள் குங்குமத்தைத் தந்து வழி அனுப்புகிறார்கள் சுரதா வீட்டினர்)

சுரதா : ஒவ்வொருத்தரும் மஞ்சள், குங்குமம், ஜாக்கெட் துணி இப்படி தர்றதைப் போல, சுயமான சிந்தனையை ஒரு கவிதையைச் சந்திக்கும் போதெல்லாம் தந்தால் நல்லா இருக்கும். சிந்தனை போட்டி வரும்.

சுரதாவைச் சந்தித்தவர்: நிர்மலா சுரேஷ்

இதழ்: சுபமங்களா,

[1-4-1989]

# இன்றைய கவிஞர்கள் இஸ்திரி போடுகிறார்கள்!

உவமைக் கவிஞர் சுரதாவைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். நாடறிந்த நல்ல கவிஞர். திரைப்படப் பாடலாசிரியர். புதுமையான உவமைகளால் தமிழ் மரபுக் கவிதைக்கு கம்பீரம் தந்தவர். பாவேந்தரை நன்கறிந்தவர்.

கேள்வி: தற்போது யானை மீது, குதிரை மீதெல்லாம் சில பேர் தங்கள் படைப்புகளை அரங்கேற்றுகிறார்களே?....

பதில்: அந்தக் காலத்தில் வேந்தராட்சி, மிருகங்களின் மீது அவர்களுக்கு ஒரு மோகமிருந்தது. அதனால், அவர்களைத் தாஜா செய்ய அப்போது புலவர்கள் யானை மீதும் தேர் மீதும் தங்கள் பாடல் தொகுதியை அரங்கேற்றினார்கள். இப்போது நடப்பதோ விஞ்ஞான ஆட்சி. இன்னும் கூடவா இந்த மிருகங்களின் தயவு? வேண்டுமானால் வானூர்தியை (விமானம்) நாடலாமே...?

கேள்வி: நீங்கள் முதன் முதலாக எழுதிய கவிதை, நினைவிருக்கிறதா?

பதில்: வரிகள் நினைவில்லை. சூழல் நினைவிருக்கிறது. ஆண்டு 1930. அப்போது என் வயது 10. மணலில், முதன் முதலாக நான் மேய்த்த எருமையைப் பற்றி ஒரு கவிதை எழுதினேன். அப்போதெல்லாம் பதிற்றுப் பத்து, கிளிப்பத்து, எருதுப்பத்து... என்று ஏதாவதொரு பொருள் குறித்து பத்துப் பாடல்கள் புனைவது பெருமைக்குரியதாக இருந்தது. நானோ 'எருமை... ஒன்று' எழுதியுள்ளேன்.

கேள்வி: தற்போது நடத்தப்படும் பட்டிமன்றங்கள் கவியரங்கங்கள்... பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

பதில்: இது வரை நடந்தது, நடப்பது... அலுப்பு தரும் விஷயங்கள், இவற்றையெல்லாம் தள்ளி வைத்துவிட்டு புதிதாக சிந்திக்க வேண்டும். புதிய புதிய பொருள்களைக் கண்டுபிடித்து பாடவேணும்!

கேள்வி: அரசு நடத்திய பாவேந்தர் விழா குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இதற்குமுன் நடந்த ஆட்சிகள் கட்சி ரீதியானவை. தங்களுக்கு வேண்டியவர்களுக்குப் பாவேந்தர் பெயரால் பட்டமும், பாராட்டும் அளித்தார்கள். இன்று நடப்பது கவர்னரின் ஆட்சி. இதில் கூடவா பாரபட்சம்? பாரதிதாசன் பகுத்தறிவுக் கொள்கைகளை இலட்சியமாக, குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர். அவரது பெயரால் வழங்கப்படும் பட்டங்கள், பரிசுகளை அவரது கொள்கைகளை உறுதியாகப் பின்பற்றுபவர்க்கு அளிப்பதுதான் சரியானது. ஆனால் நடப்பது என்ன? அவரது பாதைக்கு முரண்பட்ட, பக்திப் பெருக்குள்ளவர்களுக்கு, மதப்பற்றுள்ளவர்களுக்கும், அவரது நினைவுக்கு சிறிது கூடப் பொருத்தம் இல்லாதவர்க்கெல்லாம் பாராட்டு! இது தவறான அணுகுமுறை. விழாவில் கலந்து கொண்ட பாவேந்தரது மகனோ, மகளோ கூட இது குறித்துக் கண்டித்து ஒரு வார்த்தைகூடப் பேசாதது வருத்தப்படத்தக்கது. அவ்வளவேன்?... அவருடன் நெருங்கிப் பழகிய என்னையே மறந்துட்டாங்களே! நீ வேறு எந்தப் பெயர்லயாவது இலக்கியத்துக்கு பரிசு வழங்கு. பரவாயில்லை. ஆனா பாவேந்தர் பேர்ல இப்படி வழங்கறது சரியில்லேன்னேன்....!

கேள்வி: நீங்கள் எழுதுன முதல் சினிமாப்பாட்டு எதுங்க?

பதில்: 'என் தங்கை' அப்படீன்னு ஒரு படம். எம்.ஜி.ஆர். நடிச்சது. அதுல பாவேந்தர் பாட்டு எழுதினார். என் பாட்டும் இடம் பெற்றது. 'ஆடும் ஊஞ்சலைப் போலே அலை ஆடுதே...' என்று பல்லவி துவங்கும்

கேள்வி: நீங்கள் நடத்திய கவியரங்கங்கள்?

பதில்: 1989ல் துபாய்- ஷார்ஜாவுல'கடல்' கவியரங்கம் நடத்தினேன். ஏற்காட்டின் ஏரியில் படகுக் கவியரங்கம் . பிறகு வேலூர்ல 'பேருந்து'க்குள் கவியரங்கம்! எட்டுக் குடியில (திருக்குவளை பக்கம்) தெப்பக் கவியரங்கம் நடத்தினேன். அடுத்த ஜுன்15-ல் 'ரயில்'ல கவியரங்கம் நடத்தப்போறேன். இன்னும் விமானத்துல, ஊஞ்சல்ல... எனப் புதிய இடங்களில் புதிய முறைகளில் என் கவியரங்கப் பணிகள் தொடரும்....!

'தூண்டில் கவியரங்கம்' என்ற புதுமைக் கவியரங்கம் ஒன்றை விரைவில் நடத்தப் போகிறேன். அதாவது 18-ம் நூற்றாண்டில் கூவத்து நாரணன் என்றொரு வள்ளல். அவனைப் பற்றி ஒரு புலவர் 'நீ தியாக சமுத்திரமாய் இருக்கிறாய்' எனப் புகழ்ந்து பாடியதால் அவருக்குத் தூண்டிலில் 'தங்க மீன்' பொருத்திப் பரிசாகத் தந்தானாம் அது போல் இந்தத் 'தூண்டில்' கவியரங்கில் சிறப்பாகக் கவிதை வழங்குபவருக்கு 'தங்கமீன்' பரிசளிக்கப் போகிறேன்.

அனேகமாக வரலாற்றில் இது போன்ற கவியரங்கம் இதுதான் முதல் முறை என நினைக்கிறேன். கலந்து கொள்ள விரும்புபவர்கள் என்னைத் தொடர்பு கொள்ளலாம்.

கேள்வி: இன்றைய புதுக் கவிஞர்களைப் பற்றி என்னநினைக் கிறீர்கள்?....

பதில்: சொல்லப்போனால், துவைத்து உலர்த்திய துணிகளுக்கு இவர்கள் இஸ்திரி போடுகிறார்கள்....!

சந்திப்பு: அனலேந்தி

இதழ்: மங்களம் [27-5-1991]

உ-5

# உவமைக் கவிஞர் சுரதாவோடு சில நிமிடங்கள்!

"அரசியல் என்பது எல்லோரும் பரவலாகப் பேசும், எழுதும், கேட்கும் கேள்விகள்.

அதையே ஏன் நாமும் அரைத்துக் கொண்டிருக்க வேண்டும். புதியதாக எதையாவது செய்வோமே"

இப்படி, நான் சந்தித்ததும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசினார் உவமைக் கவிஞர் சுரதா.

அதனால்,

"சினிமாவைப் பற்றி ஏதாவது கேளுங்கள். அதை வாசகர்கள் படித்து மகிழ்வார்கள்" என்றார்.

நல்ல நகைச்சுவை உணர்வோடு, எந்தத் தங்கு தடங்கலும் இன்றி அவர் சொன்ன சில செய்திகளைக் கீழே தருகிறேன்.

முந்தைய பாடல்களைப் போல் இன்றைய பாடல்கள் மனதில் நிற்பதில்லை என்று சொல்வதெல்லாம் பொய். முன்னகாலம் மாதிரியா இப்பத் துணி கட்டுறோம். இப்பவெல்லாம் மேடு பள்ளம் நல்லாவே தெரியும்படிதானே துணி கட்டுறோம். அந்த மாதிரிதான் இதுவும். காலத்துக்கேற்ப கட்டுந்துணியைக் குறைச்சிட்டோம். அதே போல் இசைக் கருவிகளை அதிகரித்துப் பாடல் வரிகளைக் குறைத்து விட்டார்கள்.

எப்படி ஒரு இதழை எடுத்ததும் முதலில் அதில் அடங்கியிருக்கும் துணுக்குகளைப் படித்துவிட்டு, நேரமும் காலமும் இருக்கும் போதுதான் பெரிய கதைளையோ, செய்திகளையோ, படிக்கிறோம்'ல அப்படித்தான் இதுவும்.

இப்பவுள்ள நம்ம கவிஞர்கள் நல்லாவே பாட்டெழுதறாங்க உதாரணத்துக்கு, 'ரயிலில் திருமணத்தை வெச்சிக்குவோம்'னு ஒரு பாடலில் கவிஞர் கங்கை அமரன் குறிப்பிட்டுள்ளார். இது புதிய கருத்து. இப்படி கவிஞர் வைரமுத்துவிலிருந்து, இளங்கவிஞர்கள் சிறப்பாகவே பாடல் எழுதுகிறார்கள். அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வெறுமனே- அந்தக் காலத்துப் பாட்டு மாதிரி இப்பவெல்லாம் இல்லன்னு சொல்றதெல்லாம் சும்மா, கதை.

இன்னொன்றைக் கவனிக்கணும். இதுவும் புதுப்பாட்டுதான். 'வடக்கே இருக்கும் கங்கை எப்படியேனும் காட்டு வழியாகவாவது வளைந்து நெ ந்து காவிரியை மணந்தால் அதுதான் எனக்கு முதல் வசந்தம் என்று தனது முதல் வசந்தத்தை ஒரு கவிஞன் மிக உயர்வாக இரு நதிகளும் இணைவதால் தமிழகத்துக்கு ஏற்படும் நன்மையை விவரிப்பது எத்தனை உயரிய கருத்து. இந்தக் கருத்தை நீட்டி நெளித்துச் சொல்லியிருந்தா தெளிவாப் புரிஞ்சிருக்கும். ஆனா டியூனை போட்டு, பாட்டோடு பாட்டா விரைவு படுத்தியதில் தெளிவாக் கேட்க முடியலையே தவிர, இன்றைய இளங்கவிஞர்கள் அரிய கருத்துக்களைச் சொல்றாங்கங்கறத நாம ஏத்துக்கத்தான் வேணும்.

பழைய மாதிரி, அதாவது தேவாரம், திருவாசகம் மாதிரி எழுதுனாத்தான் பாட்டுன்னு நெனைச்சுக்கிட்டிருந்தா அது தப்புங்க.

திரைப்படப்பாடல் வேறு, கவிதை வேறு. திரைப்படத்தில் இடம் பெறும் பாடலும் கவிதைக்குரிய யாப்பிலக்கணத்தோடு இருக்கணும்'னு எதிர்பார்க்கிறது பைத்தியக்காரத்தனம்.

கவிஞன் வேறு-திரைப்படப் பாடல் வேறு. குளிக்கும்போது தானே நிர்வாணமா நிக்கிறோம், ரூம்ல! அது மாதிரிதான். இசை கலந்ததே திரைப்பாடல். ஆக, கவிதை வேறு, திரைப்படப்பாடல் வேறு.

62 பாடல்களைக் கொண்ட முதல் படம் 1934ல் வெளிவந்த நல்லதங்காள். அதில்தான் அதிக பாடல்கள் இடம் பெற்றன.

அதிகப் பாடல் எழுதிய அதாவது திரைப்படத்துக்கு அதிகப் பாடல் எழுதியவர் கவிஞர் கண்ணதாசன். 5ஆயிரம் பாடல்கள். அதிகமா தொகை வாங்கினவரும் அவர்தான். ஒரு பாட்டுக்கு சுமார் மூவாயிரம் வரை வாங்கினார். அதாவது தொடர்ந்து 25ஆண்டு

திரையுலகில் முடிசூடா மன்னனா இருந்தவரும் அவர்தான். பொண்டாட்டியும் அதிகம், புள்ளைங்களும் அதிகம், அயோக்கியத்தனமும் அதிகம். சரியோ தப்போ எல்லாமே மனுசங்கிட்ட அதிகம்தான்.

இந்த கண்ணதாசன் ஒருத்தர்தான் இருந்த போதும் ராஜா-இறந்த போதும் ராஜா. அதே எப்படிச் சொல்றேன்னா சிகிச்சைக்காக வெளி நாடு போன முதல் கவிஞன். இறந்த பின்னர் எழு லட்சம் செலவுல அவருடைய உடலை கொண்டு வர செலவு செஞ்ச வகையிலும் முதலிடம்.

நம்ம தலைமுறையில் திரைப்படப் பாடலாசிரியராக இருந்து முதல் அரசவைக் கவிஞரா ஆனதும் கண்ணதாசன்தான்!

இவருக்கு முன் மகாராஜ வாத்யார் என்பவர் அரசவைக் கவிஞராக இருந்திருக்கிறார். இது முன்னைய தலைமுறை.

பெண்களும் திரைப்படப் பாடல்கள் எழுதியுள்ளார்கள். அதில் முதல்வர் கே. சுப்பிரமணியம் என்று சொல்லப்படுபவரின் துணைவியார். அவுங்க நாகைப் பட்டணத்தைச் சேர்ந்த கே. பட்டம்மா என்ற மீனாட்சியம்மா. 1949லே பாட்டெழுதியுள்ளார்கள். பத்மா சுப்பிரமணியம் என்பவரின் தாய். பத்மா சுப்ரமணியம் ஒரு டான்சர். அதுவும் புரட்சிகரமான பாடல்கள். 'ஆறுமணி நேரத்திற்குமேல் வேலை செய்யோம்' என்ற பாடல் அது. 'கீத காந்தி' என்ற படத்தில் இடம் பெற்றுள்ளது அந்தப் பாடல்.

இப்போ-பாடகி எஸ்.ஜானகிகூட பாடல் எழுதியிருக்கா. ஒரே ஒரு பாட்டு. மொத்தம் ஏழு பெண்கள் பாட்டெழுதியிருக்காங்க. 416 திரைப்படப் பாடலாசிரியர்கள் பாடலெழுதியிருக்காங்க.

முன்னோடிகளை நினைவுகூர வேண்டும். அப்போதுதான் ஒரு இனத்தின் வரலாறு அந்த இனத்தின் இளம் சந்ததிக்குத்தெரியும். இல்லை என்றால். தனது வரலாறு என்ன என்பதை இளந்தளிர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்காது என்கிறார் உவமைக் கவிஞர் சுரதா.

பெரியார் அதைச் சொன்னார்; இதைச் சொன்னார் என்று சொல்லியே நேரத்தையும், காலத்தையும் ஓட்டுவதைவிட, அவர் அந்தக்கருத்துக்களைச் சொல்ல முன்னோடியாக இருந்தவர் யார்?

அந்தக் கருத்துப் பிறப்பதற்குரிய அடிப்படையை ஆய்ந்துணர வேண்டும் என்பதை வலியுறுத்தும் சுரதாவிடம்,

"பார்ப்பன இயக்கம்-ஒழிப்பு அது இதுவென இன்றைய நவநாகரிகக் காலத்திலும் தேவைதானா?"எனக் கேட்டோம்.

"அங்க கொஞ்சம் இலைமறைக்காயா இருக்கு. ஆனா, அது இல்லன்னா ஒருத்தன ஒருத்தன் தொட்டிருக்க முடியுமா?" என நாம் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்தார் சுரதா.

இப்ப தி.க.காரன் மட்டும் சொல்லிக் கிட்டுருக்கான். மத்தவன் சொல்றதில்லை. நீங்களெல்லாம் இந்த நாட்டுல இருக்கீங்க-இருந்தாலும் நாமக்கல் சங்கத்தவங்க யாருன்னு தெரியுது. துரைராஜ் யாருன்னு தெரியுது. திருப்பத்தூர் கேஸ் என்னான்னு தெரியுது. ஆக, வெளிப்படையா இல்லாமப் போச்சு. அதுக்கு வெல இல்ல.

ஆனா, அதெல்லாம் கொறைஞ்சு போச்சுங்க!

இப்படிச்சொன்னவர் நாம மீண்டும் சினிமாவப் பார்ப்போம்'னு திசை திருப்பினார்.

முதன் முதலில் சினிமா பாடல் எழுதியது பாஸ்கரதாஸ். அவருக்கு இணையா எவரையும் சொல்ல முடியாது. அவர், யாருக்குச் சொந்தக்காரன்னா- ராமநாதபுரம் சேதுபதிக்குச் சொந்தக்காரன்.

தான் கட்டிய வீட்டுக்கு முதன் முதலில் 'தமிழகம்' என்று பெயரிட்டவர். வெள்ளைச்சாமின்னு பேரு. அதெ பாஸ்கரதாஸ்னு மாத்திக்கிட்டார். மிகச் சிறந்த இவருடைய பாடலை பாடாதவரே இல்லை.

1958லே- 'ஆடும் ஊஞ்சலைப் போலே அலை ஆடுதே' அதுதான் நான் எழுதின முதல் பாடல். இது 'என் தங்கை' என்ற படத்தில் இடம் பெற்றது. எம்.ஜி.ஆர். நடிச்சது.

முப்பது ஆண்டுகள் தொடர்ச்சியா எவன் பாட்டும் ஒலிபரப்பப்பட்டதில்லை. ஆனா, நான் எழுதின 'அமுதும் தேனும் எதற்கு' என்ற பாடல்தான் இடைவிடாம ஒலிபரப்பாகிக்கிட்டு இருக்கு.

சீர்காழி கோவிந்தராஜன்தான் அந்தப் பாட்டப் பாடினார். 'தை பிறந்தா வழி பிறக்கும்' படத்தில் இடம் பெற்றது அது.

1988லே அதுக்கு ஒரு விழா எடுக்க விருக்காங்க. சீர்காழி ஹீரோவுக்குப் பாடின முதல் பாட்டும் அதுதான்.

வப்பாட்டியை வேற வீட்டில் வைக்கிற மாதிரி கவிதைகளை வேறாகவும் திரைப்படப் பாடல்களை வேறாகவும் ஒதுக்கிட்டானுங்க. நான்தான் முதன் முதலா திரைப் பாடல்களையும்-கவிதைகளையும் ஒண்ணுபடுத்தி பொத்தகம் போட்டிருக்கேன்.

அதாவது வப்பாட்டியை (சின்னவீட்ட) மூத்தவ வீட்டிலேயே வெச்ச மாதிரி திரைப்பாடலையும், கவிதையையும் ஒண்ணாப் போட்டிருக்கேன்.

பாரதிதாசன் விருதுன்னு ஒண்ணு கொண்டாந்தபோது அந்த விருத எனக்குத்தான் கொடுத்தாங்க.

அப்புறம் கடற்கரையில பாரதிதாசனுடைய சிலையை வெக்கணும்னு 1955ல் முரசொலியில எழுதினேன். கவிதையா, சிலையை வைப்போம்னு. 65ல் அண்ணா காலத்திலே சிலை வைக்கப்பட்டது.

குமுதம் இதழில் பேட்டிகண்ட போது-'திரைப்படப் பாடலும் இலக்கியம்தான்' என்று வெளியான அந்த பேட்டியில, பெண்கள் பாடல் எழுதணும்னு வலியுறுத்தினேன். அத்தோடு திரைப்படம் வெளிவந்ததும் அது பற்றிய ஒரு திறனாய்வு வெளி வரவேண்டும் என்பதையும் அதில் வலியுறுத்தியிருந்தேன். அது 1958.

அப்புறம் இப்ப நேத்து நடந்து முடிஞ்ச ஒரு கூட்டத்துல, ஆரம்பிக்கும்போது கடவுள் வாழ்த்து அது இதுன்னு பாடாம, சங்க இலக்கியத்துல இருந்து ஒரு ரெண்டு வரியப்பாடுங்கன்னு சொன்னேன். இப்படிச் செய்யும்போது மறைஞ்சு போகாம இருக்கும். புதிய தலைமுறையினருக்கு சங்க இலக்கியம்னு சொன்னா அத நம்ம சரியா-இதுதான் சங்க இலக்கியம்னு சொல்லித் தரணுமில்ல.

நம்ம ஆளுங்க திரும்பத் திரும்ப பேசினதையே பேசி காலத்தெ விரையமாக்குகிறோம்- இது யாருக்கு லாபம்?

எழுத்துச் சீர்திருத்தம் தேவையா இல்லையான்னு சிந்திக்கிறதுக்கு முன்னாடி, அதெ யாரு அறிமுகப்படுத்தினார்ங்கிறது மறந்து போச்சு. பெரியார் கொண்டு வந்தாருன்னு சொல்றதெல்லாம் தப்பு. பா.வே. மாணிக்க நாயக்கர்னு ஒருத்தர் இருந்தார். அவர் எஞ்சினியர். அவரை வெச்சுத்தான் இந்த சுயமரியாதை இயக்கத்தையும் தொடங்கினார். அவர் இந்த எஃப்'னு எழுதறத்துக்கு ஆயுத எழுத்து போடுறோம் இல்ல. அதெல்லாம் அறிமுகப்படுத்தி இருப்பதைக்காட்டி, 'கை'யனான்னா கொம்பு வெச்சு 'க'னா போடுறோம். அதைப்போல 'ணை'யனானா 'கொம்பு வெச்சி'ண'னா போடணும்னு சொன்னார். ஆனா, அதை வார்ப்பு செய்றதுல தவறு ஏற்பட்டுப் போச்சு.

இப்ப, எளிதா நடமாடுறதுக்கு வேட்டியை மாத்தி கால் சட்டை போட்டுக்கிறோம்ல. அதுபோல காலம்மாறிக்கிட்டிருக்கு. நாம மாறறோம். எழுத்தையும் சுருக்கிக் கையாள வழி இருந்தா கையாள்வதில் தவறில்லை அதெல்லாம் சரிதான்.

சுரதாவைச் சந்தித்தவர்: பழ.எ. அன்பழகன்
இதழ்: தினமணி, [கோலாலம்பூர், மலேசியா]
[6-12-1987]

# பாவேந்தர் விருது!

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில், தலைமைக் கவிஞராக வாழ்பவர் கவிஞர் சுரதா. இவரது இயற்பெயர் இராசகோபால். இவர் பாவேந்தர் மேல் கொண்ட ஈடுபாட்டால் சுப்புரத்தினதாசன் என்று தன்னை அழைத்துக் கொண்டு "சுரதா" ஆனார்.

தமிழக அரசு 'பாவேந்தர் பாரதிதாசன் விரு'தினை வழங்கி கவிஞர்களை ஊக்குவிக்க தீர்மானித்ததன் பேரில் முதலாவதாக 'பாவேந்தர் விருது' பெறுகின்ற பெருமைக்குரியவர் சுரதா ஆவார்.

பாவேந்தரின் பரம்பரைக் கவிஞரான சுரதாவைத் 'தென்னகம்' இதழுக்காகப் பேட்டி கண்டோம்.

இதுவரை எந்த அரசும் தனது இலக்கிய வாழ்வினை மெச்சி அளிக்காத பெருமையினை மக்கள் திலகத்தின் அரசு தந்தது என்கிறார் சுரதா.

பேட்டியைப் படியுங்கள்:-

**கேள்வி** : பாரதிதாசனை முதன் முதலாக எப்போது சந்தித்தீர்கள்?

**பதில்** : *1941-ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று புதுவையிலுள்ள அவரது இல்லத்தில்.*

**கேள்வி** : பாவேந்தரைப் பார்க்க உங்களைத் தூண்டியது எது?

**பதில்** : பழையனூர் தேநீர்க் கடை அழகப்பன் என்பவர் பாரதிதாசன் கவிதையின் முதற் தொகுதியிலுள்ள "ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால்-" என்று தொடங்கும் பாடலைப்

பாடிக்காட்டி கவிதை எப்படி? என்று கேட்டார். அந்தக் கவிதையைச் சுவைத்த நான், அந்தக் கவிதையிலுள்ள புரட்சி வேகத்தால் கவரப்பட்டேன். அந்தப் புரட்சி வரிகளே பாரதிதாசனைப் பார்க்க என்னைத் தூண்டியது.

கேள்வி : பாவேந்தரைப் பார்த்த பிறகு அவரைக் கொள்கை ரீதியாகவே ஏற்றுக் கொண்டீர்களா? இல்லை கவிதைப் பாணியை மட்டும் ஏற்றுக் கொண்டீர்களா?

பதில் : பெரியார் அவர்களின் 'குடியரசு' இதழ் வழியாக ஏற்கனவே பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றவனாக இருந்து, சிறு சிறு கவிதைகள் எழுதி வந்த நான், பாவேந்தரைப் பார்த்தபிறகு, அவரது பாணியை மட்டும் பின்பற்றிக் கொண்டு, அவரை நான் வழிகாட்டி ஆக ஆக்கிக் கொண்டேன்.

கேள்வி : ஏன்'சுரதா' என்று வைத்துக் கொண்டீர்கள்?

பதில் : பாவேந்தர் தன் பெயரை விட்டு விட்டு, பாரதிக்குத் தாசனாகி 'பாரதிதாசன்' ஆனார். அவர் விட்ட அந்த பெயரை (சுப்புரத்தினம்) எண்ணிப் பார்த்து, அவரது பெயருக்கு தாசனாக, சுப்புரத்தினதாசன் என்று என்னை அழைத்துக் கொண்டேன். ஒருமுறை கடிதம் எழுதும்போது கையெழுத்துப் போட்டேன். கடிதத்தில் இடம் குறைச்சல் எனவே சு.ர.தா. என்று புள்ளியிட்டு சுருக்கி எழுதி பின்னாளில் சுரதா ஆக்கிக் கொண்டேன்.

கேள்வி : நீங்கள் சென்னைக்கு முதன் முதலாக வரக் காரணம் என்ன?

பதில் : 'முத்தமிழ் நிலையம்' என்ற அமைப்பை பாவேந்தர் நண்பர்கள் ஏற்படுத்தி புரட்சிக்கவி, நாடகத்தை அரங்கேற்ற இருந்தபோது, அந்த நாடகத்தில் நடிப்பதற்காக பாவேந்தர் என்னைக் கடிதம் மூலம் அழைத்தார். அந்த நாடகத்தில் அமைச்சர் பாத்திரம் ஏற்று நடித்தேன். அதன் பின்னர் சென்னை வாசியானேன்.

கேள்வி : நீங்கள் திரைப்படத்துறைக்கு எப்படி வந்தீர்கள்?

பதில் : முத்தமிழ் நிலையத்தில் நாடக நடிகனாக அறிமுகமான நான், முத்தமிழ் நிலையம் நிறுத்தப்பட்டபோது புதுக்கோட்டையில் தங்கி இருந்தேன். நண்பர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி என்னை ஒரு பட அதிபருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதன்பின் நான் எழுதிய ஒரு உரையாடல் பகுதியைப் பி.யு. சின்னப்பா படித்துப் பார்த்தார். அது அவருக்குப் பிடித்திருந்தது. அவர் எனக்குக் கொடுத்த வாய்ப்பினால் 'மங்கையர்க்கரசி' என்ற திரைப்படத்துக்குக் கதை-வசனம் எழுதி திரையுலகத்துக்கு அறிமுகமானேன்.

கேள்வி : நீங்கள் முதன் முதலாக எந்தத் திரைப்படத்துக்குப் பாடல் எழுதினீர்கள்?

பதில் : மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த 'என் தங்கை' திரைப்படத்துக்காக முதன் முதலாக "ஆடும் ஊஞ்சலைப் போல-அலை ஆடுதே" என்று துவங்கும் பாடலை எழுதினேன்.

கேள்வி : மக்கள் திலகம் படத்தில், முதற்பாடல் எழுதியது பற்றியும், இப்போது பரிசு பெற்றது பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : நான் திரைப்படப் பாடலை முதன் முதலாக மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். படத்தில் எழுதினேன். இப்போது அவராலேயே 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' கிடைக்கப் பெற்றேன். அந்த விருதைப் பெறுவதிலேயும் முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். திரைப்படப்பாடல் எழுதுவதிலேயும், பரிசு பெறுவதிலேயும் எனக்கு முதன் முதலாக மக்கள் திலகம் கைகளாலேயே அந்த நல்ல காரியம் நடந்திருக்கிறது என்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கேள்வி : மக்கள் திலகம் படத்துக்கு ஏதாவது திரைக்கதை வசனம் எழுதியுள்ளீர்களா?

பதில் : ஆமாம்; 'ஜெனோவா' படத்தில் முதன் முதலாகக் கதை வசனம் எழுதினேன். அந்தப் படத்துக்குப் பாடல்களையும் நான்தான் எழுதினேன்.

கேள்வி : இலக்கியத்துறையில் நீங்கள் இயற்றிய முதல் நூல் எது?

பதில் : 'சாவின் முத்தம்' என்கிற நூல்தான்.

கேள்வி : இப்படி தலைப்பு வைத்ததற்குக் காரணம் என்ன?

பதில் : பகுத்தறிவுக் கொள்கையிலுள்ள பற்றுதல் தான் இதற்குக் காரணம்.

கேள்வி : நீங்கள் எழுதிய பரிசுபெற்ற நூல் எது?

பதில் : 'தேன்மழை' புத்தகத்துக்கு பரிசு முதன் முதலாகக் கிடைத்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தமிழக அரசு பரிசு கொடுக்கத் தீர்மானித்த போது, முதல் பரிசு பெற்ற கவிதை நூல் எனது 'தேன்மழை' நூலாகும்.

கேள்வி : பாரதிதாசனின் படைப்புகளைப் பொதுவுடைமை ஆக்குவதாக முதல்வர் அறிவித்ததைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : பொதுவுடைமை ஆக்குவது தேவைதான். ஏனெனில் பணக்காரர்கள் வாங்குவதற்குரிய பாவேந்தர் படைப்பு நூற்கள் பாமர மக்களுக்கும் கிடைக்கும். அதனால் பாவேந்தரின் பகுத்தறிவுக் கொள்கைகள் இன்னும் விரைவாகப் பாமர மக்களிடம் பரவிட உதவி செய்யும்.

கேள்வி : பாரதிதாசனின் நினைவுச் சொற்பொழிவுத் திட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : பாரதிதாசன் நினைவுச் சொற்பொழிவு நல்ல ஏற்பாடுதான். ஆனால் நினைவுச் சொற்பொழிவு ஆற்றுபவர்கள் முழு பகுத்தறிவுவாதிகளாக இருக்க வேண்டும் என்பது என் கருத்து.

கேள்வி : பாரதிதாசனுக்குத் தமிழக அரசு இனியென்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

பதில் : பாரதிதாசனுக்கு அரசாங்க விழா எடுத்தது பாராட்டுக் குரியதாகும். ஆனால் இனிமேல் பாரதிதாசனுக்குப்

பல்கலைக் கழகத்தில் தனி ஆராய்ச்சிப் பிரிவு(Chair on Bharadhidasan) ஏற்படுத்த வேண்டும். பாரதிதாசனுக்குச் சென்னையில் ஒரு நினைவு மண்டபம் கட்டி, அந்த மண்டபத்தில் டாக்டர் நாவலர் அவர்கள் கூறுவது போல 'பாரதிதாசன் கவிதா மண்டபம்' ஏற்படுத்தி செயல்பட அரசு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கேள்வி : தமிழக அரசின் தமிழ்ப்பணி குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில் : நீண்ட காலம் தொடர்பு அற்று இருந்த ஆஸ்தான கவிஞர் பதவி, முதல்வர் பற்றி வசை பாடிய கண்ணதாசனுக்குக் கொடுத்ததும், வசையோ இசையோ பாடிடாத எனக்கு 'பாவேந்தர் விருதும்' பணமுடிப்பும் பாராட்டும் கொடுத்திருப்பதும், 'பேறிஞர் அண்ணா அவர்களிடம் இருந்த பெருந்தன்மைக் குணம் மக்கள் திலகம் அவர்களிடமும் இருக்கிறது' என்பதை படம் பிடித்துக் காட்டுகிறது.

இவ்வாறு சுரதா கூறினார்.

**பேட்டி: மு. கோ. வசந்தன்**
**இதழ்: தென்னகம், 4-5-1978**

## கவிஞன் பிறப்பதில்லை;
## உருவாகிறான்

கவிஞர்கள் பிறப்பதில்லை; உருவாகிறார்கள் என்று உவமைக் கவிஞர் சுரதா கூறுகிறார்.

எந்த எழுத்தாளனும் கவிஞனும் தான் கண்ட-கேட்ட உணர்ந்த அனுபவ பூர்வமான விஷயங்களையே தேவைப்படும்போதுதான் எடுத்துக் கொண்டு கருவுக்கு உருசேர்க்கிறான். மற்றபடி கவிஞன் பிறக்கிறான். என்பதெல்லாம் நம்ப முடியாதவை என்றும் அவர் ஆணித்தரமாகச் சொல்கிறார்.

வரும் ஞாயிற்றுக் கிழமை கோலாலம்பூர் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கவிஞர் அன்பானந்தனின் நூல்கள் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளவும் நண்பர்களைக் காணவும் வந்துள்ள கவிஞர் சுரதா மனித உணர்வுகள், இயற்கைத் தன்மைகள், சமுதாயம், எழுத்துத்துறை இப்படிப் பல விஷயங்களை நேசனுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

தன்னை ஒரு கவிஞராக்கிக் கொள்ள விரும்பும் ஒருவர் ஆழ்ந்த மொழி அறிவும் நூற்றுக் கணக்கான பாடல்களை மனனம் செய்து ஒப்புவிக்கும் திறனும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

உடுமலை நாராயணகவி தனக்கு 18-ஆயிரம் பாடல்கள் மனப்பாடம் என்று ஒரு முறை என்னிடம் கூறியுள்ளார்.

பாடல்களை மனப்பாடம் செய்து கொள்வதன் மூலம் பல பழம்பெரும் சொற்களைப் பொருள் புரிந்து கொள்ளவும் அவற்றைத் தங்கள் பாடல்களில் இடம்பெறச் செய்யவும் இயலும் என்றும் அவர் கூறுகிறார்.

எழுத்தாளன் ஒரு விஞ்ஞானியைப் போன்றவன். அவன் ஒரு மரத்தைப் பற்றிப் பாட நினைக்கும்போது அதன் தன்மை அதன் பயன் முதலான விஷயங்களை அறிந்து கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாது போனால் ஒரு கவிஞனால் அதன் பெருமைகளைத் தனது பாடல்களில் வடிக்க இயலாது.

சோறு வடிக்கும் இல்லத்தரசி ஆண்டாண்டுகாலமாகப் பதம் பார்க்க ஒரு பருக்கையை அழுத்திப் பார்க்கிறாள். அவள் சோற்றைப் பார்த்த மாத்திரத்தில் வடித்தெடுக்கும் பக்குவத்துக்குத் தன்னை தயார் படுத்திக்கொள்ள வேண்டும். இதைப் போல் கவிஞர்களும் தங்களது உய்த்துணரும் அனுபவங்களால் ஒரு பொருளைப்பற்றி பாட இலகுவில் சொற்கோவைகளைத் திரட்ட வேண்டும்.

தெய்வவழிபாட்டுக்கான கீர்த்தனைகளை மட்டுமே பெருமளவில் கொண்டிருந்த தமிழ் பாக்களுள் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்கள் ஒரு திருப்புமுனையாக அமைந்தன.

பாவேந்தரின் பாடல்கள் பல தலைமுறைகளுக்குப் பல கோணங்களில் சிந்திக்கத் தூண்டுபவையாக இருக்கும்.

தமிழகத்தின் முதல் தேசியக் கவி பாரதியார் என்று கூறுகிறார்கள். ஆனால் 1877-ஆம் ஆண்டு ராமசாமி ராஜு என்பவர் எழுதிய பாக்களைக் கொண்டு அவரைத்தான் முதல் தேசியக்கவி என்று கூறலாம் என்றும் கவிஞர் சுரதா கூறுகிறார்.

ஒரு கவிஞன், தான் இயற்றும் பாடலுக்காக உழைத்து மன உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டும். தெளிந்த அறிவும் கடின உழைப்பும் ஒழுக்கமும் இருந்தால் கவிஞன் வெளிப்படுத்தும் சொற்கள் காலத்தால் அழியாது நிற்கும்.

தெய்வப் பாடல்களைத் தவிர்த்து மற்ற விஷயங்களைப் பற்றிப் பாடிய முதல் கவிஞர் பூவை கல்யாண சுந்தரம் என்பாரைப் பற்றிக் குறிப்பிடலாம். சென்னைக்கும் செங்கற்பட்டுக்குமிடையில் தமிழகத்தில் முதலில் ஓடிய ரயிலைப் பற்றி இவர் பாடி இருக்கிறார்.

நம்மவர்கள் எந்த விஷயத்தையும் ஆழமாகப் பார்ப்பதில்லை. இது நமது சமூகத்தின் பெரிய குறையாகும். தொட்டனைத் தூறும் மணற்கேணி என்பதாகத்தான் இருக்கிறார்கள்.

'நமக்குக் குடிநீர் மட்டும் கிடைத்தால் போதும்' என்று திருப்தி அடைந்து விடுகிறோம். தண்ணீருக்கும் கீழே என்ன இருக்கும் என்று ஆராய்ந்தவன் பெட்ரோலைத் தோண்டி எடுத்துவிட்டான் என்றும் இவர் கூறுகிறார்.

எழுத்தாளர்கள் பண்டைய இலக்கியங்களைப் படித்து அவற்றில் காணப்படும் வார்த்தைகளுக்குப் பொருள் புரிந்து கொண்டால் அவற்றைத் தங்கள் படைப்புகளில் பயன்படுத்தி நடைமுறைத் தமிழாக்கலாம். இதனை எழுத்தாளர்கள் தங்கள் கடமையாகச் செய்ய வேண்டும்.

ஒருவர், தான் கவி புனைய விரும்புவாரானால் அவருக்கு முதலில் 40 முதல் 50 பாடல்கள் மனப்பாடமாகத் தெரிய வேண்டும் என அவர் சொன்னார்.

புதுக்கவிதைகள் என்ற பெயரில் இப்போது வெளியாகும் அம்சங்கள் கால ஓட்டத்தில் மறைந்துவிடும் என்று இவர் நிச்சயமாக நம்புகிறார்.

தமிழகத்தில் பிராமணர் அல்லாதார் நடத்தும் பத்திரிகைத் தொழில்கள் வளமற்றிருப்பதற்குக் காரணம் அவர்கள் இரண்டாந்தர அறிவுடையவர்களாக இருப்பதே என்றும் இவர் கூறுகிறார். போதிய முதலீடுகள் இல்லாமலும் திட்டமில்லாமலும் பிராமணர் அல்லாதார் பத்திரிகைகளைத் தொடங்குகின்றனர்.

மேலும் இவர்கள் எழுத்தாளனுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்ற திட்டம் எதுவும் இல்லாதவர்கள். இந்த நிலையில் பிராமணர்கள் நடத்தும் பத்திரிகைகளுக்குக் கிடைக்கும் அளவுக்குத் தரமான விஷயங்களைப் பெற முடிவதில்லை. அதே நேரத்தில் பத்திரிகைத் தொழிலின் அனுபவம் இன்மை போன்றவையும் இவர்களது வீழ்ச்சிக்குக் காரணமாகின்றன.

ஒரு தொழிலைத் தொடங்கு முன்னதாக அதன் ஒவ்வொரு அம்சம் பற்றியும் ஆராய்ச்சி பூர்வமான அறிவு இன்றியமையாத தாகும். இதன் காரணமாகவே நான் தொடங்கிய பல பத்திரிகைகளும் தொடர்ந்து நடத்த முடியவில்லை என்றும் கவிஞர் சுரதா ஒப்புக் கொள்கிறார்.

இதழ்: தமிழ்நேசன், [கோலாலம்பூர், மலேசியா] [1-6-1979]
சுரதாவை சந்தித்தவர்: பழ. எ. அன்பழகன்

## சுரதாவிடம் சில கேள்விகள்!

கேள்வி: கவிதைத் துறைதான் தங்களை இலக்கிய உலகிற்கு ஈர்த்ததா?

பதில்: எந்தத் துறையும் என்னை ஈர்க்கவில்லை. எனக்கு அதெல்லாம் பிடிப்பதில்லை. ஆனால், சரிதான் என்று செய்வதைவிட மற்றபடி எனக்கு ஈடுபாடு எதிலும் கிடையாது.

கேள்வி: இளமையில் தங்களின் இலக்கியப் பிரவேசத்திற்குக் காரணமாய் அமைந்தவர்கள் யார்?

பதில்: டீக்கடை அழகப்பன்தான் கவிதை எழுதுவதற்குக் காரணமாய் இருந்தார். அவர்தான் பாரதிதாசனுடைய பாடல்களையெல்லாம் படித்துக் காட்டி ஊக்குவித்தார். கிருஷ்ணமாச்சாரி என்பவரும் உதவியாக இருந்தார். அப்புறம் சுயமரியாதை இயக்கமும் உதவியாக இருந்தது.

கேள்வி: ஓர் இளங்கவிஞனாக அறிமுகமான தருவாயில் தங்களுக்கு ஆதர்சமாய்க் கொள்கைகளோ, இலட்சியங்களோ இருந்திருக்கலாம். இப்போது அவை வேடிக்கையாகவும் தோன்றலாம் அல்லது நீடித்து இருக்கலாம். அவை என்ன?

பதில்: நான் ரொம்பவும் தெளிவாகவே இருக்கிறேன். எனக்கு அந்தச் சுயமரியாதைக் கொள்கையேதான்.

கேள்வி: கவிதையைப் படைப்பதென்பது சூல்கொண்டு பிரசவிப்பது போல் வேதனையும் மகிழ்ச்சியும் தரக்கூடிய ஒன்றென்று, ஒப்பு நோக்கப்படுவதில் தங்களுக்கு ஏதேனும் மாறுபட்ட கருத்து உண்டா?

பதில்: நான்தான் இதையும் சொல்லிக் கொண்டு வருகிறேன். மீதிப்பேரெல்லாம் அயோக்கியத் தனமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அது ஏதோ பெரிசா வருது மாதிரியும், இவனுங்க இது பண்ணுறாங்க. அதைவிட தூக்குமேடை போவதோ, பிரசவ வேதனையோ, எதுவும் கிடையாது. நல்ல கவிதை என்பது ஆய்வுக்குப் பிறகு வரவேண்டிய ஒன்று. அவசரமாக வருகிறதென்றால், ரொம்பக் குறைந்த அறிவுடைய மக்களை ஏமாற்றிக் கொண்டு வருகிறான் என்று பொருள். அவனுக்கு அவனே மறுநாள் உயர்ந்திருக்க வேண்டுமல்லவா? மற்றவனுக்கு இன்றைய என் கவிதை சிறந்ததாய் இருக்கலாம். ஆனால் மறு நாள் எனக்கு நானே அறிவுள்ளவனாக இருக்க வேண்டும். இன்னும் சிறந்ததைப் படைக்க வேண்டுமென்றால் குறைந்த அறிவுள்ளவனுக்குக் கெட்டிக்காரனாயிருக்கிறதைவிட இன்னும் சிந்தனையை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று பார்க்கையில், இது பிரசவ வேதனைதான். என்னைப் பொறுத்தவரையில், நான்தானே தமிழகத்தில் ரொம்ப நுட்பமா, நுணுகி மெதுவாய் எழுதுபவன். அந்த விதத்தையும் மாற்றிக் கொண்டேன். பிரெஞ்சு நாட்டில் 16-ஆம் நூற்றாண்டில் 'லாரஸ் புக்கோ' என்ற ஒருவன் இருந்தான். அவன்தான் நானறிந்த அளவில் எட்டு ஒன்பது தடவை தானெழுதிய கவிதையைத் திருத்தியிருக்கின்றான். கவிதையை எழுதிய உடனேயே ஆறு அல்லது ஏழு தடவை அடித்துத் திருத்தி எழுதுவானாம். நான்தான் இதைச் செய்திருக்கிறேன் என்று பார்த்தால், அவன்தான் முன்னோடி என்று எனக்குத் தெரிகிறது.

கேள்வி: கவிதைக்குத் தாங்கள் தரும் விளக்கம்?

பதில்: கவிதை... எளிமையாக இருப்பது.... ஒழுங்காக இருப்பது...விட்டுப்போனதைச் சொல்லுவது...! வடிவத்தில் சரியாக வந்துவிட வேண்டும். அதில் சந்தேகமில்லை. அதில் மற்றவர்கள் சொல்லாததைச் சொல்ல வேண்டும். அல்லது ஒழுங்காகச் சொல்லிவிட்டுப் போய்விட வேண்டும். திறமையிருந்தால் கூடுதலாகச்சொல். அழகாய் இருந்தால் அடிக்கடி கண்ணாடி பார்த்துக்கொள்.

இல்லை யெனில் எப்போதாவது ஒரு தடவை பார்த்துக்கொள்.

கேள்வி: எப்போதுமே கவிஞர்களுக்கு வாழ்க்கையில் அவர்களது முதற் காதல் இலக்கிய ரீதியாகச் சில பாதிப்புகளை ஏற்படுத்துவதுண்டு. தங்களின் முதற்காதல் வெற்றியா? தோல்வியா?

பதில்: ஒரு மாதிரி வெற்றி தோல்விதான்.

கேள்வி: நிச்சயமாக கவிதை ஈடுபாடு தங்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலைத்தன்மையைப் பாதித்திருக்கலாம். இருந்தாலும் சோர்ந்து போகாமல் இன்னும் தங்கள் இலக்கியப் பயணத்தை தொடர உத்வேகம் அளிப்பது யார்? அல்லது எது?

பதில்: யாருமே கிடையாது.எது என்றால் அதை தவிர வேறு யோக்கியதை கிடையாது. அதையே எழுதிக் கொண்டிருக் கிறேன்.

கேள்வி: பாரதிதாசனுக்கும் தங்களுக்கும் உள்ள தொடர்பு, அப்போது உருவாகிக் கொண்டிருந்த தங்களின் சமகாலக் கவிஞர்கள், இன்று அவர்களில் யார் யார் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்? சற்று விரிவாகக் கூற முடியுமா?

பதில்: அதாவது, பாரதிதாசன் காலத்திலே... வாணிதாசன், முடியரசன், கம்பதாசன், இன்னொருவர் ராஜவேலு என்று பெயர்.. அதாவது நிலவரசோ பூவரசோ என்று பெயர்...!

கேள்வி: ஆற்றலரசா?

பதில்: அது வேறு. அவர்தான் முதல் மாணவரே. அவர்தான் பாரதிதாசனுடைய பெண்ணைக்கூட திருமணம் பண்ணிக் கொள்வதாய் ஓர் ஏற்பாடு கூட இருந்தது. அவர் இருக்கிறார். அவர் சேர்ந்து போய்விட்டார்.

கம்பதாசன் செத்துப் போய்விட்டார். வாணிதாசனும் செத்துப் போய்விட்டார். சிலபேருக்குத் அறிவு இல்லை. நான் ஒருவன் மட்டும் ஒரு தினுசாய் இருக்கிறேன். இப்போது நன்றாக எழுதுபவர்களில், பொன்னி வளவன்

நன்றாக எழுதுகிறார். வேழவேந்தன், வல்லம் வேங்கடபதி, மின்னூர் சீனிவாசன் போன்றவர்களும் நன்றாக எழுதுகிறார்கள்.

கேள்வி: பாரதிதாசன் அணியினரில் ஒருவராகத் தாங்கள் கருதப்பட்டாலும், மற்றவர்களைப் போல் முழுக்க முழுக்க அவரின் தாக்கத்தில் மூழ்காமல், உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படும் அளவுக்கோ அல்லது அதற்கும் மேலோ தங்களின் தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொண்டதாக நம்புகிறீர்களா?

பதில்: நான் அவர்களைவிடப் புத்திசாலியாக இருப்பதால் தெளிவாக இருக்கிறேன். அதாவது அவரை நான்பின் பற்றவே இல்லையே, அந்தப் பேரை வைத்துக் கொண்டதைத்தவிர.

கேள்வி பொதுவாகவே கவிஞன் தன் காலத்திலோ அல்லது பிறகோ தனது கவித்துவத்தினால் மட்டும் விரைவில் மக்களின் அங்கீகரிப்பைப் பெறுவதில்லை.

உதாரணத்திற்கு... பாரதியைப் பொறுத்தவரை அவரது தேசிய விடுதலையை தூண்டும் பாடல்களும், தியாக வாழ்வுமே, முதலில் ஈர்க்கும் சக்திகளாக அமைந்தன. பின்னர்தான் அவரது கவித்துவம் வருகிறது.

பாரதிதாசனுக்கு... திராவிடர் இயக்கமும், சீர்திருத்தமும், மொழியுணர்வும், போராட்டமும்...!

கண்ணதாசனுக்கு... பிரபலமாகத் திரைப்படத் துறையும், அரசியலும்... ஏன், தாகூருக்குக்கூட ஆங்கிலக் கவிஞர் ஒய். பி. ஈட்சும் அவருடைய பரிந்துரையும், நோபல் பரிசுக்குத் தேவையா யிருந்தது. இக்கருத்தைத் தாங்கள் ஆமோதிக்கிறீர்களா? ஆட்சேபிக்கிறீர்களா?

பதில்: ஆமோதிக்கிறேன், ஒவ்வொருவனுக்கும் உந்துதல் இது போலத்தானே.

கேள்வி இந்த உந்துதல்தான் கவிஞர்கள் பிரபலமடையக் காரண மென்று கருதுகிறீர்களா?

பதில்: இல்லையில்லை! ஒரு பெண் பருவமடைந்தால் தானே திருமணம் பண்ணுகிறான். எல்லாம் மனிதனை விளம்பரப்படுத்திக் கொள்வதுதானே. இப்ப அழகு... சவரம் பண்ணிக் கொள்வதே கொஞ்சம் மதிக்க வேண்டும் என்பதற்காகத் தானே! இப்படிச் சட்டைப் போட்டு, அழகாய்ப் பேனா வைத்துக் கொள்வதுகூட மதிக்க வேண்டுமென்பதற்காகத் தானே, இல்லையென்றால் வீட்டில் நிர்வாணமாக நிறகலாமே. எல்லாம் ஏற்பாடுதானே. எல்லாம் அயோக்கித்தனம்தானே!

பேட்டி: க. இளங்கோவன்
இதழ்: வானம்பாடி [சிங்கப்பூர்]

## ஏன் எழுதுகிறீர்கள்?

"எனக்கு எந்தவிதக் கொள்கையும் இல்லை; பெரிய சாதனைகளைச் செய்ய வேண்டும் என்ற திட்டமும் இல்லை" என்று தெரிவித்தபோது, "அப்படியானால் ஏன் எழுதுகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

"உயிர் இருப்பதால் மூச்சு விடுகிறேன். எழுதத் தெரிகிறது, எழுதுகிறேன்" என்று பதிலளித்தேன்.

தமிழ்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு இங்கே இருப்பதைவிடப்பல மடங்கு செல்வாக்கு அங்கே இருக்கிறது. இளைஞர்களிடம் தி.மு.க சிந்தனையைத்தவிர பெரும்பாலும் வேறு சிந்தனை இல்லை.

கருணாநிதி மட்டும் மலேசிய நாட்டில் பிறந்திருந்தால் அந்த நாட்டுப் பிரதமராகவே ஆகியிருப்பார். அந்த அளவுக்கு இளைஞர்களிடம் அவர் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்.

அங்கே நல்ல தமிழார்வம் இருக்கிறது. 'ஜலசந்தி' என்பதை 'நீர் இணை' என்று மொழிமாற்றம் செய்திருக்கிறார்கள்.

சிறுகதை, கவிதை, நாவல் அதிகம் எழுதுகிறார்கள். எழுத்துத் துறையில் பெண்கள் அதிகமாக ஈடுபடுகிறார்கள்.

நான்தான் சுயமரியாதைக்காரனாகப் போய் சுயமரியாதையாய் திரும்பியிருக்கிறேன்.

என்னைப் பாராட்டிப் போர்த்தப்பட்ட சால்வைகள், பொன்னாடைகளைக்கூட எடுத்து வரவில்லை. பரிசுப் பொருள்களையும் அங்கேயே கொடுத்துவிட்டு வந்து விட்டேன்.

இவ்வாறு கவிஞர் சுரதா சென்னையில் 'கவிக்கொண்டல்' இலக்கிய வட்டத்தின் சார்பில் நடந்த வரவேற்பு விழாவில்பேசும்போது, மலேசியா- சிங்கப்பூர் நாடுகளின் சிறப்பைப் பற்றியும் பயண அனுபவங்களையும் குறிப்பிட்டார்.

**கேட்டெழுதியவர்: கிரிஜா**
**இதழ்: குங்குமம் [21-10-1979]**

## புதுக்கவிதை!

'புதுக்கவிதை' என்பது ஒருவனுக்கு ஆசை நாயகி போலாகும். மனைவிக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் எப்படி ஆசை நாயகிக்குக் கொடுப்பதில்லையோ அதுபோல், இலக்கியப் பூங்காவில் அவை மணமற்ற மலர்களே, என்கிறார் பிரபல தமிழக உவமைக் கவிஞர் சுரதா.

கோலாலம்பூர் நகர மண்டபத்தில் இன்று (3-6-79) காலை துவங்கி பல இலக்கிய நிகழ்ச்சிகளுடன் மலேசியாவின் முன்னணி எழுத்தாளர் திரு. சா.ஆ. அன்பானந்தனின் 'திருப்பம்' 'மரவள்ளிக் கிழங்கு' 'நயனங்கள்' 'காலத்தின் விளக்கு' ஆகிய புத்தக வெளியீட்டு விழாவில் சிறப்பு அம்சமாக இலக்கியச் சொற்பொழிவாற்ற வருகை தந்துள்ள கவிஞர் அவர்களை நாம் சந்தித்தபோதே மேற்கண்டவறு கூறினார்.

அவருடன் நடத்திய சிறு சந்திப்பு உரையாடலை இங்கு வழங்குகிறோம்.

**கேள்வி:** தமிழகத்திலிருந்து வருகை தரும் இலக்கிய வாதிகளைப் போல் நீங்களும், சொற்பொழிவு, இலக்கியக் கூட்டமென சென்று விடுவீரா அல்லது மாற்றுக் கருத்து ஏதும் கொண்டுள்ளீரா என்பதைச் சொல்லவியலுமா?

**பதில்:** இந்நாட்டு மக்களின் வாழ்வு முறைகளைக் கருத்தூன்றிக் கவனிப்பதோடு, இங்கு இதுகாரும் வெளிவந்துள்ள நாளேடுகள் மற்றும் இலக்கிய இதழ்களின் படைப்பினைக் கொண்டு போய் ஒரு திறனாய்வு செய்கின்ற நோக்கம் உண்டு. பலர், நாளேடுகளைத் தவிர்த்து நூல்களை ஆய்வு செய்வதில் பெருநோக்கம் காட்டுவர். ஆனால் நான் அப்படியல்ல. அதற்குக்

காரணம் ஏடுகளை நடத்தியவர்களே நூல் வெளியீட்டார் களைக் காட்டினும் நிறைய சாதித்துள்ளனர். அதில்தான் பல கவிஞர்களும், அறிஞர்களும், எழுதுகின்ற எழுத்துப் படிவங்கள் வெளிவருவதைக் காண முடிகிறது.

அத்தோடு இந்நாட்டில் வாழ்கின்ற-வாழ்ந்த கவிஞர்களின் பட்டியல் ஒன்றினையும் நான் எடுத்துச் செல்லவிருக்கிறேன்.

எந்த விருத்தத்தை தாங்கள் விரும்பிப் பாடுவீர் என்ற கேள்விக்கு திரு. சுரதா அவர்கள்:-

இன்ன விருத்தம் என்று பாகுபடுத்திப் பாடுவது கிடையாது என்கிறார்.

*1941*-ஆம் ஆண்டு துவங்கி கடந்த *38*-ஆண்டுகளாகக் கவிதைகள் பாடிவரும் சுரதா அவர்கள் தனது பள்ளிப் பருவத்திலேயே பாட்டியற்றத் தொடங்கிவிட்டதாகக் கூறுகிறார்.

**கேள்வி:** புதுக்கவிதைகளின் வரவால் முறைப்படி யாப்பிலக் கணங்களுடன் கூடிய கவிதைகளுக்கு வரவேற்பு குறைந்துள்ளதா?- அந்தப் புதுக் கவிதைகள் 'கவிதை' இலக்கணத்தை ஏற்க இயலுமா?

**பதில்:** புதுக்கவிதை என்று சொல்லப்படும் கவிதைகளின் வரவால் முறைப்படியான கவிதைகளுக்குப் பாதிப்பு தான்-ஏனெனில் இது புரியுது-அது புரியலை என்கின்றனரே!

இந்தப் புதுக்கவிதை என்பது ஒருவனுக்கு ஆசை நாயகி போன்றது. மனைவிக்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் எப்படி ஆசைநாயகிக்கு இல்லையோ அதுபோல், இலக்கியப் பூங்காவில் அவை மணமற்ற மலர்களே!

**கேள்வி:** யாப்பிலக்கணங்களைப் படித்துக் கவிதை இயற்றும் கவிஞர்களும் உண்டு. அதே வேளை- அவற்றைப் படிக்காமல் ஓசை நயத்தை மட்டும் கருத்தில் கொண்டு பாடல் வடிப்போரும் பல்கிவிட்டனர். இதுபற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: படித்தவன் தானே மேதையாக முடியும்- படிக்காத ஒருவன் மேதையாவதில்லையே. முறைப்படியான கவிதைகளைத்தான் மதிக்கிறேன்; வரவேற்கிறேன்.

கேள்வி: கவிஞன் பிறப்பதாகக் கூறுகிறார்களே?

பதில்: அதெல்லாம் சும்மா. கருவில் திருவென்பதெல்லாம் கிடையாது. அதை நம்புவது மூடத்தனத்தில் ஒன்று!

கேள்வி: புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றிச் சொல்வீர்களா?

பதில்: எழுச்சிக் கவிதைகளை இயற்றியவர் கவிஞர் பாரதிதாசன். தமிழ் உலகில் சாதாரண மக்களும் படித்துப் புரிந்து கொள்ளும் அளவுக்குப் பாடல் இயற்றியவர் பாரதிதாசன்.

கேள்வி: தற்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் ஆட்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்.?

பதில்: நல்லபடியே ஆள்கிறார். இவர் வந்த பிறகு கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் சிறப்பு என்று தான் சொல்ல வேண்டும்.

கேள்வி: முன்னாள் முதல்வரின் தமிழ்ப்புலமை-அரசியல் ஆற்றலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்

பதில்: அவரின் தமிழ்ப்புலமையும் அரசியல் ஆற்றலும் பாராட்டப்பட வேண்டிய அம்சங்களே. என்ற சுரதா கலைஞர் ஒரு சிறந்த மனிதர்- தமிழ்நாட்டுக்குத் தமிழர்க்கு அவர் கிடைக்கப்பெற்றது அருமை என்றவர் மேலும் கலைஞருக்கு புகழாரம் சூட்டினார்.

சுரதாவைச் சந்தித்தவர்: பழ. எ. அன்பழகன்
இதழ்: தமிழ்மலர். [கோலாலம்பூர்] [3-6-77]

# இன்றைய நாகரிகத்தை உதடு வளர்க்கிறது!

கேள்வி : ஜெகசிற்பியன் பதில் : சுரதா

**கேள்வி** : தமிழிலக்கியத்தின் எதிர்காலம் எத்தன்மையுடையதாயிருக்கும்?

**பதில்** : அந்துப் பூச்சி அரித்துவிட்ட அரிசியில்லாத நெல்லைப்போல் எண்ணங்கள் இல்லாமல் வெறும் எழுத்துக் கூட்டமாக இருந்துவரும் தற்கால இலக்கியம், சீக்கிரத்தில் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு நோபல் பரிசு வாங்கக்கூடிய யோக்கியதைக்கு வந்துவிடும்!

**கேள்வி** : மத அடிப்படையில் எழுந்த காவியங்களின் மூலம் தமிழகத்தின் சரித்திரத்தை ஆராய்ந்து முடிவு கூறப்படுகிறதே; இது சரிதானா?... இதனால் சரியான சரித்திரத் தெளிவு கிடைக்குமா?

**பதில்** : அவ்வளவு சரியல்ல. தமிழ்நாட்டின் சரித்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய ஆதாரம் அதிகம் இல்லாததால் இந்த மாதிரி காவியங்களில் இருக்கும் கொஞ்ச நஞ்ச சரித்திர நினைவுகளை ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. இருந்தாலும் இதனால் சரியான சரித்திரத் தெளிவு கிடைத்து விடாது.

**கேள்வி** : கம்ப ராமாயணம், பாஞ்சாலி சபதம், பாண்டியன் பரிசு ஆகிய இம்மூன்று காவியங்களும் இன்றைய தமிழினத்துக்கு எந்தெந்த முறையில் பயன்படுமென எண்ணுகிறீர்?

பதில் : கம்ப ராமாயணம்... முட்டாள்கள் அதிகமாகி விட்டதால் தலையணையாகப் பயன்படுகிறது!

பாஞ்சாலி சபதம்... ஆண் இனத்தின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட ஒரு கட்சியை ஏற்படுத்தத் தூண்டுகிறது! பாண்டியன் பரிசு... இன உணர்ச்சியை அதிகப்படுத்திக் கொள்ள உதவுகிறது!

கேள்வி : வளர்ந்து வரும் சினிமா கலையின் சாதக பாதகமென்ன?

பதில் : அழகை நன்றாக விளம்பரப்படுத்திக் கொண்டு வருகிறது. அதே நேரத்தில் சினிமா, ஒழுக்கத்தைக் கலைக்கவும் கவலைப்படுவதில்லை!

கேள்வி : பண்டைய நாகரிகத்துக்கும், இன்றைய நாகரிகத்திற்கும் என்ன வேறுபாடு? தத்துவ ரீதியில் இதற்குப் பதில் சொல்லுங்கள்.

பதில் : பண்டைய நாகரிகத்தை உள்ளம் வளர்த்தது. இன்றைய நாகரிகத்தை உதடு வளர்க்கிறது.

கேள்வி : உண்மை எழுத்தாளனுக்கும் உயர்ந்த கவிஞனுக்கும்- உயிராயிருக்கும் போதே பண முடிப்பு கொடுப்பது சரிதானா?

பதில் : சரிதான். வண்டு செத்துவிட்ட பிறகு அதன்மீது தேனைக் குடம் குடமாக ஊற்றி என்ன பிரயோசனம் பிரயோசனம்?

கேள்வி : மனிதனுக்குக் கடவுள் நம்பிக்கை வேண்டுமா?

பதில் : வேண்டியதேயில்லை...

கேள்வி : ஏன்?

பதில் : ஒருவனை ஒழுங்குபடுத்த மனச்சாட்சியும் தண்டிப்பதற்கு சட்டங்களும் இருக்கும்போது வீணாகக் கடவுள் நம்பிக்கை எதற்கு?

சுரதாவைச் சந்தித்தவர் : ஜெகசிற்பியன்
இதழ்: சிரஞ்சீவி, [15-5-1952]

## ஒரு நாள் முதல்வர்

ஒரே ஒரு நாள் மட்டும் முதலமைச்சராக நீங்கள் தெரிவு செய்யப்படுகிறீர்கள். அந்த ஒரு நாளில் என்னவெல்லாம் செய்வீர்கள்? ஒரே ஒரு கண்டிஷன் எந்த கவிஞனுக்கும் நயா பைசாவுக்கு எதுவும் செய்யக்கூடாது?

நீங்கள் உங்க பேப்பருல பக்கம் நிரப்புறத்துக்காக எங்கிட்டே இந்தக் கேள்வியே கேட்கிறீர்கள். இதுக்கெல்லாம் பதில் சொல்லனுமான்னு யோசிச்சா... நம்ம மனசுல 'யாராச்சும் இதெல்லாம் செய்ய மாட்டாங்களான்னு... சிலவற்றை நினைச்சிக்குவோம். அது மாதிரியான என்னோட நினைப்புகளை இந்த கேள்விக்கு நான் பதிலா தாறேன்.

தண்ணீர் பஞ்சம், சாப்பிட அரிசி பஞ்சம் இல்லாம திட்டம் போட்டு முதல் கையெழுத்து போடுவேன். அடுத்து இந்த கான்வென்ட் நடத்துற ஆட்களை எல்லாம் உள்ளே பிடித்துத் தள்ளி... தாய்மொழியில் படிங்கடா என்பேன். பொம்பளைங்களை மதிக்கிற புத்தி ரொம்பத்தான் குறைஞ்சு போச்சு... மகளிருக்கு முன்னுரிமை கொடுக்குற நிறைய திட்டங்களை ஒரே நாள்ல அமுல்படுத்துவேன். எதிலும் அறிவியல் பார்வை வளர கல்வித்துறையில் மாற்றங்கள் கொண்டு வருவேன். பரிட்சை... மதிப்பெண் எதுவும் இருக்காது. வட்டித் தொழில் செய்கிற வாத்தியார்களை வீட்டுக்கு அனுப்புவேன். அரசு வங்கிகளைத் தவிர வேற எவரும் வட்டித் தொழில் செய்யக்கூடாது என்று உத்தரவு போடுவேன். ஒரு நாள்ல இதுதாம்பா முடியும்

இதழ்: தினகரன், வசந்தம் [4-8-2002]

## எனக்குச்சாவு இப்படித்தான் வரவேண்டும்!

"... நான் மோதிரம், வாட்ச் போன்ற எதையும் அணிவதில்லை. அவைகளால் எனக்கு அழகு வரவில்லை. நான் நானாக இருப்பதில்தான் அழகு. இடுப்பில் அரைஞாண்கூட நான் அணிவது கிடையாது. காரணம் தனிமையில் என் உடம்பைத் தடவிப் பார்க்க எதுவும் தடையாக இருக்கக்கூடாது.

நான் எப்போதும் பூமியில்தான் படுக்கிறேன். என் உடல் மண்ணைத் தொட்டுக் கொண்டு படுப்பதில் என் தாய் மண்ணின் மீது உறவும், பற்றும் வளர்கிறது. கட்டிலில், மெத்தைமீது படுப்பதால் காம உணர்வுதான் வரும். தரையில் படுப்பதால்தான் நான் 'செக்ஸ்' உணர்வை வென்றவனாக இருக்கிறேன்.

நீங்கள் மாடி வீட்டில் மாடிப்பகுதியில் வசிப்பவர்களா? தாய் மண்மீது படுக்க வாய்ப்பில்லாததால், உங்களுக்கு தேசப்பற்று உண்டு என்று சொன்னால் நான் அதை நம்பமாட்டேன்.!

நான் எனக்குத் தெரிந்தே நடக்கிறேன். தெரிந்தே வாழ்கிறேன். தெரிந்தே படிக்கிறேன். தெரிந்தே கவிதை எழுதுகிறேன்... அதே போல் தெரிந்துதான் சாகவும் போகிறேன்! நான் தண்ணீரில் விழுந்து மூழ்கிச் சாக விரும்புகிறேன். என் உடல் யாருக்கும் கிடைக்கக்கூடாது. என் சாவை நான் நிச்சயித்துவிட்டேன். நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். தண்ணீரில்தான் நான் சாவேன்!

ஏனென்றால், எனக்குச் சொந்தமான உடம்பை என் சாவுக்குப் பிறகு எவனும் சொந்தம் கொண்டாடி எனக்குப் பிடிக்காத எந்தச் சடங்குகளையும் செய்வதில் எனக்குச் சம்மதமில்லை!...."

-இவ்வாறெல்லாம் புரட்சிக் கருத்துக்களை உதிர்த்த புதுமைக்கவிஞர் யார் தெரியுமா? உவமைக் கவிஞர் சுரதாதான்!

வேலூரில் 'முப்பால் விழா'வில் உவமைப் பாவலர் சுரதாவுக்கு எடைக்கு எடை சர்க்கரை வழங்கப்பட்டது. "அரசியல்வாதிகளுக்கு மட்டுமே எடைக்கு எடை தருவது என்ற நிலையை மாற்றி, முதன் முறையாக-சரித்திரத்தில் இடம் பெறும் நிகழ்ச்சியாக ஓர் கவிஞனுக்கு இந்தச் சிறப்பைச் செய்திருக்கிறீர்கள்" என்று பெருமிதப்பட்டார்.

சர்க்கரை, குதிரைக் கொம்பாக உள்ள இக்காலத்தில் எடைக்கு எடை (67 கிலோ) கவிஞர் சுரதாவுக்கு சர்க்கரை அளித்தவர்கள். புலவர் நாராயணனை அமைப்பாளராகக் கொண்ட மாவட்ட இலக்கிய அணியினர்.

தகவல்: ஜே.வி. நாதன்
இதழ்: தாய் [6-6-1982]

# உலகத்தில் ஒருவர் சிவாஜி கணேசன்!

— கவிஞர் சுரதா

பாராட்டுவதைவிட ஆராய்வதே சிறந்தது. கற்காலம் முதல், இன்றைய சொற்காலம் வரையிலே, ஆராய வேண்டிய அநேக விஷயங்களை நம்நாடு நம்பிக்கொண்டே இருக்கிறது!

அந்த நம்பிக்கையின் விளைவாக, புகழுக்கும் பெருமைக்கும் உரிய பலரை, நம் நாடு பழித்தும் இழித்தும் பேசியிருக்கிறது. பூ இருக்கையில் புல்லையும், கனி இருக்கையில் காயையும் பறித்திருக்கிறது. பறித்துக் கொண்டும் வருகிறது. என்றாலும், சிற்சில சமயங்களில் சிறந்தது இதுதான்; சிறந்தவன் இவன்தான், என்பதைக் கண்டு கொண்டு- நல்ல தீர்ப்பும் வழங்கியிருக்கிறது; நல்லவர்களையும், அறிவில் வல்லவர்களையும் பாராட்டிக்கொண்டு வருகிறது.

படித்தவன் செல்லைப் பின்னாலே வைத்தும் பல்லியின் சொல்லை முன்னாலே வைத்தும், பஞ்சாங்க நெஞ்சத்தை வளர்த்து வரும் இந்நாடு, காலஞ்சென்ற நடிகர் பி.யு. சின்னப்பா அவர்களை முதலில் தயங்கியும், பிறகு தாராளமாகவும் பாராட்டியது போலவே, நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களையும் பாராட்டி வருகிறது.

இன்று இவரை, நம் ஔவையார் நாடு மட்டுமல்ல, அமெரிக்காவும் பாராட்டுகிறது. இதுவரையில் , எந்த ஒரு தமிழ் நடிகருக்கும் இவ்வளவு பெரும்புகழ் கிடைத்ததே கிடையாது.

பத்தாண்டுகளுக்கு முன் இவர் மண்ணுக்குள் மறைந்திருக்கும் வேரைப் போல இருந்தார். இன்றோ விதையைவிட்டு வெடித்து வெளிவந்து வளர்ந்து மலர்ந்திருக்கும் ஒரு வேங்கை மரம் போன்று காட்சி தருகிறார்.

திறமையின் கனத்தையும், விளம்பரத்தின் வீக்கத்தையும் சரிசமமாகப் பெற்றிருக்கும் இவர், நடிகர்களின் நாயகமாக விளங்குகிறார்.

சிந்துப் பாடல்களுக்கு, அண்ணாமலை ரெட்டியார் அவர்களால் புதியபெருமை ஏற்பட்டதுபோல், மங்கிக்கிடந்த தமிழ்ச்சொற்களுக்கு, மறைமலை அடிகளால் உயர்வும் ஒளிவளர்ச்சியும் ஏற்பட்டது போல், இவரால் நடிப்புக்கே நல்லதொரு புதுமை பிறந்திருக்கிறது.

வங்கக் கவிஞர் தாகூரின் தந்தை, விவேகானந்தரைப் பார்த்து "உலகு புகழ் உத்தமனாக விளங்குவாய்" என்று பாராட்டினார். அவர் வாக்கு பலித்தது.

சொற்பொழிவுச் சிங்கம் சோமசுந்தர நாயகர், பூண்டி அரங்கநாத முதலியாரை ஆசீர்வதித்தார். முதலியார் மூத்த புகழோடு விளங்கினார். அதுபோலவே பெரியார் இராமசாமி இவரைப் பாராட்டி இவருக்குச் சிவாஜி என்று பட்டங்கொடுத்தார். அன்று முதல் இவர் புகழ், எங்கும் எட்ட ஆரம்பித்தது. தமிழ்ப்பெரியாரின் தாய்ப்பால் வாக்கும் பலித்துவிட்டது.

கலைஞர் வரிசையில் இவர் முதல்வராகவும், கலைப்புத்தகத்தில், இவர் புதிய அத்தியாயமாகவும் விளங்குகிறார்.

இவரால், நம்நாடு புதிய முன்னேற்றம் பெற்று வருகிறது. நடிப்பை இவர் வளர்க்கிறார். நாடு இவரை வளர்க்கிறது! வாழ்க சிவாஜிகணேசன்!

## மாணிக்க வரிகள்

உவமைக் கவிஞர் திரு. சுரதா அவர்களிடம், தாங்கள் எழுதிய எண்ணற்ற கவிதைகளுள் உங்களுக்கு மிகவும் பிடித்ததாகவோ, மற்றவர்கள் பாராட்டியதாகவோ அமைந்த மாணிக்க வரிகள் சிலவற்றைக் கூறுங்கள் என்று கேட்ட போது, கீழே வரும் வரிகளை சுட்டிக் காட்டினார்.

எனக்கு பிடித்தமான வரிகள்.

மூட நம்பிக்கையை முறியடிப்பதற்காக நான் எழுதிய வரிகள் இவை. (துறைமுகம் - கவிதைத் தொகுப்பு ).

"திருவருளால் செத்தாரை எழுப்பிடலாம் என்றால்
செத்தாரை எழுப்பியவர் ஏன் செத்துப் போனார்?"

தமிழனே தமிழனை புறக்கணிக்கிறான் என்பதை கட்டிக் காட்ட எழுதிய வரிகள் இவை:

'வங்கத்து ஞானிக்குச் சிலைகள் இங்கே!
வடலூரார் போன்றோர்க்குச் சிலைகள் எங்கே?'

இன்ப இரவு எப்படி இருக்கும் என்பதை, காதலன் நினைத்துப் பார்க்கும் கற்பனை வரிகள் இவை:

"இருட்டுக்கு சேலை தந்தாள்
இளமைக்கு வேலை தந்தாள்!"

வெற்றி பெற விடாமுயற்சி தேவை என்பதை உணர்த்தும் வரிகள் இவை:

"அற்பமாய் முயன்றார் யாரும்
அறிவினால் பழுத்தாரில்லை
கற்பூரத் தீயி னாலே
கற்சூலை வெந்தா போகும்!"

துறவறம்தான் சிறந்தது என்று சொல்வோர்க்கு இல்லறம் தான் வாழ்க்கை என்பதை உணர்த்தும் வரிகள்:

"முத்தி நெறி அறியாதார் மூர்க்கர் என்றால்
முத்த நெறி அறியாதார் வீண ரன்றே!"

சினிமாவுக்காக எழுதப்பட்டாலும் இலக்கியவாதிகளாலும்; அறிவாளிகளாலும் இலக்கிய நயத்துக்காகப் பாராட்டப்பட்டவை:

"விண்ணுக்கு மேலாடை வெயில் விழுங்கும் மேகம்
வீணைக்கு மேலாடை நரம்புகளின் கூட்டம்
பலருக்கு மேலாடை கொதிக்கின்ற கோபம்
பத்துக்கு மேலாடை பதினொன்றே ஆகும்!

('தேன்மழை' என்ற கவிதைத் தொகுதியில் 'மேலாடை' என்ற தலைப்பின் கீழ்வரும் வரிகள் இவை. இதைப் படித்துவிட்டு "நகைச்சுவை நடிகர் நாகேஷ் இதுவரைக்கும் பஞ்சு நூலை மேலாடையாக்கியவர்களைத்தான் பார்த்திருக்கிறோம். ஆனால் கணித எண்களை மேலாடையாக்கியது யாரும் இல்லை. நீங்கள் ஒரு கணித மேதை கவிஞர்" என்று என்னை பாராட்டினர்.

"செங்கதிரச் சுடர்போலே
என்கரம் நீண்டிருந்தால்– அந்த
சிங்காரச் சிலைதனை இங்கிருந்தே தொடுவேன்!"

(1958ல் வெளிவந்த 'திருமணம்' என்ற திரைப்படத்தில் 'எண்ணமெல்லாம் ஓரிடத்தையே நாடுதே, கண்ணிரெண்டும் ஓர் முகத்தையே தேடுதே" என்று தொடங்கும் பாடலில் வரும் வரிகள் இவை. இதைப் படித்துவிட்டு என்னை சந்தித்த பா.ஜீவானந்தம் (பொதுவுடைமைக் கட்சித் தலைவர்) அவர்கள், "விஞ்ஞானத்தை வெளிப்படுத்தும் அற்புத வரிகள் இவை" என்று பாராட்டினார்)

'சுடர்-மின்னல் கண்டு தாழை
மலர்வது போலே
உனைக்கண்டு உள்ளமே மகிழ்ந்தேனே!'

'நாடோடி மன்னன்' என்ற திரைப்படத்தில் வரும் "கண்ணில் வந்து மின்னல் போல் காணுதே" என்று தொடங்கும் பாடலின் வரிகள் இவை. "சூரியனைக் கண்டு தாமரை மலர்வதும், நிலவைக் கண்டு அல்லி மலர்வதும் நமக்குத் தெரிந்ததுதான். ஆனால் மின்னலைக் கண்டு தாழம்பூ மலரும் என்பதை நீங்கள் சொல்லித் தான் நான் முதன் முறையாக தெரிந்து கொள்கிறேன் என்று திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் என்னைப் பாராட்டி தன் படத்தில் அப்பாடல் இடம்பெற்றதை எண்ணி பெரும்மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

சந்திப்பு: ராஜசேகரன் இதழ்: வாசுகி டிசம்பர்[16-12-1992]

## என்னைப்பற்றிய செய்திகளை நானே தொகுக்கிறேன்

என்னைப் பற்றி பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை நானே தொகுத்து நூலாக வெளியிடுவேன் என்று உவமைக் கவிஞர் சுரதா தெரிவித்தார். உவமைக் கவிஞர் சுரதாவை கே.கே.நகரில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம். அப்போது பெரிய புத்தகக்கட்டு ஒன்றை தூக்கி வந்து வைத்தார்.

அது என்ன என்று கேட்டதற்கு இது நான் இலக்கியப்பணியில் ஈடுபட்ட நாள் முதல் இன்று வரை பத்திரிகைகளில் என்னைப்பற்றி வெளிவந்த செய்திகளை சேகரித்து வைத்துள்ளேன். இதையெல்லாம் தொகுத்து விரைவில் ஒருநூலாகவே வெளியிடுவேன் என்று தெரிவித்தார்.

கவிஞர் சுரதா மேலும் கூறியதாவது:-

என்னை பற்றி வெளிவந்த செய்திகளை நானே தொகுத்து வெளியிடுகிறேன். ஏட்டில் வந்த செய்திகளையெல்லாம் நாட்டுக்கு நானே தருகிறேன். இது ஒரு நல்ல முறை. கலை மற்றும் அரசியல் சமூகப்பணியில் உள்ள ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி வெளிவந்த செய்திகளை தானே தொகுத்து வெளியிட்டால் ஒருகுறிப்பிட்ட காலத்தின் சரித்திரம் புரியும்.

என்னைப் பற்றிய செய்திகளை தொகுக்கும்போது என்னுடன் பழகிய பேசிய நண்பர்கள் பல ஆயிரம் பேர்களின் விளக்கங்களை அதிகம் கொடுக்க முடியும். இதனால் என்னைப் பற்றியும் மற்றவர்களை பற்றியும் அதில் நான் அழகுபட எடுத்துச் சொல்லமுடியும்.

குறிப்பிட்ட காலகட்டத்தில் இலக்கியம் மற்றும் அதில் வலம் வந்தவர்கள் பற்றி எடுத்துகூற முடியும். பெரியார் தலைமையில் 4-3-44ல் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய புரட்சிக்கவி என்ற நாடகத்தில் கவிஞர் சுரதா நடித்துள்ளார். இந்த செய்தி அன்று குடியரசு இதழில் வந்துள்ளது.

இதே போன்று 67-ஆம் ஆண்டு தினத்தந்தி பொங்கல் மலரில் கவிஞர் சுரதாவின் கவிதை வருவதாக விளம்பரம் வந்துள்ளது. இப்படிப்பட்ட விளம்பரத்தைகூட விடாமல் கவிஞர் சுரதா சேகரித்து வைத்துள்ளார்.

கவிஞர் சுரதா 1941ல் பிரசண்ட விகடன் என்ற மாத இதழில் முதல் சிறுகதை எழுதியுள்ளார். 1944-ம் ஆண்டு இளந்தமிழன் என்ற இதழில் அவரது முதல் கவிதை வெளி வந்துள்ளது. தேன் மழை என்ற அவரது கவிதை நூலுக்கு 1968ல் தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசளித்துள்ளது.

1978ம் ஆண்டு பாவேந்தர் நினைவுப்பரிசும் பெற்றுள்ளார். இலக்கியத்தில் சிறந்தவர்களுக்கு 1967ம் ஆண்டு முதல் கலைமாமணி பட்டம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பட்டம் 1967ல் உடுமலை நாராயண கவிக்கும் 69-ல் கம்பதாசனுக்கும் 69-ல் மருதகாசிக்கும், 70-ல் கவிஞர் கா.மு.ஷெரீப்புக்கும், 71-ல் கண்ணதாசனுக்கும், 72-ல் கவிஞர் வாலிக்கும், 73-ல் கவிஞர் சுரதாவுக்கும் கலைமாமணி பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் சுரதாவுக்கு 7வதாக கலைமாமணி பட்டம் கிடைத்துள்ளது தன்னை பற்றி சுரதா தொகுக்கும் நூலில் இந்த தகவல்கள் எல்லாம் இருக்கும்.

இதழ்: குமரிமுரசு [6-12-1993]

# என்கவிதை மீது கொண்ட மதிப்பு!

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்குப் பிறகு, தமிழ் கவிதை உலகில் தனித்துவம் மிகுந்தவராகத் திகழும் உவமைக் கவிஞர் சுரதா, சமீபகாலமாக தன் அதிரடிப் பேச்சுக்களால் சர்ச்சைகளை எழுப்பி வருகிறார். இந்த அதிரடிக் கவிஞரை வெடிகுண்டுக் கேள்விகளோடு சந்தித்தோம்.

**கேள்வி:** "மதவெறியை அடக்க, அடிக்கு அடி உதைக்கு உதை கொடுத்தால்தான் சரிப்படும்" என நீங்கள் பேசியது வன்முறையாகாதா?

**பதில்:** வன்முறைதான். வன்முறையை அடக்க வன்முறையைத் தவிர வேறு வழியில்லை. 'காடு கொன்று நாடாக்கினான்' என இலக்கியம் பேசுவதில், காடு கொன்றான் என்பது வன்முறைதான். காட்டை நாடாக்குவதற்காகச் செய்வதால் அந்த வன்முறை வரவேற்கத் தக்கது. மதம் பிடித்த மதங்களின் அட்டூழியத்தை அடி உதை கொடுத்துத்தான் அடக்க வேண்டும்.

**கேள்வி:** சமத்துவத்தைப் போதிக்க வேண்டிய கவிஞர்கள், உங்களைப் போல் அடிதடிக்குரல் எழுப்புவது சரிதானா?

**பதில்:** கவிஞர்களும் கவிதைகளும் சமத்துவத்தைத்தான் போதிக்க வேண்டும் என்பதே தவறான வாதம். ரஷ்யாவில் கொடுங்கோலன் ஜார்ஜ் ஆட்சிக்காலத்தில் அகிம்சையையா போதித்தன. சமூகத்தின் நலன் காக்கத் தேவையான நேரத்தில் போர்க் குரல் எழுப்புகிறவன்தான் உண்மையான கவிஞன்.

கேள்வி: நீங்கள் அடிக்கடி எதையாவது பேசி சர்ச்சையை எழுப்பிக் கொண்டிருப்பது ஏன்?

பதில்: நான் எப்போதும் சிந்தனைகளை எடுத்துச் சொல்கிறவன். உதட்டிற்கும் உள்ளத்திற்கும் திரையின்றிப் பேசுகிறவன். இது சில நேரங்களில் சர்ச்சையாக்கப்பட்டு விடுகிறது. அருகே இருக்கும் நாணல்கள் சலசலப்பதற்காக ஆறு தன் நடையை நிறுத்திக் கொள்வதில்லை.

கேள்வி: முரசொலி அறக்கட்டளை விழாவில் நீங்கள் தேசியத் தலைவர்களைப்பற்றி கிண்டல் தொனியில் பேசியது தவறுதானே? குறிப்பாக மூப்பனாரை...

பதில்: ஆற்று வெள்ளத்தில் அழுக்குக் குப்பைகளும் வருவது மாதிரி எனது மேடைப் பேச்சுகளில் ஒரு சில ஒருமைச் சொற்களும் இயல்பாக வந்து விடுகின்றன. எனது இயல்பை அறிந்தவர்கள் கோபப்படுவதில்லை.

நீங்கள் சொன்ன மூப்பனார் மீது எனக்கு அன்பும் மரியாதையும் அதிகம் உண்டு. அவரது குடும்பமே தமிழுக்கும் இசைக்கும் தொண்டாற்றிய குடும்பம். மூப்பனாரின் தாத்தா துரைசாமி மூப்பனார் 'குரங்காடுதுறை' எனப்படும் இன்றைய கபித்தலத்தில் ஒரு காலத்தில் கொடிகட்டிப்பறந்தவர். இவர் 1888லேயே கம்பராமாயணத்தைச் சிறப்பாக பதிப்பித்தவர் 'அனுமந்ததேசம்' என்ற உன்னதமான உரைநடை நூலையும் தந்தவர். எனவே மூப்பனாரின் குடும்பத்தையே ரொம்பவும் மதிக்கிறவன் நான். எனவே நான் எப்படிப் பேசுகிறேன் என்பதைவிட எதைப்பேசுகிறேன் என்று பார்ப்பவர்களுக்கு வருத்தம் வருவதில்லை.

கேள்வி: சிக்கலில் பிறந்ததால் உங்களிடம் சிக்கல் என்பது போல் முதல்வர் கலைஞர் உங்களை விமர்சித்திருக்கிறாரே?

பதில்: சிக்கல் என்ற ஊரின் பழம்பெயர் பெரும்சிக்கல். சிக்கில் என்றால் சிக்கு இல்லாத இடம் என்றுதான் பொருள். சங்க காலத்தில் இவ்வூர் தலைநகரமாக இருந்ததாகவும் இலக்கியக் குறிப்புகள் உண்டு.

இருப்பினும் கலைஞர் சொல்வதுபோல் நான் சிக்கலில் பிறந்தவனில்லை. நான் பிறந்தது அதற்குப் பக்கத்திலிருக்கும் பழையனூரில், ஊர்பேர்தான் பழையனூரே தவிர அங்கு பிறந்த நான் புதுமை எண்ணங்களை உடையவன்.

கேள்வி: கடந்த ஆட்சிக்காலத்தில் அ.தி.மு.க.வில் சேர்ந்த நீங்கள் இப்போது நான் எந்தக் கட்சியிலும் இல்லை என்கிறீர்களே?

பதில்: அ.தி.மு.க.வில் அப்போது சேர்ந்தது நட்புக்காக. எனது நெருங்கிய நண்பர் எஸ்.டி.எஸ்.சின் வற்புறுத்தலுக்காக, சரி... அரசியலிலும் இருந்துதான் பார்ப்போமே என்று உறுப்பினர் கார்டில் கையெழுத்தும் போட்டேன். அரசியல் என் சுதந்திர இயல்புக்கு ஒத்துவராததால் மீண்டும் என்னை சுதந்திரமாக்கிக் கொண்டேன்.

கேள்வி: முரசொலி அறக்கட்டளைப் பரிசான லட்ச ரூபாயைப் பெற்ற நீங்கள்... தி.மு.க.வில் சேருவீர்களா?

பதில்: அரசியல் என் இயல்புக்கு ஒத்துவராது. கலைஞர் தொலைபேசியில் அழைத்து உங்களுக்கு பரிசு தரப்போகிறோம் என்ற போதே வேறு யாருக்காவது கொடுக்கலாமே என்றுதான் அவரிடம் சொன்னேன்.

என்மீது கொண்ட பற்றால், என் கவிதை மீது கொண்ட மதிப்பால், இந்தப் பரிசை எனக்குத் தந்திருக்கிறார். அவரது அன்பு என்னை நெகிழ வைத்திருக்கிறது.

கேள்வி: லட்ச ரூபாய் பரிசு தந்ததற்காகத்தான் கலைஞருக்கு நோபல்பரிசு தரவேண்டும் என பேசினீர்களா?

பதில்: இல்லை. உண்மையிலேயே கலைஞர் இலக்கிய மேதை. மிகமிகக்கூர்மையானவர். கூட்டுத்திறமை உள்ளவர்.

ஒரு முறை மதுரையில் கலைஞரின் ஆசிரியரும் தமிழறிஞருமான இலக்குவனார் தமிழன் ஒருவன் நோபல் பரிசு பெற வேண்டும் என தன் ஆவலை வெளியிட்டார். அந்தப் பரிசுக்குத் தகுதியான ஆள் யார் என்ன என் மனம் தேடியதில் கலைஞரே அதற்குப் பொருத்தமானவர் என்ற

முடிவுக்கு வந்தேன். அதைத்தான் மேடையில் சொன்னேன் மற்றபடி பணத்திற்காக பஜனை பாடுவது என் வழக்கமல்ல

பேட்டி: தமிழ்நாடன்,
இதழ்: நக்கீரன் [23-2-99]



# தமிழாற்றல் மட்டும் போதாது; 'மண்' பற்றும் வேண்டும்

அரக்கோணத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருந்தார். உவமைக் கவிஞர். தள்ளாடும் தேகம், தள்ளாடாத கருத்தாழம். அவரை தினமலருக்காக பேட்டிகண்டோம்.

அப்போது துணைவியார் சுலோசனா அம்மையாரின் உதவியுடன் வந்து சோபாவில் அமர்ந்தார். தினமலர் என்று சொன்னவுடன் சுரதா பழைய நினைவுகளில் மூழ்கினார். ஒரு முறை தினமலர் நிறுவனர் அவர்கள் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களிடம் தினசரி பத்திரிகை ஒன்று ஆரம்பிக்க இருப்பதாகவும், அதற்குபெயர் ஒன்றை கூறுமாறு கோரினாராம். அதற்கு கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை தினமலர் என்று பெயரிட்டாராம்.

அப்போது தாமரை தினமும் மலர்ந்து மணம் வீசுவதுபோல் பத்திரிகையும் தினந்தோறும் மணம் வீச வேண்டும் என்று கூறியதாக என்னிடம் கவிஞர் தேசியவிநாயகம் பிள்ளை அவர்கள் கூறினார்.

பின்னர் நிருபரின் கேள்விகளை பொறுமையாக கேட்டு நிதானமாக பதிலளித்தார்.

**கேள்வி:** உங்கள் முதல் படம் பற்றிய அனுபவம்?

**பதில்:** என் தங்கைதான், எனது முதல் படம் ஆடும் ஊஞ்சலைப் போல அலை ஆடுதே என்ற பாடலை 150 ரூபாய் பெற்றுக் கொண்டு எழுதிகொடுத்தேன். அந்த காலத்தில் புண்ணியம் செய்தவர்கள் தான் பாடல்களை எழுத வேண்டும் என்ற அசைக்க முடியாத விதி இருந்தது. பாடல் எழுதி கொடுக்கும்போது பாடலை வாங்கு வோர்கள் பாடலை கண்ணில் ஒற்றிக்கொண்டுதான்

வாங்குவார்கள். ஆனால் தற்போது அந்த நிலை இல்லை. தமிழ்நாட்டில் முதன்முதலாக வெப்புற படப்பிடிப்பு நடந்தது இந்தபடத்திற்காகத்தான்.

கேள்வி: பாடல் எழுதுவதுபற்றி....?

பதில்: எங்கள் காலத்தில் 'ட்யூனுக்கு' பாடல் எழுதுவோம். அது மிகவும் கடினமான பணி. அந்த 'ட்யூனுக்குள்' பாடலில் படத்தின் கருத்தை கூறியாக வேண்டும். ஆனால் இப்போது இருக்கும் எந்த ஒரு கவிஞனும் அது போல எழுத முடியாது. அதற்கான தகுதியும் அவர்களுக்கு இல்லை.

கேள்வி: தற்போதைய பாடல் குறித்து?

பதில்: தற்போது எல்லாமே வியாபாரம் ஆகிவிட்டது. மக்கள் விரும்புகிறதை பாடல் ஆசிரியர் எழுதுகிறான். மக்களின் செல்வாக்கை பெறவேண்டும் என்பதற்காக ஆங்கில கலப்போடு சினிமாபாடல் எழுதுவது ஒன்றும் தவறில்லை.

கேள்வி: தங்களுக்கு பிடித்த கவிஞர்

பதில்: கம்பதாசன். காரணம் மிக விரைவில் பாட்டெழுதும் திறமை உள்ளவர். மற்றொருவர் நாராயணகவி.

தமிழர்களுக்கு ஞானபீட விருது, சாகித்திய அகாடமி விருது; கிடைக்காதது குறித்து...

டில்லியில இருக்கிறவனுக்கு இனப்பற்று, மொழிப்பற்று அதிகம். அதனால சுத்தி சுத்தி அவன் மொழியில வர படைப்புக்கே விருதுதறான். நம்ப ஏன் அவனாண்ட தொங்கணும்.

ஒரு வீட்டுல பொண்ணு கேக்கறோம். ஆனா அவங்க தரமறுத்தா வேறு இடத்துல பொண்ண பாத்தாவது கல்யாணம் செற்கிறோம் இல்லையா. அதுபோல அவன் விருது கொடுக்கல அப்படினா, நாம தனியா ஒரு விருத ஏற்படுத்தி உலக அளவுல இலக்கிய சாதனைபடைத்தவர் களுக்கு நாம் தரவேண்டும் அப்படி செஞ்சா எல்லா இலக்கியவாதிகளும் நம் பக்கம் திரும்புவாங்க.

கேள்வி: கவிதையைப் பற்றி?

பதில்: கவிதை எழுதும் சாமர்த்தியம் இப்போது யாரிடமும் இல்லை என்று நான் அடித்து கூறுவேன். நாட்டு மக்களிடம் பொறுப்பு இல்லாத காரணத்தால், எதையோ எழுதறான் அதுவும் விக்கிறது. மக்களுக்கு புரியும்படி கவிதை எழுத வேண்டும். புதுக்கவிதையில் உரைவீச்சி இருக்கிறது. அதற்காக மக்களுக்கு பயன்படாதவற்றை எழுதுவதில் எனக்கு உடன்பாடில்லை.

கேள்வி: பாடல் எழுதும் தகுதி குறித்து?

பதில்: எங்கள் காலத்தில் மதுரை தமிழ் சங்கம், கரந்தை தமிழ் சங்கம் உட்பட தமிழ் சங்கங்களை சேர்ந்தவர்கள்தான் பாடல் எழுதுவார்கள். அவர்களுக்கு அதற்கான தகுதி இருக்கிறது என்று மக்களும் கருதினார்கள். இப்போது எவன் எவனோ பாட்டெழுதுறான். பாட்டில் பொருள் இல்லை. மொழித்திறன் இல்லை. தற்போதைய பாடல் ஆசிரியர்கள் 'டெய்லி நியூஸ்பேப்பர்' போல எதையாவது எழுதிக்கொண்டே இருக்கிறாங்க. காரணம் அப்போது தான் மக்களின் பார்வையில் பட்டுகொண்டே இருக்க முடியும் என்பது அவர்களுடைய நினைப்பு. அதனால் தற்போது இந்த துறையில் தகுதி உள்ளவர்கள் இல்லை என்றே கூறலாம்.

அப்பன் பெயர், சுப்பன் பெயர், ஜாதி பெயரை வைத்துக் கொண்ட கவிஞர்கள் தான் இப்போது ஏராளம். அவர்களிடம் தகுதி என்பது இல்லை.

கேள்வி: கருணாநிதி பற்றி?

பதில்: முரசொலியில் தொடர்ந்து 23 வாரங்கள் எழுதினேன். அதற்கு எனக்கு வாய்ப்பளித்தவர் கருணாநிதிதான்.

கேள்வி: பெரியார் பற்றி...?

பதில்: ஒரு முறை பெரியாரிடம் நீங்கள் அடிக்கடி நாத்தீகம் பற்றி பேசுகிறீர்களே, ஆத்திகம் பற்றி பேசினாலோ, கவிதை எழுதினாலோ, அவர்கள் சிறந்ததை பாராட்டி பரிசு வழங்குகிறார்கள். ஆனல் நாத்திகம் பற்றி கவிதை

எழுதுவோருக்கு ரூ.1 லட்சம் பரிசு என்று வழங்கலாமே என்று கேட்டேன். அதற்கு பெரியார் சிரித்துக்கொண்டே மழுப்பிவிட்டார்.

கேள்வி: கடைசியாக தற்போதைய கவிஞர்களுக்கு தங்களின் அறிவுரை?

பதில்: தமிழாற்றல் இருந்தால் மட்டும் போதாது. மண் பற்று இருக்க வேண்டும். அப்போதுதான் கவிஞர்கள் நிலைத்து நிற்க முடியும். பெரிய புராணம் பாடல்கள், பின்னர் பட்டினத்தார் பாடல்கள், ராமலிங்க அடிகளார் பாடல்கள், பாரதி, பாரதிதாசன், என்று ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பாடல்கள் எழுதிய கவிஞர்கள் அந்தந்த காலக்கட்டத்தில் புகழ் பெற்றனர்.

அந்த கவிஞர்களைப்பற்றி பற்றி இன்றளவும் பேசுகிறோம் என்றால், அதில் மண் வாசனை இருந்தது கருத்தாழம் இருந்தது.

இதழ்: தினமலர் [6-4-2002]

## அறிவாளிகளை அரசு மதிக்கவேண்டும்

கவிதை உலகிலும், திரைப்பட உலகிலும் பொதுவாக இலக்கிய உலகில் இருப்பவர்களின் சிந்தனையில் எல்லாம் நிலைத்து வாழும் பெயர்.

இலக்கிய உலகில் பல புதுமைகளையும் புரட்சியினையும் செய்தவர் கவிஞர் சுரதா.

முதன் முதலில் கவிதைக்காகவே 'காவியம்' என்ற பத்திரிகை நடத்தியவர் மிக இளம் வயதிலேயே 'மங்கையர்க்கரசி' படத்திற்கு கதை- வசனம் (பாடல்கள்) எழுதியவர். அந்த படத்தின் வசனங்களை முதன் முதலாக புத்தகமாக வெளியிட்டவர். உலகத் தமிழ்க் கவிஞர் பேரவையைத் தொடங்கியவர், கப்பலிலும், ரயில் வண்டியிலும், படகிலும் விமானத்திலும், வீட்டு மாடியிலும் மாட்டு வண்டியிலும் கவியரங்கம் நடத்தியவர்.

பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்த போது தமிழக அரசு பரிசுகொடுக்கத் தீர்மானித்தபோது முதல் பரிசு பெற்ற கவிதை நூல் கவிஞரின் தேன்மழையே! தான் கலந்து கொள்ளும் விழாக்களின் போது பார்வையாளர்களுக்குத் தலைப்புத் தந்து அப்போது சிறப்பான தலைப்பு சொல்பவர்களுக்கு பரிசு வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியவரும் இவரே! திரைப்படப் பாடலாசிரியர்களைப் பற்றிய நூலை முதன் முதலில் தொகுத்தவர்.

சென்னை, கே.கே. நகர், டாக்டர் இலட்சுமணசாமி தெருவிலுள்ள உவமைக் கவிஞர் சுரதாவை தஞ்சை எக்ஸ்பிரஸிற்காக நாம் பேட்டி எடுக்கச் சென்றபோது வழக்கம்போல் புத்தகக் குவியலில் இருந்து வெளிப்பட்டு, "வாங்க, உட்காருங்க..." என்ற படியே கவிஞரும் சோபாவில் அமர்ந்தார்.

எம்மோடு வந்திருந்த தஞ்சை எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் ஆசிரியர் கி. முத்துகுமாரன் என் அருகே அமர்ந்து இருக்க என் முதல் கேள்வியை கவிஞரிடம் கேட்டேன்.

பாகு: தங்களிடம் நிறைய நூல்கள் உண்டு என்பதை நான் அறிவேன். அத்தனை நூல்களும் எந்த வகையான நூல்கள்?

கவிஞர்: கவிதை முதல் கல்வெட்டு நூல் வரை இருக்கிறது. மொத்தம் 10-ஆயிரம் நூல்களுக்குமேல் இருக்கும்.

பாகு: இப்படிப் புத்தகங்களைத் தொகுக்கும் பழக்கம் எப்படி தங்களுக்கு வந்தது?

கவிஞர்: நாலடியார் நூலில் புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள் தெரியாது உய்த்து அகத்துமே வைப்பர் என்ற வரி வரும்.

அதாவது சங்க காலத்தில் படித்தவர்கள் ஓலைச்சுவடிகளைத் தொகுத்து படித்து வந்தார்கள்.

படிக்காதவர்கள் கூட ஓலைச்சுவடிகளை சேகரித்து பிறர் படிக்கக் கேட்டறிந்தார்கள். பலருக்கும் கொடுத்து உதவி மகிழ்ந்தார்கள்.

ஆனால், இன்று படித்தவர்கள் கூட, புத்தகங்களை சேகரிக்கும் பழக்கத்தை கைக்கொள்வது இல்லை. பின், படிக்காதவர்களைப் பற்றி சொல்வதற்கு என்ன இருக்கிறது.

பாகு: ஒரு காலத்தில் புகழ்பெற்ற திரைப்படப்பாடல்களை எழுதிய நீங்கள் ஏன் இப்போது பாடல் எழுதுவது இல்லை?

கவிஞர்: ஒரு திருத்தம்... என்னை வந்து பாடல் எழுத யார் அழைத்தார்கள்? நான் வரமாட்டேன் என்றேன்.

இங்கே தனி மனித வழிபாடு அதிகமாகிவிட்டது. செல்வாக்கு உள்ள கோயில்களைத்தானே அடியார்களும் ஆழ்வார்களும் பாடி இருக்கிறார்கள் இதுதான் உலகம்.

பாகு: அமுதும் தேனும் எதற்கு? விண்ணுக்கு மேலாடை, ஆடி அடங்கும் வாழ்க்கையடா.. இப்படி இன்றும் நிலைத்து நிற்கும் பாடல்களை எழுதிய உங்களை இப்போதும் பாடல் எழுத அழைத்தால் எழுதுவீர்களா?

கவிஞர்: நிச்சயமாக எழுதித் தருவேன். ஏன் இப்போது வரும் கொச்சைப் பாடல்களை எல்லாம் ஓரம் கட்டிவிட்டு எல்லோரும் மெச்சும் படியான பாடல்களை என்னால் எழுதித்தர முடியும்!

வடநாட்டிலுள்ள வயது முதிர்ந்த கவிஞர்களின் அனுபவங்களைக் கருதி அவர்களிடம் திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் சென்று எந்தப் பாடல்கள் எழுதுவதில் சிறந்தவரோ அந்தப் பாடலை எழுதி அந்த இலக்கியவாதியை சிறப்பாக்குகிறார்கள். இங்கே மாங்கொட்டை ஆட்கள்தானே இருக்கிறார்கள்.

பாகு: ஒரு கவிஞன் உயிரோடு இருக்கும்போது அவனிடம் உள்ள அனுபவங்களையும் பெறவேண்டும் என்கிறீர்களா?

கவிஞர்: ஆமாம், செத்த பிறகு சிலை வைப்பதைவிட, அந்தக் கலைஞன் பசியோடு இருக்கும்போது உதவுவதுதானே முறை.

ஒரு நாட்டில் இலக்கிய வளம் பெருக வேண்டுமென்றால் அந்த நாட்டில் உள்ள அறிவாளிகளை சிந்தனை வாதிகளை அறிவியல் மேதைகளை போற்றி பாதுகாக்க வேண்டும். அப்போது தான் இந்த நாடு முன்னேறும்.

அப்போதுதான் புதுப்புது சிந்தனைகள் பூக்கும், அறிவியல் முன்னேற்றம் ஆழப்படும். இந்த நாடும் வளப்படும்.

பாகு: தஞ்சை எக்ஸ்பிரசைப் பற்றி தங்கள் வாழ்த்துச் செய்தி என்ன?

கவிஞர்: நான் பிறந்த தஞ்சை மாவட்டத்திலிருந்து இந்த பத்திரிகை வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த மண்ணில்தான் உலகமே வியக்கும் சரபோஜி மன்னன்

பாதுகாத்து சேகரித்து வைத்துள்ள இலக்கிய கருவூலங்கள், ஓலைச்சுவடிகள் இருக்கின்றன.

தஞ்சை, நெற்களஞ்சியம் மட்டுமல்ல, சொற்களஞ்சியம் கூட. அந்த சொற்களஞ்சியத்தில் இருந்து வரும் இந்த நற்களஞ்சியம் நாடு போற்ற உலகம் போற்ற வரவேண்டும், வரும் என்று வாழ்த்துகிறேன்.

பாகு: நன்றி ஐயா!

(கவிஞர் வீட்டில் கொடுத்த காபியை குடித்துவிட்டு இருவரும் வணக்கம் கூறி விடைபெற்றோம்.)

இதழ்: தஞ்சை எக்ஸ்பிரஸ்[1-2-2002]

## சுரதா சொன்னவை!

நான் பாரதி, பாரதிதாசனைவிட உயர்ந்தவன் தான்! தன்னடக்கம் என்று கூறி, என் திறமையை நான் தாழ்த்திக் கொள்ள விரும்பவில்லை.

ஒவ்வொருவனுக்கும் பிறந்த ஊர், பிறந்த மண், பிறந்த மாவட்டப் பற்றுதல் வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் யார் எவர்? தகவல் கலைக் களஞ்சியத்தில் சேகரிக்கப்படல் வேண்டும். அதில் அம்மாவட்டப் பெருமைகளைப் பற்றிய குறிப்புகள் நிறைய இடம்பெறல் வேண்டும்.

இந்த அறுபத்தேழு வயதிலும் நான் ஆரோக்கியமாக திடகாத்திரமாக இருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம். எனது தூய்மையான வாழ்வுதான். இந்த வகையில், பகுத்தறிவுக் கொள்கையில் இருக்கிற எந்தத் தலைவனும் எனக்கு நிகரில்லை. நான் மோதிரம்கூட அணிவதில்லை.

புரட்சிக் கவிஞர் ஏழு எட்டுத் தலைப்புகளை என்னிடம் கொடுத்து, "இந்தக் காவியத்திற்கு பொருத்தமான தலைப்பைத் தேர்ந்தெடு," என்று கூறினார். அப்படி நான் தேர்ந்தெடுத்த தலைப்பு தான் 'குடும்ப விளக்கு!'

நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோது ஒரு விருந்தில் எனக்கு மூன்று அப்பங்களே பரிமாறப்பட்டிருந்தன. நான் விருந்தளித்தவரிடம். "அதிகம் தின்று உடலைப் பெருக்க வைப்பது தேவையல்ல. அது அறிவைக் குறைத்துவிடும். நான் அளவோடு உண்பவன்." என்றேன். அதற்கு அவர், "நாங்கள் மூன்று அப்பங்களுக்குமேல் பரிமாறுவது இல்லை," என்றாரே பார்க்கலாம்.

தொழுவூர் வேலாயுத முதலியார் மகன் என்னிடம் கூறிய ஒரு செய்தி.

வேலாயுத முதலியாரிடம் விபூதி குங்குமம் வந்து வாங்கிச்செல்லும் ஒரு பெண் ஒரு முறை வந்தபோது, முகத்தில் திலகமின்றி, கூந்தலில் மலரின்றி, கழுத்தில் தாலியுமின்றி, இடுப்பில் ஒருகைக்குழந்தையுடன் வந்தாளாம்.

"ஏனம்மா, குங்குமம், தாலி, பூவின்றி வந்தாய்?" என்று கேட்க, 'என் கணவர் இறந்துவிட்டார்', எனச் சொன்னாளாம்.

"கணவன் இறந்துவிட்டார் என்தற்காக, அவன் போட்ட தாலியைக் கழற்றி விட்டாய், குங்குமத்தை எடுத்துவிட்டாய். அவன் தந்த குழந்தை இடுப்பில் இருக்கிறதே, 'அதையுமல்லவா வீசிவிட வேண்டும்!" என்றாராம் முதலியார்.

குங்குமம், மலர் இவைகளை வைக்கக்கூடாதென்று சொன்ன காரணம், கணவன் இறந்த பின்னர் ஒழுக்கமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக அன்றி அது சடங்கும் அல்ல, சம்பிரதாயமும் அல்ல.

நீடாமங்கலத்தில் பாவலர் மன்றத் தொடக்க விழாவில் கவிஞர் சுரதா ஆற்றிய உரையிலிருந்து சில கருத்துக்கள்.

தெகுப்பு: பாவலர் மன்னை இளமதி காந்தன்
இதழ்: குமுதம் [8-10-1984]

# புதுக்கவிதைக்கே நான்தான் மூலகாரணம்

**வீரபாண்டியன்** : கவிதை எழுதவேண்டுமென்னும் ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது?

**சுரதா** : பள்ளிக்கூடத்திலே இறைவணக்கம் பாடியதைக் கேட்டு, இன்னொருவர் பாட்டைப் பாடிக் கொண்டிருப்பதைவிட நாமே எழுதினால் என்ன என்னும் கேள்விதான் என்னைக் கவிதை எழுதத் தூண்டியது. அரசர் மடம் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதுதான் எனது முதல் கவிதை பிறந்தது.

**வீரபாண்டியன்** : உங்களுக்கு ஞானகுரு, ஆசான்... அப்படி என்று யாரையாவது வரித்துக் கொண்டிருக் கிறீர்களா?

**சுரதா** : நிரந்தரமாக யாரையும் குரு, தலைவன் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

**வீரபாண்டியன்** : கவிதைக்கு வடிவம் அவசியம் என்று நினைக்கிறீர்களா? புதுக்கவிதைச் சிந்தனைகளை மரபிலே கொடுக்கலாமே என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்களே?

**சுரதா** : முறுக்கு பார்ப்பதற்கு அழகாக இல்லை யென்றாலும் தின்பதற்குச் சுவையாக இருந்தால் சரி. வடிவத்திலே அழகு இருந்தால் கவிதை மனசிலே நிற்கும் என்பது உண்மைதான். ஆனால் வெறும் வடிவம் மட்டுமே கவிதை ஆகிவிடாது. மரபுக் கவிஞர்கள் பெரும்பாலோர்

வெறும் வடிவத்தை மட்டுமே பிடித்துக் கொண்டு தொங்குகிறார்கள். சிந்தனை இல்லை. வடிவத்தையும், சிந்தனையையும் சேர்த்துக் கொடுக்க எல்லோராலும் முடியாது. அந்த வகையில் நான் தான் என்று எல்லோரும் சொல்வார்கள்.

**வீரபாண்டியன் :** தமிழ்க் கவிதை உலகத்தைப் பாரதி, பாரதிதாசன் என்று வரிசைப்படுத்துவதில், பாரதிதாசனுக்கு அடுத்த தலைமுறை என்று யாரைக் குறிப் பிடலாம்.

**சுரதா :** என்னுடைய தலைமுறை என்று எல்லோரும் சொல்வார்கள். என்னைப் பின்பற்றி நிறையபேர் வந்திருக்கிறார்கள்.

**வீரபாண்டியன் :** இன்றைய தமிழ்க் கவிதை வளர்ந்திருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

**சுரதா :** இளைஞர்கள் நன்றாகச் சிந்தித்திருக்கிறார்கள். புதுக்கவிதை வீரர்களின் எண்ண அலைகள் அற்புதமாய் இருக்கின்றன.

**வீரபாண்டியன் :** நடிகைகளைப் பற்றிய ஒரு புத்தகம் எழுதியிருக்கிறீர்களே... இது தேவைதானா?

**சுரதா :** ஒரு காலத்திலே கடவுளைப் பற்றிப் பாடினான். அப்புறம் அரசர்களைப் புகழ்ந்தான். அதிகாரிகளைப் பாடினான். இப்போது அரசியல்வாதிகளைப் பிடித்துக் கொண்டான். நடிகைகளை நான் பாடியிருக்கிறேன். இதிலென்ன தப்பு? காலத்துக்குக் காலம் கவிஞனின் பாடுபொருள் மாறிக்கொண்டே வருகிறது. மாறத்தான் வேண்டும். வெறுமனே தீபாவளிக்கு, பொங்கலுக்கு விளக்கம் எழுதிக் கொண்டிருந்தால் எப்படி? சமுதாயத்திலே உள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் கவிதை எழுதப்படலாம்.

**வீரபாண்டியன்** : சம காலத்திய இளைய எழுத்தாளர்களில் நம்பிக்கைக்குரிய கவிஞர்கள் என்று யார், யாரை நீங்கள் குறிப்பிட முடியும்?

**சுரதா** : வைரமுத்து நன்றாக எழுதுகிறார். மேத்தா, அறிவுமணி போல நிறையபேர் சாதித்துக் கொண்டு வருகிறார்கள்.

**வீரபாண்டியன்** : சமீபத்தில் நீங்கள் ஏதோ அரசியல் கட்சியிலே சேர்ந்துவிட்டீர்கள் என்று பேச்சு அடிபட்டதே...?

**சுரதா** : எந்த அரசியல் கட்சியிலேயும் நான் உறுப்பினர் இல்லை. எல்லாக் கட்சிகளிலும் எனக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள். நட்பு முறையிலே நான் எங்கேயாவது போனால் அந்தக் கட்சியிலே நான் சேர்ந்துவிட்டேன் என்று அர்த்தமில்லை.

**சந்தித்தவர்: கவிஞர் தி. வீரபாண்டியன்**
**இதழ்: வரலாற்றின் குரல், [1-3-1985]**

## வரிக்கு ஐந்நூறு வாங்கினேன்!

"எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் குறைவுதான். ஆனால், அதிலே எனக்குக் கிடைத்த வெற்றியோ கணிசமானதுதான். நான் யாரையும் தேடிப் போய் பாட்டு எழுத சான்ஸ் கேட்டதில்லை. நான் அப்படி தேடிப் போயிருந்தா, இந்நேரம்

மற்றவர்களையெல்லாம் சந்தேகத்துக்கிடமில்லாமல், இரண்டாந்தரமாக்கியிருப்பேன்..." என்று ஒரு கட்டுக் கவிதைக் குவியல்களிலிருந்து நிமிர்ந்து பேசுகிறார்.

'அமுதும் தேனும் எதற்கு, நீ அருகினில் இருக்கையிலே எனக்கு...' என்று ஓர் இதமான பாடலை இயற்றி, இளம் காதல் நெஞ்சங்களைக் கிளுகிளுக்க வைத்தவர், இந்த சுப்புரத்தினதாசன் என்கிற சுரதாதான்!

சுமார் 30 படங்களுக்குப் பாடல்களும், மங்கையர்க்கரசி, அமரகவி, ஜெனோவா, புதுவாழ்வு போன்ற படங்களுக்குக் கதை-வசனமும் எழுதிப் புகழ் பெற்றார். தான் அதிகமான படங்களில் பணியாற்றாவிட்டாலும், அதனால் தன் மரியாதையும், செல்வாக்கும் இன்றளவும் குறையவில்லை என்று வாதிடுகிறார் சுரதா.

1945-ல் பட உலகில் நுழைந்த இவர், முதன் முதலில் கதை வசனம் எழுதியது பி.யு. சின்னப்பா நடித்த 'மங்கையர்க்கரசி'க்கு. முதல் செட்டில் இவருடைய தர்பார் சீன் வசனத்தைப் படித்துப் பார்த்த சின்னப்பா, இளைஞரான இவர்தான் 'மங்கையர்க்கரசி'க்கு வசனம் எழுத வேண்டும் என்று சொல்லிவிட்டாராம்.

சுரதா வசனம் எழுத ஆரம்பித்த சமயத்தில் திரைப்படத் துறையில் வசனகர்த்தா பஞ்சம் அதிகமாக இருந்தது. அப்போதெல்லாம் வசனம் எழுதுகிறவருக்கு அதிகச் செல்வாக்கு உண்டு. பாட்டு

எழுதுகிறவர்களையெல்லாம் 'வாத்தியார்' என்று அழைப்பார்களாம். அதோடு, பாட்டு எழுதுவது என்பது இரண்டாவது அம்சமாகத்தான் தயாரிப்பாளர்களுக்கு இருந்ததாம்.

"ஒரு படத்துக்காக ஒரு பாட்டு எழுதினேன். அதிலே 'தீ மீதினிலே ஈ மொய்ப்பதுண்டோ'னு ஒரு வரி வரும். அதை எழுதினப்புறம்தான் எனக்கே தோன்றியது, 'நெருப்புக்கிட்டே ஈக்கு என்ன வேலைன்' சரின்னு அதுக்கு வேறே எழுதி மாற்றுவதற்காக மறுநாள் தயாரிப்பாளர்கிட்டே 'பர்மிஷன்' கேட்டேன். அவரும் சரின்னுட்டார். உடனே நான் அந்த வரியை 'நீல வானின் மீது நிழல் படுவதுண் டோ'ன்னு மாத்தினேன்" என்று கூறி, தானே ரசிக்கிறார் சுரதா.

இந்த ஒரு வரியில் உள்ள இலக்கிய நயத்தைப் பார்த்து ஈப்பன் என்கிற அந்தப் படத் தயாரிப்பாளர் அந்த இடத்திலேயே 500ரூபாய் செக் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தாராம். இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி யாருக்கும் இதற்கு முன்னும் நடந்ததில்லை, பின்னும் நடந்ததில்லை என்கிறார் இவர்.

"வெற்றிலை போடாமலே வாய் சிவந்த பச்சைப் பசுங்கிளிகள்..." என்ற ஒரு தொடரை மட்டும் கேட்டமாத்திரத்திலேயே தியாகராஜ பாகவதர் இவரைத் தன்னுடைய 'புதுவாழ்வு' படத்திற்கு கதை, வசனம், பாடல்கள் எழுதச் சொன்னாராம்!

சின்னப்பாவுக்கு வசனம் எழுதுவதும், பாகவதருக்குப் பாட்டு எழுதுவதும் அந்தக் காலத்தில் அரிய பெரிய செயல்கள். அதைச் செய்த பெருமை தன்னைத்தான் சார்ந்தது என்று சுரதா பெருமிதப்படுகிறார்.

'அந்தக் காலத்து பாடல்களை ஒப்பிடும்போது இப்போது இலக்கிய திறமை கிடையாது' என்கிறார் இவர். 'அப்போதெல்லாம் டியூனுக்கு ஏற்றபடி பாடல்கள் எழுதப்பட்டன. இப்போது அப்படி எழுதச் சொன்னால் ஓடிப்போய் விடுவார்கள்' என்றார் சிரித்துக் கொண்டே.

முதன் முதலாக கவிதை வடிவிலே 55-ம் ஆண்டு 'காவியம்' என்ற இதழைத் துவக்கியவர் இவர்தாம். சினிமா வசனத்தைப் புத்தகமாகப் போடும் வழக்கத்தை முதன் முதலாக 'மங்கையர்க்கரசி' மூலம் ஆரம்பித்து வைத்தவரும் இவரேதாம்.

சுரதாவைச் சந்தித்தவர்: சுந்தரம்
இதழ்: ஆனந்தவிகடன், 25-7-1971

## எனது வளர்ச்சி!

உவமைக் கவிஞர் 'சுரதா' ஒரு உண்மையான மனிதர். உண்மையான கவிஞர். 'அமுதும் தேனும் எதற்கு' என்று அவர் எழுதிய பாடலுக்குப்பின் எந்த ஒரு திரைப்படப்பாடலும் முப்பதாண்டுகளுக்கு மேலாக தமிழர்களின் செவிகளை முற்றுகை இட்டதில்லை. கவியரசர் சுரதாவை அண்மையில் அவர் இல்லத்தில் கண்டு உரையாடினோம்.

கேள்வி: நீங்கள் பாட்டெழுத வந்த காலம் எப்போது அய்யா?

பதில்: திரைப்படங்களில் பாட்டெழுதும் வாய்ப்பு ஐம்பதுகளில் தான் என்னை தேடி வந்தது. அது, உடுமலை நாராயணகவி, பாபநாசம் சிவன், கம்பதாசன், கவி.கா.மு.ஷெரிப், மருதகாசி போன்ற பலர் பாட்டெழுதிக் கொண்டிருந்தகாலம். 'என் தங்கை' படத்தில் இடம்பெற்ற "ஆடும் ஊஞ்சலைப்போலே அலையாடுதே" என்ற பாடல்தான் எனது முதல் பாட்டு. அந்த பாட்டு வரிகளுக்காகவே அந்த பாடல் காட்சியை முதன் முறையாக கடற்கரைக் கொண்டு வந்து படமெடுத்தார்கள். தமிழில் முதல் வெளிப்புறப் படப்பிடிப்பு அதுதான். அதாவது ஒரு கவிஞனின் பாட்டு வரிகளால் திரைப்பட உலகம் முதல் முறையாக ஸ்டுடியோவை விட்டு இடம் பெயர்ந்துகடற்கரைக்கு காலடி எடுத்து வைத்தது. இது ஒரு வரலாற்று நிகழ்வு, இல்லையா? (சிரிக்கிறார்)

கேள்வி: பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பிறகு தன்னிகரில்லா தமிழ்க் கவிஞர் நீங்கள். திரைப்படங்களில் ஏராளமான பாடல்களை நீங்கள் எழுதியிருக்கலாமே? ஏன் எழுதவில்லை?

பதில்: முதலில் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். திரைப்படத்தில் பாட்டெழுதும் வாய்ப்புகள் எல்லாமே என்னைத் தேடி வந்தவைகள்தான். நான் வாய்ப்புகளை தேடிப் போகவில்லை. 'அமுதும் தேனும் எதற்கு' என்ற எனது பாடல் உண்மையில் பாவேந்தர் பாரதிதாசன் எழுதவேண்டியது. அவர் புதுச்சேரிக்கு திடீரெனப் போய்விட்டதால் என்னை வந்து அழைத்தார்கள். போய் எழுதினேன். மறக்க முடியுமா என்று ஒரு திரைப்படம்! அதில் ஒரு பாடலை ஐந்துபேர் எழுதி தோற்றுப் போனார்கள். பிறகுதான் எனக்கு அழைப்பு வந்தது. அப்போது நான் எழுதிய பாடல்தான் "வசந்தகாலம் வருமோ" என்ற பாடல். இப்படி அடுத்தவர்களால் முடியாமல் போய், அழைத்தபோது மட்டுமே போய் எழுதியவன் நான்.

கேள்வி: எத்தனை பாடல்களை இதுவரை எழுதி முடித்திருப் பீர்கள்?

பதில்: என்ன மிஞ்சிப்போனால் இருநூறு பாடல்கள், நான் பாட்டெழுதிய படங்களில் சில வெளிவரவே இல்லை. எழுதிய பாடல்களில் 'அமுதும் தேனும் எதற்கு', 'கண்ணில் வந்து மின்னல் போல் காணுதே', 'விண்ணுக்கு மேலாடை' போன்ற பாட்டுக்கள்தான் நான் எழுதியதில் எனக்குப்பிடித்த பாட்டுகள்.

கேள்வி: "மயில் ஆடுமோ வெயில் நாளிலே. கயல் நீந்துமோ சுடு நீரிலே!" இதுபோன்ற கருத்தாழம் மிக்கவரிகளை எழுதியவர் நீங்கள். திரைப்படங்களில் பாட்டெழுதும் வாய்ப்புகள் தொடர்ந்து உங்களை ஏன் தேடி வரவில்லை?

பதில்: எனது வளர்ச்சி படிப்படியான வளர்ச்சியல்ல. எடுத்த எடுப்பிலேயே எனக்கென்று ஒரு தனி இடத்தை திரைப்படப்பாடல்களில் நான் பிடித்துக் கொண்டவன். இது பலருக்குப் பிடிக்கவில்லை. சிலருக்கு என்னை கண்டாலே பயம். எனக்குப் பயந்தே பல தயாரிப் பாளர்கள் என்னை பாட்டெழுத கூப்பிடமாட்டார்கள். சொல்லப்போனால் எனது ஆரம்பகால வெற்றிகளே

எனது பாட்டெழுதும் வாய்ப்பைப் பறித்துவிட்டன. அது மட்டுமல்ல! அந்த காலத்திலும்கூட பாட்டெழுதுவதில் 'பலவிதமான' போட்டிகள் உண்டு. ஆகவே அப்போதே நான் ஒரு அருமையான யோசனையை சொன்னேன். பாடல் காட்சியின் சூழ்நிலையைப் பற்றி ஒரு விளக்கமான விளம்பரம் தந்து யார் வேண்டுமானாலும் பாட்டெழுதலாம் என்று அறிவியுங்கள். வருகின்ற பாடல்களில் சிறந்த பாடலை தேர்ந்தெடுங்கள் என்று அப்படித் தேர்ந்தெடுத்தால் திறமைதான் நிற்கும். செட்டியார், ரெட்டியார் என்பதெல்லாம் அடிபட்டு போகும்.

இந்த அருமையான யோசனையை அந்தக் காலத்திலேயே சொன்னவன் நான். எவன் கேட்டான்?

கேள்வி: அமுதும் தேனும் எதற்கு என்ற பாடலை எப்பொழுது எழுதினீர்கள்?

பதில்: 1958ம் ஆண்டில் 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்ற படத்திற்காக எழுதினேன். பிரபல பின்னணி பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் இதுவரை அந்த பாட்டை 8000 முறை மேடைகளில் பாடியிருக்கிறாராம். இது அவரே என்னிடம் சொன்னது. உடுமலை நாராயணக் கவி ஒருமுறை பாட்டெழுதப் போய் இருக்கிறார். அவரிடம் 'அமுதும் தேனும்' பாட்டைப் போல பாடல் எழுது என்று தயாரிப்பாளர் கேட்டதால் அவர் பாட்டெழுதாமல் வந்து விட்டார். என்னிடம் வந்து அதை சொன்னார். பிறகு நாங்கள் இருவரும் சேர்ந்து எழுதிய பாடல்தான் ‘அபலை அஞ்சுகம்’ படத்தில் இடம் பெற்ற "வெண்ணிலா குடைபிடிக்க வெள்ளிமீன் தலையசைக்க" என்ற பாடல்.

கேள்வி: கண்ணில் வந்து மின்னல் போல் காணுதே என்ற பாடலைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

பதில்: 'நாடோடி மன்னன்' படத்திற்காக அந்த பாடலை எழுதினேன். அந்தப் பாடலில் வரும் 'சுடர் மின்னல் கண்டு தாழை மலர்வது போலே' என்ற வரியைப் பார்த்து விட்டு மின்னலை கண்டு தாழை மலருமா?

என்று எம்.ஜி.ஆர். என்னைக் கேட்டார். உடனே நான் அதை நான் சொல்லவில்லை. குறுந்தொகையில் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள் என்றேன்.

கேள்வி: ரொம்ப சமீபத்தில் நீங்கள் எழுதிய திரைப்படப் பாடல் எது?

பதில்: 'நேற்று இன்று நாளை' படத்தில் வரும் 'நெருங்கி நெருங்கி பழகும்போது நெஞ்சம் ஒன்றாகும்' என்ற பாடல்.

கேள்வி: திரைப்படப் பாடலாசிரியர்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தவர் யார்?

பதில்: 'மாயவநாதன்தான். கூர்மையானவன். ஆங்கிலக் கவிஞன் 'ஷெல்லி'க்கு நிகரான தமிழ்க் கவிஞன் அவன்.

கேள்வி: இப்போது பாட்டெழுதுபவர்களைப் பற்றி என்ன நினைக் கிறீர்கள்?

பதில்: நன்றாகத்தான் எழுதுகிறார்கள். ஆனால் பலர் விளம்பரத்தை காப்பாற்றிக் கொள்பவர்களாக இருக்கிறார்கள். விபரத்தைக் காப்பாற்றி கொள்பவர் களாக இல்லை.

கேள்வி: இப்போது அழைத்தால் கூட பாட்டெழுதுவீர்களா?

பதில்: எப்போதும் வேண்டுமானாலும் எழுதுவேன். மாட்டுக்குத் தான் வயசாக ஆக பால் கறப்பது குறையும். மனிதன் எப்போது வேண்டுமானாலும் சிந்திக்கலாம். எந்த வயதிலும் என்னால் பாட்.டெழுத முடியும்.

கேள்வி பாட்டெழுதுவதில் பலருடைய பாராட்டையும் பெற்றிருப்பீர்கள். உங்கள் நினைவில் நிற்கும் பாராட்டு எது?

பதில்: எம்.ஜி.ஆர். நடித்த 'ஜெனோவா' என்ற படத்தில் ஒரு பாட்டெழுதினேன். அதில் நீலவான் மீது நிழற்படி வதுண்டோ என்ற ஒரு வரி வரும். அந்த வரிகளைக் கேட்டவுடனேயே ஜெனோவா படத்தின் தயாரிப்பாளர் 'ஈப்பன்' என்பவர் உடனே 500 ரூபாயை என்னிடம்

தந்து என்னைப் பாராட்டினார். அவர் 500 ரூபாய் தந்ததால் இதை சொல்லவில்லை. இங்கே இருப்பவர் களுக்கு சுரதாவைத்தான் தெரியும். ஈப்பனைத் தெரியாது. ஆனால் இப்படி ஒரு பாடல் வரிக்குப் பரிசு தந்ததால் ஈப்பன் இன்றைக்கும் நினைவில் நிற்கிறார். இதுபோல எல்லோருமே வித்தியாசமாக சிந்திக்க வேண்டும். நல்ல சிந்தனைகளை நாம் எல்லாருமே பாராட்ட வேண்டும்.

**கேள்வி** இலக்கியத்தில் இருந்து பாடல் வரிகளை எடுத்தாண்டு இருக்கிறீர்களா?

**பதில்:** 'நீர்க்குமிழி' படத்தில் இடம் பெற்ற 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா' என்ற பாடல் நான் எழுதியதுதான். அதில் முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா கண் மூடினால் கால் இல்லா கட்டிலடா என்று எழுதி இருந்தேன். ஔவையார் ஏற்கனவே கால்-கடி-கட்டில் என்று சொல்லியிருக்கிறார். இதே சிந்தனை எனது பாட்டில் வந்தாலும் கூட இங்கே பாடையைத் தான் நான் 'கால் இல்லா கட்டில்' என்று கூறியிருக்கிறேன். காரணம் ஔவையார் பாடை தூக்கியதில்லை. நான் பலமுறை தூக்கியிருக்கிறேன். இந்த அனுபவம்தான் எனக்கு இந்த பாட்டெழுதும்போது தோள் கொடுத்தது.

**கேள்வி:** புதிதாகப் பாட்டெழுத வருபவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்.

**பதில்:** புதியவர்களை நிறைய ஊக்குவிக்கலாம். பல்கலைக் கழகத்தில் படிப்பவர்களை அழைத்து பாட்டெழுத வைக்கலாம். சிந்தனை சிலருக்கே சொந்தமானது இல்லை. இங்கே பலருக்காக ஒருவன் சிந்திக்கக்கூடாது. ஒருவனுக்காக பலபேர் சிந்திக்க வேண்டும். நாம் அறிய அறிய நம்முடைய அறியாமை தெரியவேண்டும். ஒரே பாட்டைகூட பலபேர் எழுதலாம். சமையலை பல பேர் பகிர்ந்து செய்வதில்லையா? அதைப்போல ஒருவன் வீட்டு நிலைக்கண்ணாடி அவன் முகத்தைத்தான் காட்டும். ஆகவே வீதிக்கு வீதி இங்கே கண்ணாடிகள் வேண்டும். நீ திருவல்லிக்கேணியில் இருக்கும்போது திருவல்லிக்கேணியில் உள்ள தண்ணீரைத்தான்

குடிக்கிறாய். திருவாரூர் போனதும் திருவாரூர் தண்ணீரைக் குடிப்பதில்லையா? அதுபோல சிந்தனை எல்லா இடத்திலும் உள்ளது. அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒரு பாடல் எழுதப்பட்டதும் சமுதாயத்தில் பல துறைகளைச் சேர்ந்த பத்து பேரிடம் அந்த பாடலைக் காட்டி அபிப்ராயம் கேட்கலாம். பிறகு அதை பதிவு செய்யலாம். இதை ஏன் சொல்கிறேன் என்றால் இலக்கிய ஆர்வம் இல்லாத பல துறையினர்கூட இந்த பாட்டுக்கு அபிப்ராயம் சொல்ல புத்தகங்களைப் புரட்ட வேண்டியிருக்கும். அவனும் கொஞ்சம் இலக்கியம் படிப்பான். அதற்காகத்தான் சொல்கிறேன். பாட்டு இன்னினார்களுடைய பாராட்டைப் பெற்றது என்று தெரிந்தால் பாட்டெழுதியவனின் பெருமையும் உயரும். பாட்டு எப்போது வெளிவரும் என்கிற ஆவலும் அதிகரிக்கும்.

வெளியே இருட்டி விட்டது வானத்தில் இரவுப் பூக்கள் ஒவ்வொன்றாக பூக்க ஆரம்பித்துவிட்டன. கவியரசர் சுரதாவிடம் விடைபெற்றுக் கொண்டோம். அடடா இருட்டிச்சே! இப்போது 'எந்த பஸ்ஸில் போகப் போறே' என்று கேட்டுத் தெரிந்து கொண்டு வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார்.

சந்திப்பு: மோகனரூபன்

மங்கவம் வார இதழ் [26-6-1992]

# புரட்சி செய்யும் புதுக்கவிதை!

"மரபு"- "புதுமை"- இரண்டுக்குமே எழுத்துக்கள் மூன்றுதான். பெயரிலேயே ... அனுபவத்தையும் பெருமையையும் தாங்கி நிற்பது மரபு. வார்த்தையிலேயே பளிச்சென்று பார்ப்போரைத் திசை திருப்புவது புதுமை. இரண்டும் இணைந்தால் எப்படி இருக்கும்? இங்கு இணைந்திருப்பது இரு தலைமுறையைச் சேர்ந்த கவிஞர்கள். சந்திப்பில் கலந்திருப்பது கவிதையின் இரு வேறு பாதைகள்.

மேத்தா:- தன்னம்பிக்கை இன்றைய தலைமுறையினரைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்வது இதுதான். தன்னம்பிக்கையுடன் தனக்கென தனிப்பாதை வகுத்ததுடன் உங்கள் வழியில் அப்துல்ரகுமான், கவிஞர் முருகு சுந்தரம் போன்றவர்கள் உருவாகத் தூண்டியிருக்கீங்க. மூன்று தலைமுறையாக திரைப்படப் பாடல்களை எழுதிக் கொண்டிருக்கீங்க. "அமுதும் தேனும் எதற்கு" என்ற உங்க பாடல் முப்பத்திரண்டு வருடங்களுக்குப் பிறகும், கேட்டுப் பாடப்படுகிறதென்றால் ரசிகர்கள் காதில் அமுதாகவும் தேனாகவும் அப்பாடல் பாய்ந்ததால்தான்.

வாழவைக்கிற, வாழ்கிற பாடல்களைப் பாடியிருக்கும் உங்களுடன் மரபுக்கவிதை, புதுக்கவிதை பற்றிப் பேச வந்திருக்கிறேன். புதுக்கவிதை சிறிதாக மரபுக் கவிதை. முழு உருவாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆவலுடன் இந்தப் பேட்டியை ஆரம்பிக்கிறேன்.

சுரதா :- சமூகத்தைப் போய்ச்சேர வேண்டுமென்றால், அவர்களை நெருங்கிவர, திசை திருப்ப பளிச்சென்று பட வேண்டும். வெற்றிபெறும் வாய்ப்பு, அதனால்

கவிதையைவிட உரைநடைக்கு அதிகம். முழுக்க முழுக்க கோடு கிழிச்சு எழுதுவதை விட கோணல் மாணலா எழுதினாலும் கோடென்று பளிச்சென்று தெரிய வேண்டும். அந்தவிதத்தில் பளிச்சென்று சொன்னாலும் கருத்தோட்டங்களை மனதில் பதியவைப்பது புதுக்கவிதைதான். அதனால்தான் இன்று பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது.

மரபில் வளைத்துச் சொல்வதைவிட புதுக்கவிதையில் பளிச்சென சொல்ல முடிகிறது. 1909-ம் ஆண்டில் அன்பு வேலு முதலியார் மயிலாப்பூரில் ஒரு இதழை நடத்தி வந்தார். அன்றே அவர் இரண்டு வார்த்தை மூணு வார்த்தையிலே வாக்கியங்களைச் சொல்லியிருக்கார். அதை கொஞ்சம் தட்டிவிட்டோம்னா மரபுக் கவிதை. நிமிர்த்தினோம்னா மரபுக்கவிதை. அது கொஞ்சம் சரிந்தால் புதுக்கவிதை. சரியாம நேரா நின்றால் மரபுக் கவிதை. அன்றிலிருந்து தோன்றியது தான் இந்த புதுக்கவிதை. சமூகத்தைத் திருத்த, சிந்திக்க வைக்க இது மிக மிக வலுவான ஆயுதம். பட்டுப்புடவை கட்டணும்னா பணம் நிறைய ஆகும். வசதிக்கு, அவசரத்துக்கேற்றது பருத்திப் புடவை இல்லையா? புதுக்கவிதை பருத்திப் புடவை போன்றதுதான். படித்தவனுக்கு மட்டுமே என்றில்லாமல் படிக்காதவனையும் போய்ச் சேர்வது புதுக்கவிதை. வயசானவங்க பேருந்திலேறும்போது, ஏற்படும் தயக்கம் போன்றது மரபுக் கவிதை. இளமையில் பாய்ந்து வேகத்தோடு ஏறுவது போன்றது புதுக்கவிதை. சிந்தனையை நெருங்குவது இதுதான்.

மேத்தா:- மலேஷியாவில் ஒரு தடவை புதுக்கவிதை தோன்றியதற்குக் காரணம் கேட்டாங்க. அப்ப நான் சொன்ன கருத்து இதுதான். எதுவும் உயிரோடு நிற்க போராடணும். அதற்குத் தேவையான வடிவத்தை தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஏத்துக் கொள்ளணும். அச்சு வாகனம் வந்ததுமே உரைநடையின் அசுர வளர்ச்சி ஆரம்பமாகிவிட்டது.

காவியம் நாடகமாக, கவிதை சிறுகதையானது. அப்பொழுது கவிதை தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, உரைநடையை மிஞ்சி நிற்க அதன் வடிவத்தில் தன் கவித்துவத்தை கலந்து நிற்க கவிதை முடிவு செய்தது. அப்படி உருவானதுதான் புதுக்கவிதை. காலத்தால் கவிதைக்கேற்பட்ட கோலம்தான் இது. இதன் கூறுகள் தமிழ்நாட்டிலே தோன்றியது.

பாவேந்தர் பாரதிதாசன் "இருட்டிலே வாங்கிய இந்த சுதந்திரம் எப்பொழுது விடியுமோ" என்று எழுதி இருந்தார். பின்னால் வந்தவன் "இரவிலே வாங்கினோம் இன்னும் விடியவே இல்லை" என்றான். அதற்குப் பிறகு வந்தவன் "பகலில் வாங்கினால் மட்டும் என்ன கிழித்து விடவா போகிறீர்கள்" என்றான். இப்படி சிந்தனையின் தொடர்ச்சியைத் தூண்டவும், துரிதப் படுத்தவும் வந்ததுதான் புதுக்கவிதை.

மரபுக் கவிதையில் சொல்லப்பட்டதெல்லாம் தமிழை, சமூகத்தை அலங்கரிக்க, அழகுபடுத்தத்தான். ஆனால் புதுக்கவிதை அலங்கரிக்க அல்ல; ஆர்ப்பரிக்கப் பயன்படுவது. மக்கள் இயக்கமாக, செய்திகளை குமுறல்களை வெளிப்படுத்தியதுதான் இது. சிறுகதை, சினிமாப்பாட்டு, நாவல்கள் செய்ய முடியாத புரட்சியைச் செய்வது புதுக்கவிதைதான். வீட்டுக்குள்ளே குழந்தை. குட்டிகளோடு உட்கார்ந்திருக்கும்போது கோட்டு சூட்டு எதற்கு? பனியனும் கைலியும் போதுமே? பனியனும் கைலியும் போதுமே அந்த எளியவடிவம்தான் புதுக்கவிதை.

மரபு தெரிந்து புதுக்கவிதையைக் கைப்பற்றிக்கொண்ட அப்துல்ரகுமான், மீரா, நா. காமராசன் போன்றவர் கள்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள் மரபை மதித்தவன் தான் ஜெயித்தான். மரபை மிதித்தவன் தோற்றான். தமிழ் பெருமையைக் காப்பாற்றி அதில் சிறகுகளைச் சேர்ப்பதுதான் புதுக்கவிதை. எளிமையாக செய்தியை இதனால் சிறப்பாகச் சொல்ல முடியும்?

சோவியத் ஹாலில் கூட்டமொன்றில் சுருங்கச் சொல்லும் கவிதைத் திருவிழா நடைபெற்றது. ஒருவரிக்

கவிதை என்ற பெயரில் வசந்தகுமார் என்ற கவிஞர், "பூமிக்கு நாணம் வந்தது; ரோஜாக்கள் பூத்தன" என்று ஆரம்பித்தார். அடுத்தவர் "ரோஜாவுக்கு கோபம் வந்தது முட்கள் முளைத்தன" என்றார். இறுதியில் "முட்களுக்கு யோகம் வந்தது இயேசுவின் தலையில் கிரீடமானது" என்று முடித்தேன்.

இப்படி... சுருங்கச் சொல்லி சுருக்கெனத் தைப்பதுதான் புதுக்கவிதை. மரபுக்கவிதை சிந்தனைகளை சிறைபிடித்து விடுகிறது. இன்றைய காலகட்டத்தின் வேகத்துக்கு ஈடுகொடுப்பதுதான் புதுக்கவிதை. தொடர்ந்த போராட்டங்களுக்குப் பிறகு மக்கள் மனதில் இடம் பிடித்து இன்று வெற்றி பெற்றிருக்கிறது.

சுரதா:- கற்காலத்தில் நிர்வாணமா இருந்த காலத்தில், ஆடை கட்டத்தெரியாத நேரத்தில் உலகத்தை அப்படியே பார்த்தான். முழு மனிதனை முழு உடம்பில் பார்த்தான். போகப் போக ஆடை உடலை மறைக்க மறைக்க மனதுக்கு திரையாய் பொய் வந்துவிட்டதில்லையா? மொழிக்கு வார்த்தைகள் அதிகமானால் சிந்தனை குறைந்துவிடும். ஒரு நூற்றாண்டுக்குத் தேவையான வற்றை ஒருவனையே சிந்திக்க விடக்கூடாது.

படிப்பு என்பது கருத்துக்களைப் பதிய வைப்பது. சட்டென கருத்துக்கள் புலப்படுவது புலவனுக்குத்தான். ஆனால் கருத்தோட்டம் தடைப்படாமல் வளர்ச்சி அடையணும்னா அதற்குத் தேவை புதுக்கவிதைதான். நாலு பேருக்கு ஒரு பெண் சமைக்கலாம். நாற்பது பேருக்கென்றால் சமையற்காரன் தேவைப்படலாம். நாலாயிரம் பேருக்கு... நாலு லட்சம்... நாலு கோடிப் பேருக்குப் போய்ச் சேரணும்னா! சட்டென்று சுட்டுவிடுவதைப் போல உதவுவதுதான் புதுக்கவிதை. வேகம் கூடுவதுதான் வளர்ச்சி.

மேத்தா:- "தண்ணீரின் ஏப்பந்தான் அலைகள்" என்று நீங்க மரபுக் கவிதை எழுதியிருந்தீங்க. அதையே பிரிச்சு... 'அலைகள்' என்ற தலைப்பின் கீழ்... 'தண்ணீரின் ஏப்பம்' என்று ஒரு வரியில் சொன்னால் போதும்... சட்டெனப்

புரிந்துவிடும். அதுதான் புதுக்கவிதை. மரபுக் கவிதையில் தான் என்ற சொல்லுக்குப் பின் பர்தா போட்டு ஒரு பெண்ணின் முகத்தை சிறைப் படுத்தியிருந்தது. புதுக்கவிதையில் அந்த 'தான்' என்ற சொல்லை விலக்கி,, பெண்ணின் முகத்தை அழகை வெளிப்படுத்தியது. இக்கவிதைக்கு ஈடாக மக்களின் மனத்தை எட்டிப்பிடித்தது திரைப்படப் பாடல்களின் வரிகள். "பத்துக்கு மேலாடை பதினொன்றே ஆகும்" இதை எந்த மொழியில் சொன்னாலும்,வடிவில் சொன்னாலும் கவிதை இது. இதைப்போலப் பளிச்சென நீங்க எழுதிய பாடல்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இதழ்: குங்குமம்
தொகுப்பு :- ஜெயஸ்ரீ விஸ்வநாத்



# சக எழுத்தாளர்களை மதிப்பது குறைவு!

தமிழ்க்கவிதை வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்ட வல்லிக்கண்ணன், சுரதா இருவருக்கும் இப்போது எண்பது வயது. முத்து விழா காணும், இவ்விருவரும் நமக்காக சந்தித்துக் கொண்டபோது தெரித்து விழுந்த சிந்தனைச் சிதறல்கள் இங்கே.

சுரதா : உங்கள் கவிதை உலகப் பிரவேசம் எப்படி நிகழ்ந்தது?

வ. கண்ணன்: திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ராஜவல்லிபுரம் தான் எனது சொந்த ஊர். அங்கு பத்தாம் வகுப்பு தேறிய பிறகு வாசிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. 1936ல் பாரதிதாசனுடைய முதல் கவிதைத் தொகுப்பு வந்திருந்தது. அதற்கு முன்பு பாரதியையும் வாசித்திருந்தேன். இதற்கிடையில் புதிய மொழி, நடை, புதிய சிந்தனைகளோடு எழுதப்பட்ட தமிழ்ச் சிறுகதைகள் 'மணிக்கொடி' இதழில் தொடர்ந்து வெளிவந்தன. இன்னொருபக்கம் கல்கியின் ஜனரஞ்சக எழுத்து வெகுஜன வாசகர்களை ஈர்த்தது. இத்தகைய சூழலில்தான் நான் கவிதை எழுதத் தொடங்கினேன்.

சுரதா : ஒவ்வொரு படைப்பாளிக்கும், அவனுக்கு முந்தைய படைப்பாளி ஏற்படுத்தும் தாக்கம் முக்கிய அம்சம். என்னில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியவர் பாவேந்தர் பாரதிதாசன். சுப்புரத்தினதாசன் என்று புனைபெயர் வைத்துக் கொள்ளும் அளவுக்கு அவர் கவிதைகள் மீது காதல் வளர்ந்தது.

வ. கண்ணன்: பிறகு நாற்பதுகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'புரட்சிக் கவி' நாடகத்தில் அமைச்சராக நீங்கள் தானே நடித்தீர்கள். கலைவாணர் தலைமையில் திருநெல்வேலியில் நடந்தபோது அந்த நாடகத்தை நான் பார்த்திருக்கிறேன்.

சுரதா : ஆமாம்! அதேபோல் உங்களை எனக்கு அறிமுகப் படுத்தியது, நீங்கள்முதலில் எழுதிய பாரதிதாசன் 'உவமை நயம்' என்ற நூல்தான். அதைப்படித்து விட்டு உங்களைச் சந்திக்க வந்தேன். அதன்பிறகு தீபம், சரஸ்வதி போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து கவிதைகளும், புத்தக விமர்சனமும் எழுதி வந்தீர்கள். ஒரு கட்டத்தில் விமர்சனத் துறையில் முழு வீச்சோடு இறங்கிவிட்டீர்களே ஏன்?

வ. கண்ணன்: படைப்புகள் நிறைய வந்தால் மட்டும் போதாது. அவற்றுக்குத் தரமான நேர்மையான விமர்சனம் இருந்தால்தான் அது வாசகர்களைச் சென்று சேரும். வேறு எல்லா தேசங்களிலும் விமர்சனம் ஒரு தனித் துறையாகவே வளர்ந்து வந்திருக்கிறது. ஆனால் தமிழில் ஆட்களைத் தேடிப்பிடிக்க வேண்டியிருந் தது. இன்னொன்று, கா.நா. சுப்ரமண்யம் போன்றவர்கள், விமர்சிக்கிறேன் பேர்வழி என்று, சிறுகதை, கவிதையில் இவர்கள்தான் என ஒரு பட்டியலை வெளியிடுவார்கள். அடுத்த ஆறாவது மாதம் இன்னொரு பட்டியல் வெளியிடுவார்கள். இது போன்று வாசகனுக்கு வழிகாட்டாத விமர்சனப் போக்கை உடைக்கவே நான் அதில் கவனம் செலுத்த விரும்பினேன்.

சுரதா : அதன்பிறகு 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற ஆய்வு நூலுக்கு சாகித்ய அகாடமி விருது பெற்றீர்கள் அல்லவா?

வ. கண்ணன்: எனக்கு கவிதை உலகில் முகவரி தேடித்தந்த நூலும் அதுதான். ஆனால் சினிமாதான் உங்களை பிரபலப்படுத்தியது இல்லையா?

சுரதா: உண்மைதான் கவிதைக்காக காவியம் என்ற வார இதழை நடத்தியபோதும், சினிமா பாடல்கள்தான் என்னைப் பெரிய அளவில் பிரபலப்படுத்தியது.

வ. கண்ணன்: இன்றைய வெகுஜன இலக்கிய வரிசையில் வருகிற சினிமாப் பாடல்களின் தரம் திருப்திகரமாக இல்லையே?

சுரதா: காரணம் இசைதான். பாடல்வரிகளை விழுங்கி, ஏப்பம் விடும்படி தாளம் அமைக்கிறார்கள். இசையின் வேகத்திற்கு முன்னால் எத்தனை கவித்துமாக எழுதினாலும் ஒரு சில பாடல்களே புரிகின்றன. கவிஞர்கள் கையாளும் மொழியும் செத்துப் போய் விட்டது. ஆங்கிலச் சொற்களின் கலப்பும் , பழைய சிந்தனைகளின் பிரதிகளையுமே திரும்ப எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

வ.கண்ணன்: இன்று மொழிக் கொலை என்பது சினிமா பாடல்களில் மட்டுமல்ல. பத்திரிகை, தொலைக்காட்சி இரண்டிலுமே சர்வ சாதாரணம். இலக்கிய வளர்ச்சிக்கு தொடக்கத்தில் பங்காற்றிய பத்திரிகைகளே இப்போது இலக்கிய வீழ்ச்சிக்கும் பெரிய காரணமாக இருக்கின்றன.

சுரதா: எப்படிச் சொல்கிறீர்கள்?

வ. கண்ணன்: ஒரு தேசத்தின் கலாசார வேர்களை அறுத்துக் கொள்ளாமல் நவீன இலக்கியம் தோன்ற வேண்டும். அதற்கு அந்த நாட்டின் வெகுஜன இலக்கியம், கொஞ்ச மேனும் சமகால சமூக, கலாசார நிகழ்வுகளைப் பிரதிபலிக்க வேண்டும். ஆனால் வாசகர்களைக் குஷிப்படுத்தி, பத்திரிகை விற்பனையைக் கூட்ட முயன்ற மூன்றாந்தர இலக்கியமும், மனித ஆர்வத்தைத் தூண்டும் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளும், கிசுகிசு துணுக்குகள் போன்றவையும்தான் வெளிவருகின்றன. கல்கி, விகடன் போன்ற ஒரு சில வெகு

ஜன இதழ்களை விதி விலக்காக கூறலாம். ஆனால் வங்காளம், கேரளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் வெகுஜன ஊடகங்கள்கூட, இலக்கியத்தின் பால் பொறுப்புள்ளவை என்றே சொல்லுவேன்.

சுரதா: மிகவும் சரி. முப்பது வருடத்திற்கு முன்பு மேற்கத்திய நாடுகளில் பிரபலமான 'இசங்கள்' இங்கே இப்போதுதான் வந்திருக்கின்றன. ஆனால் வங்காளத்திலும், மலையாளத்திலும் அந்த இசங்களை வைத்து இருபது வருடத்திற்கு முன்பே நாவல், சிறுகதை, கவிதை படைத்துவிட்டார்கள். அதற்குக் காரணம் வெகுஜன பத்திரிகைகளின் ஒத்துழைப்பு.

வ.கண்ணன்: இசங்கள் அறிமுகமான போது அவை தொடர்பான எளிய விளக்க கட்டுரைகளைப் பத்திரிகைகள் முதல் பக்கத்திலேயே வெளியிட்டு, அங்கே வாசகர்களைத் தயார் செய்கிறார்கள். சோதனை முயற்சிகளை எப்படி அணுக வேண்டும் என்று சொல்லித் தருகிறார்கள். எனவே நவீன இலக்கியம், வெகு ஜன இலக்கியம் எல்லாம் அங்கே ஒன்றாகி விடுகிறது. இங்கே குஷ்பூவின் குழந்தை பற்றியும், டயானா கல்லறையின் அழகு பற்றியும் அதிக அக்கறை காட்டுகிறார்கள். வாசகர்கள் இல்லாதபோது இலக்கியம் எப்படி வளரும்.

சுரதா: தமிழ் இலக்கியம் தேக்கமடைந்து விட்டதற்கு இது போன்ற ஊடகங்கள் மட்டுமே காரணமா?

வ.கண்ணன்: இன்னும் மூன்று முக்கிய காரணங்களைச் சொல்லியாக வேண்டும். நவீன இலக்கியம் என்ற பெயரால், நமது கலாசார பின்புலத்தோடு ஒட்டாத இசங்களை, உடும்புப்பிடியாக பிடித்துக் கொண்டு, தங்கள் மேதமையை வெளிப்படுத்த சிலர் குழு மனப்பான்மையோடு எழுதுகிறார்கள். இவர்களுக்கு வாசகர்களைப் பற்றியோ, வாசகர் தயாரிப்பு

பற்றியோ கவலை கிடையாது. இவர்களது ஆழ்மன இலக்கியமும், தனிமனித வாதமும் எதையும் சாதிக்கப்போவதில்லை.

அடுத்து மார்க்சியம் போன்ற அரசியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட முற்போக்கு இலக்கியமும், அதன் ஒரு கூறாக வெளிப்பட்டிருக்கும் தலித் இலக்கியமும், பழைய பிரச்சனைகளையே உள்ளடக்கமாக கொள்கின்றன. உலகமயமாதலின் விளைவுகள் பற்றி இவர்கள் கவனிக்க வேண்டும்.

இறுதியாக சோம்பேறித்தனம். புதிதாக எழுத வருவோர், தனக்கு முன் பேசப்பட்ட படைப்பாளிகளின் எழுத்துக்களைத் தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை.

சுரதா: சக எழுத்தாளர்களை இங்கே மதிப்பதும் குறைவாகத்தான் இருக்கிறது இல்லையா?

வ.கண்ணன்: அது மட்டுமல்ல. மற்றவர்களின் நல்ல படைப்புகளை வாசகர்களுக்கு எடுத்துச் சொல்வதிலும் ஈகோ பிரச்னை குறுக்கிடுகிறது என்று நினைக்கிறார்கள். பொறாமைப்படுகிறார்கள். வாசகர் உலகிலிருந்து தனித்தியங்கும் ஜெயமோகன் போன்ற ஆட்கள் அமைதியாக எழுதுவதை விட்டுவிட்டு, தமிழில் இதுவரை, நாவலே இல்லை. கவிதையே இல்லை என்று புலம்பித்தீர்க்கிறார்கள். முழு உற்சாகத்தோடு எழுதவரும் புதியவர்களை நம்பிக்கை இழக்க வைக்கிறார்கள்.

சுரதா: உங்கள் கோபத்தைத் தணிக்க ஒரு கேள்வி. நீங்கள் ஏன் திருமணமே செய்து கொள்ளவில்லை. காதல் தோல்வியா?

வ.கண்ணன் (சிரிக்கிறார்):எழுதிக்கொண்டே இருக்க வேண்டும், இலக்கிய பயணமாக ஊர் தோறும் சுற்ற வேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்குத் திருமணமும்,

குடும்பமும் ஒரு பெரியதடையாக வரும். அத்துடன் எழுதுவதில் வரும் பணத்தை வைத்துக் குடும்பம் நடத்த முடியாது என்ற தெளிவு ஐம்பதுகளிலே எனக்கு இருந்தது.

சுரதா: எழுத்துலகில் மனநிறைவு கிடைத்து விட்டதா?

வ.கண்ணன்: நிறைய... விரக்தியோ, ஏமாற்றமோ இல்லை... பணம் ஈட்ட.வில்லையே என்ற கழிவிரக்கமும் எனக்கு இல்லை.

சுரதா: எனது நிலையும் அதுதான். கலைமாமணி, கேரள அரசின் குமரன் ஆசான் விருது உள்ளிட்ட பல மரியாதைகளைத் தமிழ் உலகம் எனக்கு அளித்துள்ளது. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தமிழ்ச் சகோதரர்கள் இன்னும் என் பெயரால் வாசகர்கள் பேரவை நடத்துவது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

தொகுப்பு: ஆர்.சி. ஜெயந்தன்



# உவமைக் கவிஞரோடு இரண்டு மணி நேரம்....!

உவமைக் கவிஞர் சுரதா! பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் என்ற வரிசையில் வைத்து எண்ணப்படுபவர்!

தனித்தன்மை மிகுந்த தமது உவமைக் கவிதைகளின் மூலம் ஆயிரக்கணக்கான இலக்கிய நெஞ்சங்களை ஈர்த்துக் கொண்டவர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நேர்மாணவர். தமிழக அரசால் 'பாரதிதாசன் நினைவுப்பரிசு' ரூபாய் பத்தாயிரம் அளித்து கௌரவிக்கப்பட்டவர்.

தன்னைக் 'கடவுள் நம்பிக்கை இல்லாதவர்' என்றும், 'சுயசிந்தனையுள்ள ஒரு நாத்தீகர்' என்றும் பிரகடனப்படுத்திக் கொள்பவர்.

திட்டவட்டமான ஓர் எச்சரிக்கையை முதலிலேயே உங்களுக்கு நான் விடுக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

இங்கே கவிஞர் சுரதா கடவுள், மதம், மனிதர்கள்பற்றி கூறியுள்ள கருத்துக்கள்- வார்த்தைகள் உட்பட -அனைத்தும் முற்றிலும் அவருக்கு மட்டுமே உரியவையே. அவை என்னுடைய கருத்துக்களோ 'தேம்பாவணி தீப்'த்தின் கருத்துக்களோ ஆகமாட்டா!

கவிஞர் சுரதாவுக்கு இப்போது வயது 61. இந்த வயதில்கூட எதையும் சீரியஸாக அவர் எடுத்துக் கொண்டு கருத்துக்கள் சொல்வதில்லை. அவருக்கு எல்லாமே தமாஷ்தான்! எதிலுமே முரட்டுத்தனமான அணுகுமுறைதான்!

நான் அவரைக் கேட்டேன்... "நீங்கள் எப்படி நாத்தீகரானீர்கள்? ஏன் நாத்தீகராக இருக்கிறீர்கள்? பெரியாரின் இயக்கத்தோடு தொடர்பு கெண்டதாலா...?"

அதற்கு அவர் "நாத்தீகனாக ஆவதா? பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இயற்கையில் கடவுளைப் பற்றிய உணர்வே இல்லாமல்தான் பிறக்கிறது. பிறகு அதன் பெற்றோர்களும், பெரியவர்களும்தான் அதற்கு கடவுள், மதம் போன்ற நம்பிக்கைகளை ஊட்டிவிடுகிறார்கள்.

உலகத்திலுள்ள உயிரினங்களில் மனித சமுதாயம் என்பது ரொம்ப மைனாரிடியானது மற்ற உயிர்களெல்லாம் கடவுளைப் பற்றி கவலையே படாமலிருக்க, மனிதன் மட்டும்தான் அதற்காக மிகவும் அலட்டிக் கொள்கிறான்.

ஏன் தெரியுமா? அதற்கு அவனது சுய விளம்பர மோகம்தான் காரணம். இவன் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளவே கடவுளைப் பற்றிப் பேசுகிறான்.

'கடவுள் நம்பிக்கை' என்கிறானே... என்ன விஷயம் அது? 'நம்பிக்கை' என்ன நம்பிக்கை? உண்டு என்று சொல்... அல்லது இல்லை என்று சொல்! "இவள் என் தாய் என்று நம்புகிறேன்" என்றா சொல்லுகிறோம்? "இவள் என் தாய்... அல்லது அம்மா" என்கிறோம். அதுபோலச் சொல்லிவிட்டுப்போயேன், 'கடவுள் உண்டு' என்று திட்டவட்டமாக! அதை வரையறுத்துச் சொல்ல மனிதனுக்கு தெளிவும் இல்லை... உறுதிப்பாடும் இல்லை இப்படி இவனுக்கே சரியாகப் புரியாத ஒன்றிற்காக இவன் என்ன வக்காலத்து வாங்குவது? குருடன் குருடனுக்கு வழி காட்டுவதா?

ஒரு வேடிக்கை பாருங்கள்... ரூபாய் நோட்டை அச்சடிப்பவன் மனிதன். ஆனால் இவன் பணம் வேண்டுமென்று அங்கே போய் (கடவுளிடம் போய்) கேட்டுக் கொண்டிருக்கிறான். இதில் என்ன விவேகம்?

எல்லாம் மனிதனின் 'சுயவிளம்பர' வியாபார வெறி!

இங்கே 'பக்த'னின் நிலை இப்படி என்றால், 'நாத்தீகன்' என்று சொல்லிக் கொள்பவனும் அப்படியேதானிருக்கிறான்.

'கடவுள் இல்லை' என்று ஒரு தடவை சொன்னானா.... அதோடு விட்டுவிட்டு வேறு வேலையைக் கவனிக்க மாட்டான். சும்மா 'இல்லை.... இல்லை...' என்று சொல்லிக்கொண்டே இருப்பான். ஒருவேளை, உண்மையாகவே கடவுள் இருந்தாலும் இருந்துவிடுவாரோ என்று அவனுக்குப் பயம்! அப்படி மீண்டும் மீண்டும் சொல்வதன்மூலம் தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளும் அரிப்பு வேறு அவனுக்கு!

ஆக ஆத்திகன், நாத்திகன் இரு தரப்பினருக்குமே கடவுள் என்பது இங்கே ஒரு விளம்பரக் கருவியாக, வியாபாரப் பொருளாக ஆகிவிட்டது.

நான் 'வியாபார' 'நாத்திகனல்ல, தந்தை பெரியார் அவர்களின் தொடர்பால் நான் நாத்திகச் சிந்தனைகளின் பக்கம் திரும்பினேன் என்பது உண்மைதான்! ஆனால் அதற்குப் பிறகு நான் எவ்வளவோ வளர்ந்திருக்கிறேன். நிறையச் சிந்தித்திருக்கிறேன். இப்போது நான் நாத்திகனாக இருப்பதற்கு நான் மட்டுமே காரணம்.

நான் ஒழுக்கத்தில் உறுதிப்பாடு உடையவன். கெட்ட எண்ணங்களை மனதில் தேக்கி வைத்துக்கொள்ளாதவன். எனவே எனக்குக் கடவுள் தேவையில்லை. அவ்வளவுதான்...!' என்று ஒரு 'குட்டி பிரசங்க'மே நிகழ்த்தி முடித்தார்.

நான் விடவில்லை...! தொடர்ந்தேன்..

**கேள்வி:** எனக்கு தேவையில்லை என்றால் மற்றவர்களுக்கு...?

**பதில்:** அது அவர் அவர்களது விருப்பத்தைப் பொறுத்தது. 'இறை' என்றால் தங்கியிருப்பது என்பது என்று பொருள். எலும்பில் தங்கியிருப்பதால்தான் இறைச்சிக்கு இறைச்சி என்றுபெயர் வந்தது.

'இப்படி எல்லா உயிர்களிடத்திலும் இயற்கையாகத் தங்கியிருப்பவனே 'இறைவன்' என்றால் மனிதன் என்ன அதற்காக தனியாகப் பிரச்சாரம் செய்வது?' என்பதுதான் என்கேள்வி

**கேள்வி:** அப்படியென்றால் கடவுள், மதக்கோட்பாடுகளால் மனித சமுதாயத்திற்கு ஒரு பயனுமே இல்லை என்கிறீர்களா?

பதில்: 'கட்டாயப்படுத்தினால்தான் ஒழுக்கம்' என்றுள்ள சமுதாயத்தில், சமயம் ஒரு பெரும் சாதனை புரிந்துள்ளது என்பதை நான் மறுக்கவில்லை.

இந்த வகையில் சட்டம் சாதிக்காததை சமயம் சாதித்திருக்கிறது.

எனக்குக் கடவுள், மதக் கொள்கைகள் தேவையில்லாவிட்டாலும், எல்லோருக்கும் அது வேண்டாமென்று நான் சொல்லமாட்டேன்.

பொருளாதார ஏற்ற தாழ்வுகள், அதனால் விளையும் சமூகக் குற்றங்கள் மலிந்துள்ள ஒரு நாட்டில், கடவுள், மத நம்பிக்கைகளைத் தவிர மக்களை அச்சமூட்டி எச்சரிக்க வேறொரு வழி, கருவி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

கேள்வி: அப்படியென்றால் கடவுள் கொள்கையின் தவிர்க்க முடியாமையைத் தாங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள்...?

பதில்: ஒப்புக் கொள்கிறேன் என்பதால் அதோடு நான்ஒன்றிப் போகிறேன் என்றாகாது. நான் கூறுவது என்னவென்றால், ஒரு பொருளை நீண்ட நேரம் விளம்பரப்படுத்தாதே. அப்பொருள் சிறந்ததாகக்கூட இருக்கலாம். ஏன் தொடர்ந்து அதை விளம்பரப்படுத்துகிறாய்?

சில சொற்களை அடைப்புக் குறிக்குள் தள்ளுவது போல கடவுளையும் அடைப்புக்குறிக்குள் தள்ளி வைத்துவிடு!

கேள்வி: தங்களுடைய 'இலக்கிய வாழ்வு' பற்றி தங்களது கணிப்பென்ன?

பதில்: அது பெரும் வளர்ச்சியை எனக்குத் தந்திருக்கிறது.

'கை முதல்' இல்லாதவனுக்கு இந்த நாட்டில் பேச்சும், எழுத்தும்தானே முதல்?

புகழ் என்பது மனிதனுக்கு வேண்டும் என்று வைத்துக்கொண்டால், அந்தப்புகழ் இதனால் எனக்குக் கிடைத்திருக்கிறது.

கேள்வி: தாங்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நேர் மாணவர்! ஆனாலும் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களோடு நீங்கள் மிகவும் வேறுபட்டிருக்கிறீர்கள் காரணம்...?

பதில்: உண்மை. நான் அவருடைய சாயலிலிருந்து மிகவும் மாறுபட்டவன். அவருடைய பாணியைத் தவிர்த்துக் கொண்டவன். சுய சாமர்த்தியத்தால் நான் எனக்கென்று ஒரு தனி பாணியை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன்.

கேள்வி: பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன்- இந்த அணியில் வருபவர் நீங்கள். ஆனால் அதற்கேற்ப தங்களுக்கு உரிய அங்கீகாரம், மரியாதை கிடைக்கவில்லை என்று நான் நினைக்கிறேன்...!

பதில்: அங்கீகாரம், மரியாதை எல்லாம் கிடைத்திருக்கிறது. ஆனால் உரிய 'விளம்பரம்' கிடைக்கவில்லை என்பது மட்டுமே உண்மை.

நான் 'அணுகுண்டு' போன்றவன். என்னை யாரும் போட்டு வெடிக்கவில்லை என்பது என் குறையல்ல அதனால் இந்த 'அணுகுண்டு' சக்தியற்றதாகிவிடாது.

இப்போது இங்கே எனக்குக் கிடைத்திருக்கும் மரியாதை எல்லாம் என் 'வடிவ'த்திற்குக் கிடைத்ததே... சக்திக்கல்ல!

கேள்வி: எனக்குத் தெரிந்தவரையில் கம்பன், மில்டன், வால்மீகி, பாரதியார் போன்ற உலகப் பெருங் கவிஞர்கள் அனைவரும் கடவுள் நம்பிக்கை உடையவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இறையன்பும், இயற்கையான கவிதா மேதையும் இல்லாத ஒருவன் மகா கவியாகத் திகழ முடியாது என்றே நான் நினைக்கிறேன்.

(சுரதா சிரித்துக்கொண்டே இடை மறிக்கிறார்).

பதில்: இது கதை! கடவுள் நம்பிக்கையோ மத உணர்வோ கவிதைக்குத் தேவையில்லை. சிரிப்பதற்குக் காதுகள் எதற்கு? வாயும் பல்லும் இருந்தாலே போதும்.

கடவுள் என்பது ஒரு தனி சப்ஜெக்ட்... கவிதை என்பது வேறொரு சப்ஜெக்ட்...!

கடவுள் என்றால் அது ஆன்மீகம். ஒழுக்கம்! ஒழுக்கம் என்பது பண்பாகும்...ஆனால் அது அறிவாகாது.

'கவிஞர்கள் என்பவர்கள் பிறக்கிறார்கள்; உருவாக்கப்படுவதில்லை' என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. மனிதன்தான் பிறக்கிறான்... கவிஞன் உருவாக்கப்படுகிறான்... அல்லது உருவாக்கிக் கொள்கிறான்.

கவிதை ஒரு விஞ்ஞானமே.

"கணக்கை போன்றதே கவிதை என்பதால் கவிதை புனைந்திடக் கற்பனை வேண்டும் என்னும் கருத்தை நான் ஏற்பதே இல்லை"

என்று நான் முன்பே எழுதியிருக்கிறேன்.

செய்யப்படுவது செய்யுள், பண்ணப்படுவது பண்! அது எப்படி இயற்கையாகும்?

மொழி என்பதே செயற்கை எனும்போது அதில் உருப்பெறும் 'கவிதை' எப்படி இயற்கையானதாகும்?

கேள்வி: தங்களது கவிதைகளில் தங்களுக்குப் பிடித்தது எது?

பதில்: நேற்றைக்கு இன்று நான் வளர்ந்திருந்தால்தான் நான் கவிதையே எழுதுவேன். இன்று புதிதாக ஒரு கவிதை எழுதினேன் என்றால், மேலும் இன்று நான் வளர்ந்திருக்கிறேன் என்று பொருள்...

கேள்வி: தாங்கள் 'வளர்ச்சி' என்று குறிப்பிடுவது....?

பதில்: கருத்துக்களைக் கண்டு பிடிப்பது... கண்டுபிடிக்க முயற்சி செய்வது...!

(இப்போது கவிஞரை நான் இடைமறித்தேன்...)

கேள்வி: 'புதிய கருத்துக்கள்' என்பதில் எனக்கு நம்பிக்கை இலை. இந்த விஷயத்தில் 'சூரியனுக்கு கீழே எதுவும் புதியதல்ல' என்ற எண்ணமே எனக்கு...!

பதில்: அதனால்தான் கருத்துக்களை கண்டு பிடிப்பது என்று கூறுகிறேன். கண்டு பிடித்தவைகளைப் புதிய முறையில் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாக 'மதம்' மக்களுக்கு அபினி என்று லெனின் கூறியிருப்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். ஆனால் என் 'தொடாத வாலிபத்தில்' 'மதம் மக்களுக்கு நோய்' என்று நான் வர்ணித்தேன்.

'அபினி' என்பது ஏதோ ஒரு வகையில் மருந்தாகவே ஆகிவிடும். ஆனால் 'நோய் என்பது எப்போதுமே நோய்தான். அது ஆரோக்கியமான ஒரு மனிதனிடம் இல்லாதது... அவன் விரும்பாதது... அவனுக்குத் தேவையற்றது....!

கேள்வி: 'புதுக்கவிதை' பற்றி தங்கள் கருத்தென்ன?

பதில்: அது ஒரு சிந்தனை வளர்ச்சிதான்! ஆனால் அது புதுசே அல்ல... 1898ம் ஆண்டிலேயே தமிழில் இதுபோன்ற கவிதை முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்து நான் அவரது சொந்த வாழ்க்கையைப் பற்றி விசாரிக்கத் துவங்கினேன்.

கேள்வி தங்கள் கவிதை வாழ்விற்கு, தாங்கள் யாருக்கு நன்றி கடன் பட்டிருக்கிறீர்கள்?

பதில்: பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், கலைஞர் கருணாநிதி, முதல்வர் எம்.ஜி.ஆர். எங்கள் டீக்கடை அழகப்பன் என்றொரு பழைய நண்பர் இத்தனை பேருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவர்களில் 'டீக்கடை' அழகப்பனைத் தவிர மற்றவர்களைப் பற்றி உங்களுக்கே தெரியும். அதனால் அழகப்பனைப் பற்றிச் சொல்லுகிறேன்.

நான் அப்போது படித்துவிட்டு வேலையின்றி சும்மா இருந்தேன். அழகப்பன் ஒரு சுயமரியாதைக்காரர். அப்போது பாரதிதாசனின் ஒரு சிறு கவிதைத் தொகுப்பு வெளி வந்திருந்தது.

அதிலுள்ள "ஓடப்பராகிவிட்ட ஏழையப்பர் உதையப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள்..." என்ற கவிதையைப் பாடிக் கொண்டே கடையில் டீ ஆற்றுவது வழக்கம்.

அந்தக் கவிதை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. உடன் அவரிடம் அந்த நூலை வாங்கிப் படித்தேன். அதிலிருந்துதான் கவிதையில் எனக்கு ஈடுபாடு.

இவ்விதமாக தீங்கவிதை எழுதுவதற்கு என்னைத் திருப்பிவிட்டவர் அழகப்பனே!

கேள்வி: எத்தனையோ கவிஞர்கள் இருக்க, பாரதிதாசன் எப்படித் தங்களைக் கவர்ந்தார்?

பதில்: அக்காலத்தில் எழுதிய கவிஞர்களில் பாரதிதாசனின் கவிதைதான் எனக்கு புரிந்தது; மனதிலும் பதிந்தது. 'சராசரி மக்களுக்குப் புரியாததுதான் கவிதை' என்றிருந்த காலம் அது பாரதிதாசனின் புரட்சிக் கருத்துக்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. அதனால் அவரிடம் ஈடுபாடு...! பின் நான் சுப்புரத்தினதாசன் எனும் சுரதாவானேன்!

கவிஞர் சுரதா கவிதைத் துறையில் மட்டுமல்லாமல், திரைப்படத்துறையிலும் புகழ் ஈட்டியவர்.

அவரது திரைப்படப் பாடல்களில் தமிழ் கொஞ்சும்... உவமைகள் ஊர்வலம்போகும்!

**அமுதும் தேனும் எதற்கு- நீ**
**அருகினில் இருக்கையிலே எனக்கு**

**என்ற பாடலும்,**

**"ஆடி அடங்கும் வாழ்க்கையடா**
**ஆறடி நிலமே சொந்தமடா"**

**என்ற பாடலும் அவருக்கு மிகவும் புகழ் தந்தவை.**

"என் திரைப்பட உலக வாழ்விற்கு முதலில் பழம்பெரும் நடிகர்கள் எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா, டைரக்டர் நாகூர் போன்றவர்களும், பிற்காலத்தில் டைரக்டர் ஏ.கே.வேலன், எம்.ஜி.ஆர் போன்றவர்களும் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள்" என்று அவர் நன்றி உணர்வுடன் என்னிடம் கூறிக்கொண்டார்.

கொஞ்சநேரம் இப்படி சொந்த விஷயங்களைப்பற்றி உரையாடிவிட்டு, மீண்டும் நாங்கள் இலக்கியம் பேசத் துவங்கினோம்.

"கிறிஸ்தவர்களின் தமிழ்ப்பணி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று நான் ஆரம்பித்தேன்.

அதற்கு சுரதா ஒரு நீண்ட பதிலைத் தந்தார்.

அதுஇது...

"தமிழை வளர்த்ததில் வேறு எந்த மதத்தினருக்கும் கிறிஸ்தவர்கள் குறைந்தவர்களில்லை. இன்னும் சரியாகச் சொல்லப்போனால் சராசரி மக்களிடமும் 'இலக்கியம்' போகும்படிச்செய்தவர்கள் அவர்கள்தான்!

அதுமட்டுமல்ல... அந்தக் காலத்திலேயே தமிழ்க் கவிதைகளில் விஞ்ஞானக் கருத்துக்களைப் பதிய வைத்தவர்கள் அவர்கள்.

அதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன்...

தஞ்சை மன்னன் சரபோஜியின் அரசவைப் புலவராக வேதநாயக சாஸ்திரியார் என்று ஒருவர் இருந்தார்.

அவர் தன்னுடைய 'நித்தியானந்த காதல்' என்ற நூலில் இப்படி எழுதுகிறார்.

"மின்சார மென்றாலென்? விண்கவர்ச்சி என்றா லென்?

மண் காந்த மென்றா லென்? வைப்பறிந்து சொல்வதெப்போ?

காந்த மதற்கும் கவரு மிரும்பதற்கும்

சார்ந் திடையில் நின்றிருக்கும் சத்தறிந்து கொள்வதெப்போ?

சத்தை ஜடத்தை சரியொத் திணைத்து வைத்த

மத்திக் கவர்ச்சிதனை மட்டிலடைத்தாய் வதெப்போ?

பொருள் புரிகிறதா உங்களுக்கு? பாடலின் கடைசி வரிகளில் அவர் 'டியூப் லைட்'டைப் பற்றி பேசுகிறார்.

அவர் வாழ்ந்த 18ம் நூற்றாண்டு எங்கே? மின்சாரமும் 'டியூப் லைட்'டும் வந்த காலம் எங்கே? அவ்வளவு தீர்க்க தரிசனத்தோடு அவர் அன்றே எழுதியிருக்கிறார்.

அடுத்து மாயூர் வேதநாயகம் பிள்ளை அவர்களைக் குறிப்பிட வேண்டும்.

அவரது ஆசிரியரும், நண்பருமான பெரும்புலவர் திரிசரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கே பெரும்- செல்வாக்கை தேடித் தந்தவர் அவர்.

அன்றே தமிழில் சட்டங்கள் வரவேண்டும். தமிழ்பயிற்சி மொழியாக வேண்டும் என்றெல்லாம் எழுதி அதற்காகப் பெரும்பாடுபட்டவர்.

பெண் விடுதலையைப் பற்றிச் சிந்தித்தவர் சீர்திருத்தக் கவிதைகளுக்கு முன்னோடி!

'சர்வ சமய கீர்த்தனைகள்' எழுதியதன் மூலம். மதங்களுக்கிடையே 'பாலம்' அமைத்த முதல் கவிஞர் அவர்.

"புகழும் இகழும் வாய்க் காற்று" என்று பாடிய மேதை.

கிறிஸ்தவர்களே அவரை மறந்திருந்த காலம் ஒன்றிருந்தது.

அந்த நாட்களில் மாயூரம் சரவணபவானந்தர் என்ற கவிஞரும், பாடகருமான ஒருவர்தான், அவரைப் பற்றிப்பேசி, அவரது பாடல்களை மேடைதோறும் பாடி, அவருக்கு விழா எடுத்துச் சிறப்பித்தார்.

இங்கே யார் யாருக்கோ சிலை வைக்கிறார்கள் ஆனால் வேதநாயகருக்கு ஓர் 'உருப்படியான' சிலை இல்லை.

அவரது முழுஉருவச் சிலை மாயூரத்திலோ அல்லது திருச்சி (அது அவர் பிறந்த ஊர்)யிலோ வைக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

வேதநாயகம் பிள்ளை ஒரு தமிழன் என்பதாலும், எந்தக் கவிஞனும் பெறாத புகழைப் பெற்றவர் என்பதாலும் மிக விரைவில் அவரது வாழ்க்கை வரலாற்றை நான் கவிதையில் எழுதப் போகிறேன்..."

'தேம்பாவணி தீபம்' ஒரு கிறிஸ்தவ இதழ் என்பதற்காக கவிஞர் சுரதா இப்படிக் கூறவில்லை.

அப்படியெல்லாம் இடத்திற்கேற்ப ஆளுக்கேற்ப பிசினஸ் லைக்காகப் பேசுகிற பழக்கமே அவருக்கில்லை என் முந்தைய சில கேள்விகளுக்கு அவர் அளித்துள்ள சூடான பதில்களைப் படித்தாலே அது உங்களுக்கு தெரியும்.

என்ன சிறப்பென்றால், மதம் என்றால் மிகவும் மாறுபட்டுப் போகிறவர் இலக்கியம் பற்றிப் பேசினால் அவர் தம்மையே அதில் இழந்து விடுகிறார்.

'மத இலக்கியம்' என்பதற்காக எந்த இலக்கியத்தையும்-இலக்கிய கர்த்தர்களையும் புறக்கணிக்க அவர் தயாராகவில்லை என்பதுதான் உண்மை

உவமைக்கவிஞர் சுரதாவின் மணிவிழா மிக விரைவில் நடைபெறுமென்று தெரிகிறது. இந்த அறுபத்தியொரு வயதிலும் அவரிடம் நித்திய இளமை குடிகொண்டுள்ளது.

பல வருடங்களாக எங்களிடையே உள்ள வாடாத நட்பின் உரிமையோடு

"பரவாயில்லை சுரதா!" இந்த வயசிலும் மாப்பிள்ளை போலத்தான் இருக்கிறீர்கள். என்று நான் அவரைக் கேலி செய்தேன்.

அதற்கு அவர் சிரித்துக்கொண்டே என்ன பதில் கூறினார் தெரியுமா?

"எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. மத நம்பிக்கை இல்லை. சடங்கு, சம்பிரதாய மூட நம்பிக்கைகள் இல்லை. என்னிடம் ஒழுக்கக் கேடுகள் எதுவுமில்லை. வீண் ஆசைகளே, பொறாமைகளோ இல்லை புகழ் ஆசையில்லை. கவலைகள் இல்லை கிடைப்பதை வைத்து திருப்தியுடன் வாழுகிறேன். எனக்கு எப்படி முதுமை வரும்?" என்றார்.

ஆனால் அவரிடம் இல்லாத முக்கியமான ஒன்றை சுரதா சொல்ல மறந்துவிட்டார்.

அவரிடம் கள்ளங்கபடம் இல்லை 'உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும்' இயல்பில்லை.

பிள்ளை உள்ளம், பெருங்கவித்திறன், எளிய வாழ்வு இனிய இயல்பு- இதுதான் சுரதா! ஆம், இவர்தான் சுரதா!

ஒரு தவிர்க்க முடியாத பின்னுரை...!

எங்கள் 'சந்திப்பில்' கவிஞர் சுரதா அவர்கள் கூறியுள்ள கருத்துக்களில் ஒரு சில, நமது 'வாசகர்கள்' பலருக்கும் உடன்பாடற்றவையாக இருக்கக்கூடும்.

"குறும்பும், நகைச் சுவையும் சுரதாவின் கூடப் பிறந்தவை" என்பதை அறியாதவர்களுக்கு, அவை மிகவும் வெப்பமாகவும் இருக்கும்.

நானே அப்படி உணர்ந்த சந்தர்ப்பங்களில்கூட, அவற்றைப்பற்றித் தொடர்ந்து அவரிடம் விவாதிக்க நான் விரும்பவில்லை.

உதாரணமாக, "உலகத்திலுள்ள உயிர்களில் மனிதன் என்பவன் 'மைனாரிடி'! உலகத்திலுள்ள மற்ற ஜீவராசிகள் எல்லாம் கடவுளைப் பற்றி நினைக்காமல்- அதை வழிபடாமலிருக்கும்போது இந்தப் 'பயல்' (அதாவது மனிதன்) என்ன அதற்காக ரொம்ப அலட்டிக் கொள்கிறான்" என்று அவர் கூறினார்.

நான் உடனே இடைமறிந்து, 'அது எப்படி சுரதா? அத்தகைய ஒரு 'தேடல் தானே 'உயர்திணை' மனிதர்கட்கும், 'அஃறிணை' உயிர்கட்கும் இடையே உள்ள வித்தியாசம்' என்று கேட்க நினைத்தேன்.

அவரது இயல்புகளை நான் நன்கறிந்தவன் ஆதலால், நான் அப்படிக் கேட்டிருந்தால் அதற்கு அவர் என்ன பதில் கூறியிருப்பார் என்று எனக்குத் தெரியும்!

உடனே அவர் "திணையாவது...! புணையாவது? இதையெல்லாம் மனிதன்தானே பிரித்து வைத்தான்? எந்த மிருகமாவது 'நான் அஃறிணைதான்... உயர் திணையல்ல' என்று உங்களிடம் வந்து சொல்லிக் கொண்டதா? அல்லது அது அப்படி ஏதாவது 'புத்தகம்' எழுதியிருக்கிறதா?

இந்தப் 'பயலே' (மனிதன்) தன்னைத்தானே உயர்வுபடுத்திக் கொள்வதற்காக எதையாவது எழுதி வைத்துக் கொண்டு ஊரை ஏமாற்றுகிறான். இதெல்லாம் சுத்த மோசடி...! நான்

சொல்லுகிறேன்... மூட நம்பிக்கைகள் உள்ள இந்த மடையர்களைவிட, மிருகங்களும் புல்பூண்டுகளும் எவ்வளவோ மேலானவை...'பயல்' என்று அடித்து விளாசியிருப்பார்.

இப்படி 'ஓரண்டை' யாகப் பதில் சொல்லுவது சுரதாவின் தனி பாணி.

அதனால்தான் மாறுபட்டக்கருத்துகளில், அவரோடு நான் விவாதத்தில் இறங்கவில்லை. அது என் நோக்கமும் அல்ல.

நான் அவரை, அவர் இந்தத் தலைமுறையின் மிகச் சிறந்த மரியாதைக்குரிய கவிஞர்களில் ஒருவர் என்ற முறையில் பார்க்கவும், 'கேட்க'வும் மட்டுமே சென்றேன். அவ்விதமாக நான் பார்த்ததையும், 'கேட்ட'தையுமே நீங்கள் இங்கே படிக்கிறீர்கள்.

அவரது மனித நேயமும், இலக்கிய வன்மையும், ஆராய்ச்சி அறிவும் சர்ச்சைக்கு அப்பாற்பட்டவை.

அவற்றிற்கு மத்தியில் அவருடைய 'நாத்தீக'க் கருத்துக்களை நான் பெரிதாக பொருட்படுத்தவில்லை. ஏன் அவைகளை நான் 'சீரியஸா'கவே எடுத்துக் கொள்ளவில்லை.

இதை நமது வாசக நண்பர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**கேள்வி:** கவிதைகளுக்கு எதிர்காலம் உண்டா?

**பதில்:** இல்லை. இது அவசர யுகம்... உரை நடை சகாப்தம்! சொல்லுகிற விஷயத்தைப் புரியும்படிச் சொல்ல வேண்டும் என்பது மட்டும்தான் இப்போது முக்கியம். நேரடியாக ஒன்றைச் சொல்லாமல் சும்மா வார்த்தை அலங்காரங்கள், நகாசுகள் என்பதற்கெல்லாம் இனி நேரமில்லை.

அதனால் அடுத்த நூற்றாண்டில் கவிஞர்களே இல்லாமற் போய்விடுவார்கள். கவிதையின் வடிவம் மாறி அப்போது வேறொன்றாகி விடும்!

'போட்டோ' வந்த பிறகு ஓவியம் எதற்காக? உரைநடை வளம் பெற்ற பிறகு கவிதைகள் எதற்காக?

சமுதாயத்தைப் போய் தொடுவது உரைநடை! கருத்துக்கு முன்னோடி உரைநடைதான் கவிதை என்பது செயற்கை.

மேலும் ஒரு நாட்டில் கவிதைகள் குறைந்தால்தான் அந்த நாட்டில் ஒழுக்கம் ஏற்படும்!

பேட்டி: சக்திவசந்தன்
இதழ்: தேம்பாவணி தீபம் 1-3-1982



## திராவிடர் இயக்கம்!

நான்: துவக்க காலத்தில் கலைஞர் கருணாநிதியின் 'முரசொலி', வார இதழில் தாங்கள் நிறைய எழுதியிருக்கிறீர்கள் அல்லவா? நான் அப்போது பள்ளிச்சிறுவன்...!

சுரதா: ஆமாம்... அந்த நாட்களில் நான் வாரந்தோறும் 'முரசொலி' யில் எழுதி வந்தேன். அன்று கலைஞர் கருணாநிதி எனக்களித்த ஊக்கம் மிகப் பெரியது.

இப்போது நான் கூறுவது கண்டிப்பாக உங்கள் கட்டுரையில் இடம்பெற வேண்டும்.

கருணாநிதி எனக்கு மட்டுமல்ல. பொதுவாகத் தமிழ்க் கவிதைத் துறைக்கே பெரும் ஊக்கமும் உற்சாகமும் தந்தவர். அவர் ஒரு நுட்பமான, நல்ல கவிதை ரசிகர்.

இன்று பட்டி தொட்டியெங்கும், சாதாரணப் பாமரர்கள் மத்தியில்கூட கவிதை ரசனை பெருகியிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் திராவிடர் இயக்கம். அதிலும் முக்கியமாக கலைஞர் கருணாநிதி அவர்கள்தான்!

புதிய கதாசிரியர்கள் வரவேண்டும்

கவிஞர் சுரதா கூறுகிறார்

படங்களிலே பிரச்சாரக் கருத்துக்கள் கட்சிக் கொள்கைகள் ஆகியவற்றை புகுத்துவது, கலைதேவியின் முகத்திலே கரியை பூசுவதாகும். அவ்வாறே ஒழுக்கத்திற்கு பங்கமான கருத்துக்களை மனிதப் பண்பு என்று போற்றுவது திருக்குறளை வேண்டாமென்று கூறுவதற்கொப்பாகும் என்று சுரதா கூறுகிறார்.

சுரதாவின் பெயர் சுப்புரத்தினதாசன் அதாவது கவியரசர் பாரதிதாசன் அவர்களின் பெயர் சுப்புரத்தினம். சுரதா அவரிடம் மூன்று நான்கு வருஷம் சிஷ்யப் பிள்ளையாக இருந்தார். பாரதிதாசன் கவிதைகளிலே சுரதாவுக்கு பிரத்யேகமான பிரியமும் ஒரு வெறியும் உண்டு. நீள் நிறைந்த நாலடியாரை அவர் போற்றுகின்றார்.

சுரதா பல படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார். இரண்டு மூன்று படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார். சுரதா இளைஞர் கம்பீரமான தோற்றம். அதிலே ஒரு அடக்கம் சிரித்தபடி இனிமையாக மெதுவாக பேசுவார். ஆனால், கருத்துக்கள் அம்புபோல் வந்து விழும். சினிமா பிரபஞ்சத்திலே இவரை ஒரு விசித்திர பிரகிருதி என்று கூறுபவர்களும் உண்டு. காரணம் இவர் பிறர் ஜோலிக்குப் போவதில்லை. தன்னிடம் வந்தவர்களையும் லேசில் விடமாட்டார். தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த முருகன் திவ்ய க்ஷேத்திரமான சிக்கல் என்ற ஊரில் பழமையான தமிழர் குடும்பத்தில் பிறந்த சுரதா,ஹைஸ்கூல் படிப்பை முடித்துவிட்டு, கவிதை உலகிலே புகுந்துவிட்டார்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது அதாவது அவருடைய பதினாறாவது வயதிலேயே அவருக்கு கவிதை இயற்றும் ஆற்றல் உண்டாகிவிட்டது. பள்ளிக்கூடத்தில் பாடவேண்டிய தோத்திரப் பாடல்களில் சுரதா தன் பாடல்களை பாட ஆரம்பித்துவிடுவார். உபாத்தியாயர்கள் அசந்து போவார்களாம். பள்ளிப் படிப்பை முடித்ததும் அவர் மனம் கவிதை உலகை நாடியது. அங்கே புக ஒரு குருவை தேடினார். பாரதிதாசனின் கவிதா தேவி சிலம்பொலி செய்து கொண்டிருந்தார். ஆகவே அவர் பாரதிதாசனைத்தன் கவி குருவாகக் கொண்டதில் ஆச்சரியமில்லை. சுரதா எழுதிய சாவின் முத்தம், உதட்டில் உதடு, என்ற இரண்டு தொகுதி கவிதைகள் புத்தக உருவத்தில் வெளிவந்துள்ளன. அவருக்குத் தன்னுடைய சக்தியின் எல்லை நன்கு தெரியும். ஆகவே கதை, கவிதை, பாடல் இவை தவிர இதர விஷயங்களில் தலையிட விரும்புவதில்லை.

மங்கையர்க்கரசி அமரகவி, புதுவாழ்வு, ஜெனோவா, சகோதரி ஆகிய படங்களுக்கு வசனமும் எழுதியுள்ளார். தமிழ்ப்பட உலகிலே அடக்கத்துடன், முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்களில் சுரதாவும் ஒருவர்.

அவர்கூறிய கருத்துக்கள் சிலவற்றை அப்படியே கீழே தந்துள்ளோம்.

தற்போது தமிழ் படங்களுக்கு வசூல் குறைந்து விட்டதற்குக் காரணம் கதை அமைப்புதான். திரும்பத் திரும்ப எடுத்த கருத்துக்களையே எடுத்துக் கொண்டிருப்பதால் மக்களுக்கு அலுப்பு ஏற்பட்டுவிட்டது.

படத்தொழிலில் உள்ளவர்களின் ரசனை உயர்ந்திருக்கிறதோ என்னவோ, ஆனல் பார்ப்பவர்களின் ரசனை உயர்ந்துவிட்டது. ஆகவே மக்கள் ரசனைக்கேற்ற படங்களை தயாரிக்கத் தவறியதே இன்றையத் தமிழ்பட வசூல் மந்தத்திற்குக் காரணம்.

இவ்வாறு சிறந்த -புதுமை நிறைந்த கருத்துக்கள் கொண்ட கதைகளை எழுதவல்ல எழுத்தாளர்கள் பலர் படஉலகிற்கு வெளியேதான் இருக்கிறார்கள். சுய விளம்பரம், காக்கை பிடித்தல், கட்சி அல்லது கோஷ்டி மனப்பான்மை, வகுப்புதுவேடம் இவைகளை அகற்றிவிட்டு, சிறந்த எழுத்தாளர்களை உள்ளே அழைத்து வந்தால் நிச்சயம் படங்களுக்குச் சிறந்த கதைகள் கிடைக்கும். ஆனால் அந்தமாதிரி காரியத்தைச் செய்ய படமுதலாளிகள் முன்வருவதில்லை!

ஏனென்றால், பட முதலாளிகள் கதைக்கு ஏற்ற நடிகர்களை தேடுவதில்லை.

தங்களுக்குப் பிடித்த நடிகை, நடிகர் இவர்களுக்கு ஏற்ற கதையைத்தான் தேடுகிறார். அப்படியே ஏதாவது சிறந்த கதைகள் வந்தாலும், தங்களுக்குப் பிடித்தமான நடிகைகளுக்காகவே குறிப்பிட்ட நடிகர் பேச வேண்டும் என்பதற்காகவோ, கதையையும், வசனத்தையும் அமைக்கும்படி கூறுவார்கள். ஆகவே, தன்மானமும் சுயகற்பனையும் உள்ள சிறந்த கதாசிரியன் இதற்கு ஒப்புக்கொள்ளமாட்டான். இன்று படத்தொழிலில் சிறந்த கதாசிரியர்கள் வராதற்கு இதுதான் காரணம்.

கதாசிரியர்கள் இல்லாமலா இவ்வளவு படங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று நீங்கள் கேட்கலாம். படங்களின் நிலையும் அப்படித்தானே இருக்கிறது என்று நாமும் பதில் கூறிவிடுவோம். ஆகவே, தமிழ்ப்படங்களின் எதிர்காலம் புதுமைக் கருத்தும் கற்பனையும் உள்ள எழுத்தாளர்கள் படஉலகிற்கு வருவதைப் பொறுத்தே இருக்கிறது புதுமைக் கருத்துக்கள் என்றால்,

பழைமையான தமிழ் இலக்கியங்களை அசட்டை செய்வதாக அர்த்தமல்ல. அந்த பழந்தமிழ் இலக்கியத்தின் அஸ்திவாரத்தில் தான் புதுமைத் தமிழ்க்கோயிலைக் கட்ட வேண்டும்:

வடநாட்டைப்போல் படடைரக்ஷனில் திறமைசாலிகள் இங்கே இல்லை. தங்கள் திறமைப் பற்றி பேசும் அளவு நமது டைரக்டர்கள் காரியத்தில் காட்டுவதில்லை.

பாடல்கள் சம்பந்தபட்டமட்டில் என்னுடைய அபிப்பிராயம் இதுதான். சங்கீதத்திற்கு ஏற்ற மொழி தெலுங்கு, இந்தி இரண்டும்தான். அதாவது வடமொழி கலந்த பாஷை பாட்டுக்கு நயமாக இருக்கும். வடநாட்டுப் படங்களில் பாடல்கள் சோபிப்பதற்கும், இனிமையாக இருப்பதற்கும் இது ஒரு காரணம்.

நமது தமிழ் நாட்டிலும் பல சங்கீத டைரக்டர்கள் மெட்டு அமைக் கிறார்கள். ஆனால் சுயமாக அமைப்பவர்கள் குறைவு. இந்திப் பாடல்களைப் காப்பியடிக்கும் வழக்கம் நிறைய இருந்து வருகிறது. ஆயினும் இந்தியில் கேட்ட ஒரு பாட்டை தமிழில் கேட்கும்போது இந்திப் பாட்டிலுள்ள இனிமை இதில் வருவதில்லை. இது சாகியத் தியத்தின் கோளாறா என்பதை இனித்தான் நிர்ணயிக்க வேண்டும்.

என்னுடைய அனுபவத்தில் காலஞ்சென்ற சுப்பராமன் சிறந்த முறையில் இசை அமைத்தார். தற்போது எம்.எஸ்.விஸ்வநாதன் புதுமையான முறைகளை கையாள முயற்சிக்கிறார். பின்னணியில் பாடுவதில் வசந்தகுமாரியும், பி.லீலாவும் இணையற்றவர்கள்.காதல் காட்சிகள், துக்கமான காட்சிகள் இவைகளில் பாடல்கள் கூடவே கூடாது. தமிழ்ப்படங்களில் பாடல் எழுதுகிறவர்களில் பாபநாசம் சிவன், கம்பதாசன், உடுமலை நாராயணகவி ஆகியோர் சிறப்பாக தங்கள் கலையைக் கையாளுகிறார்கள். என் இதயத்தில் அவர்களுக்கு என்றும் ஒரு இடம் உண்டு. முடிவாக இன்னும் இரண்டொரு வார்த்தைகள் கூறி முடித்துவிடுகிறேன்.

வடநாட்டில் கலைஞர்கள், நடிகர்கள் யாவரும் படித்தவர்கள். இங்கு அந்த அம்சம் மிகக்குறைவு. தோற்றமும் அங்குள்ளவர்களைப் போல் நமக்கில்லை. ஆனால் அழகு என்பது எங்கும் இருக்கிறது. அதை தேடிப் போற்றத் தெரிய வேண்டும். அதற்கு புதிய நடிக நடிகயரைத் தேடிப் படங்களில் நடிக்க சந்தர்ப்பமளிக்க வேண்டும். அதை யார் செய்வது...?

-தினமணி [1955]

## கவிதை எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டது எப்படி?

அமுதும் தேனும் எதற்கு? -நீ அருகினில் இருக்கையிலே எனக்கு

-1958 முதல் இன்றுவரை நேயர்கள் விருப்பப்படி வானொலியில் ஒலித்துவரும் இந்த சிரஞ்சீவிப் பாடலை இயற்றியவர் உவமைக் கவிஞர் சுரதா.

அவரைப் பேட்டி காணச் சென்றபோது எந்தெந்தத் திரைப்படப் பாடலாசிரியர்கள் தனக்கு முன் பலர் எழுதிய பாடல்களிலிருந்து வரிகளை கடத்தி மாரீச இலக்கியம் படைத்திருக்கிறார்கள் என்பதை வெட்ட வெளிச்சமாக்க "முன்னும் பின்னும்" என்ற நூலை எழுதிக் கொண்டிருந்தார்.

பேட்டி தொடங்கியது.

**கேள்வி:** நீங்கள் பிறந்த ஊர் எது?

**பதில்:** தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்தை அடுத்த பழையனூர். தந்தை பெயர் திருவேங்கடம். தாயார் செண்பகம்

**கேள்வி:** எங்கே படித்தீர்கள்?

**பதில்:** நமது குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமனின் ஊரான ராஜாமடம்.

**கேள்வி:** உங்கள் பெயர் வித்தியாசமாக இருக்கிறதே, இது உங்கள் பெற்றோர் வைத்த பெயரா?

**பதில்:** பெற்றோர் வைத்த பெயர் ராஜகோபாலன். நான் பாரதிதாசனிடம் மாணவனாகப் போய்ச் சேர்ந்ததும் நானே

என் பெயரை மாற்றிக் கொண்டேன். கனக சுப்புரத்தினம் மகாகவி பாரதியின் மீதிருந்த அபிமானத்தால் பாரதிதாசனாக மாறியது போல, நான் சுப்புரத்தினதாசன் என்று என் பெயரை மாற்றிக் கொண்டேன். ஒரு நாள் என் நண்பருக்கு நான் எழுதிய கார்டில் சுப்புரத் தினதாசன் என்று முழுமையாகக் கையெழுத்து போட இடமில்லாததால் சு.ர.தா. என்று கையொப்பமிட்டேன். பிறகு அந்தப் புள்ளிகளை எடுத்து விட்டு சுரதா ஆனேன். இந்தப் பெயர் பலருக்குப் புதிராக இருந்தது. டி.கே.சண்முகம்கூட இதை ஒரு பெண்ணின் பெயர் என்று நினைத்துக் கொண்டிருந்தாராம்.

**கேள்வி** உவமைக் கவிஞர் என்ற பட்டத்தை யார் கொடுத்தது?

**பதில்:** பிரபல நாவலாசிரியர் அமரர் ஜெகசிற்பியன்

**கேள்வி:** கவிதை எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டது எப்படி?

**பதில்:** 1938ல் நான் மூன்றாவது பாரம் படித்துக் கொண்டிருந்தபோது சங்கமங்கலத்தில் டீக்கடை நடத்தி வந்த அழகப்பன் என்பவர் பாரதிதாசன் கவிதைத் தொகுப்பைக் கொடுத்து, "ஒடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டார். என்ற பாடலை உணர்ச் சியோடு பாடிக் காண்பித்தார்". அந்தப் பாடலைக் கேட்டதும் பாரதிதாசனை நேரில் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலிட்டது. அந்த ஆசை 1941ல் பெங்கலன்றுதான் நிறைவேறியது.

கீவளூர் கோயிலுக்கு தினம் நாலணா கூலிக்கு சுண்ணாம்பு அடித்துச் சேர்த்த ஒன்றே முக்கால் ரூபாயுடன் பாண்டிச்சேரி போய் பாரதிதாசனிடம் ஐக்கியமானேன். பாரதிதாசனின் கவிதைகளை படி எடுத்துக் கொடுப்பேன். பிறவியிலேயே அரும்பி இருந்த கவிதை உள்ளம் மலர்ந்து மணம் பரப்பியது. பாரதிதாசனின் நல்ல உள்ளத்தை நான் இங்கே குறிப்பிட வேண்டும். அந்தக் காலத்தில் அவருக்கே மாத வருமானம் நூறு ரூபாய்க்குள்தான். என் வீட்டிற்கு மாதம் இருபது ரூபாய் அனுப்புவார்.

கேள்வி தங்கள் திரைப்படப் பிரவேசம் பற்றி...

பதில் 1943ல் "பொன்னி" என்ற இலக்கிய இதழைப் புதுக்கோட்டையில் நடத்திவந்த பெரியண்ணனும் முருகு சுப்பிரமணியமும் சேர்ந்து 'இன்ப நிலையம்' என்ற நாடகக் குழுவை அமைத்து பாரதிதாசனின் "புரட்சிக்கவி" என்ற கவிதை நாடகத்தை நடத்தி வந்தார்கள். இசையமைப்பாளர் எம்.எஸ்.ஞானமணி கதாநாயகன். டி.ஜி.லிங்கப்பாவின் சகோதரி ராஜம்மா கதாநாயகி. அதில் எனக்கு அமைச்சர் வேடம்.

இந்த நாடகக்குழு கலைக்கப்பட்டதும் நாமக்கல்லில் நல்லப்ப ரெட்டியார் வீட்டில் தங்கி குழந்தைக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்து வந்தேன். ஒரு நாள் அவருடைய குழந்தைக்கு பொதுவுடைமையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டுவந்த ரெட்டியார் இருபத்திரண்டு ரூபாயைக் கையில் கொடுத்து ஊருக்கு மூட்டை கட்டி அனுப்பிவிட்டார்.

புதுக்கோட்டைக்குப் போன என்னை கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி பாக்யா பிக்சர்ஸ் நிர்வாகி சுப்பையா நாயுடுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்கள் அப்போது தயாரித்து வந்த "மங்கையர்க்கரசி" படத்திற்கு கதை, வசனம் எழுதும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. வசனம் அருமையாக இருந்ததால் புத்தகமாக வெளியிட்டோம். புத்தகத்திற்கு அமோக வரவேற்பு, தமிழில் முதன் முதலாக திரைப்படக் கதை, வசனம் புத்தக உருவில் வந்தது என்னுடைய மங்கையர்க்கரசிதான்.

கேள்வி உங்களுக்குப் பெருமை சேர்த்த, மறக்கமுடியாத நிகழ்ச்சிகளைச் சொல்லுங்களேன்?

பதில்: எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த "அமரகவி"க்கு கதை, வசனம் எழுதினேன். இந்தப் படத்தில் எனது பாடல்கள் பதினைந்து இடம் பெற்றன. "வெற்றிலை போடாமலே வாய் சிவந்த பச்சைப் பசுங்கிளிகள்" "யானைத் தந்தம் போல பிறை நிலா" ஆகிய பாடல்கள் பாகவதரின் மனதைக் கவர்ந்ததால் அடுத்து அவர் நடித்த "புது

வாழ்வு" படத்திற்கும் வசனம் எழுதச் சொன்னதோடு என்னை அவர் வீட்டிற்கு அழைத்து 110 பவுன் எடையுள்ள தங்கத்தட்டில் சாப்பாடு போட்டார். நான் புகழேணியில் ஏறுவதற்கு முன்பே எடைபோட்டுப் பாராட்டியவர் பாகவதர்.

எம்.ஜி.ஆர். நடித்த "ஜெனோவா"வுக்கு கதை, வசனம், பாடல் எல்லாம் நான்தான். அதில் ஒரு கட்டம். தனது கற்பை சந்தேகிக்கும் கதாநாயகனைப் பார்த்து கதாநாயகி பாடுவதாக ஒரு பாடல். "தீ மீதில் ஈ மொய்ப்பது உண்டோ?" என்று எழுதிக் கொடுத்து விட்டு என் அறைக்குத் திரும்பிவிட்டேன். அந்த வரி ஏதோ பழசுபோல எனக்குப்பட்டது. "நீலவான் மீது நிழல் படிவது உண்டோ?" என்ற வரி மனதில் பளிச்சிட்டது. உடனே ஸ்டுடியோவுக்கு விரைந்தேன். அங்கு பாடல் ஒலிப்பதிவாகிவிட்டது. வரி மாற்றத்தை மலையாளியான படாதிபதி ஈப்பன் ரசித்துப் பாராட்டி வரியை மாற்றி மறு ஒலிப்பதிவு செய்யச் சொல்லியதோடு, அந்த வரி மாற்றத்திற்காகத் தனியாக ஐந்நூறு ரூபாய் கொடுத்தார்.

ஏ.கே. வேலன் தயாரித்து வந்த "தைபிறந்தால் வழி பிறக்கும்" படத்திற்குப் பாட்டெழுத பாரதிதாசனை ஒப்பந்தம் செய்திருந்தார்கள். பாண்டிச்சேரிக்குப் போன கவிஞர் குறிப்பிட்ட காலத்தில் சென்னை திரும்பவில்லை. சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்த என்னை வேலன் தற்செயலாகப் பார்த்து, கூடவே ஸ்டுடியோவுக்கு அழைத்துப் போய் அங்க டியூன் போட்டுத் தயாராக இருந்த கே.வி.மகாதேவனிடம் அறிமுகப்படுத்தினார். அந்த அவசரத்தில் பிறந்த பாடல்தான் "அமுதும் தேனும் எதற்கு?" படம் வெற்றிகரமாக ஓடி நூறாவது நாள் கொண்டாடிய போது வேலன் எனக்கு மோதிரம் பரிசளித்தார்.

அதே போல "நாடோடி மன்னன்" நூறாவது நாளில் எம்.ஜி.ஆர். மோதிரம் பரிசளித்தார். அந்தப் படத்தில் இடம் பெற்ற "கண்ணில் வந்த மின்னல் போலக் காணுதே"

வலம்புரி சோமநாதனின் "திருமணம்" என்ற படத்திற்காக நான் எழுதிய "எண்ணமெல்லாம் ஓர் இடத்தையே நாடுதே கண்ணிரெண்டும் ஓர் முகத்தையே தேடுதே" என்ற பாடல் ஹிட் ஆனது. அதே பாடத்தில் நான் எழுதிய "செங்கதிர் சுடர்போல் என்கரம் நீண்டிருந்தால் இந்த சிங்காரச் சிலைதனை இங்கிருந்தே தொடுவேனே" என்ற பாடலைக் கேட்ட தோழர் ப. ஜீவானந்தம் விஞ்ஞானக் கருத்தை எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறீர்கள் என்று பாராட்டினார்.

கேள்வி நீங்கள் சந்தித்த திரைப்படக் கலைஞர்களைப் பற்றி கணிப்பு என்ன?

பதில்: எம்.கே. தியாகராஜ பாகவதர் நீளமான வசனம் பேசமாட்டார். அவருக்கு துண்டு துண்டாக இருக்க வேண்டும். அதையும் நுணுக்கமாகத் தேர்ந்தெடுத்து பேசுவார். பி.யு.சின்னப்பா நினைவாற்றல் மிக அதிகம். வசனத்த படிக்க மாட்டார். நாம் படிக்கக் கேட்டு அப்படியே திரும்பச் சொல்வார். முன்பெல்லாம் வசனகர்த்தா கதாநாயகனையோ கதாநாயகியையோ சந்திக்க முடியாது. சின்னப்பாதான் வசனகர்த்தாவுக்கு ஒரு கௌரவம் கொடுக்க வேண்டும் என்று செட்டிற்கு வந்து சொல்லிக் கொடுக்கச் சொல்லியும், "நான் சொல்வது சரியாக இருக்கிறதா என்று கேட்கவும் வைத்தவர்" பாரதிதாசன் பாடல்களை நாடகங்களில் அறிமுகப்படுத்தியவரும் அவர்தான். அவரே ஒரு வெண்பாப்புலி. ஒரு நாள் பசுபுலேடி கண்ணாம்பாவைப் பற்றி "வெள்ளிக்கிழமை விளக்கேற்றும் நேரத்தில்" என்று ஒரு வெண்பா பாடியது நினைவில் நிற்கிறது. சின்னப்பா ஒரு மனிதாபிமானி. ஒரு தடவை அவரோடு சீட்டாடி இரு நூற்று ஐம்பது ரூபாய் இழந்துவிட்டேன். அன்று மாலை அந்த ரூபாயை என் சட்டைப் பையில் செருகிவிட்டு, "நான் நடிகன்- ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிப்பவன். நீங்கள் பாட்டெழுதி ஐம்பது நூறு என்று வாங்கும் கவிஞர். இம்மாதிரி உணர்ச்சி வசப்படுவது நல்லதல்ல!" என்றார்.

டி.ஆர். ராஜகுமாரி குடும்பப்பெண் போலத் தோற்றம் உடையவர். நான் பார்த்த அளவில் ரொம்பவும் அடக்கமானவர். வசனத்தை இனிமையாகப் பேசி வார்த்தைகளுக்குப் பூச்சூட்டுபவர்.

பி.கண்ணாம்பா வசனத்தை உணர்ச்சியோடு பேசுபவர். வசனத்தை நான் படிக்கும் போது ரொம்பவும் உன்னிப்பாக கேட்பார். மற்றவர்கள் பேசுவதற்கு எழுதியிருக்கும் வசனத்தை, இந்த வசனம் நன்றாக இருக்கிறது. என் போர்ஷனில் சேருங்கள்" என்று வசனத்தை கேட்டு வாங்குவார்.

"அஞ்சலி தேவி குழந்தை முகம். சூது, வாது அறியாதவர். மங்கையர்க்கரசி படத்தில் அவர் வில்லி. "நான் அழகாக இல்லையா?" என்று அவர் கேட்க, கதாநாயகன் சின்னப்பா "நெருப்புக்கு அழகில்லை என்று யார் சொன்னது" என்று பதில் கேள்வி கேட்பதாக வசனம். மறுநாள் என்னிடம் வந்து, "என்னங்க, நீங்கள் கவிஞரா? ஒரு கவிஞரால்தான் இம்மாதிரி எழுத முடியும் என்று என் கணவர் சொன்னார்" அன்று மாலையே கணவர் ஆதிநாராயணராவை செட்டிற்கு அழைத்து வந்து என்னை அறிமுகப்படுத்தினார்.

இசையமைப்பாளர் ஜி.ராமநாதன்-அவரது டியூனுக்கு சில சமயங்களில் சில வார்த்தைகள் ஒதுங்கும். அப்படி ஒதுங்குபவை நல்ல சொற்களாக இருந்தால் அவற்றை எப்படியும் பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்பார்.

பேட்டி மா.வரதராஜன்

தினமணி வெள்ளிமணி 25-9-1987

உ -11

## சினிமா என்பது ஒரு தனியார் துறை

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா" என்ற அருமையான தத்துவப் பாடல் முதல் ஏராளமான சினிமா பாடல்கள் எழுதியவரும் சிறந்த கவிதை தொகுப்பை வெளியிட்டு மாநில அரசிடம் பரிசு பெற்றவரும் "உவமைக் கவிஞர்" என்று அழைக்கப்படுபவருமான உவமைக் கவிஞர் "சுரதா"வை அவரது இல்லத்தில் சந்தித்து இன்றைய சினிமா உலகம் இலக்கியம் கவிஞர்களின் போக்கு ஆகியவற்றைப் பற்றி கேட்டோம்.

"சினிமா என்பது ஒரு தனியார் துறை. இங்கே பணம் ஒன்றே குறிக்கோள். திறமை நிறைந்தவன் திறமை இல்லாதவன் என்று இங்கே சொல்வது தவறு. வேண்டியவன் வேண்டாதவன் என்ற நிலைதான் அங்கே இருக்கிறது.

"அதனால்தான் இப்பொழுது நீங்கள் சினிமாவுக்கு பாடல்கள் எழுதுவது கிடையாது. சினிமா புரொடக்ஷன் மேனேஜர்களிடம் ஒரு குறிப்பிட்ட கவிஞரை அழைத்து வரச்சொல்லி டைரக்டர் சொன்னால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய கவிஞர்களை தயாரிப்பாளர்களின் முன் கொண்டுபோய் நிறுத்திவிட்டு

"நீங்கள் சொன்ன கவிஞரை பார்க்கமுடியவில்லை" என்று கூறிவிடுவார்கள். இதற்கு அடிப்படை காரணம் பணம். தன்னை அழைத்து சென்றதற்காக பாடல் இயற்றியதற்காக தயாரிப்பாளர்களிடம் இருந்து பெறப்படும் ஊதியத் தொகையில் ஒரு கணிசமான தொகையை புரொடக்ஷன் மேனேஜருக்கு கொடுத்து தங்கள் நன்றியை காட்டுகிறார்கள் இந்தகவிஞர்கள். இப்படி ஆரம்பிக்கப்பட்டதுதான் வேண்டியவன் வேண்டாதவன் என்ற நிலை.

"மேலும் பணபலம் குறைந்த சிறிய தயாரிப்பாளர்களின் வருகையால் இசையமைப்பாளர்களின் சர்வாதிகாரமும் ஆக்ரமிப்பும் பெருத்துவிட்டது. இதுபோன்ற இசையமைப்பாளர்களிடம் தயாரிப்பாளர் தான் விரும்பும் கவிஞரை பாட்டெழுதச் சொல்ல முடியாது. அப்படியே தயாரிப்பாளர் தனக்கு பிடித்தவரை பாட்டெழுதச் சொன்னால் அந்த கவிஞரை ஒரு வாரம் அலைய வைத்துவிட்டு அந்த கவிஞருக்கு பல்லவி வரவில்லை சரணம் சரியில்லை என்று தயாரிப்பாளர்களிடம் கூறிவிட்டு தனக்கு வேண்டியவரை வைத்து பாடல் "ரிக்கார்டிங்கை" முடித்து விடுவார் இசையமைப்பாளர்.

கேள்வி: எம்.எஸ். விஸ்வநாதன் இளையராஜா இசையைப்பற்றி?

பதில்: எம்.எஸ்.விஸ்வநாதன் தெளிந்த நீரோடை. இளையராஜா காட்டாறு எம்.எஸ்.வி. பரதம் பரதத்தில் அபிநயம் மற்றும் முத்திரைகளை தனித்தனியாக கண்டு ரசிக்கலாம் "டிஸ்கோ" வில் ஒட்டுமொத்தமாய் தான் ரசிக்க முடியும். ஆனாலும் இன்றைய இளைஞர்களால் அது ரசிக்கப் படுகிறதல்லவா? இளையராஜா இசையில் "டிஸ்கோ"வை போன்றவர்.

கேள்வி: இன்றைய சினிமாக் கவிஞர்களைப் பற்றி?

பதில்: கவிஞர்கள் என்றுமே கைகூலிகளாகத்தான் இருக்கிறார்கள். இதில் சினிமா கவிஞர்கள் கொஞ்சம் அதிகம். ஏனென்றால் அவர்கள் பணத்திற்காக மட்டுமே பாட்டெழுதுகிறார்கள். இதற்காக சினிமா உலகில் உள்ளவர்கள் சொன்னபடி எல்லாம் ஆடுகிறார்கள். அன்று ராகத்திற்கு பாட்டெழுதப் பட்டது. இதனால் சினிமா தயாரிப்பாளர்களும் இசைமைப் பாளர்களும் கவிஞர்களைத் தேடி ஓடினார்கள். அவர்கள் கொடுக்கும் பாடலை தொட்டு வணங்கி வாங்கினார்கள். பின்பு அரசியல் முதல் முதலில் சினிமாவில் நுழைந்த போது எழுத்துக்காக இசையமைக்கப்பட்டது. ஆனால்...

"இன்று இசைக்காக பாட்டெழுதப்படுகிறது இதனால் கல்லூரியில் கௌரவமான பணியில் இருக்கும் மு.மேத்தாவும் நல்ல பல கருத்துக்களை வாரி இறைத்துக் கொண்டிருந்த வைரமுத்துவும் தங்களின் நிலை மறந்து

இசையமைப்பாளர்களுக்கு "துதி" பாடிக்கொண்டு அவர்களின் பின்னால் அலையும் காலம் வந்திருக்கிறது.

"கண்ணதாசன் போன்றவர்கள் காட்சியின் சூழ் நிலை அறிந்து இலக்கியத்தை மறந்து விடாமல் தங்களுக்கென்று ஒரு எல்லை வைத்துக்கொண்டு சினிமாவின் மூலம் இயன்றவரை இலக்கியத்தை வளர்த்தார்கள். வைரமுத்து, மேத்தா,நா.காமராசன், வாலி, முத்துலிங்கம் போன்றவர்கள் ராகத்திற்கு ஏற்றசொல் அலங்காரங்களை அமைத்துக் கொடுத்து இலக்கியத்தையும் மரபுக் கவிதைகளையும் மறந்து கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: வேகமும் சுறுசுறுப்பும் நிறைந்திருக்கும் இன்றைய சினிமா உலகம் பற்றி...?

பதில்: படங்களின் எண்ணிக்கையும் புதிய தயாரிப்பாளர்களின் வருகையும் வேண்டுமானால் ஒரு வேகத்தை காட்டலாம். சுறுசுறுபடைந்திருக்கிறது என்று சொன்னால் அது தவறு. காரணம் இன்று வந்திருப்பவர்கள் அவர்களின் வரவேற்பு குறையுமுன் பணம் சம்பாதித்துவிட வேண்டும் என்று நினைப்பவர்கள் அன்று பிறந்து அன்று இறக்கும் ஈசல் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களின் புகழ் நீடிப்பது கடினம்.

கேள்வி இவர்கள் இத்தனை அவரசப்படுவது தங்களின் மேலேயே நம்பிக்கை இல்லை என்ற காரணம் தானே?...

பதில்: அப்படித்தான் சொல்லவேண்டும். நம்பிக்கை என்று வரும்போது இவர்கள் அருவருப்பான மனிதர்கள் என்றும் சொல்ல வேண்டும். தன்னம்பிக்கை இல்லாதவர்கள் பிறரை நம்புகிறவர்கள் எப்படி என்றால் அந்த நடிகன் ராசியானவரன் அந்த நடிகை ராசியில்லாதவள் முதன் முதலில் அவர் பூஜை போட்டால் படம் நூறு நாட்கள் ஓடும் என்று அளவுக்கு அதிகமாய் ராசி பலன் பார்ப்பதில் நம்பிக்கை வைக்கிறார்கள். இத்தனை ராசிபார்த்து கடவுளுக்கு பூஜை போட்டு எடுக்கப்படும் படம் ஏன் தோல்வி அடைய வேண்டும்.

கேள்வி: நீங்கள் கூறுபவை சினிமாவின் பரம்பரை வியாதி இந்த வியாதி தீர வழி என்ன?

பதில்: எல்லா துறைகளிலும் பெண்கள் இருப்பது போல அரசு மணிமேகலை, நிர்மலா சுரேஷ், பொன்மணி வைரமுத்து போன்ற திறமையான பெண் கவிஞர்கள் சினிமாதுறைக்கு வரவேண்டும் டி.வி.நிலையத்தார் ஏராளமான "வீடியோ" படங்களை எடுத்து ஒளி பரப்ப வேண்டும் இப்படி ஒரு நிலை வருமானால் இவர் திறமையானவர் இவரை விட்டால் வேறு யாருமே கிடையாது இவர் ராசிக்காரர் என்ற மூட நம்பிக்கை சினிமா உலகில் இருந்து அறவே அகற்றப்படுவதோடு சினிமா சர்வாதிகாரிகளின் கொட்டமும் அடங்கும் என்றார் சுரதா. நாமும் அவருடைய கருத்துக்களை சரிதான் என்று கூறிவிட்டு விடைபெற்றோம்

மிஸ்டர் அந்துமணி
இதழ்: தினமலர்
[16-12-1985]



# பெரியாருடன் சந்திப்பு!

ஆர்.டி. இராசகோபாலன் என்கிற பெயரில் ஒரத்த நாடு உயர்நிலைப்பள்ளியில் வறுமையோடு போராடிக் கொண்டு, படித்துக் கெண்டிருந்த இளைஞன் தன் பின்னாளில் சுரதா என்ற பெயருடன் கவிஞனாகத் திகழ்கிறார்.

பாரதிதாசன் பாதிப்பினால் தன்பெயரை சுப்புரத்தினதாசன் என்று பெயர் வைத்துக் கொண்ட இந்த கவிஞர், தான் மட்டும் கவிஞராக இல்லாது பல கவிஞர்களை உருவாக்கி விட்டிருக்கிறார். தஞ்சை மாவட்டம் பழையனூர் என்ற கிராமத்திலிருந்து சென்னை நகருக்கு குடி வந்து பல வருடங்கள் ஆகியபோதிலும், அந்த கிராமத்து மொழி இன்னும் மாறாதவர். ஓரிருவரைத் தவிர மற்ற அனைவரையுமே அவன் இவன் என்று பேசும் அன்னியோன்னியம் உள்ளவர். அவருடைய உரையாடல் அப்படியே இங்கு பிரசுரிக்கப்படாமல் எழுத்து மொழியாக மாற்றப்பட்டுள்ளது. பல்கலைக் கழக ஆய்வாளர்களில் சுரதா அளவுக்கு எந்த கவிஞரின் நூல்களும் ஆய்வு நூலாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. தமிழக அரசு பரிசு, கலைமாமணி விருது, பாவேந்தர் விருது, ராணா விருது போன்ற பல விருதுகளைப் பெற்ற பேராற்றல் மிக்க கவிஞர். இவர்தொகுத்து வைத்துள்ள தமிழ் இலக்கிய வாழ்வியல் செய்திகள் ஏராளம். ஒரு பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய பணியினை தனிமனித நிறுவனமாக இன்று செய்து வருகிறார். 'பாரதி இறந்த இரண்டு மாதத்தில் நான் பிறந்தேன்' என்று கூறும் இக்கவிஞரின் வயது 72.

கேள்வி : நீங்கள் எந்த ஊரில் படித்தீர்கள்?

பதில்: நான் படித்தது ராஜாமடம். ஒரத்தநாடு. தஞ்சை மாவட்டம். சொந்த ஊர் பழையனூர். அமைச்சர் எஸ்.டி.எஸ்., எல்.

கணேசன். இவர்கள் எல்லாமே ராஜமடத்திலும் ஒரத்த நாட்டிலும் படித்தவர்கள். முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனும்கூட அந்த ஊர்தான். அந்தப் பள்ளி மாணவர்தான்..

**கேள்வி** : பள்ளிப் படிப்பு தவிர தமிழ் இலக்கியம் யாரிடமாவது தனியாகப் படித்தீர்களா?

**பதில் :** தனியாக படிக்கவில்லை. ஆனால் கிருஷ்ணமாச்சாரி என்ற தமிழ் ஆசிரியரிடம் முதலில் பாட்டு ஒன்று எழுதி காட்டினேன். அவர் உற்சாகம் கொடுத்து பள்ளிக்கூட பிரார்த்தனைக் கூட்டத்தில் படிக்கச் சொன்னார். அந்த பாட்டை முதன் முதலில் பாடியவர்தான் இன்று கர்நாடக இசை உலகில் உள்ள ராமன், லஷ்மணன் என்ற இரட்டையர்.

**கேள்வி** படிக்கும்போதே கவிதை எழுதணும்,தமிழ் புலவராகனும் என்ற எண்ணங்கள் இருந்ததா?

**பதில்:** புலவராவதற்கெல்லாம் தனியாகப் படிக்கணும். எல்லாரும் ஊக்கம் கொடுக்கவே கவிதை எழுதினேன். எட்டாம் வகுப்பு படிக்கும் போது என் ஊரில் டீக்கடை வைத்திருந்த அழகப்பன் என்பவர் எனக்கு நண்பரானார். அவர் அந்த நாளிலேயே பெரியார் தலைமையில் கலப்புத் திருமணம் செய்தவர். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர். 1938ல் பாரதிதாசன் கவிதைகள் என்று ஒரு நூல்வந்தது. அது குத்தூசி குருசாமி தொகுத்தது. அந்த நூல் அவரிடம் இருந்தது. அவர் கூப்பிட்டு 'இங்க வாய்யா... என்னமோ கவிதைன்னு கிறுக்கிறியே. இதோ பாரு... எப்படி எழுதறான்' என்று சொல்லி அந்த நூலை என்னிடம் கொடுத்தார். "ஒடப்பராக இருக்கும் ஏழையப்பர்" என்ற பாட்டை படித்துக் காட்டினார். புத்தகத்தை அவரிடம் வாங்கி வந்து படித்துப் பார்த்தேன். ரொம்ப நன்றாக இருந்தது. எப்படியாவது இந்த பாரதிதாசனை பார்த்துவிட வேணும் என்ற எண்ணம். கீவளூர் கோவிலில் ஒரு வாரம் சுண்ணாம்பு அடித்ததில் ஒண்ணே முக்கால் ரூபா கூலி கிடைத்தது. அதை வாங்கிக் கொண்டு அவரைப் பார்க்கப் போனேன். 1941-ல் பொங்கல் அன்று பாரதிதாசனைப் பார்த்தேன். அப்புறம் அங்கேயே தங்கிட்டேன்.

**கேள்வி:** பாரதிதாசன் சீடர்களில் ஒருத்தராகவா?

**பதில்:** ஆமா. மொத்தம் நாற்பத்தேழு பேர்.

**கேள்வி:** எப்படி இந்த நாற்பத்தேழு கணக்கு?

**பதில்:** பாரதிதாசன் பரம்பரை என்று பொன்னி முருகு சுப்பிரமணியம் ஒரு பட்டியல் தொகுத்தார். நா.ரா.நாச்சியப்பன், நாஞ்சில் மனோகரன் இப்படி ஒரு நாற்பத்தேழு பேர். அதில் நான் ஒருவன்.

**கேள்வி:** பாரதிதாசன் தொடர்பினால் தான் உங்களுக்கு திராவிட இயக்கத்தின் தொடர்பு ஏற்பட்டதா?

**பதில்:** அதற்கு முன்பே தொடர்பு உண்டு. நமச்சிவாய முதலியார் என்று ஒருவர். பெரியாருடைய குடியரசு பத்திரிகை எல்லாம் வரவழைப்பார். என்னை படிக்கச் சொல்வார். அப்புறம் ராஜகோபால் பிள்ளை என்று ஒருவர். அவர் தினமணியைப் படிக்கச் சொல்லி ஊக்கம் கொடுப்பார். அவர் காங்கிரஸ்காரார்.

**கேள்வி:** அப்போது காங்கிரஸ் இயக்கம் இருந்தது. திராவிட இயக்கமும் இருந்தது. நீங்கள் திராவிட இயக்கத்தைத் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன?

**பதில்:** காங்கிரசில் ஜாதி மதம் எல்லாம் பார்த்தார்கள். ஐயர்கள் பாதிப்பு காங்கிரசுக்கு அதிகம் இருந்தது. நாம் வேறு; அவர்கள் வேறு என்ற நினைப்பு எனக்கு உண்டு. ஆகவே காங்கிரசை எதிர்க்கவேண்டும் என்ற எண்ணம் வந்தது. அதனால் திராவிட இயக்கத்தில் சேர்ந்தேன்.

**கேள்வி:** பெரியாருடன் உங்களுக்கு எப்போது சந்திப்பு ஏற்பட்டது?

**பதில்:** ரொம்ப நாள் கழித்துதான் பெரியாரை நான் சந்தித்தேன். திரு.வி.க.வை நான் சந்திக்கப் போனேன். 'எந்த ஊர் தம்பி' என்று கேட்டார். 'திருவாரூர்' என்றேன். 'அட... நம்ப ஊரு' என்றார். 'என்ன செய்யுறீங்க' என்று கேட்பார். 'படத்துக்கெல்லாம் டயலாக் எழுதறேன்' என்று சொன்னேன். 'அடிக்கடி வந்துட்டு போங்க தம்பி' என்றார். அப்போது ஒருநாள் பெரியார் திரு.வி.கவைப் பார்க்க வந்தார். பெரியாருக்கு என்னை திரு.வி.க.தான் அறிமுகப்படுத்தி வைத்தார்.

**கேள்வி:** சுயமரியாதை இயக்க மேடைகளேறி பேசி இருக்கிறீர் களா?

**பதில்:** ஒரத்தநாடு போன்ற இடங்களில் பாவலர் பாலசுந்தரம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி இவர்களோடு மேடைகளில் பேசி இருக்கிறேன்.

**கேள்வி:** அப்போதெல்லாம் உங்கள் குடும்பப் பின்னணி எப்படி?

**பதில்:** நாங்கள் நெசவாளர் குடும்பம். திருநாகேஸ்வரத்தில் அப்பாவுக்கு நெசவுத் தொழில் நன்றாக நடந்து, முடிவில் நொடித்துப் போய்விட்டது. அதன் பின்னரே பழையனூர் வந்தோம். வறுமையான குடும்பம்தான் எங்கள் குடும்பம்.

**கேள்வி:** திரைப்படத் துறைக்கு எப்படி வந்தீர்கள்?

**பதில்:** புதுக்கோட்டையில் ஒருவர் 'தலைவன்' என்று ஒரு வாரப் பத்திரிகையை நடத்தினார். அதில் நான் துணையா சிரியராக இருந்தேன். கு.சா. கிருஷ்ணமூர்த்தி எனக்கு நண்பர். அவரைப் பார்க்க வந்த சினிமா தயாரிப் பாளர்களிடம் அவர்தான் என்னை அறிமுகப் படுத்தினார். 'என்னைவிட நன்றாக எழுதுவார் இவர்' என்று அழுத் தமாக அறிமுகப்படுத்தியவுடன், அந்தத் தயாரிப்பாளர் சென்னைக்கு வரச் சொன்னார். அடுத்த வாரமே சென்னை வந்தேன். 'மங்கையற்க்கரசி' படத்திற்கு வசனம், பாடல்கள் எழுதினேன். நடிகர் சின்னப்பாவும் பெரும் ஆதரவு அளித்தார். அதன் பின்னர் பாகவதரின் 'அமரகவி' படத்திற்கு வசனம் பாடல்கள் எழுதினேன்.

**கேள்வி:** ஒரு முன்னோடிக் கவிஞரான நீங்க தொடர்ந்து திரைப்படப் பாடல்களில் ஒரு சிகரத்தை பிடிக்காமல் போனதற்கு காரணம் என்ன?

**பதில்:** மருந்து மாதிரி என்னை பயன்படுத்துவது வழக்க மாகிவிட்டது. ஒரு பாட்டு, இரண்டு பாட்டு என்று எழுத சந்தர்ப்பம் கொடுப்பார்களே தவிர, தொடர்ந்து எழுத கூப்பிடமாட்டார்கள்.

**கேள்வி:** நீங்களா போய் வாய்ப்புக் கேட்பதில்லையா?

**பதில்:** கேட்டா மட்டும் கொடுத்திடுவானா? கைராசி பார்க்கிறவங்களாயிற்றே! முன்னேபல்லாம் பாபநாசம் சிவன் முதல்பாட்டு எழுதினால் அது ராசி என்று சொல்லி,

படத்தில் வருகிறதோ இல்லையோ முதல் பாட்டை எழுதி வாங்கி விடுவார்கள். பிறகு 'குரூப்' வர ஆரம்பித்தது. மருதகாசி போன்றவர்கள் ஏ.பி.நாகராசன் க்ரூப். அவர்கள் சம்பந்தப்பட்ட படத்துக்கெல்லாம் அவரே எழுதுவார். இப்படிபல காரணங்களால் எனக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதோடு படத்திலும் பாடல்கள் குறைய ஆரம்பித்தன.

**கேள்வி:** ஆரம்ப காலத்தில் திரைப்படங்களில் நிறைய பாடல்கள் இருந்தன அல்லவா?

**பதில்:** 1934ல் வந்த நல்லதங்காள் படத்தில் 64 பாட்டுக்கள் இருந்தன. பரமக்குடி சிவராமலிங்கம் பிள்ளைதான் ஒரே படத்திற்கு 64 பாட்டு எழுதினவர். பக்தி பாடல்கள் எழுத வேண்டுமென்றால் பாபநாசம் சிவனைக் கூப்பிடுவார்கள். அவருடைய பல்லவிகள் எல்லாம் ரொம்ப அருமையாக இருக்கும். ஜனங்கள் மத்தியில் அப்படியே நின்று விடும். ஒருவித திணறலும் இருக்காது. பாடலில் பொருள். கருத்து வேண்டுமென்றால் உடுமலை நாராயண கவியை அழைப்பார்கள். வார்த்தைகளின் அழகு வேண்டு மென்றால் கம்பதாசனை அழைப்பார்கள். அப்பொழுது இருந்த இசையமைப்பாளர்கள் பாட்டு எழுதுபவர் களுடைய திறமையை முழுக்க முழுக்க கையாளுவார்கள். கவிஞனுக்கு ரொம்ப மரியாதை உண்டு. ஓர் அருளால் தான் அவன் எழுதுகிறான் என்று நினைப்பார்கள். பாட்டு எழுதிக் கொடுத்தவுடன் அதைத் தொட்டுக் கும்பிட்டு வாங்கிக் கொள்வார்கள். ஒரு பாட்டுக்கு இருநூறு ரூபாய் சன்மானம் வழங்குவது என்பது அந்தக் காலத்தில் பெரிய தொகை. கம்பதாசன் ஒரு நாளைக்கு நான்கு பாட்டு எழுதி லட்ச லட்சமாக சம்பாதித்தவர். ஆனால் சேமிப்பு என்ற பழக்கம் இல்லாமலும் பல கெட்ட பழக்கவழக் கங்களினாலும் சீரழிந்து போனவர்.

**கேள்வி:** சினிமாப் பாடல் மெட்டுக்கு எழுதப்படுவது அது கவிதையாகுமா?

**பதில்:** ஏன் ஆகாது. 'தீ மீதினில் ஈ மொய்ப்பதுண்டோ, நீல வானின் மீது நிழல் படிவதுண்டோ' என்றும், 'மனம் விரும்பும் பொருளினை கனவில் கண்டாலும் மையல்

தீருமோ? மா மலரின் நிழல்தான் மணம் வீசுமோ? செங்கதிரின் சுடர் போல என் கரம் நீண்டிருந்தால் அந்த சிங்காரச் சிலைதனை இங்கிருந்தே தொடுவேன்' என்ற வரிகள் கவிதைகளில்லையா?

**கேள்வி:** இப்போது வருகிற சினிமா பாடல்களைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** இருக்கிறது. சின்னச் சின்னதாக இருக்கிறது. அது போதும் என்று நினைக்கிறார்கள். நல்ல கருத்துக்களை வைத்து எழுத வேண்டும் என்ற எண்ணம் குறைவாக இருக்கிறது. 'கீத கோவிந்தம்' என்ற படத்தில் 40 அல்லது 42-களில் என்று நினைக்கிறேன். ஒரு பெண் பாடலாசிரியை 'ஆறு மணி நேரம்தான் உழைப்பாளர் வேலை செய்ய வேண்டும்' என்ற கருத்தை வைத்து பாடல் எழுதியிருக்கிறார். கோவிலுக்குச் சென்று எல்லாரும் வழிபட முடியவில்லை. எனவே கோவில்களை இடித்து விடலாம் என்று அந்தக் காலத்தில் புரட்சிகரமாக பாட்டு எழுதியவரும் உண்டு. அவர்தான் பாபநாசம் சிவனுடைய அண்ணனான ராஜகோபால அய்யர். அன்றைக்கு மக்களிடையே படிப்பறிவு குறைவாக இருந்தது. ஆனால் 'இந்த மக்களை ஏமாற்றி விடலாம்' என்று எந்தக் கவிஞனும் எழுத மாட்டான். சரியான சொல்லுக்காக நாள் கணக்கா காத்திருப்பான். இப்போது படிப்பறிவு அதிகமாக உள்ளது, பாராட்டுவதற்கும் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அதை நினைத்துக் கொண்டாவது நல்ல பாடல்களை எழுதலாம்.

**கேள்வி:** முதன் முதலாக சினிமா பாடலைத் தவிர கவிதையாக எதில் எழுதினீர்கள்?

**பதில்:** திருச்சியில் திருலோக சீதாராம் தனது சிவாஜி பத்திரிகையில் எனது கவிதைகளை தொடர்ந்து பிரசுரித்தார். பொதுவாக தமிழ்நாட்டில் தன்னை முதன்மைப்படுத்திதான் மற்றவர்களை அரைகுறையாக அடையாளம் காட்டுவார்கள். ஆனால் திருலோக சீதாராம் தன்னளவில் கவிஞராக இருந்தும்கூட என்னை முதன்மைப்படுத்தி பிரசுரித்தார். அதோடு மட்டுமல்ல

திருச்சி வானொலி நிலையத்தில் நடந்த கவியரங் கங்களில் நான் பாடுவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தவரும் அவர்தான்.

நீங்கள் மரபுக் கவிஞராகவே வளர்ந்தவர். இப்போது புதுக்கவிதை கொடிகட்டிப் பறக்கிறது. மரபுக் கவிதையே இல்லையென்று ஆகிவிட்டது. இந்தப் புதுக்கவிதை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

புதுக்கவிதை நல்ல ஒரு சிந்தனைதான். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால் அதை கவிதை என்று சொல்வதைவிட ஒரு வடிவம் என்று சொல்லலாம். அந்த வடிவம் திரும்ப எடுத்து இன்னொருவருக்கு சொல்வது என்பது முடியாத கஷ்டமான செயல். எதுகை, மோனை, சந்தம் இவை இல்லையென்றால் மனதில் நிற்பது கஷ்டம். உரைநடையைப் படித்துவிட்டு நாம் அப்படியே சொல்ல முடியுமா. நம்முடைய மொழிக்குத் தானே மாற்றி அந்தக் கருத்தைச் சொல்கிறோம். ஆனா கவிதை உரைநடையில்லாததால் சில கட்டுக்கோப்புகள் தேவைப்படுகிறது. அந்தக் கட்டுக்கோப்புகளை மீறுகிற போது அது உரைநடை போலாகிவிடுகிறது!

**கேள்வி:** கவிதைக்கு மொழி வாகனமே அன்றி மொழியே கவிதை அல்ல என்ற கருத்து இருக்கிறதே?

மொழி வாகனம்தான் ஆனால் மொழி என்பதும் வெறும் சொற்கள் மட்டும் அல்ல. மொழி என்ற பெயரில் சிந்தனையைத் தானே சொல்லுகிறோம். ஆங்காங்கே கிடக்கிற சொல்லை சிந்தனைக்காக தானே சேர்க்கிறோம். செந்தாமரை என்கிறோம். ஏன் தாமரையை அப்படிச் சொல்கிறோம். வெண்தாமரை இருப்பதால் செந்தாமரை என்கிறோம். அப்போது மொழியே சிந்தனை ஆகிறது அல்லவா. கவிதைக்கு வாகனமாகவும், சிந்தனையா கவுமே மொழி இருக்கிறதல்லவா? அதோடு மொழி என்பது நாம் பேசுகிற ஐநூறு ஆயிரம் வார்த்தைகளுக்குள்ளே அடங்கிவிடுமானால் மொழியே அடிபட்டுப் போய் விடுமே! ஆழி என்றால் கடல்- அதுவே புனல் என்றும் அழைக்கப்படும். கடல் என்ற ஒரு சொல்லே போது மென்றால் மற்ற வார்த்தைகள் அடிபட்டுப் போகும்.

அதனால் மொழி வெறும் வாகனம் மட்டுமல்ல. அதுவே கவிதை.

**கேள்வி:** கவிதை என்பது மொழிகளை, சீர், தளைகளைக் கடந்து மனதில் படிமங்களை உருவாக்குவது, அனுபவங்களை உருவாக்குவது என்ற கருத்து உங்களுக்கு உடன்பாடா?

**பதில்:** எதை உருவாக்கினாலும் அது அருபமாக உருவாக்கப் படுவதில்லையே. ஒரு அடையாளத்தைத்தானே உருவாக்குகிறது. 'மூக்கு' என்று சொன்னால் முகத்தில் உள்ள ஒரு உறுப்பைத்தானே அடையாளங் காட்டுகிறது. ஆகவே சொற்கள் இல்லாமல் படிமங்கள் உருவாகும். சொற்களை கொடுப்பது மொழி தானே. அதே போல சிந்தனை மட்டும் கவிதையாகாதே. அதற்கு மொழி வேண்டும்.

**கேள்வி:** காதில் கேட்கப்படுவது முக்கியமாக இருந்த காலத்தில், அது மனதில் நிற்க சந்தங்கள், எதுகை, மோனை தேவைப்பட்டது. இப்போது அச்சு ஊடகம் வந்து விட்டது. பார்வையால் படித்து விடுகிற போது இந்தச் சந்தம், சீர்போன்றவை தேவையில்லை என்ற விவாதம் பற்றி?

**பதில்:** சரி மரபுக் கவிதையை விட்டு விடலாம். இப்போது இதை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இதையும் தாண்டி கவிதை இன்னும் மேலே போகும்போது இது என்னாவது. இப்படியே ஒவ்வொன்றையும் நிராகரித்துக் கொண்டு போகும் போதுதான் கவிதைதான் என்னாவது?

**கேள்வி:** நீங்களும் உங்களைப் போன்ற உங்கள் காலத்திய கவிஞர்களும் தமிழிலக்கியத்திற்கு அளித்த பங்களிப்பு என்று எதைக் கருதுகிறீர்கள்?

**பதில்:** இப்போது அண்ணாமலை செட்டியாரால் பரிசு பெறும் முடியரசன் நல்ல காவியங்களை எழுதியுள்ளார். வாணிதாசனும் காவியங்கள் எழுதியுள்ளார். நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, தேசிய விநாயகம் பிள்ளை போன்ற கவிஞர்களின் கருத்துக்களில் இருந்து கொஞ்சம் புரட்சிகரமான மாற்றத்தை எங்கள் அணியில் உள்ள கவிஞர்கள் கொண்டு வந்தார்கள் என்று சொல்லலாம்.

இன்றைக்கு அந்தக் கருத்துக்கள் புதிதாக இல்லாமல் இருக்கலாம். அந்தக் காலத் தேவைக்கு அந்தக் கருத்துக்கள் முற்றிலும் புதிது.

**கேள்வி:** ஆனால் பெரும்பாலும் உங்கள் கவிதைகளில் சமூகம் சார்ந்த கருத்துக்களை விட இயற்கை சார்ந்த வர்ணிப்புகளே அதிகம் உள்ளன என்று கூறலாமா?

**பதில்:** முரசொலி பத்திரிகையின் சமூகம் சார்ந்த கவிதைகள் நிறைய எழுதியிருக்கிறேன். இருபத்தெட்டு வாரம் எழுதினேன். ஆனந்த விகடனில் மணியன் எழுதச் சொன்னதால் இருபத்தியோரு வாரம் எழுதினேன்.

**கேள்வி:** ஆனால் நீங்கள் சொந்தமாக 'சுரதா' என்ற கவிதைப் பத்திரிகையை நடத்தும் போது சமூகம் சார்ந்த கருத்துக்களை அதிகமாக எழுதவில்லையே?

**பதில்:** பொதுவாக சாதி, மதம், கடவுள் மூட நம்பிக்கை எதிர்ப்பு போன்று 1950களில் எழுதிய கவிதைகள் 69-70களில் வரும்போது ரொம்ப பழைய கருத்துக்களாகி விடுவதால் அதை நான் எழுதவில்லை.

**கேள்வி:** ஆனால் அதில் 'சுவரும்- சுண்ணாம்பும்' என்ற பகுதியில் நடிகைகளைப் பற்றி கடுமையாகவே கிண்டல் செய்தும், தாக்கியும் எழுதியிருக்கிறீர்கள். ஒரு நடிகை நகத்தைக் கடிக்கும் பழக்கமுள்ளவள் என்பதைக் குறிப்பிட 'ராத்திரிக்குதவும் பூத்திரி நடிகை மூடி வைத்துள்ள முழுத்தேங்காயை குத்தகையாளர்க்குக் கொடுத்து, தித்திக்கும் காய்களை தினம் கடிக்கலாமே' என்றும் 'திரைப்படத் தேவியர் நாணத்தைக் காட்டு எனில் ஏனத்தைக் காட்டுவார்கள்' என்றும் எழுதியிருக்கிறீர்கள். இவைகள் எல்லாம் ஆபாசம் என்று நீங்கள் கருதவில்லையா?

**பதில்:** அவை கிண்டலுக்காக எழுதப்பட்டவை. அது ஆபாசம் என்று நினைத்தால் ஆபாசம்தான். கொக்கோகம் இல்லையா?

**கேள்வி:** ஏன் ஆண்களைப் பற்றி எழுதாமல் பெண்களைப் பற்றியே எழுதியிருக்கிறீர்கள்?

**பதில்:** பெண்களைப் பற்றி எழுதினால்தான் கவர்ச்சி இருக்கும்.

**கேள்வி:** இன்றைக்கு ஒட்டு மொத்தமாக 'சுரதாவின் கவிதைகள்' பற்றி ஒரு ஆய்வாக்கம் நடத்தி சுரதா மன்னர் கால நில மான்ய சமூகத்தைச் சார்ந்த கவிஞர்களைப் போன்றவர் என்று தீர்ப்பு வழங்கினால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

**பதில்:** ஏற்றுக் கொள்ளலாம். நான் நாத்திகன். எனக்கு மொழிப்பற்று கிடையாது. எந்த அர்த்தத்தில் சொல்கிறேன் என்றால் உணவு இல்லாமல் முடியாது என்றால் அதன் மீது பற்று வைப்பதாக அர்த்தமில்லை. அது போல மொழி இல்லாமல் முடியாது என்பது பற்று அல்ல. பற்று என்பதை நாம் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் கடமைக்குரியதை மாற்ற முடியாது. பல விஷயங்கள் எனக்கு உடன்பாடில்லை. எனது பேராற்றலால் என்னை ஒத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர என் கருத்துக்களால் அல்ல. ஒரு தலைமையே நீண்ட காலம் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறேன். ஒருவனையே எப்போதும் பெரிதாக சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது என்று சொல்கிறேன். இந்த நூற்றாண்டிலோ போன நூற்றாண்டிலோ ஏதோ உயர்ந்து இருக்கலாம். ஆனால் அடுத்த நூற்றாண்டு பின்னால் வருமே. இப்போது ஜாதி வேண்டாம், மதம் வேண்டாம், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று எப்போதோ சொல்லியாகிவிட்டதே. சொன்னால் நடந்து விட வேண்டியதுதானே. திரும்பத் திரும்ப இவைகளைச் சொல்வதில் எனக்கு அலுப்புத் தட்டுவதால் அதைச் சொல்வதில்லை. அதோடு புகழே கூடாது என்பதும் எனது கொள்கை.

**கேள்வி:** சிலப்பதிகாரம் வெறும் செய்திதான் என்று ஒரு முறை நீங்கள் சொன்னதாக....?

**பதில்:** ஆமாம் முதலில் அது செய்தி தானே. 'கோவலன் என்கிற செட்டியாரை ராஜா வெட்டிட்டாரு' என்ற செய்தி தானே பரவி இருக்கும். அது தானே அப்புறம் காவியமாகி இருக்கிறது. ஏதார்த்தத்தில் எது உண்மையோ அதை நம்மவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. அடிப்படையை மறந்துவிட்டு பின்னாளில் அதன் மீது எழுந்த கற்பனையை பெரிதாக நினைக்கிறோம். பல் என்பது முத்துப்பல் என்பது பின்னாளில்தான். பற்களும் ஒருவித

எலும்புதான் என்று நினைக்கவும் நமக்கு பக்குவம் வேண்டும் என்று நாலடியாரில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் ஒழுக்கம் இருக்க வேண்டுமென்றால் இலக்கியம் வளரக்கூடாது என்றுகூட கூறுகிறேன். ஏனென்றால் அது கவர்ச்சி மயக்கத்தை உண்டாக்கிவிடும். 'மூலப் பொருளைக் காட்டாது' 'பைமறியாப் பார்க்கப்படும்' என்று சங்க இலக்கியத்தில் சொன்னார்கள். பையைத் திருப்புகிறபோதுதான் அது எத்தனை தையல்களைக் கொண்டிருக்கிறது என்பது தெரியும். அதுபோல உடம்பை தூக்கிப் பிடித்தால் அதில் எத்தனை எலும்பு இருக்கிறது. எத்தனை நரம்பு இருக்கிறது என்று தெரியும். அப்படிப் பார்க்க பழக்கப்பட்டிருந்தால் நமக்கு மயக்கம் வராதல்லவா?

**கேள்வி:** இலக்கியத்தினால் சமூகத்திற்கு நஷ்டம் என்றா கூறுகிறீர்கள்? இது எதிர்மறை கருத்தாக இருக்கிறதே?

**பதில்:** ஒரு பொருளை பார்ப்பதைவிட கையில் இருக்கும் போதுதான் கனம் தெரிகிறது. இலக்கியம் வந்த பிறகு உழைப்பு வீணாகிவிட்டது. இன்னொன்று கவிதை வந்த பிறகு அதன் கருத்தை எடுப்பதை விட்டுவிட்டு கவிதை நயம் பார்க்க ஆரம்பித்து விட்டோம். அருமையாக எழுதியிருக்கிறார் என்று சொல்கிறானே தவிர சரியாக எழுதியிருக்கிறார் என்று சொல்கிறானா?

**கேள்வி:** கவிதை எதிர்காலம் எப்படி இருக்கும்னு நினைக்கிறீர்கள்?

**பதில்:** கவிதையினுடைய எதிர்காலம் பிரகாசமாக இல்லை என்று தான் நினைக்கிறேன். சுருக்கமாக, சின்னச் சின்னதாக கவிதைகளே வரும். 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்று இருக்கிறதே அந்த அளவுக்கு.

**கேள்வி:** ஹைகூ கவிதைகள் என்று புழக்கத்தில் வந்திருக்கிறதே அது போலவா?

**பதில்:** அது மாதிரிதான். சின்னச் சின்ன துண்டுகளாக கருத்து போதும். அளவுச் சாப்பாடு மாதிரி ஆகிவிடும்.

**கேள்வி:** தாங்கள் ஏன் ஒரு காவியம் படைக்க எண்ணவில்லை?

**பதில்:** படைக்கவில்லை. என்ன காவியம் எழுத முடியும். அப்போது எல்லாம் நேரம் அதிகம் இருந்ததால் காவியம் எழுதிக் கொண்டிருந்தான். இன்றைக்கு ராமாயணம்

எழுதப்பட்டால்கூட நாலு பக்கத்திற்குள் எழுதினால் போதுமானது. முந்து தமிழ்னு சுருக்கமாக ஒரு வார்த்தையைப் போடும் போது (அருணகிரி போட்ட வார்த்தை) காலத்தால் முந்தியது. கருத்தால் முந்தியது, சிந்தனையால் முந்தியது, வடிவத்தால் முந்தியது என்று எல்லாமே அதற்குள் அடக்கமாகி விடுகிறதல்லவா... இன்றைக்கு சுருக்கமே சிக்கனமே கவிதைக்கு மொழியாக இருக்கிறது.

**கேள்வி:** நீங்கள் ஆண்டவன் மீது துதிப்பாடல்களாக எதுவும் எழுதியிருக்கிறீர்களா?

**பதில்:** இல்லை. துதிப்பாடல்கள் வந்த போதுதான் அதாவது எல்லாம் வல்ல இறைவனை துதிப்பது என்று பாடுகிற போது- அது அடுத்த கட்டமாக கொஞ்ச நஞ்சம் திறமை யுள்ள தனி மனிதனை துதிப்பது என்று ஆகி விடுகிற தல்லவா? பிறகு அந்த துதிப்பாடல் 'வியாபாரத் துக்கென' ஆகி விட்டது. என்னைப் பொறுத்தவரையில் நான் யாரைப்பற்றியும் துதிப்பாடல்கள் எழுதியதில்லை. பாரதிதாசனாக இருந்தாலும் அது துதியாக இல்லாமல் சரியாக நிறுத்துத்தான் எழுதுவேன்.

**கேள்வி:** ஆனால் தாங்கள் 'தற்கால சேக்கிழார்' என்று கூறுகிற அளவுக்கு எத்தனையோ புலவர்களைப் பற்றி, அறிஞர்களைப்பற்றி, வீரர்களைப்பற்றி எழுதியிருக் கிறீர்கள். உதாரணமாக ராஜாராம் மோகன்ராய், வேதநாயகம்பிள்ளை, உ.வே.சாமிநாத அய்யர், பாஸ்கர சேதுபதி பற்றியெல்லாம் எழுதியிருக்கிறீர்கள்?

**பதில்:** அதுமட்டுமல்ல. பாபரைப் பற்றியும் எழுதியிருக்கிறேன். அவன் வந்த போது 'இந்தியா எப்படி இருந்தது' என்று ஒரு நூல் எழுதியிருக்கிறான். அதை அடிப்படையாக வைத்து கவிதை எழுதினேன். உரையாசிரியர் மீது யாரும் கவிதை எழுதுவதில்லை. பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் என்ற உரையாசிரியர் மீது 'நற்றிணைக்கோர் பழுதுஇலா உரையும் கண்டார்' என்று எழுதியிருக்கிறேன். வரலாற்று நூலில் இடம் பெறுகிறதோ இல்லையோ இவர்களை தமிழ் இலக்கியத்தில் பதிவு செய்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதப்பட்டலவை இந்தக் கவிதைதான்.

**கேள்வி:** அந்தக் காலத்தில் எழுதப்பட்ட கடிதங்கள் கூட பல உங்களிடம் உள்ளன, இவைகளை சேகரித்தீர்களா?

**பதில்:** ஆமாம், தமிழில் இதுவரை பதினாறாயிரம் நூல்கள் வந்திருக்கின்றன; கவிதையில் எட்டாயிரம் நூல்கள் வந்திருக்கின்றன. என்றும் பட்டியல் போட்டு வைத்திருக்கிறேன். முன்னோடியாக யார் யார் எதைச் செய்தார்கள் என்பதையும் தொகுத்து வைத்திருக்கிறேன். இன்றைக்கு ஸ்ரீரங்கம் கோவிலில் கருவறை நுழைவுப் போராட்டம் நடந்ததாக செய்தி வருகிறது. ஆனால்1897-ம் வருடத்திலேயே வருண தர்ப்பணம் என்ற நூலில் இந்த செய்தி வருகிறது. 'இராமநாதபுரம் ராஜா, கமுதி கிராமத்திலுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்குப் பரம்பரையான தரும கர்த்தாவானபடியால், அவ்வூரிலும் வெளியூர்களிலுள்ள சாணார்கள் அவ்வாலயத்தில் பிரவேசிக்காதபடிக்கு மதுரை சப்-ஜட்ஜியினிடத்தில் உத்தரவு பெறும் பொருட்டு வியாஜியம் தொடுத்தார். 1987-ம் வருடம் மே மாதம் 14-ம் தேதி இருளப்ப நாடானும் இன்னும் சில சாணார்களும் பலாத்காரமாய் ஆகமத்திற்கும் வழக்கத்திற்கும் விரோதமாய் கோயிலுக்குள் பிரவேசித்து, மூலஸ்தானத்திற்குப் போய் தங்களுக்கும் கோயிலுக்குள் நுழைந்து பூஜிக்கும் சுதந்திரமுண்டென்று சாதித்தார்கள்- என்று பக்கம் 375ல் எழுதியிருக்கிறார். வன்னிய குல க்ஷத்திரிய மகாசங்க இன்ஸ்பெக்டர் கா. ஆறுமுக நாயக்கரவர்கள் இயற்றிய இந்நூல் 1907-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 27-ம் நாள் சென்னை அன்னதான சமாஜ விடுதியில் பட்ட ஸ்ரீ பாலசரஸ்வதி பண்டித சுதர்சன நாராயண சாஸ்திரிகள் தலைமையில் அரங்கேற்றப்பட்டது என்ற செய்தியும் கொடுத்திருக்கிறேன்.

**கேள்வி:** இடைக்காலத்தில் தோன்றிய சமயப் பாடல்கள், பக்தி இலக்கியங்களைப் பற்றி நீங்கள் என்ன விமரிசனம் செய்கிறீர்கள்?

**பதில்:** சமயக் கருத்துக்கள்கூட சமுதாய முன்னோடிக் கருத்துக்கள் தான் என்று நான் சொல்லுவேன். ஆண்டவனைப் பற்றி பாடுகிற பாடல்களிலும் ஒரு இரண்டு வரி, ஆண்டவனைப் பற்றி பாடுகிறான் பின்னர்

ஊரைப் பற்றி, நாட்டைப் பற்றி, சமுதாயத்தைப் பற்றிதான் பாடுகிறான். பெரிய புராணத்தை எடுத்துக் கொண்டால் அது சமய நூல் ஆனால் நந்தனாரையும் (திருநாளைப் போவார்) எழுதியிருக்கிறது. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு செங்குந்தரான சேக்கிழார் தீண்டத்தகாதவன் எனக்கருதப்பட்ட நந்தனாரைப் பற்றி துணிந்து எழுதினர் என்றால் சமுதாய முன்னேற்றத்துக்கு அவன் முன்னோடியாகத் தானே இந்திருக்கிறான். அறுபத்தி இரண்டு பேரை மட்டும் எழுதிவிட்டு நந்தனாரைப் பற்றி எழுத மாட்டேன் என்று சொல்லியிருக்கலாமே. சமுகத்தில் பக்தி இலக்கியம் என்பது ஒரு கூறுதானே. 'கடவுள் எல்லாம் செய்வார்'னு சொல்லிவிட்டு சும்மா இருந்து விடவில்லையே. மனிதன்கிட்டே தானே வந்தான். மனிதனைப் பற்றி அவன் சொல்லித்தானே ஆக வேண்டும்.

**கேள்வி:** இப்போது உள்ள புலவர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** விளம்பரம் பெற்ற நூல்களைமட்டும் இவர்கள் படித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விளம்பரம் பெறாத எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. எத்தனையோ சிந்தனைகளும் செய்திகளும் இருக்கின்றன. ஒரு சமணன் முகம் கழுவ ஒரு ஆற்றங்கரைக்குப் போகிறான். அந்த ஆற்றில் மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. அதைப் பார்த்தவுடன் தின்ன வேண்டும் என்ற ஆசை அவனுக்கு வருகிறது. சமண மதத்திலிருந்தால் புலால் உண்ண முடியாதாகையால் அவன் மதம் மாறினான் என்று ஒருசெய்தி கூறுகிறது. நூலறிவு என்பது திறமைக்கு. செய்தி அறிவு என்பது வாழ்க்கைக்கு. இப்போது உள்ள நூற்றாண்டுகள் எல்லாம் மறைந்து இதுவே முதல் நூற்றாண்டு என்று இருக்கட்டுமே. ஆனால் நமக்கு இந்த எல்லா நூல்களும் இல்லாமல் இருக்கும். ஆனால் மனிதன் வாழாமலா இருப்பான்? எனவே நூலறிவு என்பதைவிட மனிதன் வாழும் அறிவு என்பது முக்கியம்.

**கேள்வி:** இன்றைய தினம் பகுத்தறிவு இயக்கம் அல்லது திராவிட இயக்கம் அதனுடைய சமூக சீர் திருத்தக் கோட்பாடு,

புரட்சிக் கோட்பாட்டிலிருந்து விலகி வெகுதூரம் வந்து விட்டதாக நீங்க நினைக்கிறீர்களா?

**பதில்:** ஆமாம், ஏனென்றால் சமூகம் இவர்கள் கருத்தினால் மட்டும் நிற்பதில்லை. விஞ்ஞானமும், அறிவும் வளர்ச்சியடையும்போது அவனவன் தனக்கான கருத்துக்களை தானே தேர்ந்தெடுக்கிற தகுதிபெற்று விடுகிறானே. 'இவர்கள் சொல்லித்தான் நடக்க வேண்டும்' என்பதெல்லாம் இப்போது அடிபட்டுப் போய்விட்டதே. முற்போக்கான செய்திகள் எல்லாம் கவிதைகளிலும் வருகிற போது மனிதன் தானாகவே தெரிந்து கொள்கிறான். 'வெறுங்கை என்பது மூடத்தனம்- உன் விரல்கள் பத்தும் மூலதனம்' என்று கவிஞர் தாரா பாரதி எழுதி இருக்கிறார். இதில் எவ்வளவோ அறிவுரைகள் அடங்கி விட்டதே.

**கேள்வி:** கவிதை என்பதற்கு கோட்பாடுகள் தேவை தானா?

**பதில்:** கவிதை என்பது வடிவம். ஆணையும் பெண்ணையும் உடுத்துகிற உடையால் வேறுபடுத்திப் பார்க்க வேண்டி இருக்கிறதல்லவா. ஆகக் கவிஞனுக்கு உரைநடையிலிருந்து ஒரு வேறுபாடு தேவைப்படுகிறது. கவிதைக்கு எந்த வடிவத்தை நீங்கள் வைத்துக் கொண்டாலும் ஒரு வடிவம் வேண்டும். மூக்கு என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்வதனால் 'மூக்கு' என்று திட்டவட்டமாக சொல்லுகிறோம். 'மூக்கு' என்பது இப்படியும் இருக்கலாம் அப்படியும் இருக்கலாம் என்றால் குழப்பம்தான் வரும். யாப்பு என்றால் கட்டுப் படுத்தல் என்று அர்த்தம். கவிதை ஒரு கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். கவிதை என்பதுகூட பின்னால் வந்த வார்த்தை முன்னால் இதை 'செய்யுள்' என்று சொல்லிக் கொண்டிருந்தோம். இது செய்யப் படுவது என்று பொருள்படுகிறது. உரைநடை யாப்புக்கு கட்டுப்பட வேண்டாம். மனிதன் வாழ கொஞ்சம் கருத்து இருந்தா போதுமே... ஏன் பக்கம் பக்கமா வேணும். ஆறுமுகக் கடவுள், அவனைக் கும்பிடு என்று சொன்னால் போதுமே. 'ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே' என்று ஒவ்வொரு முகத்துக்கும் விளக்கம் ஏன் தேவை. இவன்

திறமையைக் காட்டத்தானே அதைப் பயன்படுத்துகிறான். இதை சிந்தனை ஆதிக்கம் என்றே சொல்லுவேன்.

**கேள்வி:** நீங்கள் நடத்திய பத்திரிகைகள் எது எது?

பதில்: 'காவியம்' என்று பத்திரிகை நடத்தியுள்ளேன். 'இலக்கியம்' என்ற பத்திரிகை மாதமிருமுறை நடத்தினேன். 'ஊர்வலம்', 'விண்மீன்' இந்த மாதிரி பத்திரிகைகளும் நடத்தினேன். பின்னர் 'சுரதா' என்று என் பெயரிலேயே ஒரு இதழ் தொடங்கி நடத்தி வந்தேன். இந்தப் பத்திரிகைகளில் நிறைய கவிஞர்களை வளர்த்திருக்கிறேன் என்பது உண்மை.

**கேள்வி:** சிறுகதைகள் எழுதியதுண்டா....?

பதில்: பிரசண்ட விகடன், சிவாஜி போன்ற பத்திரிகைகளில் எழுதியுள்ளேன். ஒரு பத்து கதை இருக்கும். நாடகமும் எழுதியிருக்கிறேன்.

**கேள்வி:** கண்ணதாசன் பற்றி உங்கள் கணிப்பு என்ன?

பதில்: பேராற்றல் மிக்க கவிஞன். திரைப்படங்களுக்கு ஐயாயிரம் பாட்டு எழுதியிருக்கிறான். இனி யாருமே அந்த பேராற்றலை நினைத்துக்கூட பார்க்க முடியாது. அவன் தன் திறமையாலேயே நின்றவன். சாதாரண மக்களும் புரிந்து பாடும்படி அந்த பாடல் அடிகளை திரும்ப எடுத்துச் சொல்லி 'கொடேஷன்' போல மக்களைப் பேச வைத்துவிட்டானே. என்னைக் கேட்டால் கண்ணதாசன் பாடல்கள் கல்வெட்டில் வரவேண்டும்.

**கேள்வி:** சுரதா என்ற பெயர் சுப்புரத்தின தாசன் என்று குறிக்கிறது. ஆனால் பாரதிதாசனுடைய செல்வாக்கு உங்கள் பாடல்களில் இல்லையே...

பதில்: என்னிடம் கிடையாது. நான் அவரைப் பற்றி எழுதும் போது 'விருத்தத்தில் வெற்றி பெற்றான் கம்பன். அந்த வெற்றியினை இவர் பெற்றார் என்னைப் போல' என்று எழுதியிருக்கிறேன். காரணம் இது அகந்தையால் சொல்லப்பட்டதல்ல. குறிப்பிட்ட ஒருவரையே நாம் பலகாலம் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. அதைத் தாண்டி வர வேண்டும். அதுதான் வளர்ச்சி. அதனால்தான் அவரையும் தாண்டி அவர் செல்வாக்கு இல்லாமல் இருக்க வேண்டும் என்று எழுதினேன்.

**கேள்வி:** தாங்கள் தற்போது ஏதேனும் தொகுப்பு நூல் வெளியிட எண்ண முண்டா?

முன்பு நான் சுரதா இதழில் முன்னும் பின்னும் என்ற பகுதி எழுதி வந்தேன். சம காலத்தில் உள்ள அல்லது இந்த நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்களின் கவிதை வரிகளுக்கு ஆதாரம் முன்பு எந்த பாடலில் இருந்தது என எழுதி வந்தேன். உதாரணமாக ராமலிங்க சுவாமிகள் வாழையடி வாழையென எனற தொடரைப் பார்த்து நான் பிரமித்துப் போனேன். ரொம்ப ரசித்தேன். இந்தத் தொடர் அவருக்கு முன் வந்த அருணாசலக் கவிராயரின் ராம நாடக கீர்த்தனையில் வருவதை பார்த்தபோது மீண்டும் ஆச்சரியப்பட்டேன். உவமை. பாடல் படிமங்கள் இவற்றிலுள்ள பாரம்பரியம் என்னை வியக்க வைத்தது. அந்த நூலை தொகுத்து வெளியிடலாமென்றிருக்கிறேன். என் வாழ்க்கை வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி:** உங்கள் வாழ்க்கையில் வெறுப்புகள் விரக்திகள் ஏதேனும் உண்டா?

**பதில்:** என் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகவே இருக்கிறது. எனக்குப் பொறாமை கிடையாது. எனக்குக் கிடைக்க வேண்டிய கவுரவத்திற்கு மேலாகவே நான் போற்றப்பட்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். என் சொல்லுக்கு ஒரு மரியாதை இருக்கிறது. பாரதிதாசன் விமானத்தில் சென்றதில்லை. இப்போதுள்ள கவிஞர்களாவது விமானத்தில்சென்று கவியரங்கம் நடத்த வேண்டும் என்று நினைத்தேன். என் எண்ணத்தை வி.ஜி. சந்தோஷம் அவர்களிடம் தெரிவித்தேன். அவர் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு செயலாற்றினார் சமீபத்தில். நிறைந்த வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்வேன்.

–சுபமங்களா
ஆகஸ்ட் 1993

## பெரியாரின் சிறப்பு

தலைவர்கள் எவருக்குமே இல்லாத பல்வேறு சிறப்புகள் கொண்ட கூட்டுத்திறமை தந்தைபெரியாரிடம் மட்டுமே இருந்தது என்று உவமைக்கவிஞர் சுரதா குறிப்பிட்டார்.

14-6-1983 அன்று சென்னை பெரியார் திடலில் பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற சங்கராச்சாரியார்?" என்ற சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த உவமைக் கவிஞர்- நாத்திகக் கவிஞர் சுரதா அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: பொதுவாகவே என்னுடைய பதினான்காவது வயதிலிருந்தே மிகச் சிறந்த நாத்திகனாக வளர்ந்த வாழ்க்கையைப் பின்பற்றிக் கொண்டு வருபவன். மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்குமா என்பது தெரியாது.

1936-ஆம் ஆண்டில் ஒரத்த நாட்டில் நான் படிக்கின்ற நேரத்தில் -அங்கே வந்து கொண்டிருந்த 'குடியரசைப் படித்து அதன்மூலம் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பெற்றவன்.

அந்த முறையிலே இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவது மற்ற எல்லோரையும்விட பொருத்தமாக இருக்கும் என்று என்னுடைய வாழ்க்கையை ஒட்டிச்சொல்கின்றேன்.

என்னுடைய வாழ்க்கையில் போலி என்பதே கிடையாது. முதலில் பகுத்தறிவுவாதியாக இருந்து விட்டு பிறகு பண்டாரமாக போய்விடுவது [சிரிப்பு] என்பது மாதிரி இல்லாமல் கொள்கைப் பிடிப்புள்ளவன் நான்.

மிக நீண்டகாலத்திற்குப் பிறகு பெரியார் ஒருவர் தான் சொல்லுவ்வதைக் கற்பனை இல்லாமல் தெளிவாகச் சொன்னார். சொல்லும்போது பெரிய மேதை என்று நினைத்துக் கொள்ளாமல்

புரியும்படி சொன்னார். அதனால்மக்கள் உள்ளத்தில் அக்கருத்துக்கள் இறங்கிற்று.

எனக்கு 70 வயதான ஒருவர் சொன்னார். "சரோஜினி நாயுடு, காந்தி இவர்கள் பேச்சையெல்லாம் கேட்டிருக்கிறேன் ஆனால் ராமசாமி நாயக்கர் மதுரையிலே பேசியதைக் கேட்டபோதுதான் கூட்டத்திலிருப்பவர்கள் நெற்றியிலே போட்ட நாமத்தையும் விபூதியையும் அங்கேயே அழித்துக் கொண்டு மறுநாள் முதல் நெற்றியில் எந்தவிதக் குறியும் இல்லாமல் வந்ததை என் கண்ணாரக் கண்டேன். அவ்வளவு ஆற்றலோடு உள்ளத்தில் ஊடுருவும்படி பெரியார் பேசுவார்" என்று என்னிடத்திலே சொன்னார். அவர் பெயர் இலட்சுமணதாஸ். கோயமுத்தூரைச் சேர்ந்தவர்.

ஒருவர் சொன்னதைக் கேட்டு அங்கேயே மக்கள் மாறுகிற அளவிற்கு செய்யக்கூடிய ஆற்றல் பெரியாருக்குத்தவிர யாருக்குமே இருந்ததில்லை. ஆகவேதான் 60-வயது கடந்தும் கொள்கையில் ஆடாமல், அசையாமல் இருக்கின்றேன்.

உலகத்திலேயே வைத்துப் பார்த்தால் தந்தை பெரியாருடைய கூட்டுத்திறமை யாருக்கும் கிடையாது. தனித் தனியாக கொஞ்சம் திறமைகள் இருக்கலாம். இவ்வளவு திறமையான இவர் இங்கே பிறந்ததுதான் தவறு. இவர் வெளிநாட்டில் பிறந்திருக்க வேண்டும் அல்லது குறைந்த பட்சம் வடநாட்டிலாவது பிறந்திருந்தால் காந்திக்குப் பெயரே இருக்காது. (பலத்த ஆரவாரம்)

உலகிலே கணக்கெடுத்துப் பார்த்தால் பெரியாரைப்போல் நீண்டநேரம் பேசியவர்கள் யாருமில்லை [கைதட்டல்] டெமாஸ்தனிசை விட அதிகமாகவும் அர்த்தமாகவும் தினமும் ஏழரை மணி நேரம் பேசினார். அவர் சொன்ன கருத்துக்கள் அத்தனையும் சரியானவை. 1926-லேயே 'குடி அரசில்' பெண்களை பொதுவுடைமைபற்றி கவிதை எழுத வைத்தார்.

ஆகவே, இளைஞர்கள் போலியாக இல்லாமல், கடவுள், மதம், இவற்றையெல்லாம் விட்டு உண்மையான கொள்கைப் பற்றுள்ளவர்களாக வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதழ்: விடுதலை [14-6-1983]

## உவமைக் கவிஞருக்கு பிடித்த '௮௦'

1. பிடித்த உணவு – சர்க்கரைப் பொங்கல்
2. பிடித்த உடை – வெள்ளுடை
3. பிடித்த வண்ணம் – நீலம்
4. பிடித்த வாகனம் – பேருந்து
5. பிடித்த பண்டிகை – பொங்கல்
6. பிடித்த மலர் – தாமரை
7. பிடித்த இசை – தமிழ் இசை அனைத்தும்
8. பிடித்த கிழமை – வியாழக்கிழமை (என் பிறந்த நாள்)
9. பிடித்த விலங்கு – மான்
10. பிடித்த காய்கறி – வாழைக்காய்
11. பிடித்த ஒப்பனை சாதனம் – பிளேடு
12. பிடித்த அணிகலன் – மோதிரம்
13. பிடித்த எண் – மூன்று
14. பிடித்த நதி – காவிரி
15. பிடித்த புத்தகம் – திருக்குறள்
16. பிடித்த விருது – ராஜராஜன் விருது
17. பிடித்த விளையாட்டு – ஓட்டப்பந்தயம்
18. பிடித்த பொழுது போக்கு – நண்பர்களுடன் பேசுவது

19. பிடித்த நேரம் – பின்னிரவு

20. பிடித்த நொறுக்குத் தீனி – கடலை மிட்டாய்

21. பிடித்த நாடு – தமிழ்நாடு

22. பிடித்த பத்திரிகை – குடியரசு

23. பிடித்த திருக்குறள் – "எண்ணித் துணிக கருமம்" என்று தொடங்கும் குறள்

24. பிடித்த சுற்றுலா தலம் – மாமல்லபுரம்

25. பிடித்த காதல் ஜோடி – லைலா மஜ்னு

26. பிடித்த பறவை – புறா

27. பிடித்த பழம் – வாழைப்பழம்

28. பிடித்த ஆராய்ச்சியாளர் – கா.அப்பாத்துரை

28. பிடித்த அறிஞர் – பேரறிஞர் அண்ணா

29. பிடித்த கவிஞர் – பாரதிதாசன்

30. பாரதிதாசனிடம் பிடித்தது – ஒருவரை இன்னொருவரிடம் அறிமுகம் செய்யும் குணம்

31. பெரியாரிடம் பிடித்தது – தன்னடக்கம்

32. காமராஜரிடம் பிடித்தது – எளிமை

33. அறிஞர் அண்ணாவிடம் பிடித்தது – எல்லாரையும் மதிக்கும் குணம்

34. கருணாநிதியிடம் பிடித்தது – நினைவாற்றல்

35. எம்.ஜி.ஆரிடம் பிடித்தது – ஈகைக்குணம்

36. ஜெயலலிதாவிடம் பிடித்தது – தன்னம்பிக்கை

37. சி.பா.ஆதித்தனாரிடம் பிடித்தது – நினைத்ததை சாதித்த குணம்

38. சிவாஜி கணேசனிடம் பிடித்தது – வேறு என்ன... நடிப்பாற்றல்

39. மூப்பனாரிடம் பிடித்தது – நிதானமாக நடந்து கொள்வது

40. கண்ணதாசனிடம் பிடித்தது – எளிமையான கவிதை ஆற்றல்

41. பிடித்த சாதனையாளர் – ஜி.டி. நாயுடு

43. பிடித்த நண்பர் – எஸ்.டி. சோமசுந்தரம்

44. பிடித்த திரைப்படம் – பாசமலர்

45. பிடித்த எழுத்தாளர் – வல்லிக்கண்ணன்

46. பிடித்த பாடகர் – தியாகராசபாகவதர் பி.யூ.சின்னப்பா

47. பிடித்த நடிகை – கண்ணாம்பாள்

48. பிடித்த இந்திய அரசியல் தலைவர் – நேரு

49. பிடித்த உலக அரசியல் தலைவர் – சர்ச்சில்

50. பிடித்த சிரிப்பு நடிகர் – என்.எஸ். கிருஷ்ணன்

51. பிடித்த சிரிப்பு நடிகை – நடிகை மதுரம்

53. பிடித்த விளையாட்டு வீரர் – டெண்டுல்கர்

54. பிடித்த சர்வாதிகாரி – ஹிட்லர்

55. பிடித்த தமிழக எழுத்தாளர் – நாரண. துரைக்கண்ணன்

56. தமிழ்நாட்டில் பிடித்த ஊர் – கம்பன் பிறந்த தேரெழுந்தூர்

57. பிடித்த செய்தி வாசிப்பாளர் – ஷோபானா ரவி

58. உங்கள் பாடல்களில் பிடித்த பாடல் – "அமுதும் தேனும் எதற்கு"

59. பிடித்த எம்.ஜி.ஆர். பாடல் – "நான் ஆணையிட்டால்.... அது நடந்து விட்டால்...."

| | | | |
|---|---|---|---|
| 60. | பிடித்த சிவாஜிபடப் பாடல் | – | மலர்களைப் போல் தங்கை உறங்குகிறாள் |
| 61. | பிடித்த சினிமா படம் | – | அம்பிகாபதி |
| 61. | பிடித்த அரசியல் கட்சி | – | திராவிடர்கழகம் |
| 62. | பிடித்த பேச்சாளர் | – | அண்ணா |
| 63. | பிடித்த அறிவியல் கண்டுபிடிப்பு | – | மின்சாரம் |
| 64. | பிடித்த வள்ளல் | – | குமணன் |
| 65. | பிடித்த தினசரி பழக்கம் | – | பத்திரிகை படிப்பது |
| 66. | பிடித்த பயணம் | – | விமானப் பயணம் |
| 67. | பிடித்த கடவுள் | – | கடவுள் இருந்தால்தானே.... |
| 68. | பிடித்த பெண் | – | மனைவி சுலோச்சனா |
| 69. | பிடித்த தானம் | – | இரத்த தானம் |
| 70. | பிடித்த வெளிநாட்டு நண்பர் | – | முருகு. சுப்ரமணியம் |
| 71. | பிடித்த பத்திரிகையாளர் | – | சிவந்தி ஆதித்தனார் |
| 72. | பிடித்த பருவம் | – | இளமை |
| 73. | பிடித்த அன்பளிப்பு | – | சால்வை |
| 74. | பிடித்த சுவை | – | இனிப்பு |
| 75. | பிடித்த மதத்தலைவர் | – | வள்ளலார் |
| 76. | பிடித்த மாவீரன் | – | நெப்போலியன் |
| 77. | சந்தனக்கடத்தல் வீரப்பனிடம் | – | பிடித்தது மீசை |
| 78. | கடமை கண்ணியம், கட்டுப்பாடு இந்த மூன்றில் பிடித்தது எது? | – | கடமை |
| 79. | உலகத்தில் தமிழர்களிடம் பிடித்தது | – | வந்தவர்களை வாழ வைப்பது |
| 80. | பிடிக்காதது? | – | வறுமையும், நோயும். |

## முதல் சிறுகதை

"அப்பா நெசவு நெய்யும்போது ராமலிங்க அடிகளாரின் பாடல்களை அடிக்கடி முணுமுணுப்பார். அதைக் கேட்கும் போதெல்லாம், நாமும் இதைப்போல் பாட்டு எழுதவேண்டும் என்று தோன்றும். அப்போது ராஜா மடம் விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தேன். எழுதுவதற்குத் தாள் தரமாட்டார்கள். அதனால் மண் தரையில் ஒரு பாட்டைக் கிறுக்கினேன். அது முருகன் பற்றிய பாடல். அதைப் படித்துப் பார்த்த என் ஆசிரியர் சிங்காரவேல் நயினார் அதைக் கடவுள் வாழ்த்தாக மாணவர்களை உரக்கப் பாடச் சொன்னார். அதுதான் நான் எழுதிய முதல் பாடல். அது தந்த ஊக்கம் தான் நான் தொடர்ந்து கவிதை எழுத வேண்டும் என்ற எண்ணத்தை எனக்குள் உருவாக்கியது" என்கிறார் பாரதிதாசன் பரம்பரையைச் சேர்ந்த உவமைக்கவிஞர் சுரதா.

பிரசண்டவிகடன் வார இதழில் வெளிவந்த 'கவிஅமரன்' தான் சுரதா எழுதிய முதல் சிறுகதை. அதற்குப்பின் பத்து சிறு கதைகள். ஒரு நாடகம் என்று எழுதியிருந்தாலும், சுரதாவுக்குக் கவிதைகள் மேல்தான் தாகம். நல்ல கவிஞனராக வரவேண்டும் என்ற எண்ணம்தான் அவர் மனம் முழுதும் பரவியிருந்தது.

பள்ள இறுதி வகுப்பு முடித்த சமயம். சொந்த ஊரான பழையனூரில் உள்ள அழகப்பன் டீக்கடைக்கு அடிக்கடி போவது வழக்கம். அப்போது பாரதிதாசனின் கவியரங்கக் கவிதைகள் நூலாக வெளியாகியிருந்தன. டீக்கடை அழகப்பன், பெரியார் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர். பாரதிதாசன் பாடல்களில் அவருக்கு அதிக ஈடுபாடு. அவர்தான் சுரதாவைப் பார்த்து, "ராஜகோபாலு, நீ ஏதோ கவிதை எழுதணும்னு சொல்லிட்டுத் திரியிரையே, பாரு பாரதிதாசன் பாடல்கள் நூலா வந்திருக்கு. இது மாதிரி கவிதை

எழுத முயற்சி பண்ணு" என்று சொல்லி, "ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்..." என்று தொடங்கும் பாரதிதாசன் பாடலை கம்பீரமான குரலில் பாடிக்காட்டியிருக்கிறார். அந்தப் பாட்டைக் கேட்டதும் பாரதிதாசனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் சுரதாவின் மனதில் ஒட்டிக்கொண்டது.

அவரைப் பாண்டிச்சேரியில் சென்று பார்க்க கையில் பணம் இல்லை. அதனால் அந்த வருடம் கோவில் சுவருக்குச் சுண்ணாம்பு அடித்துக்கொடுத்து, அதில் கிடைத்த ஒரு ரூபாயை வைத்துக் கொண்டு வீட்டில் சொல்லாமல் கொள்ளாமல் ரயில் ஏறிவிட்டார்.

பொங்கல் நாளன்று பாண்டிச்சேரிக்குப் போய் பாரதிதாசனைச் சந்தித்து இருக்கிறார். சுரதாவுக்கு பொங்கல் கொடுத்து உபசரித்து, வீட்டு நிலையை விசாரித்திருக்கிறார். சுரதாவின் கையெழுத்தையும், அவருக்கு கவிதைமேல் இருந்த ஆர்வத்தையும் பார்த்த பாரதிதாசன் அவரிடம் 20 ரூபாய் கொடுத்து,"நீ ஊருக்குப் போய், அம்மா, அப்பாவிடம் கொடுத்துவிட்டு, சொல்லிவிட்டு வா" என்று அனுப்பிவிட்டார். அதன்படி, சுரதா ஊருக்கு வந்து விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்.

முக்கியமாக டீக்கடை அழகப்பனிடம் பாரதிதாசனை சந்தித்த விபரத்தைச் சொல்லி மகிழ்ந்திருக்கிறார். மீண்டும் பாண்டிச்சேரி வந்து பாரதிதாசனின் உதவியாளராகச் சேர்ந்து விட்டார். அவர் வீட்டிலேயே தங்கியிருந்து அவரது எழுத்துப் பணிகளுக்கு உதவியாக வேலை பார்க்கத் தொடங்கிவிட்டார்.

அதற்குப்பின் 'இளந்தமிழன்' என்ற பத்திரிகையில் சுரதாவின் முதல் கவிதை வெளிவந்தது. 'நடுவிரல் போல் தலைதூக்கு நம் நாட்டாரின் இன்னலைப்போக்கு' என்பதுதான் அவரது முதல் கவிதையின் தொடக்க வரிகள்.

"பாரதியார் மேல் பற்றுக்கொண்டு இவர் பாரதிதாசன் என்று வைத்துக் கொண்டது போல் நானும் இவர் பெயரை வைத்துக் கொண்டால் மேலே வரலாம், என்ற எண்ணம் உருவானது. அதனால் இயற்பெயரான சுப்புரத்தினத்தைச் சேர்த்து சுப்புரத்தினதாசன் என்று வைத்துக் கொண்டேன். ஒரு முறை போஸ்ட் கார்டில் இடமில்லாமல் சுருக்கமாக சு.ர.தா. என்று போட்டேன். அது நன்றாக இருந்ததால்

சுரதா என்றே எழுத ஆரம்பித்து விட்டேன்" என்ற தன்பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுகிறார் சுரதா. 1944இல் தந்தை பெரியார் தலைமையில் நடந்த 'புரட்சிக் கவி' கவிதை நாடகத்தில் அமைச்சராக நடித்ததைப் பெருமையாக கருதுகிறார் சுரதா.

அந்த ஆண்டுதான் சுரதாவின் வாழ்க்கையில் பெரிய திருப்பம் ஏற்பட்டது. அப்போது 'மங்கையர்க்கரசி' திரைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதற்கு வசனம் எழுதவேண்டிய கம்பதாசன் வராததால், சுரதாவுக்கு அந்த வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். திரை உலக வரலாற்றிலேயே மிகக் குறைந்த வயதில் திரைப்படத்திற்க உரையாடல் எழுதியவர் என்ற பெருமை கிட்டியது. வசனமும் பெரும் புகழை அடைந்தது. அதனையடுத்து 'அமரகவி' படத்திற்கு கதைவசனம், பாட்டு என்று எழுதி பரபரப்பை ஏற்படுத்தினார். தொடர்ந்து 100க்கும் மேற்பட்ட திரைப்படப்பாடல்களை எழுதியுள்ளார்.

'சாவின் முத்தம்' 'பட்டத்தரசி' என்ற காவிய நூல் ஆகியன வெளிவந்தன. 1954-ல் முரசொலியில் தொடர்ந்து கவிதைகள் வெளிவரத் தொடங்கின. 1965-ல் தமிழக அரசின் பரிசு கிடைத்தது.

முதன் முதலாக கவிதையாலேயே வார இதழ் துவக்கியவர் சுரதா தான். 1955-ல் 'காவியம்' என்ற கவிதை வார இதழைத் துவக்கினார். இந்த இதழ் பிறந்த அன்றுதான் தி.மு.க. பிறந்திருக்கிறது, பெரியாரின் பிறந்தநாளும் அதுதான். அதற்குபின், 'இலக்கியம்' 'ஊர்வலம்' 'விண்மீன்' 'சுரதா' போன்ற இலக்கிய ஏடுகளையும் துவங்கி நடத்தினார்.

சுரதா, தமிழில் வெளியாகி உள்ள ஒவ்வொரு இதழின் முதல் தலையங்கங்களைத் தொகுத்து வைத்து இருக்கிறார். தமிழில் முதல் தலையங்கங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து நூலாக வெளியிட வேண்டும் என்பது அவரது எண்ணம்.

எம்.கே.டி. பாகவதர், பி.யு. சின்னப்பா ஆகியோரின் தொடர்பை அடிக்கடி நினைவு கூர்கிறார். அதே போல் தனக்கு வானொலியில் கவிதை எழுத வாய்ப்பு வாங்கித் தந்த திருலோக சீதாராம், மீ.பா.சோ. ஆகியோரையும் அடிக்கடி நன்றியோடு நினைவு கூர்கிறார்.

தமிழ்க்கவிஞர் பெருமன்றத்தின் தலைவராக இருந்தவர் சுரதா. கலைமாமணி விருது, பாவேந்தர் விருது, கவியரசர், கலைத்துறை வித்தகருமான பாரதிதாசன் விருது, குமரன் ஆசான் விருது, குறள் பரப்புமாமணி, ராஜராஜன் விருது, கலைஞர் விருது, ஆதித்தனார் விருது என்று எண்ணற்ற விருதுகளால் இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சுரதாவின் வாழ்க்கை வரலாறு படமாக்கப்பட்டு இந்தியத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை, கேரளா, மலேசியா பல்கலைக் கழகங்கள் இவரது நூல்களைப் பாடமாக வைத்துள்ளன. இவரது பெயரில் ஒரு கல்லூரிகூட இயங்கி வருகிறது.

*1921*-ல் பிறந்த சுரதா *3000*க்கும் மேற்பட்ட கவியரங்கங்களுக்கு தலைமை ஏற்று பல கவிஞர்களை உருவாக்கியவர். சுரதாவின் அனைத்துப் படைப்புகளும் ஒரே புத்தக வடிவமாக உருவாகி வருவது, தமிழுக்கு கிடைத்திருக்கும் இன்னொரு பெருமையாகும்.

**சந்திப்பு: இரா. மணிகண்டன்**
**இதழ்: குமுதம் 22-3-2001**



என்மனம் என்றன் எண்ணம்
என்செயல் தமிழே என்பேன்!
என்குரல் என்றன் பாடல்
என்சுவை அதுவே என்பேன்!
என்கதை என்றன் காதல்
என்புகழ் அதனால் என்பேன்!
என்னுடல் என்றன் செல்வம்
என்னுயிர் அதற்கே என்பேன்!

சுரதா

உண்மையைச் சொல்லுகிறேன் • உவமைக்கவிஞர் சுரதா